
# கொங்குத் தமிழக வரலாறு

பன்மொழிப் புலவர்

**கா. அப்பாத்துரை**



23·3
145245

# கொங்குத் தமிழக வரலாறு

## சங்க காலம் (கி.பி. 250 முடிய)

பன்மொழிப் புலவர்
**கா. அப்பாத்துரை**

**ஸ்ரீசெண்பகா பதிப்பகம்**
தபால் பெட்டி எண்: 8836
பாண்டி பஜார், சென்னை - 600 017.

# KONGU TAMIZHAGA VARALAARU

Panmozhi Pulavar KAA. APPADURAI

# கொங்குத் தமிழக வரலாறு

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை

ஸ்ரீ செண்பகாவின்
முதல் பதிப்பு : 2010

600 008
12525

**விலை : ரூ. 100.00**

| | | |
|---|---|---|
| அட்டை வடிவமைப்பு | : | பா. ஜீவமணி, செல்: 9600099112 |
| பக்கங்கள் | : | 224 |
| ஒளி அச்சு | : | ஆர்.வி.கே. டிசைனர்ஸ், சென்னை - 600 002. செல்: 9710329866 |
| அச்சிட்டோர் | : | சூர்யா பிரிண்டர்ஸ் அண்டு பைண்டர்ஸ் மதுரை - 625 003. |

# பதிப்புரை

பாரதப் பெருநாட்டின் தென்னக, தமிழகப் பரப்பில், குறிப்பாக, அப்பரப்புகளின் நடுநாயகத் தலைமையிடமாய் அன்று விளங்கியது கொங்குத் தமிழகம் ஆகும்.

தொன்று தொட்டு வரலாற்றுக்கு முற்பட்ட தொல்பழங் காலங்களிலும், அதைத் தொடர்ந்து வரலாற்றுக் கால முழுமை யிலும், இந்தியாவில் தமிழகமும், தமிழகத்தில் கொங்குத் தமிழகமும் மைய இடம் வகித்து வந்தன.

கடல் கடந்த நாடுகளுடன் மட்டுமின்றி, நிலங்கடந்த நாடுகளுடனும், சங்க காலத்துக்கு முன்னிருந்தே கொங்குத் தமிழக மக்கள் பெருவாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

கொங்கு நாட்டின் பல சிற்றூர்களில் கூட வெளிநாட்டு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதை அகழ்வாராய்ச்சிக் குறிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு கொங்குத் தமிழகம் பற்றி மேலும் பல அரிய செய்திகளை இந்நூலில் சான்றுகளுடன் எடுத்துக் கூறியுள்ளார் நூலாசிரியர் கா. அப்பாத்துரை அவர்கள்.

குறிப்பாக, ''கி.மு. 4000 ஆண்டுகட்கு முன்னிருந்தே மற்றைய நாட்டோடு பண்டைத் தமிழர்கள் இடையறாத் தொடர்பு வைத்திருந்தனர்'' என்று செய்தியை நூலாசிரியர் சான்றுடன் விளக்குகிறார்.

மேலும் கொங்குத் தமிழக எல்லை, அதன் தனித்தன்மை, தனி வளம் பற்றியும் நூலில் மேலும் விவரங்கள் கூறப்பட்டுள் ளன. முற்கால வரலாறு தெரிந்து கொள்ள விரும்புவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

எப்போதும் எங்கள் **ஸ்ரீ செண்பகா பதிப்பகம்** **வெளியிடும் நூல்களுக்கு ஆதரவு அளிக்கும் வாசகர்கள் இந் நூலுக்கும் ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.**

**- பதிப்பகத்தார்.**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | iii |
| அதிகாரம் 1 | கொங்குநாடும் தமிழகடும் | 1-53 |
| i. | கொங்குத் தமிழகத்தின் தனித் தன்மைகள், தனிவளங்கள், தனிச் சிறப்புகள் | 1 |
| ii. | கொங்குத் தமிழக எல்லைகள்: அன்றைய பெருக்கமும் இன்றைய செறிவும் | 10 |
| iii. | தமிழ்மொழியின் கன்னித் தாய்மைப் பண்பும் கொங்குத் தமிழ் வாழ்க்கைப் பண்பும் | 31 |
| அதிகாரம் 2 | வரலாற்று வான விளிம்பின் வண்ணங்கள் | 54-154 |
| i. | விடியல் வானொளி காட்டும் குடியரசு பண்பு | 54 |
| ii. | பண்டைக் குடியரசு மரபின் ஒளிநிழற் படிவங்கள்: கொங்குநாட்டுச் சமுதாயத் தன்னாட்சி மரபு | 92 |
| iii. | கொங்கு நாகரிக வளர்ச்சி: வேளாளர் - வேட்டுவர் மரபு மலர்ச்சி | 129 |
| அதிகாரம் 3 | சங்கம் கண்ட கொங்கு வாழ்வு | 155-220 |
| i. | வேள்புலக் குடியரசுக் கோட்டங்கள் | 155 |
| ii. | சேரரும் கொங்குச் சேரரும்: வீட்டரசர் கட்டியெழுப்பிய நாட்டரசுக் கோட்டை | 184 |
| iii. | கொங்கு வாழ்வும் சங்கம் கண்ட தேசீய வாழ்வும் தேசங்கடந்த பெருந் தேசீய அமைப்பும் | 208 |

# கொங்குத் தமிழக வரலாறு

## ஆதிகாலம் முதல் சங்ககால இறுதி (கி.பி.250) வரை

### அதிகாரம் 1

### i. கொங்குத் தமிழகத்தின் தனித் தன்மைகள், தனி வளங்கள், தனிச் சிறப்புகள்

தங்கத் தமிழகத்தின் மங்கா ஒளிமணிப் பதக்கமாகத் திகழ்வது கொங்குநாடு. அதே சிறப்பை நாகரிக உலகில் இந்தியாவும், இந்தியாவில் தமிழகமும் பெற்றுள்ளன. இந்நிலைக்கு நில இயல்சார்பான பண்பாட்டு வாய்ப்புக்களும் பெரிதும் உதவி யுள்ளன. இயலுலகின் எல்லையற்ற பரப்பிலும், வரலாற்றின் ஆழ்தடத்திலும் சென்றுதான் நாம் இவற்றைத் தெளிதல் வேண்டும்.

எல்லையற்ற அகல்வான வெளியிலே இயங்கும் கோளங்கள் எண்ணற்றவை. இவற்றுள் கதிரவன் போன்ற எரிநெருப்புக் கோளங்களும் உண்டு. மழை வளத்துக்கு இன்றியமையாத காற்று மண்டிலமும் கடல்மண்டிலமும் இல்லாத நிலாக்கோள் போன்ற வறண்ட கோளங்களும் உண்டு. இந்த இருதிறக் கோளங்களுமே உயிர்த்தடம் அற்றவை. உயிர் வாழ்வும் மனித இனவாழ்வும் உடைய நம் நிலவுலக கோளத்திலேயே, கதிரவன் ஒளிகுன்றிய வடகோடி தென்கோடிப் பகுதிகள் உயிர்காணாப் பனிப் பாலை களாகவே நிலவுகின்றன. வடகோள, தென் கோளங்களின் நடுப்பகுதிகளிலேகூட, வடபால் பெரிதும் கடலிடை புகாத பெருநிலப் பரப்பாகவும், அதுபோலத் தென்பால் பெரிதும் நிலமிடை விரவாத கடற்பரப்பாகவுமே உள்ளன. இவையும் ஒளிவளம் மழைவளம் நிலவளம் குறைவுற்று மனித இன வரலாற்றின் உயிர்வளத்திலும் இன நாகரிக வளத்திலும் பெரிதும் பிந்துற்று, அவற்றைத் தற்காலிகமாக வாங்கி வளர்க்கும் திறம் மட்டுமே உடையவையாய் இயன்று வந்துள்ளன.

நாகரிக ஒளியை முதல் முதலாகக் கண்டு, அதனை அயற்சார்பு இல்லாமல் தனக்குத் தானே முறபடப் படைத்து வளர்த்த ஒரு நிலவுலகப் பகுதி உண்டு. அதனை வரலாற்றாசிரியர்கள்

நாகரிக உயிர்வரை அல்லது நாகரிக உயிர் மண்டிலம் (Life - Line or Life - Belt of Human Civilization) என்று கூறுகின்றனர். இது நம் நிலவுலக நங்கைக்கு ஓர் அரைப்பட்டிகை அல்லது மேகலை போல, அதனை மண்டிலமாகச் சுற்றிக் கிடக்கின்றது. ஆசியாவின் தென்கரைநாடுகள், ஐரோப்பா ஆப்பிரிக்காக் கண்டங்களுக்கு இடைப்பட்ட நடு நிலக்கடல் சூழ்ந்த நாடுகள், நடு அமெரிக்கப் பகுதி ஆகியவற்றை இணைக்கும் ஒரு கடல் - நில மண்டில மாகவே இது அமைந்துள்ளது.

இதே உயிர் மண்டிலத்தில்கூட, பண்டை நாகரிக வளர்ச்சி பெரிதும் எகிப்திலிருந்து சீனம் வரையுள்ள பகுதிகளுக்கு உரிய தாகவே இருந்தது. பண்டை நாகரிக உலகின் வாணிகப் பெரும் பாதை இதுவே. பண்டிருந்தே மனித இனம் தனக்கெனப் பண்பட்ட மொழியும், மொழிக்கு எழுத்து வடிவும் எண் இலக்கணமும் வகுத்து வளர்த்துக் கொண்டுள்ள பரப்பும் இதுவே. இதனிடைப்பட்ட நாடுகளில் இந்தியாவும் சீனமுமே இன்றளவும் மனித இன நாகரிகத் தொடர்பறாமல் நின்று நிலவுபவை - இன்றள **வும் மனித இன நாகரிகத்தின் தொடர்ச்சி கெடாமல் நின்று நிலவி வளர்ந்து வரும் உலக மொழிகள் சீனமும் தமிழும் (அடுத்த படியாகச் சப்பான் மொழியும் தமிழின மொழிகளும் இவை சார்ந்த வளர்ச்சிகளும்) மட்டுமேயாகும்.**

உயிர்வரையினை யொட்டி மேற்கே ஸ்பெயின் நாட்டின் பிரிணீஸ் மலையிலிருந்து தொடங்கி, கிழக்கே இந்திய பர்மிய சீன நாடுகளின் வட எல்லையளாவி ஒரு பெரிய நெடுநீள் மலை யடுக்குத் தொடர் ஆதிசேடனோ எனும்படி படர்ந்து கிடக்கின்றது. இது பண்டை நாகரிக உலகின் வடதிசை எல்லைக் கோடாகவும் அதன் பாதுகாப்பரணாகவும் நிலவி வந்துள்ளது. இதன் மிக உயர்ந்த, மிக உறுதி வாய்ந்த மையப் பகுதியே இமயமலை. இத் தெய்வமாமலை இந்தியாவையும் இந்திய நாகரிகத்தையும் வறண்ட வடபால் உலகின் பனிக்காற்றிலிருந்தும், வடதிசைப் பரப்பின் பண்படா நாடோடி இனங்களின் அழிவுத் தாக்குதல் களிலிருந்தும் பேரளவில் பாதுகாத்து வந்துள்ளது. ஆயினும் இதன் ஓரக்கணவாய்களும் தென்திசைக் கடற்பரப்புமே இந்தியாவுக்கு நாகரிக உலகின் தொடர்புகளை வழங்க ஓரளவு உதவியுள்ளன. இதனாலேயே இந்திய நாகரிகம் சீன நாகரிகத்தைப் போல உலக நாகரிக நீரோட்டத்தில் பெரிதும் ஒதுங்கி நின்றுவிடாமலும்,

உயிர்வரையின் மற்றத் தொல்பழங்கால நாகரிக இனங்களைப் போல அந்நீரோட்டத்தில் கரைந்து கலந்து மறைந்துவிடாமலும் என்றும் உயிர்த்துடிப்பும் உயிர் மலர்ச்சியும் வாய்ந்த நாகரிக இனமாகத் திகழ்ந்து வருகிறது.

ஒரக் கணவாய்களைவிட இவ்வகையில் கடற்பரப்பே அரும்பயன் விளைவித்துள்ளது என்னலாம். ஏனெனில் சென்ற மூவாயிர, நாலாயிர ஆண்டுகளாக, ஒரக் கணவாய்கள் வழியாக வந்த பண்படா இனங்களின் படையெழுச்சிகளும் படையெடுப்பு களும் இந்திய தேசீய வாழ்வையும் பண்பாட்டையும் அத்திசை களில் அலைக்கழித்தே வந்துள்ளன. கடற்பரப்பே பெரிதும் நாகரிக ஆக்க உறவுகளுக்குப் பயன்பட்டு வந்துள்ளது. பழச்சாற் றினை ஒழுகவிட்டுச் சக்கையைத் தடுத்து நிறுத்தும் சல்லடைப் போல, இக்கடற்பரப்பு பண்படா இனப் படையெழுச்சி தடுத்து பண்பாட்ட இனத் தொடர்புகளுக்கு மட்டுமே பெரிதும் உதவி யுள்ளது.

தமிழகத்துக்கும் கொங்குநாட்டுக்கும் இமய மலையின் பாதுகாப்போடு பாதுகாப்பாக, விந்திய சாத்பூரா மலைகளும் தெக்காண மேட்டு நிலமும் பலபடி அரண்களாக விளங்கி, அமைதியான தேசீய பண்பாட்டு வளர்ச்சிகளுக்குப் பெரிதும் வழிவகுத்துள்ளன. இங்கும் தென்னகத்தின் இருபுற ஒரங்களி லும் உள்ள இடைவெளிகளும் முத்திசைக் கடற்பரப்புமே வடதிசையினும் மிகுதியாகத் தென் திசைக்கு ஆக்கவள உறவு களுக்குரிய ஊக்கம் வழங்கியுள்ளன. இதன் பயனாக, கடல் கடந்த உலக நாகரிகத் தொடர்புகள் வகையிலும், வாணிக, கலை, பண்பாட்டு, ஆக்க உறவுகள் வகையிலும் தென்னகம் பொதுவாக, தமிழகமும் கொங்குநாடும் சிறப்பாக, மிகப் பேரளவான வள வாய்ப்புகள் பெற்று வந்துள்ளன. மற்றும் இதன் பயனாகவே இந்திய வரலாற்றில் தென்னக, தமிழக அரசுகள் பேரரசுகளே மிகுந்த அளவில் கடலரசுகளாகவும் கடற்பேரரசுகளாகவும் இயங்கியுள்ளன. மேலும் இவையே இந்திய சமய, கலை, பண்பாட்டு வாழ்வலைகளைத் தென் கிழக்காசியாவெங்கும் கொண்டு சென்று பரப்பும் பணியிலும் மிகப் பெரும்பங்கு கொண்டிருந்தன இருந்து வந்துள்ளன. தொலைதூர ஆப்பிரிக்க, கிழக்காசிய, பண்டை அமெரிக்கப் பரப்புகளிலும் இவை சென்று எட்டியிருந்தன என்று அறிஞர் கருதுகின்றனர்.

இந்த எல்லா வகைகளிலும் கொங்கு நாட்டின் வாய்ப்புகள் தமிழகத்தின் ஏனை மண்டலங்களின் வாய்ப்புகளை விடக் குறைந்தவையல்ல, நிறைந்தவையே! ஏனெனில் கொங்குத் தமிழகத்தின் அக எல்லையைப் பொறுத்தமட்டில், அது கிட்டத் தட்ட நாற்புறமும் மலைகளையும் குன்றுகளையும் அவற்றில் வாழும் வீர மரபினங்களையும் பாதுகாப்பாகக் கொண்டுள்ளது. இதனால் தென்னகத்தின் ஓர இடைவெளிகள் மூலமாகத் தமிழகத் தின் பிறபகுதிகள் கண்ட படையெழுச்சிகளுக்கும் பண்பாட்டு அலைக்கழிவுகளுக்கும் கொங்குநாடு பெரிதும் ஆளாகாமல் இருந்து வந்துள்ளது. அதன்மீது ஏற்பட்ட தாக்குதல்களெல்லாம் பெரும்பாலும் தமிழகத்திலிருந்து மேற்கு, தெற்கு, கிழக்கு இடைவெளிகள் வழியாக அதன் மீது படர்ந்து வந்தவையேயாகும். ஏனெனில், தமிழகத்தின் அரசு பேரரசுப் போட்டிகள் வரலாற்றுக் கால முழுவதும் அதனை மீண்டும் மீண்டும் தாக்கத் தவற வில்லை. ஆயின் எந்தப் படையெடுப்பும், எந்தத் தற்காலிக ஆட்சி மாறுதல்களும்கூட அதன் நிலையான தனித்தன்மையைப் பாதிக்க வில்லை. இதனாலேயே இந்தியாவின், உலகின் பழம் பண்பாட்டுச் சேமகலமாகத் திகழ்ந்து வருகிறது. உபநிடதகால, சங்ககால, சங்க காலத்துக்கும், தொல்காப்பிய காலத்துக்கும் முற்பட்ட பழமைகளைக் கூட, இன்று நாம் கொங்குநாட்டு வாழ்வில் முனைப்பாக, உயிர்மலர்ச்சிப் பண்பாகவே காணலாம்.

இவை வெறும் பழமைகள் மட்டும் அல்ல; வருங்காலத் தமிழக, இந்திய, உலக நாகரிகத்துக்கே பெரும்பயன் வழங்கத் தக்க உயிர் விதைப் பண்புகள் ஆகும்.

கொங்குத் தமிழகம் புறத் தமிழகத்தின் புயல்களால் பாதிக்கப் பட்டு அரசியல் அவல நிலைகளுக்குப் பெரிதும் ஆளாகி வந்த நாட்களில் கூட அதன் தனித்தன்மையும் நல்லமைதியும், மக்கள் வாழ்வும் பண்பும், வீரமும், வாழ்வியல் பொருளியல் முயற்சி களும் அவற்றால் ஒரு சிறிதும் குலைவுறவில்லை. அவை தடைகள் யாவும் தகர்த்து முன்னேறியே வந்துள்ளன. காடு நாடாக்கும் பணியிலும், மடிமையும் மிடிமையும் அடிமையும் வீழ்த்தித் தன்னாண்மையும் ஆள்வினையும் ஊக்குவிக்கும் திறங் களிலும் கொங்குத் தமிழகம் அன்றும் இன்றும் தமிழகத்தின் முன்னணியில் நின்று தென்னக வாழ்வையும் இந்திய தேசிய வளத்தையும் மேம்படுத்தப் பாடுபடும் ஒரு தங்கத் தரணியாகவே இயன்று வந்துள்ளது.

உள்நாட்டுப் பகுதியாக இன்று நிலவும் கொங்குத் தமிழகம் நாகரிக உலகின் கடல் வாழ்வுத் தொடர்பின் பயனைப் பிற தமிழக மண்டலங்களுக்கு ஒப்பாக அல்லது அவற்றினும் மிகையாக எவ்வாறு பெறமுடியும் என்று எவரும் வினவுதல் கூடும்! ஆனால் கொங்குத் தமிழகம் உள்நாட்டுப் பகுதியாய் அமைந்தது சங்க காலத்துக்குப் பின்னரேயாகும் - இது கீழே விளக்கப்படவிருக்கிறது. தவிர, பண்டை உலகின் வாணிகப் பெருவழியானது முற்றிலும் கடல் வழியாக இயங்கவில்லை. கிழக்கு ஆப்பிரிக்காவிலும் மலேசியாவிலும், வியட்னாம், லியோஸ் (பண்டைக் கம்போடியா, சாம் அல்லது சம்பாப் பேரரசுகளின்) பகுதிகளிலும் தமிழகத்திலும் அது கடலிடைப்பட்ட நிலவழியாகவே இயன்றது. ஏனெனில், தமிழினத் தொடர்புடைய இவ்வெல்லாப் பகுதிகளிலுமே, சுற்றிச் செல்லும் கடல் வழியைவிட இடைநிலவழியே நேர் குறுக்கு வழியாக மட்டுமின்றி, பாதுகாப்பான வழியாகவும், ஆதாய வள முடைய வழியாகவும் அமைந்திருந்தது. இப்பகுதிகளிலுள்ள நிலையான வல்லரசுகளும், நல்லரசுகளும் கடலரசுகள், கடற் பேரரசுகளாக இருந்த காரணத்தால் அவை கடற்கொள்ளைக் காரர்களிடமிருந்தும் நிலக் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் வழிப்பாதுகாப்பு அளித்தன. அத்துடன் இப்பகுதிகளில் பேணி வளர்க்கப்பட்டு வந்த மக்கட் பண்பாடும் நல்லமைதியும் நிலவள, தொழில்வள, சரக்கு வளச் செழிப்புக்கும், உள்நாட்டு வெளிநாட்டு வாணிக வளர்ச்சிக்கும் பெரிதும் உகந்தவையாய் இருந்தன.

கி.மு. 4000 ஆண்டுக்கு முன்னிருந்தே தென்னகம் அதாவது பண்டைத் தமிழகம் மாண்ட நாகரிக உலக மக்களான எகிப்தியர், ஏலமியர், சுமேரியர், பாலஸ்தீனர், பீனிசியர், கிரேக்கர், உரோமர் ஆகியவர்களுடனும், அராபியருடனும் வெனீசியருடனும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இடையறா வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. அவ் வாணிகத் தில் தமிழகச் சரக்குகள், சிறப்பாகக் கொங்குத் தமிழகச் சரக்குகளே பெரும்பங்கு கொண்டிருந்தன. உலக மொழிகளி லெல்லாம் அச்சரக்குகளின் பெயர்கள் தமிழ்ச் சொற்களின் திரிபாகவே இன்றளவும் வழங்கி வந்துள்ளன. இது அவ்வாணிக வளத்தின் தொன்மைக்கும் உலகளாவிய விரிவகற்சிக்கும், தமிழகமும் கொங்குத் தமிழகமும் அதில் கொண்டிருந்த உயிர்ப் பங்கிற்கும் சான்றுகள் ஆகும். அக்கால உலக வாணிகச் சரக்கு களான தேக்கு (ஆங்கிலம் : teak) அகில் (இலத்தீனம் : Aquila,

அகில் கழுகு : ஆங்கிலம் : Eagle, கழுகு: eaglewood: அகில்), சந்தனம் (ஆங்கிலம் : Sandalwood) யானைத் தந்தம் (தமிழ்: இபம் யானை; ஆங்கிலம் : el-eph-ant யானை; iv-ory தந்தம்), சர்க்கரை (பண்டைத் தமிழ்: சக்கரை ஆங்கிலம்; Sugar; பிரஞ்சு : Sucre), மயில்தோகை (ஏபிரேயம் : tukhim), குரங்குகள் (ஏபிரேயம் : kapi), அரிசி (கிரேக்கம் : Pippala; ஆங்கிலம் : Pepper) ஆகியவை தமிழகத்திலிருந்தே உலகளாவச் சென்றன என்பதை இச் சொற்களே காட்டுகின்றன. இச் சரக்குகள் பெரும்பாலாகக் கொங்குத் தமிழகத்துக்கும் அதன் சூழ்புலங்களுக்குமே சிறப்புரிமை யானவை என்பதும் இங்கே கருதத்தக்கது ஆகும். இது கீழே விரிக்கப்படவிருக்கிறது.

எகிப்தியரின் மோட்டுக் கோபுரங்களின் (Pyramids) அடியிலும், சால்டியரின் 'ஊர்' என்ற பண்டைத் தலை நகரிலும் தமிழகக் கொங்குநாட்டின் தேக்கும் எஃகும்; சிந்து வெளியில் அதன் தங்கமும் அந்நாட்களிலேயே (கி.மு. 4000 கி.மு. 2000) கொண்டு சென்று பயன்படுத்தப்பட்டிருந்தன என்று அறிகிறோம்.

கி.மு. 8, 6ஆம் நூற்றாண்டுகளிலிருந்து கிரேக்கரின் வாணிகத் தொடர்பும் பண்பாட்டுத் தொடர்பும் தமிழகத்தில் முன்னிலும் நெருக்கமாயின. கிரேக்கர்கள் பாவை விளக்குப் போன்ற உயரிய கலைப் பொருள்களையும், புட்டியிலடைத்த உயர் மதுவகைகளையும் தாம்பெற்ற சரக்குகளுக்கு மாற்றாகத் தமிழக அரசர் செல்வர் ஆகியோர்களுக்கு விற்றனர். தவிர, அரசர்களிடமும் செல்வர்களிடமும் அவர்கள் படைவீரராகவும், கோட்டைக் காவலராகவும் தமிழகத்திலேயே தங்கிப் பணியாற்றினர். பண்டைத் தமிழ்ச் சேரநாட்டு முசிறியருகே அவர்கள் கோட்டைநகர் அமைத்து வாழ்ந்ததாகவும் அறிகிறோம். அந்நாளைய உரோமப் பேரரசரும் சீனப் பேரரசரும் பிற தென்கிழக் காசியப் பேரரசரும் தமிழகப் பேரரசருடன் தூதுத் தொடர்புகள் பரிமாறிக் கொண்டிருந்தனர் என்றும் தெரியவருகிறது. அந்நாட்டவரின் வரலாற்றுக் குறிப்புகளும், அக்காலத் தமிழ்ச் சங்க இலக்கியப் பாடல்களும் இவற்றை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து உரோமரும், கி.பி. 6ம் நூற்றாண்டிலிருந்து அராபியரும், கி.பி. 14ம் நூற்றாண்டிலிருந்து வெனீசியரும் கி.பி. 16ம் நூற்றாண்டிலிருந்து போர்த்துகீசியர்,

டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் போன்ற மற்ற மேலை ஐரோப்பிய நாட்டினரும் இந்த உலக வணிகத் தொடர்பில் தமிழருடனும் கொங்குத் தமிழருடனும் பங்கேற்று வந்துள்ளனர்.

தமிழர் கிரேக்கரையும் உரோமரையும் வேறுபாடின்றி யவனர் (அயோனியர்: கிரேக்கரிடையே நாகரிக வளம் ஓங்கிய பிரிவினர்) என்றே அழைத்தனர். அராபியரையும் பிறரையும் சோனகர் என்றனர். கி.மு. 6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ம் நூற்றாண்டு வரையுள்ள 1200 ஆண்டுக் காலத்தின் முற்பகுதியே தமிழ்ச் சங்க காலம் (உண்மையில் பிற்பட்ட சங்ககாலம்) சார்ந்த ஊழிஆகும். தமிழரின் உலக வாணிகத் தொடர்பும் வளமும் உச்ச நிலை அடைந்திருந்த காலம் இதுவே. இதுவே தமிழக உலக வாணிக வளத்தில் கொங்குத் தமிழகம் மிகப் பெரும் பங்கு கொண்டிருந்த காலமும் ஆகும். ஏனெனில் இவ்வூழியில் உலக வாணிகப் பாதையானது தமிழகத்தின் மேல் கடற்கரையிலிருந்து கீழ் கடற்கரைக்கும், கீழ் கடற்கரையிலிருந்து மேல் கடற்கரைக்கும் கொங்குநாட்டின் முழு அகலமும் கடந்தே சென்றது. இப்பாதை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழகத்தில் கொங்குப் பெருவழி என்றே அழைக்கப்பட்டு வந்தது. இப்பெயருக்கேற்ப, கொங்குநாடே இப்பாதையின் மையப்பகுதியாக மட்டுமன்றி மிகப்பெரும் பகுதியாகவும் அமைந்திருந்தது. உள்நாட்டு வெளி நாட்டு வாணிகச் சரக்கு வளங்களிலும் அன்று கொங்கு நாடு கொண்ட பங்கே மிகப் பெரியதாயிருந்தது. இந்நிலையில் இப் பாதையின் முழு நிறைபயனுக்கும் அதன் பயன்வளமான மிகப் பெருஞ் செல்வ வளத்துக்கும் பண்பு, பண்பாட்டு வளத்துக்கும் உரிய மைய உயிர்நிலைப் பகுதியாகச் சங்க காலக் கொங்குத் தமிழகம் விளங்கிற்று.

சங்ககாலம் என்று நாம் குறிப்பிடும் சங்ககாலப் பிற்பகுதிக்கு (கி.மு. 6 - கி.பி. 3 - நூற்றாண்டுகளுக்கு) உரிய கொங்குத் தமிழகம் அதற்குமுன் என்றும் பெற்றிருந்ததை விட, அக்காலத் துக்குப் பிற்பட அது என்றும் அடைந்துள்ளதைப் பார்க்கிலும், மிகப்பெருஞ் செல்வ வளம் உடையதாயிருந்தது. கூல வகைகள், தேன், பால், தயிர், நெய் முதலிய உணவுப் பொருள்கள்; மிளகு, ஏலம் போன்ற சுவைமணப் பொருள்கள்; சந்தனம், அகில், தேக்கு முதலிய உயர்மண, உயர் கட்டுமானப் பொருள்கள்; பொன், நீலமணிக்கற்கள், எஃகு, இரும்புப் பொருள்கள் போன்ற அருமதிப்புடைய அணிமணிச் செல்வங்கள் ஆகிய பல்வகை

வளங்களும் கொங்குத் தமிழகத்தின் அகநாடு புறநாடு எல்லைகளுக்கும் சூழலுக்குமே முழு உரிமைப்பட்ட பண்டை உலக வாணிகச் செல்வங்களாய் இருந்தன. சங்கப் பாடல்களும் அந்நாளைய யவன நில நூலாசிரியர், வரலாற்றாசிரியர் குறிப்பீடுகளும் மட்டுமன்றி, கொங்கு நாடெங்கும் கண்டெடுக்கப்பட்ட, கண்டெடுக்கப்பட்டு வரும் புதையல் நாணயவளமும் சங்க காலக் கொங்கு நாட்டுக்கேயுரிய இப் பெருவளத்துக்குச் சான்று பகர்கின்றன.

கி.மு.1-ம் நூற்றாண்டில் ஆட்சி தொடங்கி கி.பி. 5-ம் நூற்றாண்டுவரை ஆண்ட உரோமப் பேரரசர் பெரும்பாலோருடைய உருவங்கள், பெயர்கள் பொறிக்கப்பட்ட புத்தம் புதிய தங்க வெள்ளி தாமிர நாணயங்கள், மிகப் பெரும்பாலாகத் தங்க வெள்ளி நாணயங்கள் கொங்கு நாடெங்குமே சென்ற இரு நூற்றாண்டுகளாகக் கருவூர், வெள்ளலூர் போன்ற பல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டு வந்துள்ளன. கி.பி.10-ம் நூற்றாண்டுவரை ஆயிர ஆண்டுகளாக அவை தமிழகத்தின் முக்கிய செலவாணி நாணயமாக மக்கள் புழக்கத்தில் இருந்துவரும் அளவுக்கு ஏராளமாயிருந்தன என்று வரலாற்றாசிரியர் கூறுகின்றனர். தவிர, இன்று போலவே அன்றும் தமிழர் இப்பொற்காசுகளைத் தொளையிட்டு அல்லது பூணிட்டுக் கோத்தணிந்தனர் என்றும் தெரிய வருகிறது. ஏனெனில் புதையல்களில் கண்ட நாணயங்களிலே கூட அத்தகைய தடங்கள் காணப்படுகின்றன.

ஸ்பெயின் நாடு அன்றைய உரோமப் பேரரசர் ஆட்சியில் இருந்தது. அந்நாட்டில் உள்ள தங்கச் சுரங்கங்களின் தங்கம் முழுவதும் பேரரசின் தம்பட்ட சாலையில் நாணயங்களாக்கப் பட்டு, முத்துமணியணிப் பொருள்களின் விலையாகத் தமிழகத்திலே கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தன. அயலாட்சிக் காலங்களில் வெளிநாட்டு ஆடையணி மணிகளால் இந்தியா இழந்த செல்வத்தைக் காந்தியடிகள் போன்ற தலைவர்கள் கண்டித்தது போல, உரோமப் பேரரசில் கேட்டோ (Cato) போன்ற தலைவர்களும் பிளினி (Plini) போன்ற பிற அறிஞர்களும் தமிழக வாணிகத்தால் உரோமர் அடைந்த செல்வ இழப்பைக் கண்டித்து முழக்கம் எழுப்பி வந்தனர் என்று அறிகிறோம். உரோமர் இழந்த இச்செல்வத்தினால் மிகுந்த வளநலம் பெற்றவர்கள் கொங்குத் தமிழக மக்களின் சங்ககால முன்னோர்களே யாவர் என்று கூறத் தேவையில்லை.

கடல் கடந்த நாடுகளுடன் மட்டுமன்றி, நிலங்கடந்த நாடுகளுடனும் சங்ககாலத்துக்கு முன்னிருந்தே கொங்கு மக்கள் பெருவாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். கொங்குத் தலைநக ரான கருவூரில் வாழ்ந்த ஒரு சாங்கப் புலவர் (கருவூர் கலிங்கத் தார்) கலிங்கநாட்டுப் பெருவணிகராகவும் விளங்கினார். தவிர, கொங்கு நாட்டின் பல சிற்றூர்களில் கூட, கி.மு. 1-ம் நூற்றாண் டுக்குரிய ஈரான் நாட்டு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தென்னக, தமிழகப்பரப்பில், குறிப்பாக அப்பரப்புகளின் நடுநாயகத் தலைமையிடமாய் அன்று விளங்கிய கொங்குத் தமிழகப் பரப்பில் சங்ககாலத்துக்கு முன்னும் சங்காலத்திலும் நிலவியிருந்த வாணிகவள, செல்வ வளச் சிறப்பை இவை நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

இன்று இந்தியாவின் தேசியப் பறவையாக மதிக்கப்படுவது மயில். அழகுப் பொருளாகவும், மருந்துப் பொருளாகவும், தமிழ்க் கடவுளாகிய முருகனுக்குரிய ஊர்தியாகவும், சமணர் இசுலாமியர் போன்ற பல்வேறு சமயத்தவர்க்குரிய பூசனைப் பொருளாகவும் உலகெங்கும் வழங்குவது இது. தமிழகத்துக்கே, சிறப்பாகக் கொங்குத் தமிழகத்துக்கே உரிய இம் மயிற்பீலி உலக வாணிகச் சரக்காக கொங்கு நாடெங்கும் கடந்து வண்டிகளில் ஏற்றப்பட்டுச் சென்ற காட்சியைத் திருவள்ளுவர் பெருமான் நமக்கு ஒரு குறட்பாவின் எல்லைக்குள்ளாகவே படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

பீலிபெய் சாகாடும் அச்சுஇறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்!

அச்சுமுறியும் அளவுக்கு மயிற்பீலிகள் ஏற்றப்பட்ட மாட்டு வண்டிகள் கொங்குநாட்டினூடாக உலகப் பெருவழியில் செல்வதை முப்பால் முதல்வர் ஈராயிர மூவாயிர ஆண்டுகளுக்கு முன்பே கண்டிருந்தனராதல் வேண்டும்.

தொன்று தொட்டு வரலாற்றிற்கு முற்பட்ட தொல் பழங் காலங்களிலும் அது தொடர்ந்து வரலாற்றுக்கால முழுமையிலும் நாகரிக உலகில் இந்தியாவும், இந்தியாவில் தமிழகமும், தமிழகத் தில் கொங்குத் தமிழகமும் வகித்து வந்துள்ள மையத் தனி யிடத்தை இச்செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன.

பண்டைநாட்களிலே உலகு வாழ வழிகாட்டிய வண்ணம் வாழ்ந்து சென்றுவிட்ட மாண்ட பல்பெரு நாகரிகங்களின் பெயர் கூறும்படியாக இன்னும் நின்று நிலவும் இனப்பரப்பே இந்தியா,

இதே நிலையுடையவையே இந்தியாவில் தமிழகம், தமிழகத்தில் தங்கத் தமிழகமாம் கொங்குத் தமிழகம். கோங்கு என்ற சொல்லின் பொருளே, பொருள்களில் ஒன்றே தங்கம் என்பது தான்! அதே சமயம் இவையே இன்று வாழ்ந்து வளர்ந்து வரும் உலக நாகரிக இனங்களின் நற்பண்புக் கூறுகளை ஆக்கி அணிசெய்யவல்ல புத்துருக்குமணிகளாகவும் திகழ்கின்றன. இங்ஙனமாக மனிதஇன நாகரிகம் என்ற இடையறாத் தொடர்புடைய மணிமாலையில் அத்தொடர்புக்குரிய ஊடிழையாக இவையே தம் வாழ்வை அமைத்துக்கொண்டுள்ளன என்று கூறலாம்.

இது முற்றிலும் இயல்பான, இயற்படைப்பான ஒன்று அன்று. உண்மையில், இது மனிதநாகரிகம் இயல் வாய்ப்பு வளங் களைப் பயன்படுத்தி, நீடித்த இன வாழ்வின் பட்டறிவடிப்படை யாக, இப்பரப்புகளில் நின்று பேணி வளர்த்துள்ள மரபுப் பண்பின் அமைதியேயாகும்.

பழமையின் பாழ்படுத்தும் கேடுகள் கண்டகற்றியும், புதுமையின் மருட்சியூட்டும் மாசுதூசுகள் தடுத்தாண்டும்; இது போலவே பழமையின் வாழ்வளிக்கும் பண்புகள் கெடாமல் பேணி வளர்த்தும், புதுமையின் புதுவளம் ஊக்கும் பண்புகள் தேர்ந்து கண்டு பயன்படுத்தியும் மாயா உலகுபுரக்கும் மாண்பொறுப் பினை ஏற்று, கிரேக்க புராணங் கூறும் மாமலைத் தெய்வவீரன் அட்லாசு போலக் கனவுலகைத் தாங்கிய வண்ணம் நின்று நிலவும் மாநிலமாக அது விளங்குகிறது! இத்தகைய இந்தியாவின் துயிலா நீள்விழிகளாகத் தென்னகம் அல்லது தமிழகமும், அவ்விழிகளி னூடாகக் காணப்படும் காட்சிகளை வாங்கி மூளையில் பதிய வைக்கும் விழிப்பாவையின் குருதிநாள நாடிநரம்புகளாகக் கொங்குத்தமிழகமும் விளங்குகின்றன.

மனித இனநாகரிக உயிர்மண்டிலமே உலகநங்கையின் அருமணிமேகலையானால், இந்தியாவும் தமிழகமும், தங்கத் தமிழகமாம் கொங்குத் தமிழகமும் அம் மேகலையின் இணைப்பு முகப்பாகவும், தொங்கற் பதக்கமாவும் மைய முத்துமணி பவழக் குமிழ் ஒளியாகவும் கருதத்தக்கவை என்னலாம்.

### ii. கொங்குத் தமிழக எல்லைகள்: அன்றைய பெருக்கமும் இன்றைய செறிவும்

ஒரு நாட்டின் எல்லையும் ஒருமைப்பாடும் மலை, ஆறு, கடல் போன்ற இயற்கை அமைப்புகளாலோ, அரசியல் சூழ்வரவு

களாலோ அமைவுறுதல் கூடும். ஆனால் அவ் ஒருமைப்பாடு பண்புமரபு, நாகரிகமரபு, பண்பாட்டு மரபு ஆகியவற்றின் அடிப் படையிலும் அகநாடு புறநாடு சார்ந்த ஒத்திசைவு அடிப்படை யிலும் அமைந்து அது தன் சூழலையே ஊக்கி வளர்க்குமானால், அந்நிலை பொன்னாலான ஒரு வண்ணப் பூ அத்துடன் மணமும் உயிர்த்துடிப்பு வளமும் பெற்றாற் போன்ற முழுநிலை அருமைப் பாடு உடையது ஆகும்.

இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் கொங்குத் தமிழகத்துக்கும் இம் மூவகைப்பட்ட எல்லையமைவும் ஒருமைப்பாடும் ஒத்திசை யமைதியும் செவ்வனே அமைந்துள்ளன. ஏனெனில் இம் முப்புரப்பு களிலும் காலத்தினால் ஏற்பட்ட குறுக்கங்களாகக் காணப்படு பவை கூட அவற்றின் பண்புச் செறிவான அகஎல்லைகளாகவும், அவற்றின் சூழல் மலர்ச்சிகளை ஊக்கும் புற எல்லைகளாகவும் கருதத்தக்கவை ஆகும்.

இந்தியா என்ற இன்றைய அரசியல் அமைப்பானது பண்பாட்டு முறையில் பாகிஸ்தான், வங்காளதேசம், பர்மா, இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தானம், திபெத், தென்கிழக் காசியா ஆகியவற்றையும் தன் பண்டைநாகரிக விரிவாகக் கொண்டதேயாகும். இவையே இருவேறு வகையில் அதன் முற்கால வாழ்வுகளின் பண்பு மலர்ச்சிப் படர்ச்சிகளாகவும், அதன் இக்காலப் பண்புமரபுச் செறிவாகவும் கொள்ளத்தக்கவை ஆகும். இதுபோலவே தமிழகம் பண்டு தென்னகப் பெரும் பகுதியளாவி விரிந்திருந்தது. அதன் பண்பெல்லையோ, இந்தியாவும் இந்திய நாகரிக எல்லையும் மனித இன நாகரிகப் பேரெல்லையும் அளாவி யிருந்தது. கொங்குத் தமிழகத்தின் நிலையும் இது போன்றதே; அது இன்றைய தமிழகத்தின் செம்பாதியாக இருந்து கொண்டே, பண்டைத் தமிழக விரிவில் இன்னும் பெரும்பகுதியாக நிலவி வந்தது.

தற்கால, அணிமைக்காலத் தமிழக மரபில் கொங்குநாடு என்பது கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார் மாவட்டமாகிய ஈரோடு, தர்மபுரி ஆகிய கோட்டங்களும், திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தின் கரூர், குழித்தலை வட்டாரங்களும், மதுரைக் கோட்டத்தின் பழனி, திண்டுக்கல் வட்டாரங்களும் அடங்கிய பரப்பாகக் கொள்ளப் பட்டு வருகிறது. கிட்டத்திட்ட இந்த எல்லையே (கி.பி. 12ம் நூற்றாண்டுக்குப் பின்) சிலபல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து

நிலவி, இடைக்காலப் பழம்பாடல்களிலும் பொறிக்கப்பட்டு விட்டது. கி.பி. 10, 12-ம் நூற்றாண்டுகளுக்குரிய கொங்கு மண்டல சதகமும் (இரு சதகங்கள் உள்ளன), 12-ம் நூற்றாண்டுக் குரிய பெரிய புராணமும், ஓரளவு 7 முதல் 9-ம் நூற்றாண்டுக் குரிய தேவாரப்பாடல்களும் இதே எல்லைகளையே பேரளவில் சுட்டுகின்றன.

**வடக்கு, தலைமலையாம்; வைகாவூர், தெற்கு;**
**குடக்கு, பொருப்பு வெள்ளிக் குன்று; கிழக்கு,**
**கழித்தண்டலை மேவும் காவிரிசூழ் நாடா!**
**குழித்தண்டலை யளவே கொங்கு.**

இப்பழம் பாடலின் மற்றொரு வடிவம் வடக்கெல்லையைத் தலைமலையினிடமாகப் பெரும்பாலை என்று கூறுகிறது. இங்கே! பெரும்பாலை என்பது ஓர் ஊர். வைகாவூர் என்பது பழனி; குழித்தண்டலை என்பது குழித்தலை.

**மதிற்கரை, கீழ்திசை; தெற்கு, பழனி; மதிகுடக்கு**
**கதித்துள வெள்ளிமலை; பெரும்பாலை, கவின்வடக்கு;**
**விதித்துள நான்கெல்லை சூழ வளம் முற்றும் மேவி, விண்ணோர்**
**மதித்திட வாழ்வு தழைத்திடும்நீள் கொங்குமண்டலமே!**

கொங்கு மண்டல சதகம் தரும் இந்த எல்லைக் குறிப்பீட்டில் கிழக்கெல்லை குழித்தலை என்பதனிடமாக அதற்குச் சற்று மேல்பால், அதாவது பின்னால் உள்ள மதிற்கரை அல்லது மதுக்கரை என்பதாகச் சுட்டப்படுகிறது. அத்துடன் இச்சதகத்தின் பழைய பின்குறிப்பிணைப்பே கொங்கு நாட்டின் 24 உட்பிரிவு களையும் வகுத்துரைக்கிறது. சில பல நூற்றாண்டுகளாகச் செதுக்கப்பட்ட கொங்குச் சோழர் காலக் கல்வெட்டுகள் தரும் விவரங்களிலிருந்து இவை சிலபல கூறுகளில் வேறுபடுகின்றன. இவை சோழர்களுக்கு முற்பட்ட, பிற்பட்ட நிலைகளைக் குறிப் பவை என்று கருதலாகும்.

மொத்தத்தில் தற்கால, அணிமைக்கால மரபுக்குரிய கொங்கு நாட்டின் எல்லைகளை நாம் வடக்கே தெக்கண மாநிலத்து விளிம் பான மலைகள், கன்னட நாடு எனவும்; கிழக்கே மதுக்கரை அல்லது அதற்குச் சற்று அப்பாலுள்ள குழித்தலை, சோழ தொண்டை நாடுகள் எனவும்; தெற்கே பழனி வட்டாரம், பாண்டி

நாடு எனவும்; மேற்கே வெள்ளிமலை அல்லது பொதுவாக மேற்குத் தொடர்ச்சி மலை, சேரநாடு அல்லது தற்காலக் கேரள மாநிலம் எனவும் வகுத்துக் காணலாம்.

தற்கால அணிமைக்கால மரபுக்குரிய இந்த எல்லை தமிழக வரலாற்றிலே குறுகி வந்துள்ள ஒன்றேயானாலும், இதுவே கூட மேலே குறித்தபடி நாற்புறமும் மலைகூறும் மேட்டு நிலங்களும் உடையதாய், நிலஇயல் அடிப்படையிலும் பண்பாட்டடிப்படை யிலும் தனி முழுமையுடைய ஒர் அகநாடாகவும், சுண்டக் காய்ச்சிய பாலின் செறிவிறுக்கம் போன்ற திண்ணிய ஒருமைப் பாடுடையதாகவுமே இயல்கின்றது.

இந்தப் பரப்பையே காவிரியின் தமிழகக்கிளை யாறான பூவானி அல்லது பவானியாறு காவிரியாறு ஆகியவற்றின் வடபாலுள்ள பகுதி, அவற்றுக்குத் தென்பால் உள்ள பகுதி எனப் பிரித்து வடகொங்கம், தென்கொங்கம் என அணிமைக் காலங் களில் வழங்குவதுண்டு. சில சமயம் காவிரியின் மற்றக் கிளை களான நொய்யல் அல்லது காஞ்சியாறு, ஆன் பொருநை அல்லது அமராவதியாறு ஆகியவற்றின் சமவெளிகளை உளப் படுத்தி மேல் கொங்குநாடு என்று குறிப்பதும் உண்டு. சங்க காலத்திலும் சங்ககாலத்தை அடுத்தும் இது வேள் நாடு அல்லது வேளாள நாடு என வழங்கியிருந்ததாகவும் அறிகிறோம். சில வரலாற்றாசிரியர்கள் பாண்டியர் பட்டயங்களினடிப்படையில் கொல்லி மலைப் பகுதியைக் கீழ் கொங்கமாகிய மழகொங்கம் என்று குறிப்பதும் உண்டு. ஆனால் மழநாடு என்ற இப்பகுதியின் பெயரிலும், மழகொங்கம் என்ற தொகைச் சொல்லிலும் இடம் பெற்ற மழ என்ற உரிச்சொல் வீரமும் இளமையும் அழகு மென்மை யும் ஒருங்கே குறிப்பது ஆகும். எனவே மழகொங்கம் என்ற தொகை மழநாட்டை உள்ளடக்கிய கொங்கு நாட்டையே குறித்த சிறப்பு வழக்குச் சொல் என்று கருத இடமுண்டு. ஏனெனில் பாண்டியர் கொங்கு நாட்டின் கீழ்ப்பகுதியை மட்டுமன்றி, மேல் பகுதியையும் கைக்கொண்டிருந்தனர் என்றே தெரிகிறது.

மேலே சுட்டிய வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற எவ்வகைப் பாகுபாடும் இன்றி இப்பரப்பு முழுவதுமே, சங்க காலத்திலும் அதற்கு முன்னும் அதன் பின்னர்ச் சில காலமும் கூடப் பெருங் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக பண்டைக்காலத் தென்கொங்கு நாடாகவே நிலவிற்று. பண்டை வடகொங்கு நாடு

இன்று கன்னட மாநிலத்திலுள்ள காவிரியாற்றுச் சமவெளி தாண்டி நெடுந்தொலை வடக்கே பரவியிருந்தது. இன்று கன்னட மாநிலத்தில் அமைந்துள்ள புன்னாடு, எருமை நாடு என்னும் மைசூர் வட்டாரம் (மைசூர், மகிஷபுரி: மகிஷம் - எருமை), மேலைக் கங்க மரபினர் ஆண்ட கங்கநாடு அல்லது கங்கவாடி காவிரிக்கு வடபால் உள்ள ஹனபீடு (பழைய வீடு) என்னும் துவரைநாடு அல்லது இருங்கோவேள் நாடு ஆகியவையும் பிறவும் இந்தச் சங்ககால வடகொங்கு நாட்டில் அடங்கியிருந்தன.

இன்று கன்னட மாநிலப் பகுதியாகியுள்ள பண்டை வட கொங்குநாடு அன்று தமிழகப் பகுதியாகவும் கொங்குத் தமிழகப் பகுதியாகவும் அமைந்திருந்தது போலவே, மேல் கடற்கரையில் இன்று கேரள மாநிலமாய் மாறிவிட்ட பரப்பு, சங்க காலத்தில் தமிழகத்தின் பகுதியான தமிழ்ச் சேர நாடாகவும்; அதற்கு வடக்கே இன்று கன்னடமொழி, துளுமொழி, குடகுமொழி, மராத்தியின் கிளை மொழியாகிய கொங்கணி மொழி ஆகியவை பேசப்படும் பன்மொழிப் பகுதி தமிழகப் பகுதியாக தமிழ்த் துளுநாடு அல்லது கொண்கான நாடாகவும் அமைந்திருந்தன.

தமிழ்ச் சேரநாடு கொங்கு நாட்டை ஒட்டியே கிடந்தாலும், தொன்று தொட்டே தமிழக முடியரசர் மூவருள் ஒருவரான சேரரால் ஆளப்பட்டு வந்த நாடு என்ற முறையில் அது சேரநாடு எனத் தனி நாடாகவே என்றும் குறிக்கப்பட்டது. கொங்கு நாட்டின் பகுதியாகக் கொள்ளப் பெறவில்லை. ஆனால் பண்டைத் தமிழ்த் துளுநாடு, பண்டைய தமிழ் வடகொங்கு நாட்டை எட்டிக் கிடந்த தமிழ்ப்பகுதி என்ற முறையில் கொங்கை அளாவிய பகுதி அல்லது கொங்கு வண்ணமாக நிலவிய பகுதி என்ற நிலையிலே கொங்கண நாடு, கொங்கண நாடு அல்லது கொண்கான நாடு என்ற மேல் கொங்கு நாடாகவே நிலவிற்று. தமிழில் நெய்தல் நிலப்பகுதியின் தலைவன் கொண்கன் என வழங்கியதனை யொட்டியே, கொங்கணம் அல்லது கொங்காணம் என்ற இந்த நெய்தல் நிலப்பகுதியின் பெயரும் கொண்கானம் எனப் பண்டைத் தமிழில் திரிந்து வழங்கிற்று என்னலாம்.

**வரலாற்றாசிரியர் பலர் கொங்கு நாட்டின் தற்காலத் தமிழகங்கடந்த முற்காலப் பரப்பை அறிவே ஒதுக்கி அல்லது புறக்கணித்து விடுவதுண்டு. ஆயினும் வட கொங்கப் பரப்பு சங்ககாலக் கொங்குநாட்டுப் பகுதியே என்பதனை அறிஞர்**

மயிலை சீனிவேங்கடசாமி நன்கெடுத்து விளக்கிக் கூறியுள்ளார். ஆனால் அவர் மேல் கொங்கப்பரப்பைக் கொங்குத் தமிழகத்தின் பகுதியாகக் கொள்ளாமல், தமிழ்த்துளுநாடு என்ற தனி நாடாகவே கொண்டுள்ளார். பாண்டிநாடு, சோழநாடு, சேரநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு, துளுநாடு எனக் கொங்கு நாட்டை மையமாகக் கொண்ட சங்ககாலத் தமிழகம் ஆறு மண்டலங்களாகப் பிரிவுற்றிருந்ததாக அவர் கொள்கிறார். வரலாற்றாசிரியர் 'புலவர் குழந்தையும்' (தென்னாட்டுப் போர்க்களங்கள் என்ற ஏட்டில்) இவ்வாசிரியருமே சங்ககாலத் தமிழகத்தை ஐந்து மண்டலங்கள் கொண்ட பரப்பாகவும், சங்ககாலக் கொங்கு பரப்பை வடபால் மட்டும் வடுக எல்லையினையுடைய தமிழக மையப் பகுதியாகவும் வகுத்துக் காட்டியுள்ளனர்.

பெருங்கொங்குத் தமிழகத்தின் எல்லை இவ்வாறு சங்க காலத்தை நோக்க இன்று மிகவும் குறுகிவிட்டதென்றே கூற வேண்டும். ஆனால் இவ்வெல்லைக் குறுக்கம் கொங்குத் தமிழகத்துக்கு மட்டுமே உரியதன்று. அது வரலாற்றுக்கு முற்பட்ட பண்டைப் பெருந்தமிழகத்தின் எல்லைக் குறுக்கங்களின் ஒரு கூறேயாகும். இது மட்டுமன்று. இந்த இருதிறக் குறுக்கங்களுமே கொங்குத் தமிழகத்துக்கு மட்டுமோ, தமிழகத்துக்கு மட்டுமோ ஏற்பட்ட தனி நிகழ்ச்சிகள் அல்ல. அவை இந்திய நாகரிக உலக எல்லைகளிலே அந்நாகரிக விரிவு வளர்ச்சி, அதன் செறிவு முதிர்ச்சி ஆகியவற்றுக்கு வழிவகுத்த இரு பேரியக்கங்கள் அல்லது அலைபாய்வுகளின் பகுதிகளாய் அமைந்தவையேயாகும்.

பண்டைத்தமிழகத்தின் தென்பால் எல்லை குறுகியதற்குப் படிப்படியாகக் கடலுள் அமிழ்ந்துவந்த ஒரு தென்மா கண்டமே காரணம் ஆகும். இவ்வாசிரியரின் குமரிக்கண்டம் என்றும், புவியியல் அறிஞர் மரபு இலமூரியா அல்லது கோண்டுவானா என்றும் கூறும். இதனை ஒத்து அத்லாந்திசு என்ற ஒரு தென்மாகண்டம் பற்றிய மேலையுலக மரபும் உண்டு. தொடர்புறவுடைய இவ்விருமா கண்டங்களிலுமேதான் மனித இன நாகரிகம் மண்ணுலக வரலாற்றின் ஆதியூழிகளில் தோன்றி வளர்ந்தது. அம்மாகண்டங்கள் படிப்படியாகக் கடலுள் அமிழ்ந்த போது, தெற்கிலிருந்து வடக்கு, வடமேற்கு, வடகிழக்காகப் பரவிப் படர்ந்த புடைபெயர்ச்சி அலைகளே முதலில் உயிர் மண்டில மெங்கும் அளாவி, பின் அதுகடந்தும் உலகின் நாகரிக அலைபாய்வுகளாய் விரிவுற்றன.

இந்த அலைபாய்வுக்கு எதிராக, கி.மு.2000 அல்லது கி.மு.1500லிருந்து கி.பி.1500 வரை மூவாயிர ஆண்டுகளுக்கு மேலாக உயிர்மண்டிலத்தின் வடபாலிருந்து காத்தியர் (Goths), விசிகாத்தியர் (Visigoths), வண்டலியர் (Vandlas), யூச்சியர் (Euchis), குசாணர் (Kushans), ஊணர், வெள்ளை ஊணர் (Huns, white Huns); மங்கோலியர் (Mongols) முதலிய பண்படா நாடோடி மக்களின் புடை பெயர்ச்சி அலைகள் நாகரிக உயிர் வரை அல்லது நாகரிக உலக முழுவதன் மீதும் மோதி அலைக்கழித் தன. பண்டை உலகின் எகிப்திய, சுமேரிய, ஏலமிய, பினீசிய, உரோம, கிரேக்க நாகரிகங்களை அடுத்தடுத்து அழித்து அவற்றை மாண்ட நாகரிகங்களாக்கிய அலைபாய்வுகள் இவையே. ஆயிரக் கணக்கான ஆண்டுக்காலம் அலையின் பின் அலையாகத் தொடர்ந்த இத்தாக்குதல்களின் இடைவெளிகளில் முந்திய நாடோடி அலைகள் குடியமர்வு பெற்றுக் கிரேக்கர் உரோமர் போன்ற புதிய நாகரிக இனங்களாக வளர்ந் தோங்கிய பின்னும், அவையே பின்வந்த புத்தம் புதிய நாடோடி அலைகளுக்கு இரை யாகி அழிய நேர்ந்தது. இன்றைய உலக நாகரிக இனங்கள் பலவும் இத்தகைய அழிபாடுகள் மீது பழைய அடிநில நாகரிக விதை களிலிருந்து புதிய மறுமலர்ச்சிகளாக எழுந்த வேர் வளர்ச்சிகளே யாகும். இந்த அடிநில வேர் வளர்ச்சி மூலங்கள், அடிநில விதை யினங்கள் ஆகியவற்றின் வாழ்வுக்காலத் தோழமை பெற்ற இனங்களே தமிழக, கொங்குத்தமிழக நாகரிக இனங்கள்! நம் மனித உலகுக்குக் கிடைத்துள்ள பண்டையுலகின் விருந்து மரபுகளே இவை! வருங்கால நாகரிக உலகுக்கும் இவை விருந் தினங்களாக அமையத் தக்கவை ஆகும் என்னலாம்.

அகல் உலகின் இந்த அலைபாய்வுகள் இரண்டில், முந்திய அலைபாய்வுக்குரிய கடல் கோள்களினால் தமிழகத் தென்பால் எல்லையும், சேரசோழ பாண்டிய நாடுகளின் தென்பால் எல்லை களும் வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு நோக்கிக் குறுக்கமுற்றன. இதுபோலவே பிந்திய அலைபாய்வின் தொலைவிளைவாகவே தமிழகத்தின் வடக்கு, மேற்கு எல்லைகளும், பண்டைத் தமிழ்ச் சேரநாடு, பெருங் கொங்கு நாடு, பெருந்தொண்டை நாடு ஆகிய வற்றின் மேற்கு, வடக்கு எல்லைகளும் குறுகித் தேய்வுற நேர்ந்தது.

இந்தியாவின் தொலைதூர வடகிழக்கெல்லையில் மஞ்சூரியர், மங்கோலியர், ஊணர் முதலிய பண்படா இனத்தவர் சீன

நாகரிகத்தின் மீது வடதிசையிலிருந்து தாக்கினர், இதனால் வடசீனர் தென்சீனர்மீதும் தென்சீனர் (பண்டைச் சீனசப்பான் இனங்களுடனும் தமிழினத்துடனும் தொடர்புடைய) வியட்னாம், லவொஸ், கம்போடியா, பர்மா ஆகிய தமிழினப் பரப்புகளின் மீதும் மோதினர். இதனாலேயே இந்தியாவினுள்ளும் வங்காளியர் என்போர் கலிங்கர் அல்லது ஒரியர்மீதும், கலிங்கர் அல்லது ஒரியர் ஆந்திரர்மீதும், ஆந்திரர் தமிழர்மீதும் மோதி, அவரவர் புற அக எல்லைகளைத் தென்பாலாக நெருக்கித் தள்ளினர். இதன் பயனாகவே நெல்லூர் அளாவிக் கிடந்த பண்டைத் தமிழக வட எல்லையும், வடபெண்ணையாறு வரை பரவியிருந்த பண்டைத் தொண்டை நாட்டு எல்லையும் திரு வேங்கடத்துக்கும் அதற்கு இப்பாலும் நழுவி விடலாயின.

இதுபோலவே இந்தியாவின் தொலைவடக்கு, வடமேற்கிலிருந்து யூச்சியர், குசாணர், பார்த்தியர், வெள்ளை ஊணர் ஆகிய நாடோடி அலைகளின் தாக்குதலால் சிந்தியர் குசராத்தியர் மீதும், குசராத்தியர் மராத்தியர் மீதும், மராத்தியர் கன்னடியர் மீதும், கன்னடியர் தமிழர் மீதும் தென்பாலாக நெருக்குண்டு அவரவர் புறஎல்லை, அக எல்லைகளைத் தெற்கு நோக்கிச் சறுக்க விட்டனர்.

இந்தியாவினுள் இந்த அலைபாய்வின் இரு பிரிவுகளுக்குள்ளே, கீழ்பால் அலைபாய்வைவிட வடமேற்குக் கணவாய்கள் வழிவந்த மேல்பால் அலைபாய்வே அடுக்கடுக்காகத் தொடுத்து நீடித்த, மூர்க்கமிக்க அலைபாய்வாய் அமைந்தது. இது மட்டுமன்று. கீழ்பால் பண்டு மகதப் பேரரசு, ஆந்திர கலிங்கப் பேரரசுகள், விந்தமலை சூழ்ந்த தமிழின நாகரிக அரசுகள், தமிழக அரசு பேரரசுகள் ஆகியவற்றின் வலிமைகள் இந்த அலைகளின் வேகத்தைத் தடுத்துக் கவிழ்ந்தாலும், அலைகளும் கலிங்க எல்லையிலிருந்து திசைமாறித் தெறித்தோடின. அவை கலிங்கக் கடல் வழியலையாகவே தென்னகம் கடந்து தமிழ் ஈழம் (இலங்கை) சென்று, அங்கே புதிய கலிங்க அல்லது சிங்கள அரசை அமைத்தது. மேல்பால் அலைபாய்வின் வழியில் தென்கோடித் தமிழ்ச் சேர அரசு ஒன்றைத் தவிர வேறு வலிமை வாய்ந்த தடங்கல்கள் பண்டு இல்லை. இதனாலேயே இத்திசையில் பண்டைத் தமிழகமும் பண்டைப் பெருங்கொங்குத் தமிழகமும் தங்கள் வடஎல்லையில் மட்டுமன்றி, மேற்கொல்லையிலும்

தேய்வுற்றுக் குறுக நேர்ந்தன. ஏனெனில் இத்திசையில் முக்கொங்கு நாடாகிய பண்டைப் பெருங்கொங்குத் தமிழகம் படிப்படியாகத் தன் பண்டை மேல் கொங்குப் பரப்பு, வடகொங்குப் பரப்பு ஆகிய இரண்டையும் முழுவதும் இழந்துவிட்டது. பண்டைப் பெருந்தமிழகமோ, பெருங்கொங்கு நாடு இழந்துவிட்ட இந்தப் பகுதிகளை மட்டுமின்றி, தன் மேற்கு எல்லையிலுள்ள சேரநாடு முழுவதையும் பாண்டிய நாட்டின் மேல் கடலோரப் பகுதியையும் அவற்றிடனாக இழக்கநேர்ந்தது.

இந்த அலைபாய்வுகள் வெறும் எல்லை மாற்றமாக மட்டும் அமையவில்லை. தமிழகத்து வடக்கே ஒரே மொழியாய்க் கிடந்த சங்ககால வடுகமொழி கி.பி. 12-ம் நூற்றாண்டுக்குள் கன்னடம், தெலுங்கு என்ற இரு தமிழின மொழிகளாய்ப் பிளவுற்றது. வடமேற்கிலோ அதே நூற்றாண்டுக்குள் பண்டைத் தமிழ்ச் சேரநாட்டுப் பாண்டிய நாட்டுப் பரப்பில் மலையாளம் என்ற புதுமொழியும், மேல் கொங்குப் பரப்பில் 16-ம் நூற்றாண்டுக்குள் படகம், துளு, குடகு, கொங்கணி ஆகிய நான்கு புதிய மொழி களும் எழுந்து தனி மொழிகளாக நிலவியுள்ளன. தென்னகத்தில் மட்டுமின்றி, இந்தியா முழுவதிலும், மேலை ஆசியாவிலும், ஐரோப்பா முழுவதிலும் கூட இதே அலைபாய்வின் இதேபோன்ற விளைவுகளைக் காணலாம். இன்றைய உலக மொழிகளில் மிகப் பெரும்பாலானவை கி.பி. 12 அல்லது 16ம் நூற்றாண்டினை ஒட்டிப் புதிது பிறந்தவையாகவோ அல்லது புதிது இலக்கிய வாழ்வு பெற்றவையாகவோதான் அமைந்துள்ளன என்பதை வரலாற்று ஒப்பீட்டாய்வாளர் காணலாம்.

இந்திய எல்லையில் இந்த அலைபாய்வுகள் கி.மு. 3ம் நூற்றாண்டுக்கு முன்னிருந்தே மோதிவந்தாலும், தமிழக எல்லை யில் அவை செயலாற்றத் தொடங்கியது சங்ககால இறுதியில் அதாவது கி.பி. 3ம் நூற்றாண்டிலேயேயாகும். தமிழரின் சங்க கால வாழ்வின் அறுதி கண்ட களப்பிரர் படையெழுச்சி எனப்படுவது உண்மையில் உலகளாவிய இந்த அலைபாய்வில் கடைசிப் படியான இந்தியாவின் தென்கோடி அலை வீச்சேயாகும். (கிரேக்க, உரோக நாகரிகங்களின் வீழ்ச்சியும், சங்கத் தமிழ் வாழ்வின் வீழ்ச்சியும் கிட்டத்தட்ட ஒரே ஊழியில் நிகழ்ந்த இந்த ஒரே அலைவீச்சின் துணை விளைவுகளேயாகும் என்பதும் இங்கே கூர்ந்து காணத்தக்கது ஆகும்.)

சங்க காலத்தில் அதாவது கி.பி. 250க்கு முன், இன்றைய கன்னடநாட்டுக் காவிரிச் சமவெளிக்கு வடக்கே பரவிக் கிடந்த தமிழகக்கொங்கு நாட்டெல்லை, கி.பி. 12-ம் நூற்றாண்டுக்குள் இன்றைய தலைமலை எல்லைக்கு வந்து விட்டது. இதற்குத் தமிழ்ச் சங்க இலக்கியச் சான்று மட்டுமன்று, கன்னட மொழிச் சான்றும் உண்டு. கி.பி. 9-ம் நூற்றாண்டில் கொங்கு நாட்டுடனே கங்க நாட்டையும் ஆண்ட நிருபதுங்க மன்னனால் இயற்றப் பட்டதாகக் கொள்ளப்படும் கவிராச மார்க்கம் என்ற பழங்கன்னட மொழியின் இலக்கணம் அப்பழங்கன்னட மொழியின் வடதென் எல்லைகளை முறையே கோதாவரி ஆறு, காவிரி ஆறு என்றே வகுக்கிறது. இது கன்னட மொழியின் தென் எல்லையின் சரிவை மட்டுமன்றி, மராத்தியர் தாக்குதல் அலையால் ஏற்பட்ட வட எல்லைச் சரிவையும் சுட்டிக் காட்டவே செய்கிறது. ஏனெனில் ஒருபுறம் காவிரிக்கு வடபால் இருந்த கன்னட மொழியின் தென் எல்லை (தமிழின் வடஎல்லை) கி.பி. 9ம் நூற்றாண்டுக்கள் காவிரி யளாவ வந்துவிட்டதென்றால், புதுக்கன்னட மொழிக் காலமாகிய கி.பி. 12ம் நூற்றாண்டுக்குள் கன்னட மொழியின் வடஎல்லை கோதாவரி தாண்டிக் கிருட்டிணையாற்றை அணுகி விட்டது. அதன் தென்எல்லையும் தமிழின் வட எல்லையும் அதற்குள் கன்னட நாட்டுக் காவிரி தாண்டித் தலைமலைக்கே வந்துவிட்டது காணலாம்.

பண்டை வடுகு மொழியாகிய பழங்கன்னட மொழியானது, புதுக் கன்னடம், தெலுங்கு என இரண்டுபட்டதும் இக்காலத் திலேயேயாகும்.

மேலே சுட்டியுள்ளபடி, பண்டைத் தமிழகத்துக்கும் பண்டைக் கொங்குத் தமிழகத்துக்கும் இருந்த முழுமையும் ஒருமைப்பாடும் இம்மொழி மாற்றங்களாலோ, எல்லை மாற்றங் களாலோ பெரிதும் சிதைவுற்றுவிடவில்லை - வளம் பெற்றுள்ளன என்று கூடக் கூறலாம். ஏனெனில் இரு பரப்புகளிலுமே புது எல்லை அக எல்லையாகிச் செறிவுற்றும் பழைய எல்லை புற எல்லையாகி விரிவுற்றும் புதுமலர்ச்சிகள் பெற்றன. பண்டைத் தமிழக எல்லைகளும் பண்டைக் கொங்குத் தமிழக எல்லை களும் இந்தியா அளாவ, உலகளாவ ஏந்தி நிற்கும் பண்பொளிச் சின்னங்கள் இம் மெய்ம்மைக்குச் சான்று பகர்கின்றன.

கொங்குத் தமிழகத்தின் தனிப்பண்புகளின் செறிவையும் ஆழத்தையும் நாம் பண்டை முக்கொங்குப் பரப்பின் ஒருமைப்

பாட்டிலும், பண்டைப் பெருங்கொங்கு, பெருந் தமிழக, பேரிந்திய பண்பாட்டின் விரிவகற்சியிலும் சென்றுதான் காணல் வேண்டும்.

தமிழ் என்ற மொழிப் பெயரின் வேர்ச்சொல் 'இழ்' என்பது. இது இழுமெனும் இனிமைப் பொருள் உடையது. தமிழின மொழிகளான மலையாளம் (மலையம் - பொதியமலை, பொதிய மலைத் தென்றல்), தெலுங்கு அல்லது தெனுகு (தேன்) கன்னடம் (கன்னல் - கரும்பு அல்லது கற்கண்டு, இந்தி: கன்னா - கரும்பு) துளு (துளி - தேன்துளி அல்லது அமுதத்துளி), குடகு (கூழ் - இனிய உணவு, சர்க்கரைப்பாகு; இந்தி; குடு - வெல்லப் பாகு) என்பவற்றின் பெயர்களிலும் பண்டைப் பெருந்தமிழகப் பகுதி யான இலங்கை அல்லது ஈழம் (பொன், தேன், கள்) என்பதன் பெயரிலும் இதே இனிமைப் பொருள் பரவியுள்ளது.

தமிழுக்கும் சந்தனமரத்துக்கும், தென்றலுக்கும் காதற் கடவுளான மன்மதனுக்கும் பிறப்பிடமான தமிழரின் தேசீய மலை பொதியம் என்ற மலையமலை ஆகும். இது கடல்கொண்ட தமிழகத்துக் குமரிமலையின் ஒரு பகுதியே என்பது நினைவு கூரத்தக்கது ஆகும். இம்மலைப் பெயரின் தடத்தை அணிமை மலையாள மொழியின் பெயரில் மட்டுமன்றித் தொலை மேற்கி லுள்ள மாலத்தீவுகள், தொலைக் கிழக்கிலுள்ள மலேசியா நாடு ஆகியவற்றின் பெயர்களிலும் காணலாம். இது மட்டுமோ? காளிதாசன் (கி.பி. 4, 5ம் நூற்றாண்டு) காலத்திலிருந்து இன்று வரை இந்தியாவின் எல்லா மொழிகளுக்குரிய காப்பியங்களிலும் நாடகங்களிலும் திரைப்படங்களிலும் இன்றுவரையிலும் சந்தனம் (மலயஜம் - மலையமலையில் பிறப்பது), தென்றல் (மலயவாதம், மலயானிலம், மலயபவனம் - மலைய மலையிலிருந்து வீசும் காற்று), தென்றலஞ் செல்வனாகிய வசந்தன் அல்லது மன்மதன் மாறன் அல்லது மாரன், (மலயராஜன்) ஆகிய கவிதை வழக்குச் சொற்கள் இடம் பெற்றுவந்துள்ளன. தமிழக, இந்திய நாகரிகங் களின் அகல் விரிவான தென் கிழக்காசியாவிலோ, இம்மலைப் பெயரின் தேசீயமரபு வளத்தின் முழுநிறை ஆழ அகலப் பெரு மானங்களும் மலர்ச்சி பெற்றுள்ளன. பொதிய மலை ஆண்ட பாண்டியன் மாறன் (மாறன் அல்லது மாரன் - மன்மதன்) எனப் பாடுகிறான். தென்கிழக்காசியாவில் ஒரு பேரரசு மரபு (கி.பி. 8-ம் நூற்றாண்டில்) சீர்மாறன் (ஸ்ரீ மாரன்) என்ற பட்டம் தாங்கி நின்றது. இது மட்டுமன்று, சிவபெருமான் மலையரசனான

12525

பாண்டியன் (மலையத்துவச பாண்டியன்) என்ற மகளான தடாதகைப் பிராட்டியை மணந்து பாண்டியனாக ஆட்சி செய்த தனால் மலையரசன் மணந்து பாண்டியனாக ஆட்சி செய்தத னால் மலையரசன் என்கிற பெயர் பெற்றான். தென்கிழக்காசியா வின் பல பேரரசமரபினர் மலையரசன் (கம்போடிய நாட்டில் கிமேர் - மலையரசன் மரபு: கடார நாட்டிலும் இந்தோனேசியா விலும் ஆண்ட சைலேந்திரர் - மலையரசர்) என்ற பட்டமேற் றனர். அத்துடன் அவ்வரசர் தம் பெயராலேயே தம் மரபின் முன்னோன் என்ற முறையில் மலையரசனான சிவபிரானுக்கு மலைச்சின்னமான இலிங்க உருவுடன் மலை போன்று ஓங்கி நின்ற கோபுரமேந்திய கோயில்கள் எழுப்பி, தாம் மலையரச னான சிவபிரான் வழிவந்த மரபினர் என்பதையும் நம் கல்வெட்டு களில் வலியுறுத்தியுள்ளனர். (சேர சோழ பாண்டிய அரசரும் பல்லவரும் பிறரும் இதே சிவபிரான் மரபினர் என்று கூறத் தேவையில்லை).

கொங்குத் தமிழகப் பண்பாட்டுடன் இம்மலர்ச்சி விரிவுக் குரிய தொடர்புகள் கீழே வரும் பிரிவுகளில் விளக்கப்படவிருக் கின்றன.

மலையம் என்ற சொல்லின் முழு ஆழ அகல பெருமானங் களை நாம் தென் கிழக்காசியாவில் காண்பது போலவே, தமிழ் என்ற சொல்லின் இனிமைப் பொருளின் முழு ஆழ அகல பெருமானங்களையும் நாம் கொங்கு என்ற சொல்லிலும் அது குறிக்கும் கொங்குநாட்டு மரபுகளிலும் பண்பு பண்பாடுகளிலும் முனைப்பாகக் காணலாம்.

கொங்குநாடு என்ற பெயரிலும் பண்டை மேல் கொங்கு நாடு சுட்டிய கொங்கணம் அல்லது கொங்காணம் என்ற பெய ரிலும் இடம் பெற்றுள்ள கொங்கு என்னும் தமிழ்ச் சொல்லுக்குத் தங்கம், தேன், நறுமணம், இனிமை, இளமை என்ற பொருள்கள் உண்டு. இவை உண்மையில் பல்வேறு பொருள்கள் அல்ல, தமிழ் என்ற சொல்லின் இனிமைப் பொருளுக்குரிய பல்திறச் செறிவு விரிவுடைய ஒரே பொருளேயாகும். அதன் பல்திறப் பண்பு முனைப்பு என்றே கூறலாம்.

கொங்கு என்னும் இவ்வேர்ச்சொல் தொடர்பு இன்றைய கொங்கு நாடாகிய பண்டைத் தென் கொங்குத் தமிழகத்துக்கும் பண்டை மேல் கொங்குநாட்டுக்கும் மட்டுமே உரியதன்று. அதன்

பண்பு மரபு பண்டை வடகொங்கு நாட்டுக்கும் தமிழக முழுமைக் கும் இந்தியா முழுமைக்குமே பொருந்துவதாகும். இது கீழே விரிக்கப்படுகிறது.

கொங்கு என்ற சொல்லின் எல்லாப் பொருள்களிலும் அது கொங்கை என்ற உருவில் பெண்டிர் மார்பகத்துக்கு முற்றிலும் பொருந்துவதாகும். பொன் போன்ற சுணங்கு (காசுத்தேமல்) பூக்குமிடம், இளமைச்சின்னம், உயிரினிமை வாய்ந்த பால்வளம் பொங்கும் உயிரூற்று என்ற அம்மார்பகத்தின் பண்புகளே அச் சொல்லை மீண்டும் உருவகப்படுத்தி நில அன்னையின் தாய்ப் பால் ஊற்றுகளாகிய காவிரி, கோதாவரி அல்லது மகாநதி, கங்கை ஆகிய உயிர் பேராறுகளுக்குரிய பெயர் ஆக்கின. ஆனால் சமஸ்கிருதத்தில் ஒகர ஒலி இல்லை. வங்க மொழியிலோ, அகரமே பெரும்பாலும் ஒகரமாக ஒலிக்கப்படுகிறது. (பொங்கு வளம் என்பதே பங்காளம், வங்காளம், வங்கம் ஆயினவாறு காண்க.) இந்நிலையிலேயே காவிரி ஆற்றிற்கும் மற்ற ஆறு களுக்கும் உரிய பொதுப் பெயரான கொங்கை என்ற சொல் கங்கை என மருவி வழங்கப்பட்டுள்ளது எனல் தகும். தவிர, தமிழகத்திலேயே பெண்டிர் மார்பகம் என்ற பொருளை நேரடி யாகச் சுட்டுவதினின்று அதனை இடக் கரடக்கலாக மடக்கும் உணர்வே 'கங்கை' என்ற இந்த மருவிய வழக்கு எளிதில் வரவேற்கப்பட வழிசெய்திருத்தல் சாலும். மற்றும் கொங்கு, கொங்கை ஆகிய திரிபுகளுக்கியையவே கங்கை, கங்கம், கங்கு என்ற திரிபுகளும் வழக்கில் ஏற்பட்டுள்ளன. கொங்கணிப் பிராமணரைக் கொங்குப் பட்டர், கங்கப்பட்டர், கங்குப் பட்டர் என்று பலவாறாக வழங்கும் வழக்கு மரபு பாரத இதிகாச காலத் திலிருந்து இன்று வரை இந்தியாவில் நடைமுறை வழக்கிலுள்ளது. **(தமிழக முன்னாள் முதல்வர் வான்புகழ் அறிஞர் அண்ணாவின் சந்திரமோகன் நாடக மரபு நினைவூட்டுகிறபடி, மாவீரன் சிவாஜியின் அரசகுருவின் பெயர் கங்கபட்டர் என்பதும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும்)**

**கொங்கு நாடு என்பதும் கங்க நாடு என்பதும் இவ்வாறு தொடர்புடைய சொற்களேயாகும். இம்முறையில் கொங்கு நாடு, கங்கநாடு ஆகிய இரு சொற்களுமே காவிரியாற்றிற்குரிய நாடு கோதாவரி அல்லது மகாநதியாற்றுக்குரிய நாடு அல்லது கங்கை யாற்றுக்குரிய நாடு என்று பொருள்படுவன ஆகும். இது வெறுஞ்**

சொல்லாராய்ச்சிக் கற்பனையோ இலக்கியப் புனைந்துரையோ அன்று, வரலாற்றுமரபு காட்டும் மெய்ம்மையேயாகும். ஏனெனில் கங்கநாடு என்னும் பெயரும், மகதநாடு, பாடலிபுரம் என்னும் பெயர்களும், பிறவும் இம்மூன்று ஆற்றுச் சமவெளிகளிலும் பொது மரபுகளாகக் காணப்படுபவையேயாகும். (பாண்டி, மலையம், இலங்கை போன்ற சூழ் புலப்பெயர்கள் இம்முப்பரப்பு களுக்கும் தமிழினத்தின் சிந்துவெளி, கிழக்காப்பிரிக்க தென் கிழக்காசியப் பரப்புகளுக்கும் உரியனவேயாகும்.) தவிர சங்க காலத்திலும் அது தொடர்ந்தும் பண்டைவட கொங்கப் பகுதி யில் ஆண்ட ஒரு மரபினர் கங்கர் என்றும் தம் மரபினர் ஆண்ட பகுதி கங்கநாடு அல்லது கங்கவாடி என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளது. (சங்க காலத்துக்குப் பின் கொங்கு நாட்டுடன் கங்க நாடும் சேர்த்து ஆண்டவர்கள் இம்மரபினரே யாவர்.) இது போலவே கோதாவரி அல்லது மகாநதிப் பகுதியில் கலிங்கம் ஆண்ட மற்றொரு மரபினரும் கங்கர் என்றே அழைக்கப்பட்டனர். இதனாலேயே வரலாற்று ஆசிரியர்கள் வடகொங்கு மரபினரை மேலைக் கங்கர் என்றும், கலிங்கக் கங்கரைக் கீழைக்கங்கர் என்றும் பிரித்துணர்கின்றனர்.

கங்கை என்ற சொல் இன்று அப்பெயரால் வழங்கும் வடதிசைப் பேராற்றுக்கே முதனிலையுரிமையானது என்று பொதுவாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் அது பண்டு காவிரிக்கே முந்துற்ற முதனிலைவழக்காய், ஒப்புமை காரண மாகவே மற்ற ஆறுகளுக்கு வழங்கப்பட்டது என்பதில் ஐய மில்லை. ஏனெனில் கொங்கு நாட்டுக்கும் கங்கையாற்றுக்கும் இடையே உள்ள சொல் மரபு, பொருள் மரபு தொடர்புமற்ற ஆறுகளோ, அவற்றிற்குரிய நாடுகளோ காணாதவை. கொங்கு என்ற சொல்லின் மணப்பொருளும் இனிமைப்பொருளும் காவிரி என்ற ஆற்றுப் பெயரில் கா அல்லது சோலை என்ற அப் பெயர்ப் பகுதியில் அமைந்திருப்பது போல, தங்கம் என்ற அதன் பொருளும் பொன்னி என்ற அவ்வாற்றின் மற்றொரு பெயரில் பொன் என்ற பெயர்ப்பகுதியாகப் பொருந்தியுள்ளது. கங்கை அல்லது கொங்கை என்னும் சொல்லிலோ கொங்கு என்பதன் இருதிறப்பட்ட முழுமைப் பொருளும் ஒருங்கமைவுறுகின்றது. தவிர வரலாற்று முறையில் இப்பொருள்கள் காவிரியாற்றிற்கும் கொங்குநாட்டுக்கும் பொருந்துவது போல, மற்ற ஆறுகளுக்கும்

அவற்றுக்குரிய நாடுகளுக்கும் பொருந்துவதில்லை. ஏனெனில் காவிரி ஆற்று நீரிலேயே பொன் உண்டு. காவிரி நீரைக்காய்ச்சி யும் காவிரி மணல் அரித்து உருக்கியும் பொன் எடுக்கும் மரபு அணிமைக் காலம் வரை இருந்து வந்தது.

பண்டை வடகொங்குப் பகுதியாகிய கோலாற்றில் (கோலார் : மலேசிய நாட்டுத் தலைநகரான கோலாலம்பூரை நினைவூட்டும் பண்டைக்குவலாலபுரம்) இன்று செயல்பட்டு வரும் தங்கச்சுரங்கம் பண்டு தொழிற்பட்டு வந்த சுரங்கத்தின் புத்தகழ்வே என்று அறிகிறோம். இன்றைய தமிழகக்கொங்குப் பரப்பிலும் மதுரைவரை எங்கும் அணிமைக் காலம்வரை தங்கம் மேலீடாகவே அகழ்ந்தெடுக்கப்பட்டு வந்த தடங்கள் காணப்படுவதாக மாவட்ட அரசிதழ்கள் கூறுகின்றன. சங்கப் பாடல்களும் இவற்றை உறுதி செய்கின்றன. தவிர பண்டைத் தென்கொங்கம் வடகொங்கம் இரண்டிலுமே நீலமணிக்கல் வளம் மட்டுமன்றிப் பொன்வளமும் மலிந்திருந்ததாக மேலைக் குறிப் பீடுகளும் சங்க இலக்கியமும் ஒருங்கே கூறுகின்றன. (சிந்து வெளி நாகரிக காலத்தில் கி.மு. 2500லேயே கொங்கு நாட்டுத் தங்கம் அங்கே பயன்படுத்தப்பட்டதாகச் சிந்துவெளி அகழ் வாராய்ச்சியாளர் கூறுகின்றனர்.) மேல்கொங்கு நாட்டுத் தங்கவளம் பற்றியோ சங்கப்புலவர்கள் தம் பாடல்வரிதோறும் வாயாரப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

இவ்வாறு பொன்வளம் பண்டைப் பெருங்கொங்கு நாட்டின் ஒரு பகுதிக்கு மட்டுமே உரியதாய் அமையவில்லை. அது காவிரி யாற்றுக்கும் அதனுடன் உயிர்த் தொடர்பு கொண்ட பண்டை முழுக்கொங்கு நாட்டுக்குமே முக்கால் உரிமையுடையதாய் இருந்து வருவது காண்கிறோம்.

பண்டைக் கொங்குத் தமிழகத்தின் ஒரு பகுதியாகவே இன்றைய கொங்கு நாடு அமைந்துள்ளது. இந்நிலையில் இன்று காவிரியாற்றுடன் கொங்குநாடு கொண்டுள்ள தொடர்பு அடியும் முடியுமற்ற ஓர் இடைத்தொடர்பு மட்டுமேயாகும். ஆனால் கொங்கு என்ற நாட்டுப் பெயருக்குப் பொருத்தமாகச் சங்க காலத்தில் தலைக்காவிரிப் பகுதியான குடகு நாட்டிலிருந்து சோழநாட்டு அகண்ட காவிரி வரை இந்த ஆற்றின் மிகப் பெரும் பகுதியும் கொங்குத் தமிழகத்துக்கே பேருரிமை உடையதாய் இருந்தது. அத்துடன் கொங்கு நாட்டின் பரப்பு முழுமையுமே

அன்று சோழநாட்டைப் போன்று காவிரியின் நெல்வளத்துக்கு மட்டுமன்றி, அதன் பொன் வளத்துக்கும் பிற உலோக, கனிவளங் களுக்கும் உரியதாய் அமைந்திருந்தது. (தமிழில் பொன் உலோகப் பொதுப் பொருளும் சுட்டியதேயாகும். பசும்பொன், தங்கம்; செம்பொன், செம்பு: இரும்பொன், இரும்பு; வெண்பொன், வெள்ளி.)

பெரும் புலவர் ஔவை துரைசாமிப்பிள்ளையும் பெருங் கவிஞர் புலவர் குழந்தையும் எடுத்துக்காட்டியுள்ளபடி, பண்டைப் பெருங்கொங்குத் தமிழகமரபின் தேசீய ஒருமைப் பாட்டை அப்பரப்பில் ஓடும் தனியாறுகள், காவிரியின் கிளை யாறுகள் ஆகியவற்றின் பெயர்களே நமக்குக் காட்டும் (தென் வெண்ணெய், வடவெண்ணெய், அதவாது தென்பெண்ணை வடபெண்ணையாறுகள் பண்டைப் பெருந்தொண்டை நாட்டின் ஒருமைப்பாட்டைச் சுட்டுவது இங்கே குறிப்பிடத்தக்கது). அன்றைய தமிழ்க் கொண்கானத்தின் வட எல்லையாயமைந்த ஆறுவானியாறு அல்லது சேரனாறு (தற்கால ஹோனவார் அல்லது ஷீராவதி ஆறு: ஷோரனூர் என்ற நகரம் பெயர் காண்க) என்றும், அது தோன்றும் மலையிலிருந்தே பிறந்து ஓடும். சேரநாட்டின் அதாவது தற்காலக் கேரள மாநிலத்தின் ஓர் ஆறு பொன்வானி (தற்காலப் பொன்னானியாறு) என்றும், தற்காலத் தமிழகத்திலும் கன்னட நாட்டிலும் ஒழுகும் காவிரி யாற்றின் இரு கிளைகள் முறையே பூவானி (தற்காலப் பவானி யாறு) என்னும், கீழ்ப்பூவானி (தற்காலக் கெப்பிணி அல்லது கப்பிணி அல்லது கபினியாறு) என்றும் ஒரு சீர்ப்படப் பெயர் பெற்றுள்ளன.

கடல் கொண்ட தமிழகத்தின் தலைச்சங்ககால அரசன் நிலந்தருதிருவிற் பாண்டியனைப் பராவிப் புகழ்ந்த புலவர்கள் அவன் ஆட்சிக்குரிய கடல் கொண்ட நாட்டுப் பஃறுளியாற் றினைப் பாடியது போலவே, சங்ககாலப் பெருங்கொங்கு நாடு முழுவதையு மாண்ட கொங்கப் பெருஞ்சேரரைப் பாடிய சங்கப் புலவர்களும் அவர்கள் ஆட்சிக்குரிய மேலைக்கொங்கு நாட்டு வட எல்லையிலுள்ள வானியாற்றைப் பாடியுள்ளனர். (இது பின்னால் கட்டப்படவிருக்கிறது)

முக்கொங்கு நாடாகத் திகழ்ந்த பண்டைக் கொங்கு தமிழகத் தின் ஒருமைப்பாடு மேலே சுட்டிய மலைமா ஆற்று மரபு

ஆகியவற்றுடன் அமைந்து விடவில்லை. இன்றைய கொங்கு நாடு வடக்கு மேற்கு இருபுறமும் கன்னட கேரள மாநிலங்களாகவும், மற்ற இருதிசையும் தமிழகமாகவும், இன்றைய தமிழக முக்கோணத்தில் அதற்குரிய ஒருதலைக் கோணமாய் உள்ளது. ஆனால் பண்டைப் பெருங்கொங்குநாடு முப்புறக் கடல் சூழ்ந்த பண்டைய அகல்பெருந் தமிழகத்தில் வடக்கே மட்டும் பண்டைக் கொங்குத் தமிழாகிய வடுகு மொழியை எல்லையாகக் கொண்டு, மற்ற முத்திசைகளிலும் செந்தமிழ் மாநிலத்தின் பிற நான்கு மண்டலங்களையும் அளாவி, தென்னகத்தும் தமிழகத்துக்கும் ஒருங்கே மைய இதயபீடமாய்த் திகழ்ந்திருந்தது. அத்துடன் அது அன்று உள்நாட்டுப் பகுதியாய் நிலவாமல், மேல் கொங்கு நாட்டின் தொண்டி, மாந்தை ஆகிய துறைமுகங்கள் மூலமாகக் கடல் தொடர்பு உடையதாகவும் இருந்தது. இதனால் பண்டைக் கொங்குத் தமிழகம் உலக வாணிகம் தன்னூடாகச் செல்லப் பெற்றதனுடன் அமையவில்லை - தன் வாணிகம் உலக வாணிகப் பெருவழியினூடாகச் செல்லவும் அது வழி கண்டிருந்தது. 'கொங்கர் குடகடல் ஒட்டிய ஞான்றை' என்பது போன்ற சங்கக் குறிப்புகள் இதற்குச் சான்று பகர்கின்றன. கடலாகச் சேர நாட்டை விட, உள்நிலக் கொங்குப் பகுதியிலேயே இயேசுநாதர் வாழ்வுக் கால உரோம நாணயங்கள் மிகுதியாகக் கிடைத்து வருவதும் இதே உண்மையைச் சுட்டிக் காட்டுகிறது.

இடைக்கால அணிமைக் காலங்களில் அயற் பண்பாட்சியாளர்களுக்கு உகந்த நிலையில் கொங்கு மக்கள் உள்நாட்டு மக்களாய் ஒதுங்கி வாழ்ந்தாலும், சங்ககாலப் பழம்பண்பின் உந்துதலால் இன்று அவர்களும் மற்றத் தமிழக மக்களைப் போலவே இந்திய, பேரிந்திய, அகல் உலகப் பெருவாழ்வுகளில் தங்குதடையற்ற தமிழ் மரபுரிமை கொள்ளத் தொடங்கியுள்ளனர் என்பது காணலாம்.

இன்றைய கொங்குப் பரப்பின் மக்களேயன்றி, பண்டை வடகொங்கு மக்களும் சங்க இலக்கியத்தில் கொங்கர் என்றே அழைக்கப்பட்டனர். கொங்குநாட்டு மையம் அன்று பண்டைய வடகொங்குப் பகுதியிலிருந்ததனாலேயே அப்பகுதியாண்ட ஒரு வேளிர் மரபினர் கொங்கர் அல்லது கங்கர் எனப்பட்டனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்க செய்தி ஆகும். அத்துடன் மேல் கொங்க மக்கள் கொங்கணர், கொங்கணவர் என்று தனிப்பட

வழங்கப்பட்டாலும், பொது முறையில் கொங்கக் குடகர், குடகக் கொங்கர் என்றும் தங்குதடையின்றிச் சுட்டப்பட்டனர்! மேலும், கொங்கர், கொங்கணர், கொங்கணவர் என்ற பெயர்களிடையே அன்றைய தமிழ் மரபு மிகுதி வேறுபாடு காட்டியதாகத் தெரிய வில்லை. வடகொங்கு (கங்க நாடு) தென் கொங்குப் பகுதி களையே பெரிதும் ஆண்ட சங்க காலத்துக்குப் பிற்பட்ட கங்க மன்னர் பெயர்களில் நாம் 'கொங்கணிவர்மன்' போன்ற சொல் வடிவங்களை ஏராளமாகக் காண்கிறோம். இதுபோலவே மேல் கொங்கு நாட்டைச் சோழர் காலம் வரை ஆண்ட ஒரு மரபினர் தம்மைக் கொங்காள்வார் என்றே குறித்துக் கொண்டனர். கொங்கு நாட்டுச் சித்தர்களில் ஒருவர் கொங்கணச் சித்தர் என்றும், இவர் வாழ்ந்த மலை கொங்கண மலை என்றும் இன்று காறும் வழங்கி வந்துள்ளது. தவிர, சேரநாட்டுத் தமிழ் மொழி திரிந்து மலையாள மாகவும், வடகொங்குத் தமிழ் மொழி திரிந்து கன்னடமாகவும் மாறிய பின்னும்கூட (கி.பி.12ம் நூற்றாண்டு கடந்தும்) மேல் கொங்குப் பகுதி தமிழ் மொழியிலும் தமிழ்ப் பண்பிலும் நீடித் திருந்தது. (கோலர் என்ற இந்நாட்டுப் பழங்குடியினர் பெயர் சோழர் என்ற பெயருடன் தொடர்புடையது என்றும் கருத இட முண்டு) தமிழகத்திலே சோழராட்சிக்கு முன் பாண்டி நாட்டு வழக்கிலிருந்த பண்டைத் தமிழ் வட்டெழுத்துக்களோடொத்த கோலெழுத்து வடிவம் மேல் கொங்கு நாட்டில் இன்று வரை கூட நீடித்துள்ளது. பழங் கல்வெட்டுகளும் இங்கே மிகப் பெரும் பாலாகத் தமிழ் மொழிக் கல்வெட்டுகளாகவே இயன்று வந்துள் ளன.

மேல் கொங்குப் பகுதியில் இன்று சுப்பிரமணியம் என்று வழங்கப்படும் நகரிலுள்ள முருகன் கோயிலில் சங்ககாலத் திருமுருகாற்றுப்படை விரிக்கும் முறைமையில் சிறிதும் வழு வாமல் இன்னும் பூசனை நடைபெற்று வருகிறது என்பதை வரலாற்றாசிரியர் பண்டாரகர் இராசமாணிக்கனார் எடுத்துக் காட்டியுள்ளார். திருமுருகாற்றுப்படை குறித்துள்ள முருகன் திருப்பதிகளுள் அது ஒன்றாய் இருந்திருக்கக்கூடும் என்றும் அவர் கருதியுள்ளார். மற்றும் கோயிற் பூசனையைத் திருமுரு காற்றுப்படை கூறும் முறைமையில் வழுவாமல் இன்றும் மேல் கடற்கரை எங்குமே நடத்தி வருபவர் மேல் கொங்க நாட்டு, சேர நாட்டுப் பரப்புக்களுக்குரிய மிகப் பழமை வாய்ந்த தென்னகப் பிராமண மரபினர்களான போற்றிகள், நம்பூதிரிகள் ஆகியோரே

யாவர். (புலவர் குழந்தை இவர்களைப் பிற்கால வருகையாளர் என்று ஐயுறவு கொண்டுள்ளார். ஆனால் ஆசிரியர் மறைமலை யடிகளார் அவர்களைக் குருதி மரபில் மட்டுமன்றிப் பண்பாட்டு மரபிலும் பண்டைத் தமிழ் வழிவந்த தமிழ்ச் சமயகுருமாராகவே கொண்டுள்ளார்.)

திருச்செந்தூர் போன்ற இடங்களில் முருக பூசனை செய்யும் பிராமணர் தங்களைச் சோழியர் என்றோ கொங்கனியர் என்றோ தான் இன்றும் கூறிக்கொள்கின்றனர். பண்டைச் சமய சாத்திர முறை வழுவாமல் முன்குடுமி (சமஸ்கிருதம் : பூர்வசிகா - மங்கலக் குடுமியான முன்முடி, அபரசிகா - அமங்கல காலங்களுக்குரிய பின்குடுமி) வைத்திருப்பவர்கள் தாங்களே என்று அவர்கள் பெருமையும் உரிமையும் கொண்டாடி வருகின்றனர்.

தமிழகத்தில் நாட்டுக் கோட்டையர் போன்ற வணிக மரபினரும், கார்காத்தார், தொண்டை மண்டல துளுவ வேளாளர், தொண்டை மண்டல வேளாளர் போன்ற வேளாண் மரபினரும் பிறரும் துளுநாடு (மேல்கொங்கு நாடு), கங்க நாடு (வடகொங்கு நாடு) கார் மண்டலம் (வடகொங்கு ஒட்டியபகுதி) ஆகியவற் றையே தங்கள் மூலத்தாயமாகக் கூறிக்கொள்கின்றனர். உண்மை யில் கொங்குவேளாளர் உட்பட (வணிக மரபினர் பலரையும் உள்ளிட்ட) எல்லா வேளாண் மரபினருமே தங்களைக் கங்க மரபினர், கங்கைகுலத்தவர், காங்கேயர் என்றே கூறிக் கொள் கின்றனர். உண்மையில் வரலாற்றுலகப் பேறறிஞர் திருத்தந்தை ஈராசு கருத்தின்படி (Indo-Proto-Mediterranean Civilization என்ற ஆய்வுப் பேரேடு காண்க) மனித இனத்தில் ஆரிய திராவிடப் பிரிவீடு ஏற்படுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முற்படத் தொல் பழங்கால உலகில் நிலவிய மீனவர் - வேளாளர் என்ற இரு பேரினங்களிடையே வேளாளப் பேரினத்தின் மையத் தலைமை யிடம் மேல் கொங்கமாகிய குடகு நாடே என்று அறியப்படுகிறது.

பண்டைய பெருங்கொங்கு நாட்டின் பிரிவுகளாகிய மூன்று கொங்கு நாடுகளிடையேயும் பிரித்தறிய முடியாத மிக நெருங்கிய சமுதாய, சமய அரசியல் தொடர் பொருமைப் பாடுகள் தோன்று தொட்டே நிலவி வந்துள்ளன என்பதைச் சங்க இலக்கியப் பலகணி நமக்குக் காட்டுகிறது. சங்ககாலத் தொடக்கத்திலிருந்து தொண்டை நாடு, கொங்குநாடு என நாம் இன்று கூறும் எல்லைகள் மட்டு மன்றி, அவற்றுக்கு அப்பாற்பட்ட பண்டை வட தொண்டை நாடு,

பண்டை வடகொங்கு மேல்கொங்கு நாடுகள் ஆகிய பகுதிகளும் அவற்றுக்கு அப்பாலுள்ள பகுதிகளும் கூட, முற்றிலும் வேளிர் ஆண்ட பகுதிகளாக, முடியரசின் வாடைபடாப் பகுதிகளாகவே இருந்தன. சங்ககாலத்தில் மேல் கொங்கில் ஆண்ட கடம்பவேள் நன்னனும், வடகொங்காண்ட எருமை யூரனும் புன்னாடரும் இருங்கோ வேளிரும் கங்கரும் கட்டியும், இன்றைய தமிழகக் கொங்கமாகிய தென்கொங்க மாண்ட அதியமான், ஓரி, வையா விக்கோ, கண்டிரக்கோ முதலியோரும் ஒரே நிலைப்படத் தமிழக வேளிர் மரபைச் சேர்ந்தவராகவே இருந்தனர். தவிர, பெரும்புலவர் ஔவை துரைசாமிப்பிள்ளை குறித்துக் காட்டியுள்ளபடி சேர நாட்டின் தெற்கிலுள்ள பாண்டிநாட்டுப் பகுதியிலும், தற்காலக் கொங்கு நாட்டின் மேல் பகுதியிலும் கீழ்பகுதியிலும் அமைந்தது போலவே, மேல்கொங்கு வடகொங்கு பரப்புகளின் வட எல்லை யிலும் ஒருபெரும்பகுதி வேள்நாடு என்றே வழங்கியிருந்தது. பல்லாளர் என்ற முடியரசு மரபினர் பெயரிலும், சிரவண பெள்குள என்ற தலப் பெயரிலும் நாம் 'வேள்' என்ற இந்த உலகப் பழமை வாய்ந்த வேர்ச் சொல்லின் தடமே காண்கிறோம்.

இது மட்டுமன்று.

சங்ககாலம் கடந்த பின்னாட்களில் வடகொங்கப் பரப்பில் ஆண்ட சளுக்கர், இரட்டர், கங்கர், ஒய்சளர். போன்ற அரச, பேரரச மரபினர் பலரும் கி.பி. 7ம் நூற்றாண்டு வரைகூட வேளிராகவே கருதப்பட்டிருந்தனர். அந்நூற்றாண்டுக்கு முன் இயற்றப்பட்ட திவாகரம், பிங்களந்தை போன்ற தமிழ் நிகண்டுகள் இதனாலேயே வேளிர், குறுநில மன்னர், குறும்பர், சளுக்கர் ஆகிய சொற்களை ஒரு பொருட் சொற்காளகக் குறித்துள்ளன.

முக்கொங்கு நாட்டின் ஒருமைப்பாட்டு வளம் சுட்டும் இன்னொரு மரபு கோசர் மரபு ஆகும். இப் பழங்குடியினத்தவர் மேலைக் கொங்கமாகிய துளுநாட்டுக்கே உரியவர்கள். இதுகீழே விரிக்கப்படவிருக்கிறது. இவர்கள் சங்கப் புலவர்களாலே பலபடப் பாராட்டப்பட்டவர் ஆவர். சங்கப் புலவர்களுள்ளேயே கருவூர்க் கோசனார் என்பவர் இம்மரபினர் ஆவர். இன்று இந்தியாவெங்கும் பரவிவாழும் கூர்க்க இனத்தவரைப் போல, கொங்குத்தமிழக முழுவதிலும் தமிழக முழுவதிலும் பரவி வாழ்ந்த இந்தக் கோசர்கள் வீரமும் கண்டிப்பும் வாய்மையும் உடையவர்களாகப் பாராட்டப் பட்டனர். இதன் பயனாக் இக்காலக் கூர்க் இனத்தவரைப் போலவே,

தமிழக முழுவதிலும் அவர்கள் படை வீரராகவும், கோட்டைக் காவலராகவும், வாயில் காப்போராகவும் அரசரிடமும் செல்வ ரிடமும் பணியாற்றினர். எங்கும் வரிபிரிக்கும் பொறுப்புரிமையும் பெருமதிப்பும் உடைய உயர் அரசுப் பணியாளர்களாகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். இன்றும் கொங்கு நாட்டவர்க்கே சிறப்புரிமை யுடையனவாகக் கருதப்படும் துணிபு, வீரம், மான உணர்வு, வாய்மை, இளமைத் துடிப்பு ஆகிய பண்புகள் இப்பண்டை இனத்தவரின் பண்புகளை நினைவூட்டுவன ஆகும். இன்று தமிழ் மக்களுடனும் கொங்கு மக்களுடனும் இக்கோசர் பிரித்தறிய முடியாத நிலையில் இரண்டறக் கலந்துவிட்ட போதிலும், தமிழர் குருதியிலும் நாடிநரம்புகளிலும், சிறப்பாகக் கொங்குத் தமிழ் மக்கள் குருதியிலும் நாடிநரம்புகளிலும் இக்கோசரின் குருதிப் பண்போட்டம் இன்னும் அதிர்வுறுகின்றது என்று உறுதியாகக் கூறலாம். (தமிழ்நாட்டுக் கணக்கர் அல்லது காருணிகர் என்ற வேளாண் வகுப்பினரும், வட இந்தியாவின் கணக்கு வகுப்பின ரான காயஸ்த பிராமணரும் இவ்வின் மரபினர் வழித்தோன்றல் களே என்று கருதத்தகும்).

கொங்குநாட்டில் சத்திய மங்கலம் என்ற ஊரின் பெயரும் பெயர் மரபும் சூழலும் இன்னும் இம்மரபினர் குடியிருப்புகளின் சின்னமாயிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப்பகுதியாண்ட வேள்மரபினரான கட்டியர் கோசரினத்தவரே என்றும், அசோகன் கல்வெட்டுகள் குறிப்பிடும் சத்திய புத்திரர் இவர்களே என்றும் புலவர் குழந்தை கருதுகிறர்.

இன்றைய கொங்குநாட்டின் பெருநகரான கோயம்புத்தூர் அல்லது கோயமுத்தூரின் பெயரில் கூடச்சில வரலாற்றாசிரியர் கோசர் என்ற இவ் இனப்பெயர்த் தொடர்பைக் காண எண்ணு கின்றனர். ஆனால் கி.பி. 9, 10-ம் நூற்றாண்டுகளுக்குரிய கல்வெட்டுகளும் சோழர் பட்டயம் ஒன்றும் இந்நகரைக் கோவன் என்ற இருளர் தலைவனின் பெயரால் கோவன் புத்தூர் என அமைந்ததோ என்று கருதவைக்கின்றன. (சோழர் பட்டய ஆதாரத் தையும் பிற அந்நாளைய கல்வெட்டுக்களையும் முழுவதும் அப்படியே ஏற்பதனால், சோழர் காலம் வரை கொங்குநாடு முழு வதும் இருளர்களே பரவியாண்டதாகக் கொள்ளல் வேண்டும். இது கீழே ஆராயப்படுகிறது ) ஆனால் எப்படியும் இந்நகரின் பெரு வளமும் வளர்ச்சியும் கி.பி. 8,9 ம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டதே

என்பதில் ஐயமில்லை. கோவன் இருளரோ, கோசரோ எவராயினும் ஆகுக, கோவன் என்ற சொல் சங்ககால மரபில் வந்த ஒரு வேள் ஆதல் கூடாததன்று. ஏனெனில் கோசரும் இருளரும் ஒரே நிலைப் படப் பழந்தமிழினத்தவரேயாவர் மற்றும் கோவூர்கிழார் என்ற சங்கப்புலவர் பெயரும் இத்தகு சங்ககால வேள் மரபே சுட்டு கின்றது. தவிர பின்னே விளக்க இருக்கிறபடி, கோவர், கோவியர் என்ற சொற்கள் பொதுவாக வேளரினத்தவரையும் சிறப்பாக ஆய்மரபினரான வேளரினத்தவரையும் சுட்டுவதேயாகும். மேலே குறத்தபடி இப்பகுதிக்குரிய முற்கால வேள்நாடு அல்லது வேளாள நாடு என்ற பெயர் மரபும் இதுவே குறித்துணர்த்துவதாகும்.

பண்டைப் பெருங்கொங்கு நாட்டுக்கும் சரி, அதன் அகநாட்டுச் செறிவாகிய இன்றைய கொங்குநாட்டுக்கும் சரி- மலை, கடல், ஆறு ஆகியவற்றை விட அதன் சிறந்த பாதுகாப் பெல்லையும் பண்பாட்டு எல்லையுமாய் அமைபவை அவ் வெல்லைகளைச் சுற்றிலும் உள்ள வீரப்பழங்குடி மக்களேயாவர் என்பது மேலே கூறப்பட்டுள்ளது. சரியான தேசிய முறையில் அவர்கள் வாழ்வு சீரமைக்கப்படுமேயானால், அவர்களை விடச் சிறந்த பாதுகாப்போ, பண்பாட்டுக் காப்போ கொங்குத் தமிழகத் துக்கும் இந்தியாவுக்கும் வேறு இருக்க முடியாது என்னலாம்.

## iii. தமிழ்மொழியின் க்ன்னித்தாய்மைப் பண்பும் கொங்குத் தமிழ் வாழ்க்கைப் பண்பும்

மூவா இளமைப் பண்பு என்பது தமிழரின் பழந்தெய்வ மாகிய முருகனுக்குச் சிறப்புரிமையான பண்பு ஆகும். இதனையே 'முன்னைப் பழமைக்கும், முந்தியதாய் நின்று பின்னைப் புதுமைக்கும் பிந்தியதாயமையும் பழமை புதுமைவளம் என இறைவனுக்கேயுரிய அரும் பண்பாக மாணிக்கவாசகப் பெருமான் பாடியுள்ளார். இறைப்பண்பாக இதனை நாகரிக உலக முழுவதுமே போற்றி வருகிறது. ஆனால் இந்திய மக்களால் மட்டுமே, தமிழகத் தேசிய கவிஞர் பாரதியார் மொழியில், 'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும், இவள் என்று பிறந்தவள் என்று உணராத இயல்பு' என இதே பண்பு நாட்டன்னையாகிய பாரதத் தாய்க்கும் உரிய தாகப் போற்றப்படுகிறது. தமிழ் மரபோ, இன்னும் ஒருபடி மேற் சென்று, இறைமை அதாவது உலகத் தாய்மை மரபு, நாட்டுத்

தாய்மை மரபு, மொழித் தாய்மை மரபு, ஆகிய மூன்றனுக்கும் உயரிய முத்தமிழ்த் தேசீய, முத்தமிழ் இறை, முத்தமிழ் மொழி மரபாக இப்பண்பினைப் பாராட்டுகிறது. மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரனார் மொழியில் கூறுவதானால் இதுவே தமிழின், தமிழ் நாட்டின், தமிழ் இறைமையின் மூவாக்கன்னியிளமைத் திறம், அதாவது 'கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும், ஈன்றெடுத்து வளர்த்தும் சிதையாத தமிழின் 'சீரிளமைத்திறம்' ஆகும்.

மும்மைசான்ற இந்தப் பண்பு மரபுக்கு ஒரு நீண்ட தொல் பழந் தேசீயப் பின்னணி உண்டு.

**தமிழ் என்ற சொல் ஒரு மொழிப் பெயர் மட்டுமன்று. அது ஒரு மொழியின், ஓர் இனத்தின், ஒரு நாட்டின், ஒரு பண்பு மரபின், ஒரு பண்பாட்டின், ஓர் இறைமையின் வழிவழிப் பெயர் ஆகும். தமிழரின் மொழி, இனம், நாடு, இறைமை அல்லது சமயக்கோட்பாடு, வாழ்க்கைப் பண்பு, பண்பாடு, நாகரிகம் ஆகிய எல்லாத் திறங்களிலும் மூவா இளமைப் பண்பு பேணும் ஒரு நெடு நீள்மரபாகவே அது பேணப்பட்டு வந்துள்ளது.**

கொங்கு என்ற சொல்லும் இதே மரபுப் பண்பை குறிப்பதாகும். ஆனால் இது அதன் முனைத்த, உயிர்க் கனிவார்ந்த பண்புத் திறம் சுட்டுகிறது. தமிழ் மூவா இளமையானால், கொங்கு அதன் மாளாத, தாழ்வு தளர்வுகளற்ற, என்றும் உரம் பெற வளரும் உயிர் வளப்பமிக்க இளமை நலம், இளமை இனிமை, இளமைத் துடிப்பு ஆகும். இதுவகையில் (கங்கை கொங்கை என்ற சொல் தொடர்பு மேலே குறிக்கப்பட்டுள்ளது.)

ஓரம் என்ற பொருளுடைய கங்கு என்ற சொல்லின் மரூஉ எனக் கொண்டு, கொங்கு என்ற சொல்லுக்குச் சேரநாட்டின் ஓரப் பகுதி எனப் பொருள் வருவிக்க முற்படுவர் உண்டு. ஆனால் இது சொல்லுக்குத் தற்காலச் சூழலில் தரப்படும் புது விளக்கமாகலாமேயன்றி, மரபு தழுவிய பொருளாக மாட்டாது. ஏனெனில், சேர நாடும் கொங்கு நாடும் ஒன்று என்பதோ, கொங்கு நாடு சேர நாட்டின் ஒரு பகுதி என்பதோ முற்காலச் சங்க இலக்கியம் அறியாத ஒரு பிற்காலக் கருத்து மரபேயாகும். (இது கீழே விரிக்கப்பட்டிருக்கிறது). அத்துடன் கொங்கு என்ற நாட்டுப் பெயரின் மரபு சங்க காலத்தினும் மிக்க பழமை வாய்ந்தது ஆகும். எனவே

தமிழ் என்ற சொல்லை விட அது பழமையில் குறைந்ததன்று. நிறைந்ததேயாகும் என்னல் தகும், தங்கம், தேன், நறுமணம், இனிமை, இளமை, இளமைத் துடிப்பு முதலிய அச்சொல்லின் சொற்பொருள்களைத் தழுவிய அதன் மரபுப் பொருள் உண்மையில் தேன்மலரின் அழகும் மணமும் இனிமையும் பொன்னின் பொலிவும், இரண்டின் உயிர் வளமாகிய மாளா இளமை நலமும் ஒருங்கே காத்துப் பேணி வளர்க்கத் தக்க அன்பு அறிவு கலை இயல் வாழ்க்கைப் பண்புகளின் மரபு என்பதேயாகும்.

என்றும் இளமை என்பது சிவபெருமானுக்குப் பொதுப் பண்பு, முருகனுக்குச் சிறப்புப் பண்பு, மல்லிகை என்பது கொடிக்குப் பொதுப் பெயர், மல்லிகைப் பூவுக்கே சிறப்புப் பெயர். பால்வளம் என்பது பசுவின் உடல் முழுவதும் பரவிய பண்பேயானாலும் பசுவின் மடுவே அதன் ஊற்றுவளம் ஆகும். தமிழகத்துக்கும் கொங்கு நாட்டுக்கும் (சேரநாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கு மன்று) ஏதாவது 'கங்குத்' தொடர்பு (ஓரத் தொடர்பு, முனைப்பு) உண்டானால் அது இதுவே! மற்றும் உண்மையில் கொங்கு என்பதும் முருகு (இளமை, அழகு, தேன்) என்பதும் தமிழில் ஒரு பொருட் சொற்கள்! எனவேதான், கொங்கு மக்களிடம் இன்றும் காணப்படுவதாகக் கூறப்படும் பண்புகளை யெல்லாம் நாம் நம் தமிழ்ப் புராண மரபு படைத்து உருவாக்கியுள்ள 'தகப்பன் சாமி'யாகிய முருகன் அல்லது கந்தன் பண்புருவிலும் காணலாம்! (மயிலேறும் பெருமாளாகக் கந்தன், அல்லது முருகன் ஆடிய குன்று தோறாடல் கொங்கு நாட்டுக் குன்றுகளையே பெரிதும் குறிப்பதாகும். மயில்கள் கொங்கு நாட்டிலேயே மிகுதி என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.)

தமிழ் மொழியின் கன்னித் தாய்மைக்கு இலக்கங்களாக ஆசிரியர் சுந்தரனார் எடுத்தியம்பும் சேய்மொழிகள் மலையாளம், துளு, கன்னடம், தெலுங்கு ஆகியவையே. இவை பயிலும் நாடுகள் அனைத்துமே தற்காலக் கொங்கு நாட்டினை அடுத்துள்ளன. எனவே தமிழகம் கன்னித்தாய் என்றால், இவ்வெல்லா மொழி மக்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், அவ்எல்லைகளை அளாவிக் கிடக்கும் கொங்குத் தமிழகமே அக்கன்னித் தாய்மைச் சின்னமாய் அச் சேய்களை அரவணைத்துக் கொண்டுள்ளது. என்னலாம். அத்துடன் அச் சேய்களுள் கன்னடமும் தெலுங்கும் மட்டுமே (வடுகு என்ற

உருவில்) சங்ககாலம் அறிந்தவை மற்றவை புதிய மொழிகள். மற்றும் பொது முறையில் மட்டுமே அவற்றையும் புதிய மொழியாகிய மலையாளத்தையும் நாம் தமிழகம் ஈன்றெடுத்தவை என்று கூறலாம். துளு, குடகு என்பவையும், பண்டைத் துளு நாட்டுப் பரப்பில் மராத்திக் கலப்பால் எழுந்த கொங்கணியும், நீலகிரியில் கன்னடம் அல்லது பண்டை வடுகு மொழிக் கலப்பால் தோன்றியுள்ள படகமும் பிறவும் கொங்குத் தமிழகமே சிறப்பு முறையில் ஈன்றெடுத்த புத்திளஞ் சேய்கள் அல்லது அணுக்கக் குழந்தைகள் என்று கூறத்தகும்!

தமிழகத்தின் 'கங்கு' அல்லது முனைப்பாகக் கொங்கு நாடு விளங்குவது போல, கொங்கு நாட்டின் 'கங்கு' அல்லது முனைப் பாக விளங்குவதே மழநாடு. மழநாட்டில் பெயரிலும், அதனை உட்கொண்டுள்ள கொங்கு நாட்டின் 'மழகொங்கம்' என்ற பெயரிலும் உள்ள மழ என்ற உரிச்சொல் (வீரமும் இளடமைத் துடிப்பும் அழகும் மென்மையும் ஒருங்கே கொண்டது என) சுட்டும் பண்பு ஒன்று உண்டு. தமிழகத்தின் மற்ற மண்டலங்களை விட முனைப்பாகக் கொங்கு நாடே நாற்புறமும் 'கொங்கு வேலி' அல்லது 'கொங்கர்'ணாகப் பெற்றுள்ள வீரப்பழங்குடியினப் பண்பினையே அது சுட்டுவது ஆகலாம். மயிலை ஊர்தியாகக் கொண்டு அவ்வீரக் கொங்கினங்களிடையே குன்றுதோறாடும் முருக வேளுக்குரிய பண்பு இது என்பது இங்கே குறிப்பிடத் தக்கது ஆகும்.

பெரிய புராண காலம் வரை அப்புராணத்திலும் யவனர் போன்ற மேலை நாட்டினர் குறிப்பு மரபுகளிலும் தமிழகக் கல்வெட்டுக்களிலும் பாண்டி நாடு தனிச் சிறப்புப் படைத் தென்னாடு, தமிழ்நாடு, செந்தமிழ்நாடு எனவும்; மறவர் நாடு எனவும், குமரி நாடு, கன்னி நாடு, பெண்கள் நாடு எனவும் பலபடப் பாராட்டப்பட்டுள்ளது. (ஆங்கிலமாக் கவிஞர் சேக்சுபியரின் நடுவேனிற் கனவு நாடகம் சித்தரிக்கும் இந்தியா இதுவே!) இவை யாவும் தமிழக முழுமைக்கும் உள்ள பொதுப் பண்புக் குறிப்புகளேயாயினும், அவையே பாண்டி நாட்டினுக்குச் சிறப்புப் பண்புகளாகக் குறிக்கப்பட்டுள்ளன என்பதில் ஐயம் இல்லை. தொண்டை நாட்டின் அறிவுப் பண்பும் சான்றாண்மைப் பண்பும் இது போன்ற சிறப்புப் பண்பு மரபுகளேயாகும். ஆனால் இத்தகைய அடைமொழிச் சிறப்புகள் எவையும் இல்லாமல் அதன்

இயற்பெயரிலேயே கொங்குத் தமிழகத்தின் முழுத்தமிழ்த் தேசியப் பண்பின் சிறப்பு முனைப்பினைத் தமிழக மரபு பண்டே கண்டு பராட்டியுள்ளது என்னலாம்.

அம்முழப் பண்பு முனைப்பே கன்னித் தாய்மைப் பண்பின் சிறப்புத் திறமான மூவா இளமைத் துடிப்பு வளம் ஆகும்.

கன்னித் தமிழ், குமரித் தமிழ், கொங்குத் தமிழ் என்ற தொகைச் சொல் வழக்குகளில் கன்னி, குமரி, கொங்கு என்ற அடைகள் ஒரே பொருள் மரபு சுட்டியவை ஆகும். ஆனால் இன்று பலரும் கருதி வருவது போல, அவை புலவர் வழக்குக்குரிய சிறப்பு அடைகள் அல்ல. அருட்செல்வம் (அருளாகிய செல்வம்), முருகக் கடவுள் (முருகனாகிய கடவுள்) என்ற வழக்குகள் போல, அவை இருபெயரொட்டுப் பண்புப் பெயர்கள் ஆகும். ஏனெனில் இன்று தமிழ் ஒருமொழிப் பெயராகவும், கொங்கு ஒரு நாட்டுப் பெயராகவும் வழங்குவது போல, கன்னி, குமரி, கொங்கு என்ற மூன்று சொற்களுமே பண்டு நாட்டின் இயற்பெயராகவும், மொழியின் இனப்பெயராகவும், இனத்தின் இனப்பெயராகவும் வழங்கிய முழுமைத் தேசியப் பெயர்கள் ஆகும். இவை மட்டுமோ! இவையே கடல் கொண்ட தமிழகத்தில் குமரி நாடு என்ற தமிழ் நாட்டுப் பெயராய் குமரியர் எனத் தமிழ் மக்கட்பெயராய்; குமரி நாட்டில் தேசிய மரபுத் தெய்வமான தமிழன்னை அல்லது குமரி யன்னையின் பெயராய்; அந்த அன்னை வாழும் மலையான குமரிமலையின் பெயராய்; அம்மலையினின்று ஒழுகும் ஆறான குமரியாற்றின் பெயராய்; அவ்வாற்றில் வாழ்ந்து தமிழரின் தேசியச் சின்னமாகப் பேணப்பட்ட தெய்வமீனான குமரி மீனின் (Mermaid) பெயராய் இயங்கின என்பதை நாம் இங்கே நினைத்துப் பார்த்தல் வேண்டும்!

சேரனின் அயிரைமலை, அயிரை ஆறு, அயிரை மீன்; சோழரின் சென்னிமலை அல்லது நேரிமலை, நேரிமலையின் வெந்நீர் கொப்புளிக்கும் ஊற்று வளம் போன்றவை இம்முழுத் தேசிய மரபின் சிதைவுற்ற பிற்காலக் கிளை மரபுகளாய் இத் தமிழ் மூலமரபின் தொன்மையை விளக்குவனவாகவே உள்ளன. தவிர, பொது மரபே வழிமரபாகக் கன்னியாகுமரிக் கன்னி பகவதி யம்மன், மதுரை மீனாட்சியம்மன், சிதம்பரத்துப் பண்டைக் காளி யின் ஆண் வடிவாகிய ஆடலரசர், காஞ்சி காமாட்சியம்மன், (ஒரு வேளை, 'கொங்குமலை'ச் செல்லாயி அம்மன்), இந்தியாவின்

தொலைதூர வடதிசையின் காசி விசாலாட்சியம்மன் (தமிழ்: சால்: சாலி நெல்), உச்சைனி நகரத்து நித்திய கலியாணி அம்மன், துருக்கி நாட்டின் பண்டை எபிசசு நகரத்து தயானாதேவி, கிரேக்க நாட்டின் அதேன்சு நகரின் அதீனாதேவி ஆகிய இந்தியா அளாவிய, உலகளாவிய இம்மரபின் தொன்மையும் தொல் உலக விரிவும் இங்கே கருதத்தக்கன ஆகும். (இது கீழே மேலும் விளக்கப் படவிருக்கிறது).

கி.பி. 10-ம் நூற்றாண்டுக்குரிய கன்னியாக்குமரிக் கல்வெட்டுகள் கன்னிபகவதியம்மனைத் தமிழன்னை என்றே மரபு மறவாமல் குறிக்கின்றன. மீனாட்சி என்ற மதுரையம்மன் பெயர் மீன் சின்னத்தின் ஆட்சி என்ற தேசிய ஒருமைப் பாட்டுப் பொருளுடையதேயாகும். பிற்காலத்தார் இதனை மீன் போன்ற கண்ணுடையவள் என்று திரித்துக் கருதியிருந்தனராக லாம். அத்துடன் தமிழ்ப் புராண மரபு இந்த அம்மன் தமிழன்னை யின் வடிவம் என்பதை மறக்கவில்லை. பாண்டியன் பெற்ற செல்வியாக அவள் வளர்ந்தபோது, அவள் முத்தமிழாகிய இயல் இசை நாடகங்களையே மூன்று மார்பகங்களாகப் பெற்றிருந்தாள். ஆனால் தன் காதல் தலைவனாகிய ஆடல் (நாடக) அரசனைக் கண்டதும் நாடகத் தமிழாகிய ஒரு மார்பகம் அத்தலைவனுரு வாகவே மாறி மயங்கி விட்டது. மதுரைக்கோயிலிலேயே சங்கப் புலவர் அமைவுறுவதும், பிற பல கோயில் மரபுகளும் இன்னும் இத்தேசிய மரபின் பல தொன்மை வளங்களை நினைவூட்டுபவை ஆகும்.

தமிழகத்தில் பொதுவாகவும், கொங்குத் தமிழகத்தில் சிறப்பாகவும் பிறப்பின்போதே தமிழ் மரபு கண்டு குறித்துள்ள இந்தக் கன்னித் தாய்மை அல்லது மூவா இளமைப் பண்பை நாம் கொங்கு நாட்டின் நில இயல் நிலவள இயல் அதன் பண்பு வளம், தொழில் வளம் ஆகிய எல்லாத் திறங்களையும் கால எல்லை, வரலாற்றெல்லை ஆகியவற்றிலும் சென்று மெய்ப்பித்துக் காணத் தக்கவையே என்னல் தகும்.

**'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து வாளொடு முன் தோன்றி மூத்தகுடி'** எனத் தமிழ் மரபு ஒரு வாசகத்தினுள் வைத்தே தமிழரின் நிலமரபு, குடிமரபு, பண்பு மரபு ஆகிய மூன்றன் கன்னி இளமைப் பழமையைப் பாடியுள்ளது. தென்னகத்திலும் தமிழகத் திலும் பொதுவாக, கொங்குத் தமிழகத்தில் தனிச் சிறப்புற நாம்

இம் மூன்று பண்புகளையுமே காணல் தகும். ஏனெனில் பண்டைக் குமரி மாநிலத் தொடர்பினை நினைவூட்டும் இப்பண்புக்கூறு களை நாம் கொங்குத் தமிழகம் என்னும் மேட்டு நிலத்திலும், அது சூழ்ந்த குன்றங்கள் மலைகள் ஆகியவற்றின் பண்பிலும் அவற்றில் வாழும் மிகு பழமைச் சின்னங்களாகிய மலங்குடி மக்கள் வாழ்வுகளிலும், அவற்றிடையே மலையைக் காடாக்கி, காட்டை நாடாக்கி ஐந்திணை நிலவளங்களும் பரப்பியுள்ள அந்நாட்டு மக்களின் பண்பு மரபுகளிலும் மிக முனைப்பாகக் காணலாம்.

தென்னகத்திலும் கொங்குநாட்டிலும் ஒரு சில நூறடிகள் அகழ்ந்து பார்த்தால்கூட நிலவுலகம் தோன்றிய காலத்தில் கன்னி அழற்பாறைப் பரப்பையே காண முடியும் என்று புவிக்கருவியலார் (Geologist) கூறுகின்றனர். (அகல் உலகின் உருசிய நாட்டு யூரல்மலைப் பகுதிக்கும் கொங்கு நாட்டுச் சூழலுக்குமே பெரிதும் உரிய கன்னிவளம் இது) கன்னி நிலமாகிய இதுவே, நிலக் கருவீனும் கனிவளத்திலும் உலோக வளத்திலும், உழவு முதலிய தொழில்வளங்களிலும், இவ்வளங்களை ஆக்கும் மனித இன ஆள்வினை வளத்திலும் உலகுக்கு வழிகாட்டியாய் இருந்து வந்துள்ளது என்னலாம்.

மலை நாட்டு நிலங்கள் செம்மண் நிலமாய் இருத்தலே இயல்பு. ஆனால் செம்மண்ணின் உலோகச்சத்துக்களுடன் பிற கனிவளச்சத்து உயிர்ச்சத்து ஆகியவற்றின் உரவளமும் மிகுந்த கருநிலம் அல்லது கரிசல் நிலமாகவே (Blake Cotton Soil) குமரி மலைத் தொடர்புடைய பெருங் கொங்கு நாடாகிய கருநாடகம் அப்பெயர் பெற்று நிலவுகின்றது என்னலாம். தமிழில் கருமை செல்வமும் செல்வளமும் உயிர் வளமும் உரவளமும் (கருத்தனம், கருவூலம், செல்வக்குவை, கருப்பை, கர்ப்பம்; காரணம் - கரு வண்ணம்; காரியம்: கருவளம்) குறிப்பது இதனாலேயேயாகும். இருளர், துதவர் போன்று சுருட்டை மயிரும் கருநிறமும் உடைய ஒரு குள்ளமான இனத்தினரே (பண்டைக் கொங்குப் பழங்குடிகள் போன்றவர்) பண்டை நாகரிக உலகில் கப்பல் தொழிலாளர் களாகவும், கல்லுளிச் சித்தர்கள். அதாவது சுரங்கத் தொழிலாளர் களாகவும் இரும்பு பொன்மணி வினைஞராகவும் விளங்கி வந்துள் ளனர் என்று மனித இனப் பழமையாராய்ச்சியாளர் கூறுகின்றனர். பண்டை எகிப்தியரிடையே உழைப்பாளராயிருந்த இம்மக்களை

அவ்எகிப்தியர் வழிநின்று கிரேக்க அறிஞரும் வரலாற்றாசிரியரும் எறும்பு மனிதர் என்று அழைத்தனர்.

வரலாற்றுப் புகழ் பெற்ற உலகின் முதற் பெருவைரமான கோகினூர் (ஒளி அரசன்; பாரசிகமொழி; கோஅரசன்; நூர்ஒளி) கொங்கு நாட்டில் கண்டெடுக்கப்பட்டதேயாகும். ஐயாயிர ஏழாயிர ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு பொன் முதலிய உலோ கங்களை அகழ்தெடுப்பதில் மட்டுமின்றி, இரும்பை எஃகாக்கும் தொழிலைக் கண்டு, அந்த எஃகினையும் இரும்பு துருப்பிடிப் பதைத் தடுக்கும் ஆற்றலுடைய தேக்கு மரத்தினையும், துருப் பிடிக்காத தனி முறை எஃகுக் கலவையினையும் ஊர் என்ற சாலடியரின் தலைநகரிலும் எகிப்திய கூர்ங் கோபுரங்களினடி யிலும் இடம் பெறும்படி அனுப்பியவர்களும், சிந்துவெளி நாகரிக மக்களுக்குத் தங்கம் வழங்கியவர்களும் கொங்கு மக்களே என்பது மேலே கூறப்பட்டது. உலகமெங்கும் பரவிய வாணிகப் பொரு ளாக நீலமணிக் கற்களும் தங்கமும் தேக்கும் அகிலும் சந்தனமும்; கூலவகைகளும் கொங்கு நாடு முழவதிலும் வளம் பெற்றிருந்தன என்பது யவனக் குறிப்புகளாலும் சங்க இலக்கியத்தாலும் விளக்கம் பெறுகின்றன. அத்துடன் கொங்கு நாட்டு மக்களாகிய கடம்பர் போன்ற மேலைக் கடலோடிகளான வேளினத்தவரே உலகின் முதல் கடலோடிகளாக மட்டுமின்றி, உலகின் முதல் கடல் கொள்ளைக்காரர்களாகவும் விளங்கினர் என்பதை யவனர் குறிப்பு களும் பவேருஜாதாகம் போன்ற புத்தர் காலப் பாளி சமஸ்கிருத ஏடுகளும் சங்க இலக்கியமும் கூட விளக்குகின்றன.(பம்பாய் நகரின் மலபார்க் குன்றப் பகுதி 1840 வரை கூட இத்தக மேலைக் கடலாண்ட ஒரு தலைவனின் ஆட்சித் தலைமையிடமாய் இருந்தது) 'சேரன் கடலில் பிற காலம் செல்லாதவாறு போல' என்ற சங்ககால உவம வாசகம் சேர நாட்டுச் சேரனை மட்டு மன்றி கொங்கு நாட்டுக் கொங்குச் சேரரையும் உளப்படுத்திக் குறிப்பதாகும். முதல் கன்னியாகுமரிவரை கடற்கரையில் கராச்சி முதல் கன்னியாகுமரி வரை கடற்கொள்ளையிட்ட நன்னன் மரபினராகிய கடம்பர்களை அடக்கி அம்மேல் கடற்கரையைச் உலக வாணிகத்துக்குரியதாக்கிய பெருமை சேரரும் கொங்கு சேரரும் இணைந்த கூட்டுறவினுக்கே உரியதாகும். சங்க கால ஏடாகிய பதிற்றுப்பத்து இதனை விளக்குகிறது. இக்கொள்ளை யரை அடக்கிய கொங்குச் சேரர் மட்டுமின்றி அவரால் அடக்கப்

பெற்ற கடம்பரம் கொங்கரேயாவர் என்பது இங்கே கருதத்தக்கது ஆகும்.

கொங்கு மக்கள் அரிசியையும் சர்க்கரையையும் (உலகளா விய அவற்றின் பெயர்கள் காட்டுகிறபடி) இரண்டாயிர, மூவாயிர ஆண்டுகளுக்கு முன்னரே வாணிகச் சரக்காக உலகெங்கும் அனுப்பியவர்கள் மட்டுமல்லர்; கடவுளின் படைப்புகளாகிய காட்டுச் செடியையும், காட்டுப் பயிரையும் நாட்டுக் கரும்பாக, நாட்டு நெல்லாக மறுபடைப்புச் செய்து மனித இனத்துக்கு வழங்கியவர்களும் அவர்களே என்று கருத இடமுண்டு. ஏனெனில் உலக மொழிகளிலெல்லாம் நெல் என்ற பெயர்பரவாமல், அரிசி என்ற பெயரே (கிரேக்கம் (Orized): ஆங்கிலம் (rise)) பரவி யுள்ளது. மற்றும் அரிசி இந்தச் சொல்லிலுள்ள சகரஒலி அதன் பண்டைத்திராவிட ஒலிப்புடன் அப்படியே கிரேக்க எழுத்திலும் (Z) ஆங்கில எழுத்திலும் (C) பதியப்பட்டுள்ளது. (இருமொழி களிலும் இன்றைய தமிழர் ஒலிப்பின்படி அது (S) என்ற எழுத்தாக இருத்தல் வேண்டும். ஆனால் அது (Z) அல்லது (C) என்ற ஒலிக் குறிப்பாக உள்ளது) இது மட்டுமன்று. அரிசி என்ற இச்சொல் பண்டைத் தமிழிலும் இன்றைய மலையாளத்திலும் 'அரி' என்ற வடிவமே பெறுகிறது. அதன் பழம்பொருள் நெற்பயிர் என்பதே யாகும். கன்னடமொழியில் மட்டும் தான் அது அரி காய் என்பதனடி யாக 'அரிகே' ஆகி; நெல் என்ற பொருள் குறித்துப் பின் அரிசி யையும் குறிக்கிறது. அரிசி என்ற இன்றைய தமிழ்ச் சொல் 'அரிகே' என்ற வடிவின் ஒலித்திரிபேயாகும். இந்தத்திரிபு கன்னட நாட்டைப் ஒட்டிய தமிழ் நிலமாகிய கொங்கு நிலத்திலேயே ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்னலாம். அத்துடன் அது குறிக்கும் நெற்பயிர், அதன் காயாகிய நெல், அதன் உணவுக்குரிய மாற்றுரு வாகிய அரிசி ஆகிய பொருள்கள். இப்பயிரின் படைப்பாக்கத் தாயகம் கொங்கு மாநிலமே என்பதையே சுட்டுகின்றன.

நெல்லும் கரும்பும் இன்று முழுக்க முழுக்க மருத நிலப் பயிர்கள்; மருதநிலப் பயிர்கள் என்பதைவிட, சேற்றுநிலப் பயிர்கள் என்றே கூறலாம். ஆனால் நெல் மலையிலிருந்துதான் பிறந்தது என்பதை இன்றும் அதற்கு இனமான இயற்பயிராக மலை நெல்லே அமைவதனால் உணரலாம். பண்டைக் கொங்கு மக்கள் ஐவன நெல் போன்ற இயற்கைக் கூலங்களையும் உண்டதாகச் சங்கப் புலவர் குறிப்பிட்டுள்ளனர். கரும்பு வகையிலோ கரும்பு (கரும்பயிர்)

என்ற அதன் பெயரே அது இயல்பாய் வளர்ந்த கொங்கு நாட்டின் கருமண்ணைக் காட்டி நிற்கிறது. சங்கப் பாடல்கள் தகடூர் அதிகமானின் தொலைமரபினரான முன்னோர் குரம்பை வானுலகி னின்று கொண்டுவந்து இம்மண்ணுலகில் பயிராக்கினர் என்று கூறுகின்றனர். பண்டைச் சீனப்பேரரசர் தங்களை வானவர் என்று கூறிக்கொண்டதனை ஒட்டி, இந்த வானவர் உலகம் சீன நாடாக யிருந்திருத்தல் கூடும் எனச் சில ஆராய்ச்சியாளர் கருதியுள் ளனர். ('சீனி' என்ற சர்க்கரைப் பெயரையும் இதற்குச் சான்றாக அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்) தென்னாட்டுப் போர்க்களங் கள்' என்ற ஏட்டில் இவ்வாசிரியரும் 'புலவர் குழந்தையும்' பண்டைச் சேரப் பேரரசர் தமக்கு வானவர் (வானவரம்பன்) என்று பட்டஞ் சூட்டிக் கொண்டதை நினைவுறுத்தி அது சேரநாடாகலாம் என்று கருதியுள்ளனர். ஆனால் அது உண்மையிலேயே வானவர் நாடுதான். கொங்குநாட்டு மனிதன் பயில் திறக்கைப்புனைவால் கரும்பாகிவிட்ட காட்டுத் தட்டைகள் கடவுட் படைப்பாக வளர்ந் திருந்த கொங்கு நாட்டு மலைக் காடுதான் என்று கருதுவதே பொருத்தமானதாகும். கரும்பு என்ற சொல்லும், உலகெங்கும் பரவியுள்ள சர்க்கரை என்ற சொல்லும் கரும்புப் பயிருக்கு மட்டுமன்று, சர்க்கரைத் தொழிலுக்குமே தமிழகமும் கொங்கு நாடும்தான் தாயகம் என்பதைக் காட்டுகின்றன. 'சீனி' என்ற சொல் அதன் 'வெண்பொடி' வடிவத்திற்கு மட்டுமே உரிய பிற்காலச் சொல் ஆகும்.

காட்டு விலங்குகளையும் காட்டுச் செடி கொடிகளையும் நாட்டு விலங்கு, நாட்டுப் பயிர் ஆக்கியது மனித நாகரிகத்தின் ஆதிகாலப் பண்பு வளங்களில் ஒன்று ஆகும். காய்ச்சற் பொடிக் குரிய மரமும் (chinchona) பால்மரமும் (rubber tree) புகையிலை யும் பெருநாட்டினராலும், காப்பி துருக்கி நாட்டவராலும், செங்கழு நீர்மலர் (ரோசப்பூ) பாரசிக நாட்டினராலும் குதிரை அராபியராலும் ஆதிகால ஆரியராலும், தேயிலையும் பட்டும் சீன நாட்டினராலும், கண்டு பயிற்றப்பட்டன என்று அறிஞர் கூறுகின்றனர். இந்த ஆதி மனிதப் படைப்புத் திறத்தில் கொங்குமாந்தன் பங்கு பெரிது என்பதனை நெல்லும் கரும்பும் மட்டுமன்று யானை, கால்நடைப் பயிர்ப்பு (breeding) ஆகியவையும் காட்டும்.

யானை இன்றும் பெரும்பாலும் ஆப்பிரிக்கா, தமிழகம், இலங்கை, பர்மா, ஆகிய நான்கு நாடுகளுக்கே உரியது. ஆப்பிரிக் கர்கள் யானை இறந்தபின் ஊனும் எலும்பும் தந்தமும் பயன்

படுத்தியதன்றிப் பழக்கிப் பணிகொண்டதில்லை. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலுள்ள யானைகள் எளிதில் பழக்கிவிடத் தக்கவை - அவை எருமைகளை விட ஒரு சிறிதே தான் பெரியவை. தமிழக யானையோ தமிழகத்துக்கே, பெரிதும் கொங்குத் தமிழகத்துக்கேயுரிய தனியினம் ஆகும். ஆப்பிரிக்க யானையை விட அது நீளத்தில் குறைந்ததே - ஆனால் உயரத்திலும் அழகிலும் வீறமைதியிலும் அறிவிலும் வேலைத்திறத்திலும் சிறந்த அரச யானையினம் கொங்கு நாட்டுச் சூழலுக்கே பெரிதும் உரிய தமிழக அல்லது இந்திய யானையேயாகும்! அதை மனித னுக்குப் பணியாற்ற, இறைவன் விழாக்களுக்கு அழகுசேர்க்க முதல் முதல் பயன்படுத்தியது கொங்கு நாடேயாகும். இந்திய யானைகள் விந்தியம் வரை வாழினும், கொங்கு நாட்டின் சங்க கால உம்பற்காடு (ஆனைமலைக்காடு; உம்பல்யானை) இன்றும் அதன் மையப் பெருக்க இடமாகவே உள்ளது. யானைப் பாகரின் மறை மொழியான வடசொல் இன்று சமஸ்கிருதமாகக் கருதப் படினும் உண்மையில் கொங்கு நாட்டுப் பழங்குடியினத்தவரின் மரபுப் பேச்சேயாகும் என்னலாம்!

இந்திய யானையைப் போலவே, இந்தியப் பசுவும் உலகில் தனியினமாக (திமில் உடையனவாக) உள்ளது. இதன் ஆதிப் பயிர்ப்பினப் படைப்பும் கொங்குத் தமிழகத்துக்கே உரிய தாய் இருத்தல் கூடும். கொங்குநாட்டவர் காட்டுப் பசுவை வளர்த்து அதன் பால் உண்டதனைச் சங்கப்பாடல்கள் குறிக்கின்றன. இது எவ்வாறாயினும், கால்நடை வளமும் கால்நடைப் பயிர்ப்பின வளமும் சங்க காலத்திலிருந்து இன்றுவரை கொங்கு நாட்டுக்குத் தனிச் சிறப்பே அளித்து வந்துள்ளன. சங்கப் புலவர் வரிக்கு வரி கொங்குநாட்டை 'ஆகெழு' கொங்கு என்று சிறப்பிக்கத் தவற வில்லை.

சங்க காலத்தில் அரிசி தமிழகமெங்கும் பரவிய பண்பா யினும், ஆவினப் பயிர்ப்பு அவ்வாறு பரவி விடவில்லை. அரிசி யினும் மிகுதியாக ஆவினத்தையே கொங்கின் சிறப்புப் பண்பாகச் சங்கப் புலவர் பாராட்டியது இதனாலேயே ஆதல் வேண்டும் என்னலாம். சோழநாடும் பாண்டி நாடும் அன்று நெல் வளத்தில் விஞ்சிவிட்டதனாலும், கொங்கு நாட்டின் இச்சிறப்பு தனிப்படக் கூறப்படவில்லை என்று கருதலாம். கொங்குநாட்டினரின் கரும்புப் படைப்பைவிட அவர்களது நெற்படைப்பு மிகுபழமையுடைதாய் சங்கத் தமிழராலேயே மறக்கப்பட்டிருத்தலும் கூடியதேயாகும்.

தமிழகத்தில் பழங்கற் காலத்திலிருந்தே மக்கள் நெசவுத் தொழிலில் பழகியிருந்தனர் என்றும்; புதுக்கற்காலத்தை அடுத்தே இரும்பை வழங்கத் தொடங்கியிருந்தனர் என்றும் பழமையாராய்ச் சியாளர் கருதுகின்றனர். தமிழரே இவ்விரு வகைகளிலும் ஆரிய ருக்கு முற்பட்ட இந்திய நாகரிகமாகக் கருதப்படும் சிந்துவெளித் திராவிட நாகரிகத்தினும் முந்துற்ற மேம்பட்ட வளர்ச்சியடைந் திருந்தனர் என்று அறிகிறோம். இவ்விரு வளர்ச்சிகளுமே கொங்குத் தமிழகத்துக்கு மேலும் சிறப்புறப் பொருந்துபவை ஆகும் என்று கருத இடமுண்டு. ஏனெனில், கொங்கு நாட்டில் இன்றும் பழங்கற்கால இடைக்கற்காலச் சின்னங்கள் மிகுதி கிடைக்கவில்லையானாலும் கிடைத்துள்ள புதுக்கற் காலக் கருவிகளே, அதே காலத்துக்குரிய பிற தென்னக, தமிழகப் பகுதி களுக்குரிய கருவிகளைக் காட்டிலும் மிகச் சிறந்த வேலைப்பாடு கள் உடையவையாய்க் காணப்படுகின்றன.

இதுமட்டுமன்று, நிலவுலகில் இதேபோன்ற வேலைப் பாட்டுச் சிறப்புடைய இடங்களிடையே, கொங்கு நாடே நடுநாயக மாக அமைந்துள்ளது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் அந்நாளைய புதையல் கல்லடுக்குகளிடையே காணப்படும் ஒருவகை உரைகல் நெசவுத் தொழிலில் துணி களுக்குப் பளபளப்பூட்டப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப் படுகிறது. புதுக் கற்காலத்துக்குள் அத்தொழில் கொங்கு நாட்டில் அடைந்துவிட்ட நேர்த்தியை இது காட்டுகிறது என்னலாம்.

கொங்குநாட்டுப் புதைகுழிகளிலும் கல்லடுக்குகளிலும் இறந்தவரின் எலும்புகளுடன் பிறபொருள்களிடையே இரும்புக் கருவிகளும் தங்க வெள்ளி அணிமணிகளும் இடம்பெறுகின்றன.

கற்கருவிகள் கொங்கு நாட்டில் பெரும்பாலும் மலை களிடையேதான் மிகுதி காணப்படுகின்றன. அத்துடன் அவை பெரிதும் பருகூர்ப் பகுதியில் தான் மிகப்பேரளவில் குவிக்கப் பட்டுக் காணக்கிடக்கின்றன. புதுக் கற்காலத்திலேயே தொழி லாக்கம் மையப்படுத்தப்படும் அளவுக்குக் கொங்கு நாட்டில் தொழில் வளம் பெருக்கமுற்றிருந்தது என்பதையும்; அதற்குரிய சமுதாய அமைப்பும் சமுதாய அரசியலமைப்பும் அந்நாளிலேயே கொங்குநாட்டில் ஏற்பட்டிருந்தன என்பதையும் இது காட்டுகிறது.

பண்டைத் தமிழர் கிரேக்கரைப் போலவே மாண்ட மக்களின் உடலை அல்லது உடல் எரியூட்டப்பட்ட சாம்பல் எலும்பு ஆகியவற்றைத் தாழிகளில் (Urns) அடக்கம் செய்தனர். இவை தமிழ் மரபில் முதுமக்கள் தாழிகள் என்று வழங்கப்படு கின்றன. சவ அடக்கம் செய்யப்பட்ட இத்தகைய புதைகுழிகள் மாண்டவர்குழிகள் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் பிற்கால அணிமைக்கால மக்கள் அந்தந்தக் காலக் கருத்து வண்ணங்களுக்கியைய அவற்றைப் பாண்டவர் குழிகள் என வழங்கிவருகின்றனர். மாண்டவீரர்க்கும் வீரநங்கையர்க்கும் வீரக் கற்புடை நங்கையர்க்கும் அவர்கள் பெயர்களும் பீடும் புகழும் எழுதப்பட்ட வீரக்கற்கள், மாசதிகற்கள் ஆகியவை எழுதப்பட் டிருந்தன என்பதைச் சங்ககாலப் பாடல்கள் நமக்குத் தெரிவிக் கின்றன. ஆனால் சங்க காலத்துக்குரிய பழைமையுடையனவாக அத்தகைய கற்களோ, கல் எழுத்துக்களோ இன்னும் நம்மால் கண்டுணரப்படவில்லை. சங்ககாலத்துக்குப் பிற்பட்டவையே தமிழகத்திலும் கொங்கு நாட்டிலும் அப்பாலும் கிடைத்து வருகின்றன.

சிலம்புக்காப்பிய நாயகியாகிய கண்ணகி பிறந்தது சோழநாடு, தியாகத்தீயில் அவள் குளித்தது பாண்டி நாடு. அவள் தெய்வமாகக் கோயிலெடுத்து வழிபடப்பட்டதோ சேரநாடு. ஆனால் கோயிலெடுத்து விழா நடத்திய இந்த ஒரு செய்தியில் மட்டுமே, அதுவும் இலங்கையிலும் அவந்தி நாட்டிலும் அதனதன் அரசரால் அது நிகழ்த்தப்பட்டதுபோல, கொங்கு நாட்டிலும் கொங்கிளங்கோசரால் அதே செயல் நிகழ்த்தப்பட்டிருந்தது என்று கருத இடமுண்டு. ஆயினும் சிலம்புக் காப்பியம் அக்கற்புத் தேவியை முழுக்க முழுக்கக் கொங்கு மரபுக்கே உரியவளாக்கிக் 'கொங்கச் செல்வி, கொடுமலையாட்டி' என்று தனிச் சிறப்புப் படப் போற்றியுள்ளது. இது ஒரு வேளை கண்ணகி பழனிமலை யடுத்த காட்டு வழியினூடாகச் சென்றே சேர நாட்டருகில் தெய்வ மானாள் என்பதனாலாகலாம். அல்லது ஒருவேளை பொதுவாகக் கற்புக் கடவுளுக்கும் கொங்கு நாட்டுக்கும் சிலம்புக் காலத்தினும் பழமையான தொடர்பு இருந்திருக்கலாம். (தமிழ் இலக்கண மரபு முல்லைத் திணைக்கே கற்பை உரிமையாக்கியுள்ளது என்பதும், கண்ணகி தெய்வமாகுமுன் தமிழரால் முல்லை நிலத் தெய்வ மான மாயோன் ஆகிய கண்ணனின் காதல் துணைவியான நப்பின்னைப் பிராட்டி அல்லது ராதையே கற்புக் கடவுளாகக்

கருதப்பட்டாள் என்பதும் இங்கே நினைவுகூரத்தக்கவை ஆகும். இதுவன்றித் தமிழன்னையாகிய குமரிமலை மரபில் வந்த மலையாள பகவதியுடனும் சேரர் குலதெய்வமாகிய அயிரை யம்மனுடனும் இக்கற்புக் கடவுள் ஒன்றுபடுத்தப்பட்டு இருத்தல் கூடும். ஆனால் இது எவ்வாறானாலும், வரலாற்றில் கற்புக்கும் கொங்கு நாட்டுக்கும் (தாலி கொங்கு நாட்டுக்கே சிறப்புரிமை யுடைய மரபு என்று கருத இடமுண்டு) நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும் என்பது உறுதி. ஏனெனில் பண்டைப் பெருங் கொங்கு நாட்டுப் பரப்பு முழுவதிலும் மராத்தி மாநிலத்துக் கொங்கண நாட்டு எல்லை கடந்து பம்பாய் வரைகூட வீரர் களும் வீரமாசதிகற்களும் (மாஸ்திக்கல்) அந்தமிழ்ப் பெயர்களுட னேயே (ஆனால் தமிழ் எழுத்திலன்றி) கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று அறிகிறோம்.

கொங்கு நாட்டின் நிலப்பழமையோடொத்த நிலவள, தொழில்வள, பண்புவளப் பழமைகளுக்குரிய சின்னமாயமைவது கொங்கு நாட்டின் மக்கட் பழமைவளமேயாகும். கொங்கு மாநிலம் சூழ்ந்த மலைகள், குன்றுகள், மலைக் கணவாய்கள், பள்ளத் தாக்குகள், மேட்டு நிலங்கள் ஆகியவற்றில் ஒதுங்கி வாழும் பழங்குடி, மலங்குடி இனங்களே இதற்குச் சான்றுகள் ஆவர். ஏனெனில் விந்தியமலைச் சூழலுக்கு அடுத்தபடியாக, இந்தியா வின் பழங்குடியினங்களில் மிகப் பெரும்பாலானவர்கள் இங்கேயே, இந்தியாவினுள் ஓர் பழங்கால இந்தியாவாக, தனி வாழ்வு வாழ்கின்றனர். இவர்களில் நீலகிரியில் வாழும் தொதவர், கோத்தர், குறும்பர், படகர்; வெள்ளி மலை, ஆனை மலைப்பகுதி களில் வாழும் இருளர், மலசர், முதுவர், காடர், புலையர்; கொல்லி மலை, சேர்வராயன் மலைகளில் வாழும் மலையாளிகள், மலை யரையர் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் பெரும்பாலும் தமிழக வழக்கிலிருந்து சிறிதும் பெரிதும் திரிபுற்ற தமிழ் மொழியே பேசுகின்றனர். தமிழினம் சார்ந்த பிறிது மொழியினரோ; பிறிது இனத்தவரோ என்று ஐயுறுமளவு வேறுபட்டவர் மிகமிகச் சிலரே. அதே சமயம் கொங்குத் தமிழகத்தின் அகநாட்டு மக்களிடம் வழங்கும் பழமையான சமய சமுதாய மொழி அரசியற் பண்பு களுடன் அவர்கள் வாழ்வுகள் தொடர்புடையவையாகவே, அவற் றுக்கு ஒளிவிளக்கம் தருபவையாகவே இருத்தல் வேண்டும் எனலாம். கொங்குநாட்டின் தமிழ்த் தொன்மை இந்தியத் தொன்மை உலகத் தொன்மை சார்ந்த பழஞ்சின்னங்களாகவே அவர்கள்

வாழ்வு கருதப்படத்தக்கது; கருதப்படல் வேண்டும் என்று கூறத் தகும்!

> துடியன் கடம்பன் பாணன் பறையன் என்று
> இந்நான் கல்லது குடியும் இல்லை

என்று சங்ககாலப் பழம்பாடல்கள் போற்றியுள்ள தமிழரின் நாற்பெருந் தொல் குடிகளில், கடம்பர் சங்காலங்களிலிருந்தே மேல் பொங்குநாட்டின் வேள் குடியினராய்: கடலோடிகளாகவும் அரசு வல்லரசு மரபினராகவும் வாழ்ந்தவர் ஆவர். பறையரும் பாணரும் புலவரும் இன்று தாழ்த்தப்பட்ட அல்லது பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களாக உள்ளனர். துடியரோ, மேற்கூறப்பட்ட மலங்குடி இனத்தவர்களுக்குள்ளேயே மிகத் தொன்மையானவர் களாகக் கருதப்படும் துதவராக இருக்கலாம் என்று அறிஞர் கூறு கின்றனர். கோவை மாநகருக்கருகிலுள்ள துடியலூர் (துடிசை) இப்பழங்குடியினத்தவர் பெயரடிப்படையாகத் 'துடியனூர்' என்ற வடிவின் திரிபாய் இருத்தல் கூடும் என்றும் ஆராய்ச்சியாளர் கருதியுள்ளனர்.

சங்க காலத்துக்குப் பின் பல நூற்றாண்டுகள் வரை இருளர் தலைவர்கள் கொங்கு நாடெங்கும் ஆண்டனர் என்று சோழர் பட்டயம் கூறுகின்றது. கொங்கு நாட்டு உட்பிரிவுகளில் குறும்பு நாடு என்றும் ஒன்று உண்டு. குறும்பர்கள் குடியரசுக் குழு வினராக, கப்பல் சின்னம் பொறித்த நாணயம் வெளியிடுமள வில் கடலோடி மரபினராக விளங்கினர் என்று பழம்பொருளாய் வாளர் கூறுகின்றனர். குண்டூர்பகுதியைத் தொல் பழங்காலத் தாயகமாகக் கொண்டிருந்த பண்டை ஆந்திரப் பேரரசருடன் இவர்கள் மிக நெருங்கிய தொடர்புடையவராவர் என்று கருத இடமுண்டு.

கல்வி, தொழில் ஆகியவற்றில் இப்பழங்குடியினரை மீண்டும் முன்னேற்றுவிப்பதன் மூலம் அவர்களையும் மற்ற நாட்டு மக்களுடன் இணைவித்துத் தேசீய ஒருமைப்பாட்டை வளர்க்க மாநில அரசினரும் இந்திய அரசினரும் பெருமுயற்சிகள் மேற் கொண்டு வருகின்றனர். இது போற்றுதற்குரியதேயாகும். ஆனால் நாட்டுணர்விலும் இன உணர்விலும் அவர்கள் சரிசம அளவில் முனைப்பாகப் பங்கு கொள்ளும் முறையில் அவர்கள் கல்வியுடன் அவர்களைப் பற்றிய மெய்யான பழமையாராய்ச்சிகளும் தமிழக, இந்திய, உலகப் பழமையாராய்ச்சிகளும் ஊக்கப் பெறாத வரை,

இத்துறையில் போதிய வெற்றி காணமுடியாது என்றே கூறல் தகும். கொங்கு மக்களின் ஒத்திசைவுப் பண்புகளுடன் இவர்கள் வாழ்வு இணைவதற்குக் கொங்கு நாட்டுக்கு வெளியிலிருந்து வரும் போலிச் சமய சமுதாயக் கோட்பாடுகள் பெரிதும், தடங் களாய் உள்ளன என்பதில் ஐயமில்லை.

இன்று பிற்பட்ட இனங்களாக அல்லது பிற்பட்ட சமுதாய வகுப்பினராக இருப்பவர்களெல்லாம் பிற்பட்டவர்களாகவே என்றும் இருந்திருந்தவராதல் வேண்டும் என்று இந்தியாவிலும் நாகரிக உலகிலும் இன்றைய ஆட்சி இனத்தவராகிய அறிஞர் பலரும் கருதுகின்றனர். இது சரியன்று என்பதைச் சங்க இலக்கிய ஆராய்ச்சிகளும் இந்தியா அளாவிய, உலகளாவிய பழமையாராய்ச் சிகளும் காட்டும். எடுத்துக்காட்டாக, பண்டு தமிழினத்துடன் தொடர்புகொண்டிருந்த நீகிரோவரினம் தென் ஆப்பிரிக்காவில் தொல் பழங்காலத்திலேயே கோட்டை கொத்தள நகர் வாழ்வு கொண்டிருந்தது. நீகிரோவரினம் தென் ஆப்பிரிக்காவில் தொல் பழங்காலத்திலேயே கோட்டை கொத்தள நகர் வாழ்வு கொண் டிருந்தது என்று அறிகிறோம். இன்று உலகப் பாலைவனங்களில் மிகப் பெரிதான சகாரா, பண்டு அவ்வின மக்களின் சோலை வனமாக இருந்ததாகவும் அறிகிறோம். மற்றும் உலகக் குழந்தைக் கதை இலக்கிய மூலவரான ஈசப் (Aesop) கி.மு. 6ம் நூற்றாண் டுக்கு முன்னரே அபிசினியாவில் வாழ்ந்த ஒரு நீகிரோ அறிஞர் ஆவார். தவிர, இன்று மராத்தி மாநிலத்துக்கு வடபால் பிற்பட்ட இனத்தவராக ஒதுக்கப்பட்டுள்ள வில்லியர் (Bhils) இன்றைய தமிழகத்தில் பிற்பட்ட சமுதாயத் தினராகவும், இன்றைய கொங்கு நாட்டில் வேளாளருடன் ஒத்த சமுதாய ஆட்சி வகுப்பினராகவும், சங்க காலத்தில் இன்னும் உயரிய நிலையில் புலவர் பாடும் புகழ் சான்ற வல்வில் ஓரியன் வேள் மரபினராகவும் வாழ்ந்தவரேயாவர்.

இன்று தமிழகத்திலும் இந்தியாவிலும் நிலவுகின்ற சமுதாய, இன உயர்வு தாழ்வு வேறுபாடுகள், வேறுபாட்டு அமைப்பு முறைகள், நம்பிக்கைகள் ஆகியவை சங்க காலத்துக்கு அல்லது வேத உபநிடத காலங்களுக்கு நெடுநாட் பின்னர் ஏற்பட் டவையே; சங்ககாலத்திலோ, உபநிடத காலங்களிலோ, புத்த சமண சமயங்கள் மேலோங்கியிருந்த காலத்திலோ கூடத் தமிழ கத்திலும் இந்தியாவிலும் காணப்படும் நிலை இதுவன்று. சிறப்பாக, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், இன்று மலங்குடிகளாக ஒதுங்கி

யுள்ளவர்கள் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் அல்லது சமுதாயத் தினரால் ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் முன்னோர்கள் சங்க காலத்தில் மற்ற எந்த வகுப்பினரையும் விட எந்த வகையிலும் குறையாத குறிப்பிடத்தக்க சமுதாய உயர்நிலை பெற்றிருந்தனர் என்று காண்கிறோம். ஏனெனில் அவர்களிடையே பெண்பாலார் ஆகிய கொங்குநாட்டுப் புலவர் பெருமாட்டி ஔவையார் (பாணர் மரபினர்), பேய்மகள் இளவெயினி (பேயர் அதாவது பிற்காலத் தில் பிசாசர், சண்டாளர், எனக் கருதப்பட்ட மலங்குடி மரபினர்), குறமகள் இளவெயினி (குறவர்), வெண்ணிக்குயத்தி(குயவர் வகுப்பு) முதலியோர் சங்கப் புலவர்களாக விளங்குமளவுக்குப் பால் வேறுபாடு, வகுப்பு வேறுபாடு, மரபு வேறுபாடு, இன வேறுபாடு, தொழில் வேறுபாடு இன்றிச் சமுதாயஉரிமை, கல்வி உரிமை, அரசியல் உரிமை ஆகிய எல்லா உரிமைகளும் பெற்று இருந்தனர் என்று காண்கிறோம். மேலும் காரைக்காலம்மையார் (பேயாக வாழ்ந்த சிவநெறிப் பக்தி கவிஞர்), திருப்பாணாழ்வார் (பாணர் மரபின் வைணவ நெறிப் பக்திக் கவிஞர்) ஆகியவர்கள் காலம் வரை இதே சமுதாய உயர்வு தாழ்வு வேறுபாடற்ற நிலை பல நூற்றாண்டுகள் நீடித்திருந்தது என்று காண்கிறோம். இந்தியாவிலும் தமிழகத்திலும் சங்க காலத்துக்குப் பின் ஏற்பட்ட அரசியல், சமய, சமுதாய, பண்பாட்டுச் சூழல் மாறுபாடுகளே இவ்வுயர்வு தாழ்வு வேறுபாடுகளைப் படிப்படியாகப் பெருக்கி வளர்த்து வந்துள்ளன என்பதில் ஐயமில்லை. கொங்குத் தமிழகத் தையும் இது தாக்கியுள்ளது என்றாலும் அப்பரப்பு அதன் முழு அவலத்துக்கு இன்னும் ஆளாகிவிடவில்லை. இது கீழே வரும் பிரிவுகளில் விளக்கப்படவிருக்கிறது.

கொங்கு நாட்டில் இன்று பிற மண்டலங்களின் மக்களும் பிற தமிழக இந்திய மொழிகள் பேசுபவர்களும் வந்து கலந்து சிறுபான்மையினராவேனும் விரவி வாழ்கின்றனர். தென்னகத்தில் கொங்குநாட்டின் மைய நிலையை நோக்க, இது வியப்பன்று; இயல்பே. இந்தியாவின், தமிழகத்தின் பிற மண்டலங்களிலிருந்து இது வேறுபட்ட நிலையோ, மிகைப்பட்ட நிலையோ கூட அன்று. ஆயினும் இப்பரப்பின் மிகப் பெரும்பாலான குடிகள் தமிழராக மட்டுமல்லர், கொங்குத் தமிழராகவே உள்ளனர். பழந் தமிழ்ப் பண்பில், பண்டைய இந்தியப் பண்பாடாகிய கொங்குப் பண்பில் மாறாதவர்களாகவே உள்ளனர். இதுமட்டுமன்று. எங்கே

பிற பண்பாடுகளின் கலப்பால் அல்லது தொடர்பால் தங்கள் கொங்குப் பண்பை இழந்துவிட நேருமோ என்று அஞ்சி, நெடுங் காலமாக அவர்கள் தங்கள் மரபுப் பெயருடன் கொங்கு என்ற அடைமொழியையும் சேர்த்துக் கொள்பவராகவே உள்ளனர். மற்றும் கொங்கு என்ற இந்த அடை, வெறும் நாட்டெல்லை யையோ, அல்லது வெறும் பண்பையோ மட்டும் குறிக்கும் சொல் அன்று என்பதைத் தற்காலத்திய திணைநிலை ஆய்வாளர்கள் (Regional Research Scholars) நன்கு ஆராய்ந்து நிறுவியுள்ளனர் (Brenda E.F.Beck: Author and Editer: perspectives on a Regional Cultuer: Article 2). ஏனெனில் இந்த அடைமொழி அவர்களின் கொங்கு நாகரிகம், கொங்குப் பண்பு, கொங்குத் தமிழ் மொழி, கொங்குப் பழக்கவழக்கங்கள், ஆகியவற்றைக் குறிப்பவையாக மட்டும் அமையவில்லை. கொங்கு நாட்டெல்லை கடப்பதற்குள் இச்சொல்லும் இப்பண்புகளும் இயல்பாகப் படிப்படியாகக் குறைந்து மறைந்து விடுகின்றன. எனவே இவை பலர் கருதுவது போல், வெறும் சாதிக் கட்டுகளோ வெறும் நாட்டெல்லை, சமுதாயம் எல்லை குறித்த சின்னங்களோ அல்ல, அவை நாட்டெல்லையுடனும் நாட்டு வரலாற்று மரபுகளுடனும் பின்னிப் பிணைக்கப்பட்ட நாகரிக சமுதாயப் பண்புகளாய், கொங்குத் தேசீயப் பண்புகளாய், கொங்குநாட்டில் வந்தேறும் குடிகளையும் தம் வயப்படுத்தித் தேசீய ஒருமைப்பாட்டுக்குள் கொண்டு வரத் தக்க ஆற்றல் சான்றே பண்புகளாகவே விளங்குகின்றன என்பதை இது காட்டுகிறது.

கொங்கு நாட்டின் கொங்குத் தேசீய மரபில் இன்று முனைப் பாக எடுத்துக்காட்டப்படும் ஒரு பெரும் பிளவுகூட, இந்திய, உலகப் பழமைகளிடையே மிகுதொன்மை வாய்ந்த இக்கொங்குப் பழமையின் அடிப்படை ஒருமைப்பாட்டை வலியுறுத்தி விளக்கு வதாகவே அமைந்துள்ளது. கொங்கு நாட்டின் இடைக்கால அல்லது அணிமைக்கால வரலாற்றில் வேளாளர் மரபு, வேட்டுவ மரபு ஆகிய இரு பழங் கொங்குத்தமிழ் மரபுகள் சென்ற ஒரு சில நூற்றாண்டுகளாகத் தம்முள் பூசலிடத் நேர்ந்த மரபுகள் அப்பூசல் களைப் பாடும் (கள்ளழகர் அம்மானை, அண்ணமார்கதை போன்ற நாட்டுப் பாடல்கள் காட்டுகின்றன. ஆனால் பாரதப் போர் பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடைப்பட்ட தீராப் பூசல்களின் வரலாறு என்பதனால், பாண்டவரும், கௌரவரும் ஒரே குடியினர் என்பது மறுக்கப்பட்டு விடுவதில்லை. பாண்டவர் கௌரவர்

என்ற எதிரிடை வழக்கு மூலம் பாண்டவரும் கௌரவரும் ஒரே பிரிவினரே என்பது முற்றிலும் மறைக்கப்பட்டு விடவும் இல்லை. மேலும் இப்பூசல்களைப் பாடும் பாடல்களின் பண்பு பாரதப் போர்ப் பண்பிலிருந்து பெரிதும் வேறுபட்டதுமன்று. (பாரதக் கதையே பண்டைத் தமிழ்க் கொங்கர் மரபுக்குரியது என்று கருத இடமுண்டு) ஏனெனில் வேளாளர்-வேட்டுவர் ஆகிய இரு சார்பினருமே கொங்கு மக்களிடையே சமுதாய ஆட்சிக்குரிய மதிப்புடையவர்கள்! இரு சாராருமே தொன்று தொட்டு வந்த வீரமரபினர்; இரு சாரருமே தாம் வகிக்கும் ஆட்சித் தலைமைக் கும் நாட்டுரிமைக்கும் சின்னங்களான கவுண்டர் அல்லது காமிண்டர் என்ற பட்டமும், கொங்கர் என்ற பட்டமும் சூட்டிக் கொண்டுள்ளனர் என்பதும் இதனை நன்கு விளக்குகின்றது.

வேட்டுவர் வேளாளர் என்ற எதிரிடை வழக்கு பாண்டவர் கௌரவர் (தமிழ்: கௌரியர் = பாண்டியர்) என்ற வழக்குப் போன்றதே. வேட்டுவர்-வேளாளர் என்ற சொற்களின் தொடர்பை யும் மரபுப் பண்புத் தொடர்பையும் இது மறைத்துவிட முடியாது. இது கீழே விளக்கப்படவிருக்கிறது.

கொங்கர் அல்லது கவுண்டர் என்ற பட்டங்கள் குறித்த கொங்குநாட்டு ஆட்சித் தலைமை உலகில் வழங்கும் ஏனைய ஆட்சித் தலைமைகளைப் போன்று ஒருவர் மற்றவர் மீதோ, அல்லது பலர் மீதோ, அல்லது ஒரு சிறுபான்மையினர் பெரும்பான்மை யினர் மீதோ கொண்டு செலுத்தும் ஆண்டான் அடிமை முறை அல்லது அரசியல் ஆட்சித் தலைமையன்று. அது சமுதாய ஆட்சித் தலைமை அல்லது குடித்தலைமை; அதாவது, சிறுபான்மையே பெரும்பான்மையாக விரிந்து கொண்டு செல்லும் குடியரசு மரபின் ஆட்சித்தலைமையாகும். (இதன் வரலாற்று வேர் முதல் மரபு கீழே விளக்கப்படவிருக்கிறது. வரும் பிரிவின் நாடு கீழே விளக்கப் படவிருக்கிறது. வரும் பிரிவின் நாடு குடிஎன்ற சொல் விளக்க விரிவு காண்க) இருவகுப்பினரின் இடைக்கால அணிமைக்காலப் போராட்டமும் இத்தகைய தலைமைப் போட்டிக்குரிய ஆதிக்கப் போராட்டமே கொங்கு மரபுக்கும் ஓர் அயல் மரபுக்கும் உரிய போராட்டமாக அது இன்று வரை வண்ணம் பெற்றதில்லை. அது மிகு பழமையான வேர் முதல் உடையதுமன்று; சோழர் காலத் துக்குப் பிற்பட்டதேயாகும். வடுகநாதர் போன்ற வேட்டுவர் குடித் தெய்வங்களை வேளாளரும் மேற்கொண்டு வாழ்வது,

அவர்கள் நீடித்த தொடக்ககால நேசபாசத் தொடர்பினையே குறித்துக் காட்டுவதாகும்.

மறவர் என்ற பழந்தமிழ்ச்சொல், வீரர் என்ற பொருளே உடையது. கள்ளர் என்ற சொல்லும், இதுபோல மறைவடக்கம் (இரகசியம்) அல்லது மறை காத்தல் பண்பை மேற்கொண்ட ஒற்றர் அல்லது வேவுப் படையினரைக் குறிப்பதாகும். இடைக்கால பிற்காலங்களில் மறம் என்பது அறத்துக்கு எதிர்மாறான சொல், தீய ஒழுக்கம் குறிப்பது என்றும், கள்ளர் என்ற சொல்லும் இது போலவே திருடர், கொள்ளைக்காரர்களைக் குறிப்பது என்றும் கருதப்பட்டு வந்துள்ளன. வருகின்றன. இதுபோலவே அரசருக் குரிய வீரவிளையாட்டாகிய வேட்டம் என்ற சொல் நாகரீகமற்ற வேடரைக் குறிப்பதாகக் (வேள், பகுதி; வேளிர் - குடியரசர்; வேளி - திருமணம்; வேளாளர் - வேள் மரபினர்.) கொள்ளப்பட்டு வரலாயிற்று. இதனாலேயே வேட்டுவ மரபினர் வேளாளரிட மிருந்து வேறுபட்ட மலங்குடிகள் போன்ற பழய பண்படா வேடவகுப்பினர் என்ற தவறான கருத்து எழுந்துள்ளது. வேளாளர்-வேட்டுவர்பாடல் மரபுப் போராட்டத்துக்கு இனப் போராட்டச் சாயம் கொடுக்க வழிவகுத்துள்ள புதிய சொல் மரபுச் சூழல் இது! (வரும் பிரிவுகளில் இது விளக்கப்படவிருக்கிறது)

பண்டை வல்வில் ஓரிக்குரிய வேளிர் இனத்தவராகிய இவ்வேட்டுவ மரபினர் இன்றும் அன்றும் வேளாள மரபினருடன் ஒத்த சரிநிலை வீர ஆட்சி மரபும் வீரப் பண்பாடும் உடையவரே யாவர். பண்டைய இந்தியாவில் மராத்தி மாநிலத்துக்கு அப்பால் சௌராட்டிர நாடுவரை பரவியிருந்த அவர்கள் நாகரிகப் பரப்பு மேலே குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் ஆட்சி பெரிதும் குறிஞ்சி நிலத்திலிருந்து பரவியதாகவோ அல்லது வரலாற்றுப் போக்கில் குறிஞ்சி நிலப்பக்கமாக ஒதுங்கியதாகவோ அமைவதும் ஆகும். பொதுநிலை வேளிர் ஆட்சியுடன் முல்லை நில ஆயர்தலைவர், பாலைநில மறவர் தலைவர், ஆகியோர் முற்காலங்களில் மோதிக் கொண்டது போலவே, மருதநிலத்துப் புதுவளங் கண்ட ஐந்திணை விரவிய வேளிர் மரபினராகிய வேளாளர் பிற்காலத்திய அரசியற் சூழல்களிடையே அவர்களுடன் மோத நேர்ந்திருத்தல் இயல்பே. தவிர, இப்பூசல் கொங்குச் சோழர் காலத்துக்கும் பிற்பட்டு, கி.பி. 14, 15-ம் நூற்றாண்டுகளின் பின்னரே தொடங்குவதை நோக்க, இப்பூசலில் திணைமரபுப் போட்டியைவிட, புற அரசியல் சூழல்களால் அல்லது பண்பாட்டுத்

தலையீடுகளால் ஏற்பட்ட போட்டியே மிகுதி இடம் பெற்றிருந்த தென்று கூறலாம். தென்னகத்திலே இடங்கை வலங்கைப் போராட்டங்கள், தென்கலை, வடகலைப் போராட்டங்கள், நாடார் மறவர் போராட்டங்கள் போன்ற பலவகை மரபுரிமை, சாதியுரிமை போராட்டங்களுக்குரிய காலம் இதே ஊழியே என்பதும் இங்கே காணத்தக்கது ஆகும்.

கொங்கர் அல்லது கவுண்டர் என்ற ஆட்சியுரிமை குறித்த பட்டம் கொங்கு நாட்டுக்கே உரியது. கொங்கு நாட்டுக்கு வெளியே தமிழகத்தில் இல்லாத ஒன்று என்பது உண்மையே. ஆனால் இன்றைய தமிழகத்துக்கு வெளியே பண்டைப் பெருங் கொங்கு நாட்டுப் பரப்பில் அது 'கௌடா' என்ற உருவில் பரவ லாகவே உள்ளது. 'கொங்கர்' (இது பண்டை வட கொங்குநாடு ஆண்டு பின்னாட்களில் கொங்குநாடும் ஆண்ட 'கங்கர்' என்ற சொல்லின் மற்றொரு வடிவம்) என்ற கொங்கு நாட்டுக்கே சிறப்பான பட்டம்கூட, இதுபோலவே பண்டை வடகொங்குப் பரப்பில் ஆண்ட 'கங்கர்' என்ற மரபினரின் ஆட்சி. மரபுப் பெய ருடன் தொடர்புடையதாகவே இருப்பது காணலாம். (மேல் கொங்கு நாடாண்ட கொங்காள்வார் மரபும் இங்கே கருதத்தக்க தாகும்). கவுண்டர் அல்லது கௌண்டர் என்ற சொல் மரபும் கௌடர் என்ற சொல் மரபும் இதனுடன் நெருங்கிய தொடர் புடையன என்பதில் ஐயமில்லை. ஏனெனில் 'கௌண்டர்' என்ற சொல்லைக் கன்னட தெலுங்கு மொழிகளிலோ, சமஸ்கிருத மொழியிலோ எழுதும் போதும் ஒலிக்கும் போதும், இடையிலுள்ள ணகர ஒலி (ண்) சமஸ்கிருத முதலிய இந்திய மொழிகளுக்குச் சிறப்பாகவும் உள்ள முழு மூக்கொலி (சமஸ்கிருத அனுஸ்வாரம்) அல்லது அரைமூக்கொலி (சமஸ்கிருத அர்த்தானுஸ்வாராம்) ஆக மாறி மறைந்து விடுவது அம்மொழிகளின் மரபு ஆகும். இது போலவே சமஸ்கிருத ஒலி மரபின் காரணமாகவே, குடக்கு (மேற்கு), குடகு (மேற்குள்ள நாடு) குடவரை (மேற்கு தொடர்ச்சி மலை), குடவர் (மேற்கு நாட்டார், மேற்கு நாடாண்டவர், சேரர், கொங்குச்சேரர்) என்ற பழந்தமிழ்ச் சொற்களில் குடக்கு (மேற்கு) என்ற சொல்லடியாகப் பிறந்த குடவர் (மேல்திசை ஆண்டவர்) என்ற தமிழ்ச் சொல் கௌடர், கவுடர் என்றும் கௌண்டர், கவுண்டர் என்றும் மாறியதால் வேண்டும் என்னலாம். பண்டைத் தமிழ் வழக்கின் சேரலர் என்பதே கன்னட ஒலிமரபு மூலமாக (தமிழ் சகரம், கன்னடத்தில் ககரமாதல் மரபியல்பு) சமஸ்கிருதத்தில்

கேரளர் ஆயிற்று என்று பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் விளக்கியுள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.

தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளின் இணைமரபாகப் பண்டைப் பெருங்கொங்குப் பரப்பில் (சேரலர்-கேரளர் என்பது போலப்) பயின்று வளர்ந்த இச்சொல் கொங்குமரபு எல்லையும் தமிழ் மரபு எல்லையும் கடந்து ஆயிர ஆண்டுக் காலமாக நிலவியுள்ள இந்தியமரபுச் சொற்களுடன் தொடர்புடையது ஆகும். குடக்கு (மேற்கு) குணக்கு (கிழக்கு) ஆகிய திசை குறித்த இருசொற்களின் அடியாக கௌட, கௌண்ட, கௌண என்ற வடிவங்கள் மயங்குவதை நாம் அவற்றில் காணலாம்.

விதர்ப்ப நாட்டில் பயின்ற ஒரு சமஸ்கிருத இலக்கிய மரபு வைதர்ப்ப முறை (வைதர்பீரீதி) என்றும், அதற்கு மாறாக மேற்கே அல்லது கிழக்கே அதாவது புறமே வழங்கிய முறை கௌட முறை (கௌடீரீதி) என்றும் காளிதாசன் கால முதல் கம்பர் காலம் வரையும் அப்பாலும் தமிழ் சமஸ்கிருதம் முதலிய எல்லா இந்திய மொழிகளிலும் வழங்கி வந்துள்ளன. (கௌடமுறைப் பண்புகளை நாம் சேக்ஸ்பியர் கால இங்கிலாந்திலும் காண்கிறோம். ஒட்டக் கூத்தர் தமிழ் மரபில் கௌடப் புலவர் என்று அழைக்கப் பெறுகிறார். இது போலவே திருவள்ளுவரின் புலால் மறுத்த உணவு மரபினை மேற்கொண்ட தமிழக ஆந்திர கருநாடக மராத்திய குசராத்திய மரபுகளுக்குரிய பிராமணர் பஞ்ச திராவிடர் என்றும், இவர்களுக்கு மாறான பிற திசை மரபுகளுக்குரியவர் பஞ்சக் கௌடர் என்றும் வழங்கப்பெறுகின்றனர். அத்துடன் சங்க காலத்திலிருந்து தென்னகத்தில் மட்டுமே காணப்படும் தமிழ்ப் புகழ் சான்றபிராமண மரபின் கோத்திரத்தினர் கௌண்டினியர் என்றும் கௌணியர் என்றும் பெயர் பெற்றுள்ளனர்.

சங்க காலத்தை அடுத்து வாழ்ந்த பாண்டியரும் பிற தமிழரசரும் வேளாளர்-வேட்டுவர் ஆகிய இரு மரபினருக்குமே கொங்கர் என்ற பட்டமும் காமிண்டர் (காவலில் வல்லவர்: கா-காத்தல்; மிண்டன்-வல்லவன். இச்சொல் இன்றும் மலையாள நாட்டுமொழியில் உயிர் வழக்காறாக உள்ளது. மிடல் - வலிமை என்பதனுடன் தொடர்புடையது) என்ற பட்டமும் தனித்தனியாக ஒருசீர்ப்பட வழங்கினர். காமிண்டன் என்ற இந்தச் சொல்லே கவுண்டன் என மருவிவிட்டதாக ஆராய்ச்சியாளர் பலர் கருதியுள்ளனர். ஆனால் கொங்கர் என்ற பட்டத்தை விடக் கொங்கு என்ற

சொல் பழமையானது. அதுபோலவே காமிண்டன் என்ற பட்டத்தினும் பார்க்கக் கவுடர்-கவுண்டர் என்ற சொல் வடிவம் அகல் இந்திய மரபுக்குரிய விரிவும் தொன்மையும் உடையது என்பது மேலே காட்டப்பட்டுள்ளது. எனவே 'காமிண்டன்' என்பது தனிப்பட்டமாகவே தொடங்கி, பின் கவுண்டர் என்ற சொல்லுடன் ஒன்றுபட்டது என்று கருதல் தகும். சொற்பொருளிலும் காமிண்டன் (காவலில் வல்லவனாக அரசரால் மதிக்கப்பட்டவர்) என்பதனை விடக் கௌண்டர்-கவுண்டர் என்ற சொல் வடிவம் மேல் திசை குடியரசு ஆட்சி மரபினர் என்ற பொருளில் இன்னும் பழமையான வழக்கும் உயரிய மதிப்பும் உடையதாகும். ஏனெனில் அது வேள் ஆட்சி மரபினர் அல்லது குடியரசு மரபினர் எனப் பண்டை வேளிர் தனியாட்சியே குறித்துக் காட்டிக் கொங்கர் (கொங்கு) நாடாண்டவர் என்ற பொருளுடன் ஒன்றுபடுவதாகும்.

கடல் கொண்ட பண்டைக் குமரி மாநில மரபில் வந்த கன்னி மாநிலமாகிய தமிழகத்திலும் முனைப்பான கன்னி மாநில மரபான கொங்கு மரபு கொங்கு நாட்டிற்கேயுரிய மரபு ஆகும்; சேர சோழ பாண்டிய மன்னராலோ, சேர சோழ பாண்டிய நாட்டுக் குடி வரவுகளாலோ அது வழங்கப் பெற்றது என்பது வரலாற்று மரபு, மொழி மரபு ஆகிய இரண்டுக்கும் முரண்பட்ட பிற்காலக் கருத்து ஆகும். ஆனால் அதே சமயம், இக்கொங்க மரபு கொங்கு நாட்டு வாழ்வுடன் மட்டுமே தொடர்புடையதன்று; அதன் பழமைக்கு மட்டுமே உரியதுமன்று. அதுவே தமிழக, தென்னக, இந்திய, நாகரிக உலகப் பழமைகளுடன் ஆழ்ந்த வேர்முதல் தொடர்புடையதாய், அவற்றின் வாழ்வுகளில் மறக்கப்பட்டுவிட்ட அல்லது மறக்கப்பட்டு வந்துள்ள அல்லது மறக்கப்பட்டு வருகிற ஒரு நெடுநீள் மரபினைச் சுட்டிக் காட்டும் தொல் பழம் பண்பு மரபு ஆகும். இது அடுத்து வரும் பகுதிகளில் விளக்கப்படவிருக்கிறது. வருங்காலக் கொங்குத் தமிழகத்தின் வாழ்வுக்கு மட்டுமின்றி, வருங்காலத் தமிழக, இந்திய வாழ்வுகளுக்கும், நாகரிக உலக வாழ்வுக்கும் கூட அது மிகுந்த ஒளிவிளக்கம் தருவது ஆகும் என்னலாம்.

* * *

## அதிகாரம் : 2

# வரலாற்று வானவிளிம்பின் வண்ணங்கள்

### i. விடியல் வானொளி காட்டும் குடியரசுப் பண்பு

சங்கத் தமிழ்ப் பாடல்கள் தமிழகத்தின் முடியுடை மூவேந்த ரான சேர சோழ பாண்டியரைப் பற்றி மட்டும் தான் பேசுகின்றன என்பதில்லை. அம்மூவரசு நாடுகளின் எல்லையிலும் அவற் றுக்குப் புறம்பாகத் தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவற்றின் எல்லைகளிலும் அவற்றுக்கு அப்பாலும் ஆட்சி புரிந்த வேளிர் அல்லது குடியரசர்களைப் பற்றிய செய்திகளை அவை இன்னும் பேரளவிலேயே நமக்குத் தெரிவிக்கின்றன.

தமிழர் வாழ்விலும் சங்ககாலத் தமிழ்ப் புலவர் வாழ்விலும் மூவரசர் கொண்ட பங்கை விட வேளிர் கொண்ட பங்கு ஒரு சிறிதும் குறைந்ததன்று, மேம்பட்டது என்றே கூறத்தகும். அதே சமயம் அவ்வேளிரில் ஒருவரிருவர் முடிபுனைய முற்பட்டிருந்த இடங்களில் கூட, அந்நாளைய தமிழக மரபும், தமிழகம் கடந்த மக்கள் மரபும் அப்புது மரபை ஏற்கவில்லை, ஏற்க மறுத்தே வந்தன என்று காண்கிறோம். முடிபுனைய முற்பட்ட பாரியும் அதியனும் சரி, முடிபுனையத் துணிந்து முடிபுனைந்தேவிட்ட காரியும் சரி - எவருமே மக்களாலும் புலவராலும் வேளிராகவே மதிக்கப்பட்டனர், சுட்டப்பட்டனர்; அரசராக மதிக்கப் பெறவோ, சுட்டப் பெறவோ இல்லை. அத்துடன் சங்காலத் தமிழகம், சிறப்பாகக் கொங்குத் தமிழகம் என்ற மையத்திலிருந்து விலகிவந்த அளவிலேயே மக்கள் படிப்படியாக இப்பழைய குடியரசு மரபினை மறந்து, புதிய முடியரசு மரபினை ஏற்றமைந்தனர் என்று காண்கிறோம். கொங்குத் தமிழக, தமிழக, இந்திய வரலாறுகள் இதனை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

தமிழ் மூவேந்தர் மரபுகள் படைப்புக் காலம் தொட்டே நிலவி வந்துள்ளன என்று தமிழ் மரபு போற்றுகிறது. அத்துடன் உலகெங் குமே முடியரசு முறைதான் பழமையானது என்றும், குடியரசு முறை பின் வந்த ஒன்று என்றும் அணிமைக் காலத்தது என்றுமே

பொதுவாகக் கருதப்படுகிறது. இது முற்றிலும் சரியன்று என்பதையும், பண்டிருந்தே குடியரசு முறையும் முடியரசு முறையும் மாறி மாறி வந்துள்ளன என்பதையும் பண்டைக் கிரேக்கர், உரோமர், பினீசியர் ஆகியோர் வரலாறுகளும் அணிமைக் கால உலக வரலாறுகளும் நமக்குக் காட்டுகின்றன அத்துடன் இம்மாறுபாட்டு அலைகளின் ஒவ்வொரு படியிலும் குடியரசுப் பண்புகள் முடியரசு மரபுமீதும், முடியரசுப் பண்புகள் குடியரசு மரபு மீதும் படர்ந்துள் ளன. இதன் பயனாக, இரு மரபுகளிலும் இரு பண்பு முறைகளும் விரவியே வந்துள்ளன. அத்துடன், மொத்தத்தில் முடியரசுப் பண்புகள் தேசீய வளர்ச்சிக்காகவும், குடியரசுப்பண்புகள் நாகரிக, பண்பாட்டு மரபுகளாகவுமே விளங்கி வந்துள்ளன.

இந்த இருதிற வளர்ச்சிகளுமே தொலைநோக்குடையவையாய் நாட்டு நலனையும் அதே சமயம் நாடு கடந்த மனித இன வாழ்வின் நலன்களையும் மேம்படுத்துபவையாகவும் அமையலாம்; குறுநோக்குடையவையாய் நாட்டுக்கோ, நாடு கடந்த மனித இனத்துக்கோ படிப்படியான அல்லது தொலைவிளைவான கேடுகள் வருவிப்பவையாகவும் அமைதல் கூடும். இவற்றுள் முந்தியவை உண்மையான நேர்வளர்ச்சிக் கூறுகள் அல்லது பண்புகள்; பிந்தியவையோ போலி வளர்ச்சிகள், பெரிதும் பண்புகள் போலத் தோற்றும் பண்புப் போலிகள் ஆகும். பண்டைத் தமிழர் இப்பண்பு வேறுபாடுகளை நுனித்துணர்ந்து கண்டவர் ஆவர். அவர்கள் வளர்த்த தமிழ்ப் பண்புகளும், தமிழ் மரபுகளும் குறுகிய தனிநல, குழுநல நோக்குடையவையாய் அமையாமல், நாடும் மொழியும், இனமும் சமயமும் கடந்த நிலையில், கால இடத்தொலை நோக்குடையவையாகவே அமைந்துள்ளது இதனாலேயேயாகும். தமிழ்ப் பண்பு, தமிழ் மரபு என்ற வழக்காறுகள் தமிழர் தமக்கென வளர்த்த பண்பு மரபுகளல்ல; அவை மனித இனுத்துக்கென்றே தமிழகம் வளர்த்த மனித இன மரபுகள் அல்லது வள்ளுவப் பண்புகள் ஆகும்.

உலக நலமே கருதிய இப்பழந்தமிழ்ப் பண்புகளை இயல்பாக அறிந்தோ அல்லது பல தறுவாய்களில் முனைப்பான தன்னறிவில்லாமலே இயல்பூக்க உணர்வினாலேயோ பேணிக்காக்கும் வகையில் கொங்குத் தமிழகம் தமிழகத்தினுள்ளேயே தமிழ்ப் பண்பின் ஒரு நடுநாயக அரங்கமாக, மையக்காப்பகமாக இயங்கி வந்துள்ளது.

'பண்டைத்தமிழர் அரசியல் வாழ்வு' என்ற ஆய்வேட்டில் தமிழ்ப் பேரறிஞர் தேவனேயப்பாவாணர் சங்ககாலத் தமிழர் அரசியல் நிலையை விளக்கும் ஒரு புதிய புரட்சிகரமான கருத் தொளியைப் பாய்ச்சியுள்ளார். தமிழக வாழ்வில் முடியரசு நிலை களை விட வேள்புலங்களின் குடியரசு நிலைகளே முற்பட்ட பழமையுடையவை என்று அவர் கருதியுள்ளார். அதேசமயம் தமிழ் மூவரசர்களே தமிழுலகப் பழமையுடையவர் என்ற கருத்து மரபுக் கும், அம்முடியுடை அரசுகள் மூன்று என்று தமிழ் மரபு வரை யறுத்தமைக்கும் அவர் இதன் வாயிலாகவே புது விளக்கமும் கண்டுள்ளார்.

ஒருபுறம் மூவரசுகள் வேளிரின் இணைவால் இயல்பாக ஏற்பட்டவை; மறுபுறம், அவை தேசீய வளர்ச்சி சார்ந்தவை. ஏனெனில் பாண்டியரும் சோழரும் மிகத் தொல் பழங்காலத் திலேயே தனித்தனி ஐந்து ஐந்து வேளிரின் ஒருங்கிணைவாகத் தோன்றி மலர்ச்சியுற்றவர் ஆவர். சேரரோ, இதுபோல ஏழு வேளிரின் இணைவரசாகத் தோன்றி, இணைவரசாகவே அணிமைக் காலம் வரை தொடர்ந்து வந்துள்ளனர். அத்துடன் பாண்டியர் வளர்த்த தமிழ்ச்சங்கத்தோடு மற்ற அரசர் இருவரும், வேளிரும்கூட மொழியளவில் புதுமரபுப் போட்டியிடாமல் தேசீய மரபு காத்து அதன் வளர்ச்சியில் ஒத்துழைத்தனர். மிகத் தொல் பழங்காலத்திலேயே தமிழர் மூவரசரின் முடியாட்சியை ஏற்றமைந் ததற்கும், அதே சமயம் அதை மூன்று என்ற தொகை வரை யறைக்கு உட்படுத்தியதற்கும் உரிய விளக்கம் இதுவே. மூவரசர் கள் தம் நாட்டெல்லை கடந்து வென்றாண்ட காலத்திலும் மூவரசு நாடுகளின் எல்லைகள் மாறாமலே தொடர்ந்ததற்குரிய சூழலும் இதுவேயாகும்.

இம்மரபு நுட்பம் காணாத நிலையில் சிலபல வரலாற் றாசிரியர்கள் வேளிரைக் குடியரசர் என்று கூறுவதனுடன் அமை யாமல் அவர்களைச் சிற்றரசர் அல்லது அரசர் என்றே குறித்து விடுகின்றனர். இது சரியன்று, தவறான வழக்கேயாகும். ஏனெனில் வேள்புலக் குடியரசர் சிறிய அல்லது பெரிய எல்லைகளை யாண்ட முடியரசரேயாவர் என்ற தவறான கருத்துக்கு இவ் வழக்காறு இடமளித்து விடுகிறது. தவிர, இதுவே அவர்கள் மெய்மரபையும், அதன் பின்னணியில் கண்டுணரப்பட வேண்டிய தமிழக, இந்திய நாகரிக உலகப் பழமைகளையும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்திலிருந்து நிழலடித்து விடுவதாக அமைகிறது.

வேள் புலங்களுக்குரிய தொல்மரபின் மெய்ம்மைகளை நுனித்துணர்வதற்குத் தமிழ்மொழி, தமிழ்ச்சங்க இலக்கிய மரபுகளுடன், பிற இந்திய, உலக மொழி மரபுகளும் வரலாற்று மரபுகளும் இணைந்து உதவுகின்றன.

நாடு என்ற தமிழ்ச் சொல் இன்று இந்திய நாடு, சீன நாடு என உலகின் பெருநாடுகளுக்கும்; அவற்றின் பகுதிகளான தமிழ்நாடு, ஆந்திர நாடு போன்ற எனப் பண்டை மூவரசு நாடுகளுக்கும்; அவற்றுடன் ஒத்த புறப் பரப்புகளாகிய தொண்டை நாடு, கொங்குநாடு போன்றவற்றுக்கும்; இவற்றின் உட்பிரிவுகளான தொண்டை மண்டலம் 24 நாடுகள், கொங்கு 24 நாடுகள் ஆகியவற்றுக்கும்; இவற்றுடன் ஒப்பாக வேளிர் ஆண்ட பகுதிகளுக்கும் வேறுபாடின்றி ஒருங்கே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இங்ஙனம் ஆட்சியின் அடிமட்டச் சிற்றெல்லையிலிருந்து உச்சப்பேரெல்லை வரையுள்ள இந்த எல்லாப் படிகளையும் அகல் உலகப் பரப்பு நோக்கிக் குறிக்கத் தமிழில் வேறு வேறு சொற்கள் அன்றும் இல்லாமல் இல்லை, இன்றும் உண்டு. ஆயினும், ஒரே சொல் இந்த எல்லாப் படிகளிலும் விரிந்து சென்று வழங்கும் தமிழ் மரபு வியத்தற்கரியதேயாகும்.

இது மட்டுமன்று!

நாடு என்ற சொல் இவ்வாறு இடப்பரப்பின் எல்லா விரிவுகளையும் குறிப்பதனுடன் நின்றுவிடவில்லை.

ஊர் மக்களோ நாட்டு மக்களோ, சமுதாய அல்லது தொழில் வகுப்பு மக்களோ, கூட்டு நலமும் சரிசம நிலையுமுடைய பிற வகைக் குழுக்களோ, தற்கால அரசியல் கட்சிகளோகூட, தாமே நேரில் வந்து குழுமிப் பேசிமுடிவெடுப்பதற்குரிய கூட்டத்தினை நாம் இன்றும் மாநாடு என்கிறோம். பண்டைக் கிரேக்கரிடையிலும் மிகப் பழங்கால (கி.பி. 7-10 நூற்றாண்டு) ஆங்கிலேயரிடையிலும், பண்டைச் செர்மானிய மக்களிடையிலும் நாட்டு மக்கள் தாமே நேரில் வந்து தம் நாட்டாட்சியில் கலந்து கொண்ட மரபினை இது நினைவூட்டுகிறது.

இம்மரபு இன்று பேராட்கள் (Representatives) மூலம் ஆட்சி நடத்தும் நம் கால அரசியல் குடியாட்சி அல்லது மறைமுகக் குடியாட்சி (Political or indirect Democracy) முறை அன்று; மக்களே நேரில் வந்து தம் ஆட்சியில் கலந்து கொள்ளும் உரிமையினை

யுடைய சமுதாய குடியாட்சி அல்லது நேர்முகக் குடியாட்சி (Social or Direct Democracy) மரபு ஆகும்.

மாநாடு என்ற சொல்லில் மா(பெரிய) என்ற அடைமொழிக்குப் பின்னால் ஒரு முழு மரபு, முழு வரலாறே மறைந்து கிடக்கின்றது. நாட்டுக்கோட்டை வணிகரின் 96 நாட்டு (96 நகரக் கூட்டம் அல்லது கொங்கு வேளாளரின் 24 நாட்டுக் கூட்டம் என்ற வழக்குகள் மா என்ற இந்த அடைமொழி மரபுமீதும், நாடு என்று சொல்மரபு மீதும் பேரொளி வீசுகின்றன. நாட்டுக்கோட்டை வணிகமரபு நகரத்தார் என்ற பெயர் மூலமாய் பின்வரும் நகர் - நாடு அரசு மரபு நோக்குவது காணலாம்) ஏனெனில் மாநாடு என்ற சொல்லில் நாடு என்பது நாட்டு மக்கள் எல்லோரும் நேரடியாகவே வந்து கலந்து கொள்ளும் உரிமையினை உடைய நாட்டின் அதாவது மக்களினக் குழுவின் ஆட்சி மன்றத்தைக் குறிப்பிடுகிறது. 'மா' என்ற அடைமொழி சேர்ந்த மாநாடு என்ற சொல்லோ பெருநாடு, அதாவது இத்தகைய உரிமையினையுடைய சரிசமநிலை வாய்ந்த பல குழுக்கள் அல்லது பல நாடுகளின் இணைவான கூட்டாட்சிக் குழுமத்தின் மாமக்கள் மன்றம் என்ற பொருளையே தருகிறது.

மக்கள் மன்றம் என்ற தொகைநிலைத் தொடர் இன்றும் இம்மரபை நமக்கு நினைவூட்டுவதாக இயல்கின்றது.

வேளிர் ஆண்ட எண்ணற்ற நாடுகளேயன்றி, வேள்நாடு எனச்சிறப்புப்பட வேளிர் கூட்டுக் குழுவரசுகள் (Federal Republics) என அமைக்கப்பட்ட சூழலையும் இதுவே சுட்டிக் காட்டுகிறது. ஏனெனில் மாநாடு என்ற சொல் சுட்டும் மரபு இதுவே!

நாடு என்பது ஒரு நிலப்பரப்போ, ஒரு மக்கட் பரப்போ, இரண்டின் இணைவோ கூட அன்று, வழிவழிக் கூட்டு வாழ்வு மரபிலும், வழிவழிக் கூட்டுநிலை ஆட்சி மரபிலும் வந்த ஒரு மக்களினம் அல்லது அத்தகைய மக்களினங்களின் கூட்டுத் தொகுதியையும், அதன் அல்லது அவற்றின் வாழ்வுக்கும் ஆட்சி மரபுக்கும் நிலைக்களனான நிலப் பரப்பையும் இச்சொல் மொத்தமாகச் சுட்டுவது ஆகும். நாடு என்ற சொல்லின் இந்த இலக்கணத்திலிருந்து மாநாடு என்ற சொல் மாறுபடுவதில்லை. ஏனெனில் மா(பெரிய) என்ற அடைமொழி பல நாடுகளின் கூட்டினை மட்டும் குறிப்பதன்று. அது ஒரே மைய நாட்டின் அதாவது

இனத்தாயக நாட்டின் விரிவாக, ஒன்றுடனொன்று இனத் தொடர்பு பட்டுப் பலவாய் விரிவுற்ற பெருநாடு அல்லது கூட்டரசுக் குழுவினையே உணர்த்துவதாகும்.

இன்று மாநாடு கூட்டுபவர்கள் எண்ணிப் பாராத பண்டைக் குடியரசு மரபின் மறைதிறவுப் பண்பு இது!

இனக்குழு அல்லது நாடு இவ்வாறு இனவாழ்வுத் தொடர்பும் ஆட்சி மரபுத் தொடர்பும் இவற்றுடன் நீடித்த கூட்டு வாழ்வு, கூட்டாட்சி மரபும் உடையதாய், நாடு, மாநாடு அதாவது பெருநாடு என விரிந்து செல்லும் உயிர்மரபுப் பண்பு வாய்ந்தது என்று காண்கிறோம். நாடு என்ற சொல்லில் நாம் மேலே கண்ட எல்லை யற்ற, மனித இனம் அல்லது உலகம் அளாவிச் செல்கிற வரலாற்று மரபு விரிவின் மறைதிறவு இதுவேயாகும்.

நாடு என்ற சொல் முதல்முதலில் வேளிர் ஆண்ட பகுதிக்கே வழங்கப்பட்டு, உலகளாவிய அதன் விரிவான எல்லா எல்லை களுக்கும் அம்மரபு வழிநின்றே இன்றளவும் தமிழில் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளது காணலாம். இது மட்டுமோ? இவ் உயிர் மரபு வழிநின்றே அது எல்லாப் படிகளிலும் மக்கள் நேரடிக் குடியாட்சி மரபுகளுக்கும் இன்று வரை தொடர்ந்து வழங்கப்பட்டு வந்துள்ளது என்பதும்; அதேசமயம், இன்றைய மறைமுகக் குடியாட்சி மரபு களுக்கும் அது அவ்வாறு பயன்படுத்தப் பெறவில்லை என்பதும் கூர்ந்துணர்ந்து காணத்தக்க மறைநுட்பங்கள் ஆகும். ஏனெனில் தற்கால நாட்டுச் சட்டமன்றங்களை யாரும் நாடு என்றோ, மாநாடு என்றோ கூறுவதில்லை, கூறவும் முடியாது!

தமிழக வழக்கில் மட்டுமின்றி, ஆங்கிலநாட்டு வழக்கிலும் நாம் இதே பண்பைக் காணலாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இங்கிலாந்தில் மக்கள் ஆட்சி மன்றங்கள் ஊர் மன்றம் (Town Moot), மாவட்ட மன்றம் (Shire Moot) என விரிந்து சென்று மைய ஆட்சியில் மாமக்கள் மன்றம் அல்லது அறிவுவந்தோர் மன்றம் (Witenagemot) ஆயிற்று. மறைமுகக் குடியாட்சி முறை அயலின ஆட்சியால் ஏற்பட்ட நாட்களில் (கி.பி.11ம் நூற்றாண்டு) மைய மன்றத்தின் பழைய பெயர் வழக்கு இறந்துபட்டு, புதிய பெயர் (ஆங்கில மொழி: Parliament பேசும் கூட்டம்: Parler பேச்சு) வழங்கத் தொடங்கிவிட்டது. பிரான்சு நாட்டிலோ செருமானி நாட்டிலோ இப்புதிய பிரஞ்சு மொழிச் சொல் வழங்கப்பெற வில்லை என்பது கூர்ந்துணர்ந்து காணத்தக்கது. முந்திய ஊர்

மாவட்ட மன்றங்களுக்கும், பழைய மைய மன்றத்திற்கும் இடையே யுள்ள குடியரசு மரபுத் தொடர்பு அறுந்ததனால், முந்தியவை மக்கள் நீதிமன்றங்களாக ஒதுங்கின. இவ்வாறு பழம்பொருள் மரபு ஒழிந்தபின் மன்றம் (Moot) என்ற பழைய ஆங்கில மரபுச் சொல் இன்று வரலாற்றுப் பழஞ் சொல்லாய், ஆய்வாராய்வு (It is a moot point -அது ஆய்வாராய்வுக்குரிய செய்தி) என்ற பொருள் மட்டுமே உடையதாய் இயல்கின்றது.

நாடு என்ற சொல்லின் இந்த எல்லா மரபு விரிவுகளையும் பொருள் விரிவுகளையும் நாம் மொழி, குடி (Word Speech / language / Vote) ஆகிய சொற்களிலும் காணலாம். உண்மையில் இம் மூன்று தமிழ்ச் சொற்களுமே பண்டைக் குடியாட்சி மரபுடன் தொடர்புடையவை. குடியாட்சி மரபு என்னும் ஒரே அச்சில் சூழலும் முக்கோணச் சொற்களாக அவை திகழ்கின்றன. குடியரசு, குடியாட்சி என்ற சொற்களிலேயே குடி என்ற சொல் இடம் பெற்றுள்ளது. மொழி (vote) இன்றும் ஆட்சியில் மக்கள் கொள்ளும் பங்காகிய வாக்குச்சுட்டி நிற்கிறது. மற்றும் மொழிக்குடி என்ற சொற்பொருளில் உள்ளடங்கிய முப்பாற் பகுதியின் செம்பாதி யாக இன்றும் இயல்கின்றன.

குடி என்ற தமிழ்சொல் நாடு என்ற சொல்லைப் போலவே எல்லையற்ற மரபு விரிவுடையது. அது குடும்பத்தையும், குடும்பத் தின் பிறப்புவழி விரிவு அல்லது புறமணக்குழு (கோத்திரம், கிளை, கூட்டம் அல்லது கோயில்), அதன் மணவழி விரிவு அல்லது அகமணக்குழு(கோத்திரங்களின் மணஉறவுத் தொகுதி யான குலம்), உடன் வாழ்வுக்குழு (தமிழ்: ஊரார், ஊர்; இலத் தீனம்: Gens, Gentiles) ஆகிய எல்லைகளையும் உணர்த்துகிறது. பழங்குடி, மலங்குடி, குடியிருப்பு, குடியமர்வு, குடியேற்றம் ஆகிய வழக்காறுகளில் இச்சொல் தரும் பொருள் இதுவே. இதே சொல் குடில் (குடியின் இல்), குடிசை (குடிசெய்யும் இடம்), வீடு (செயற்கைக் கட்டுப்பாடுகளும் மன உலைவுகளும் விட்ட அல்லது அற்ற இயல்பான வாழ்விடம்) என வாழும் இடம் தழுவி, அதன்பின் வீடு (சிறிய குடும்ப இன்பத்திற்குரிய இடம்), நாடு தனி உயிர் அல்லது தனி மனிதர் நாடுகின்ற (இன்ப வாய்ப்புக் களின் விரிவிடம்), பேரின்பவீடு (இனங்குறிக் கொண்ட நிறை இன்ப உலகு) என வாழ்விட விரவு பெற்ற பின்னும் இவ் எல்லாப் படிகளின் ஆட்சிக்குரிய குழு அல்லது ஆளப்படுபவரின் தொகுதி

சுட்டிற்று. குடிஉயர, கோன் உயரும் என்ற மரபுரையில், கோன் ஆளுபவரைக் குறித்தது போலவே, குடி ஆளப்படுபவரின் தொகுதி சுட்டிற்று. குடியாட்சி என்ற தொடரில் இதே சொல் குடியும் கோனும் ஒன்றான நிலை அதாவது குடியாட்சியின் உயிர்ப் பண்பே குறிக்கிறது.

குடியரசு, குடியாட்சி ஆகியவற்றுக்குரிய தமிழ்ச் சொற்களே அக்கருத்துச் சுட்டும் மேலை மொழிச் சொற்களைவிட (Republic; இலத்தீனம்: res, அரசு, public, பொது; democracy; கிரேக்கம்: kratia, மக்கட் கூட்டம்; ஆட்சி) குடியாட்சி மரபும் பண்பும் பொருளும் ஒருங்கே சுட்டும் அருஞ்சிறப்புடையவையா யமைதல் காணலாம். மேலையுலகில் சமய வாழ்வின் இறைமைக்குத் தாய்மைப் பண்பு உண்டாயினும் தாய்மைப் பண்புக்குரிய குடிமைப்பாங்கு குடியரசு; குடியாட்சி ஆகியவற்றுக்குரிய மேலை யுலகச் சொற்களிலும் இல்லை, அவற்றின் ஆட்சிப் பண்பிலும் அத்தொடர்பு கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

நாடு (தாயகம்) என்ற மலையாள மொழிச் சொல் வழக்கும், குடும்பமனை அல்லது தாயகம் என்பதற்குரிய ஆங்கில மொழிச்சொல் () வழக்கும் நாடு, குடி என்ற இத்தமிழ்ச் சொற்களில் ஆழமாகச் செறிந்துள்ள தொனிப்பொருள் நுட்பமரபுகளை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. குடும்பம், தாய்நிலம், தாய்மொழி, தாய்நாடு ஆகியவற்றில் மட்டுமே தனிஉயிர் அல்லது தனிமனிதருக்குக் கிடைக்கக் கூடிய விருப்ப வாழ்வுரிமை, இயல் மரபுச்சூழல், இயல் வாய்ப்பு நலம், பழக்க வழக்க மரபுநலம், இனநலப் பொது நோக்க ஒருமைப்பாடு, குருதி அல்லது காதல் அல்லது உடன் வாழ்வு வழிவந்த மரபுப் பாசம், மரபுத் தோழமைத் தொடர்புறவு ஆகியவற்றை இவ்வழக்காறுகள் குறித்துக் காட்டுகின்றன.

தமிழர் மரபில் குடியாட்சித் தொடர்புடைய நாடு, மொழி, குடி ஆகிய இந்த மூன்று சொற்களுமே இறைமைச் சொற்கள் ஆகும். **அறிவியல் மேதை ஐன்ஸ்டீனின்** மொழியில் கூறுவ தானால், இவை கருத்தியலான இறைமையோடு (Macro-Cosmos) ஒத்த, ஆனால் கண்கண்ட வாழ்வின் உயர்த்திற இயங்கியல் பண்பினையுடைய நான்களவைப் பண்புருக்கள் (Dynamic Four-Dimentional Organisms) ஆகும். மேலே காட்டியுள்ளபடி, தமிழ் மரபு இவற்றையே குடிமரபு இறை (கடவுள்), நாட்டுமரபு இறை (நாட்டன்னை), மொழிமரபு இறை(தமிழன்னை) என்ற மூன்று

ஒவா மூவா இளநலப் பண்புகளாகக் கொண்டது தமிழ் என்ற சொல்லும் இந்த ஒவாமூவா இளமைநல இன்ப அழகைக் குறிக்கின்றன.

தமிழ்நாடு, கொங்குநாடு, மழநாடு அல்லது முருகுநாடு ஆகிய தொகைச் சொற்கள் பொதுமையில் ஒரு பொருளாய், படிப்படிச் செறிவான அகநாட்டுப் பண்புச் சொற்களாய் நிலவுவன ஆகும்.

குடும்பத்தின் விரிவே நாட்டுமக்கள் தொகுதி: குடும்ப வாழ்வுக்குரிய வீட்டின் விரிவே நாடு; அந்நாட்டின் விரிவே மாநாடு அல்லது உலகம் அல்லது பெருவீடு (நாட்டின், உலகின் காலவிரிவு மலர்ச்சியாகிய கனவியல் குறிக்கோள் உலகு எனும் பேரின்ப வீடு). சொல்மரபு காட்டும் தமிழ்க் குடியரசுப் பண்பு விளக்கம் இதுவே! இன்று இது நமக்கு ஓர் அழகுக் கருத்தாக அல்லது அழகுக் கருத்துரையாக மட்டுமே அமைதல் கூடும். ஆனால் இதுவே வேளிர் ஆண்ட பகுதிக்குப் பொருத்தமான ஒரு முழுநிறை இலக்கணம் ஆகும் என்பது கூர்ந்துணர்ந்து காணத் தக்கது. ஏனெனில் வேள்புலம் என்பது பெரிதும் குருதித் தொடர்பும் மண உறவுத்தொடர்பும் அணுக்க வாழ்வுத் தொடர்பும் உடைய ஒரு மக்களாட்சியின் மரபுப் பரப்பாகவே அமைந்திருந்தது. அத்தொடர்பில் இயல்பான குடும்பத்தின் தலைவரான தாய் அல்லது தந்தை ஆகியோரின் தலைமைக்குரிய மலர்ச்சியாகவே சமுதாய, அரசியல், சமயத் தளங்களில் முறையே ஆசான், அரசன், ஞானகுரு அல்லது கடவுள் என்ற முறையில் (தாய், தந்தை, ஆசான், அரசன், கடவுள் ஆகிய) ஐங்குரவர் அல்லது ஐங்குரிசிலர் (குரு-விதை, இனவிதை) மரபு வளர்ந்தது. இந்த ஐங்குரவரின் மொத்த உருவாக, பேராளராக, குடும்ப விரிவான நாட்டின் மூத்த குடிமகனாக விளங்கிய கோ அல்லது குலமுதல்வன் (குல முதல்வி) அல்லது குலத்தலைவன் (குலத்தலைவி) அல்லது ஆட்சித்தலைவராக (ஆங்கிலம்: Prince இளவரசன்: இலத்தீனப் பொருளில், முதல் குடிமகன்: Duke குடியரசுத் தலைவன், கோமகன், இளவரசன்) அமைந்தான். இக்கோவரசுக் குழுவே நாளடைவில் விரிவுற்று ஊர், பேரூர் அல்லது நகர் (கோநகர் அல்லது தலைநகர்), அப்பேரூர் சேர்ந்து வளர்ந்த சிற்றூர்க் குழு என மலர்ச்சியடைந்து, பண்டைக் கிரேக்க, உரோம, பீனீசிய மக்கள் வரலாறுகள் காட்டும் நகர் - நாடு அரசு (City-State) ஆயிற்று (அப்பழம் பெரு நாட்டினங்களின் பண்டை வரலாறு காண்க).

பண்டைக் கிரேக்க நாட்டு வரலாற்றாய்வாளர் ஒருவர் நகர் - நாடு அரசின் இலக்கணத்தையும் அதன் தோற்ற வளர்ச்சி வரலாற்று மரபையும் தமிழ்க் கவிஞர் பெருமாட்டி ஒருவரின் பாடல் மொழிபெயர்ப்பு மூலமே விளக்க முற்பட்டுள்ளார். கொங்கு நாட்டுக் கவியரசியாகிய ஔவையார் பெயரால் நம்மிடையே நிலவும் ஒரு பாடலே அது. சங்ககாலத் தொண்டை நாட்டு வேளிருள் ஒருவனான தொண்டைமான் இளந்திரையன் ஆண்ட காஞ்சி மாநகரை அது வருணிக்கிறது.

**வையகம் எல்லாம் கழனியா, வையகத்துள்**
**செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்: செய்யகத்தே**
**வான்கரும்பே தொண்டை வளநாடு: வான்கரும்பின்**
**சாறே அந்நாட்டின் தனியூர்கள்: சாறுஅட்ட**
**கட்டியே கச்சிப் பொருப்பெல்லாம்: கட்டியுள்**
**தானேற்ற மான சருக்கரை மாமணியே**
**ஆனேற்றான் கச்சி யகம்!**

ஆயிர இதழ்த் தாமரை வடிவிலே அமைந்துள்ள தமிழக மதுரை மாநகரைப் போலவே கிரேக்கரிடையிலும் பிற நாகரிக உலக மக்களிடையிலும் இந்த நகர்-நாடு அரசும் அதன் மையப் பேரூர் அல்லது கோநகரமும் குலமுதல்வன் அல்லது குலமுதல்வி யாகிய இந்தக் கோவின் மனையை (கோயில், கோவில்-அரண் மனை அல்லது வழிபாட்டிடம் அல்லது இந்தக் கோவின் சின்ன மாகிய நடுகல் (இலிங்கம்) அல்லது கோமரம் (தற்காலத் திருத்தலத் திருமரம், கொடிமரம்) நிறுவப் பெற்ற ஊர் வெளியை (பொது, பொதியில், பொதியம், பொதியை அல்லது பொதிகை) நடுவாகக் கொண்டே அமையப் பெற்றிருந்தன. நாளடைவில் குல முன்னோனாகிய ஆதிகோவே தெய்வமாய் (குலதெய்வ மரபாய்), அத்தெய்வ மரபில் வந்த கோக்களே (கோ-தெய்வம், அரசன்) அத்தெய்வ வழிபாட்டுக்குரிய பூசனைக் குருமாராகவும், அத்தெய்வ மரபில் மலர்வுற்ற நாட்டுமக்களின் அரசராகவும், சமுதாயத் தலைவராகவும் போர்க்காலப் படைத்தலைவராகவும் செயலாற்றினர்.

பண்டைத் தமிழர், பண்டை நாகரிக உலக மக்கள் ஆகியோரின் இனமலர்ச்சியிடையே இனத்தின் அல்லது நாட்டின் மூலமுதல்வி அல்லது மூலமுதல்வனான கோவே இறைவி அல்லது இறைவன் அல்லது அம்மையப்பனாகிய சிவபிரான்

(குறிஞ்சி நிலத்துவள்ளி - முருகன், முல்லை நிலத்து நப்பின்னை கண்ணன்) ஆயினர். ஊர் மையப் பொது வெளியாகிய அம்பலமே வழிபாட்டிடமாகிய கோயிலாகவும், மக்கள் கூடுமிடமான ஆட்சி மன்றம் அல்லது அம்பலமாகவும் வளர்ச்சி பெற்றது.

போர்க்காலக் கோட்டையாகவும், அமைதிகாலப் பள்ளி கல்லூரி பல்கலைக் கழகங்களாகவும், ஆட்சி மன்றம், நீதிமன்றம், திருமண அரங்கங்களாகவும், கலைக் கூடங்கள், சொற்கூடங்கள், ஆய்வாராய்வுக் கூடங்களாகவும் களஞ்சியங்களாகவும், விழா வழிப்பாட்டுக் களஞ்சியங்களாகவும் அயலாட்சிக் காலம் வரை நிலவிவந்துள்ள காஞ்சி மாநகரக் கோயில்கள் இந்த இனமலர்ச்சி வளர்ச்சிகளின் சின்னங்கள் ஆகும்.

மேற்காட்டப்பட்ட ஔவைப் பிராட்டியார் பாடலும், அவ் வடிவில் கிரேக்க வரலாற்றாய்வாளர் எடுத்துக் காட்டிய மேற் கோளும் இந்த முழுமையான இனமலர்ச்சி வளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றன.

'கோ' என்ற சொல் பாரசிக மொழியிலும் தமிழிலும் மட்டுமே மலை, அரசன் என்ற இரு பொருள்களையும், தமிழில் மட்டுமே அந்த இரு பொருட்களுடன் குலமுதல்வி அல்லது குலமுதல்வன் (கோத்திரம் - கோவழிவந்த மரபு), கடவுள் (கோயில்- வழிபாட்டிடம்), அரசன் (கோயில் அரண்மனை), சமயகுரு (கோமரத்தாடி) ஆகிய பொருள்களையும் சுட்டுவதாக அமைந்துள்ளது காணலாம். தாய்-தந்தை அல்லது அம்மையப்ப னான இக்கோ அல்லது இறைவனே தமிழ்ப் புராண மரபில் மலையரசனாகிய பாண்டியன் (பொதியம் அல்லது மலைய மலை ஆண்டவன்) வளர்த்த முத்தமிழ்ச் செல்வியாகிய உமையை மணந்து மலையரசனாகவே நாடாண்ட சிவபிரான் என மலர்ச்சி யுற்றான். குமேர் அல்லது க்மேர், சைலேந்திரர் என்ற பண்டை மலேசிய, இந்தோனேசிய, சுமேரியப் பரப்புகள் கண்ட பேரரச மரபுகளின் பெயர்கள் மலையரசன் என்ற பொருளையே தரு கின்றன. கோபுரம் என்ற தமிழ்ச் சொல்லுக்கும் இம்மரபு வழி யிலேயே மலையின் சின்னமாக இலிங்கத்தின் மீதமைந்த மலை யின் முழுமைச் சின்னம் என்ற பொருள் அமைந்தது. இக்கருத்து மரபின் தென் கிழக்காசியப் பரப்பு விரிவு இது என்பது மேலே சுட்டப்பட்டது.

பொது அல்லது பொதியில் அல்லது அம்பலம் என்ற சொல்லும் இதே மலர்ச்சிக் காட்டுகிறது. மலையாள மாநில வழக்கில் அது இன்றும் கோயிலையே உணர்த்துகிறது. ஆனால் தமிழிலோ அது பெரிதும் பொதுமை (Public, பொது நிலை, பொதுவிடம்), ஊர்வெளி, ஆட்சிமன்றம் ஆகிய பொருள்களே சுட்டுகிறது. அதே சமயம் இறைவன் ஆடுமிடம் என்ற கருத்துருவில் இச்சொல் அதன் தொல்பழஞ்சமயத் தொடர்பையும் (தமிழர் மரபில்) சமயமும் அரசியலும் ஒரே இணைமரபே என்ற மெய்மையினையும் சுட்டிவிடுகின்றது. சிதம்பரம்(சமஸ்கிருதம்: சித்சிற்றுயிர் அதாவது ஆன்மா; அம்பரம்-வானவெளி) அல்லது சிற்றம்பலம் (சிறிய அம்பலம் அல்லது சிற்றுயிராகிய இடவெளி அல்லது கோயில்) என்ற நகர்ப்பெயரில் அம்பரம் அல்லது அம்பலம் என்ற சொல்லின் இந்த இருதிறப் பொருள்களும் இணைவது காணலாம். மற்றும் சிற்றம்பலம் அல்லது சிற்றுயிரின் ஆன்மவெளி (திருவள்ளுவர் பெருமான் சுட்டிய இறை ஒளி பாயும் இதயமலர்), பேரம்பலம் அல்லது ஞானப் பெருவெளி (உபநிடதங்கள் பேசும் கட்டற்ற ஆன்மா, பரவெளி ஆன்மா), பொன்னம்பலம் அதாவது இரண்டின் இணைவான பொன்னொளி (வள்ளலார் பெருமான் மேற்கொண்ட அருட்பெருஞ்சோத) ஆகிய நுண்பொருள் மரபுகளும் தமிழில் மட்டுமே இச்சொல்லின் மரபு மலர்ச்சி விரிவுகளைக் காட்டுகின்றன என்பது காணலாம்.

ஆண்பாலாக மட்டுமோ, பெண்பாலாக மட்டுமோ குறிக்கப் பெற இயலாத தமிழ் மரபின் இறைவனாகிய அம்மையப்பனைச் சுட்ட வேறு எந்த மொழியிலும் (சமஸ்கிருதத்திலும்) இல்லாத 'அவர்' என்ற இருபாற் சுட்டான பால்பகா உயர்திணைச் சொல்லை உடைய உலகின் ஒரே தெய்வ மொழி தமிழ் என்று தமிழ்க் கவிஞர் பெருமான் துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகளார் பாடியுள்ளார்!

மலையாள மாநில அகத்திய கூடம் என்றும், அகல் இந்திய மரபில் மலையம் என்றும் வழங்கப்படும் தமிழினத் தெய்வத் திருமலை தமிழில் மேற்கண்ட ஊர் வெளி அல்லது அம்பலமரபு (இலத்தீனம், Forum, ஊர்வெளி, சந்தைவெளி, ஆராய்ச்சி அரங்கம்) குறித்த பொதியில் அல்லது பொதியம் என்ற பெயராலேயே சுட்டப்படுகிறது. இப்பொதிய மலையிலேயே என்றும் மூவா இளமையளாகிய தமிழன்னை சங்கம் வீற்றிருந்து விளையாடுவதாகக் கம்பர் பெருமான் தமிழ் மரபுச் சித்திரம் தீட்டியுள்ளார்.

கடல் கொண்ட தமிழகக் குமரிமலையின் பகுதியாகிய இந்தப் பொதியம் அல்லது அம்பலமே தமிழகத்தில் இன்றும் பேணப் படும் ஐவேறான பொன்னம்பலங்களின் தாய் மரபு மூலமான அல்லது தமிழினத்தின் தேசீயப் பொது நிலையான ஐம்பொன் அம்பலமாக நிலவியிருந்தது என்னல் தகும். மேலே சுட்டியபடி குடியரசு மரபின் மரபு மூலச் சின்னமான இப் பொதுநிலை அம்பலத்தின் தெய்வமாகிய கன்னித் தாயின் மரபு விரிவினையே நாம் கன்னியாகுமரியின் கன்னி பகவதியம்மன், மதுரை மீனாட்சி யம்மன், (ஒருவேளை கொங்க நாட்டுச் செல்லாயி அம்மன்) காஞ்சி காமாட்சியம்மன், காசி விசாலாட்சியம்மன், (தமிழ்ப் பெயர்; சாலி-நெல்), உச்சைனி நித்திய கலியாணியம்மன், பண்டைமேலை ஆசிய (துருக்கி) நாட்டின் எபீசசு நகரத்துத் தயானா அம்மன், கிரேக்க நாட்டு அதேன்சு நகரத்து அதீனா அம்மன் என நாகரிக உலகெங்கும் நகர் நடுக் கன்னித்தாய்த் தெய்வக் கோயில்களாகவே காண்கிறோம். உரோமர் மரபிலும் அதைப் பின்பற்றிச் செருமானிய மரபிலும் (ஆனால் பிரிட்டானிய மரபிலன்று) மட்டுமே இந்த அன்னை மரபு தந்தை மரபாக மாறி யுள்ளது.

நகர்-நாடு அரசு என்பது நாகரிக உலகளாவிய பண்பு என்பதையும், அந்நாகரிக உலகில் பினீசியருக்கும் கிரேக்கருக் கும் உரோமருக்கும் பிறருக்கும் அம்மரபில் தமிழகமே முன்னோடி யாய் அமைந்திருந்தது என்பதையும் இவ்விளக்கங்கள் தெரிவிக் கின்றன. தவிர, இந்தியாவினுள் இம்மரபு ஆரியர் எனப்படும் இந்து ஐரோப்பிய இனத்தவர் வருகைக்கும், இதுபோல அணிமை மேலையுலகில் செமித்திய இனத்தவர் வருகைக்கும் முற்பட்ட தொல்பழமையுடையது ஆகும். ஏனெனில் இம்மரபே விவிலியத் திருமறையின் பழைய ஏற்பாட்டின் மூலமரபாகவும் (Patriarchy, கோவரசு அல்லது தந்தையரசு; இலத்தீனம்: Patria, கோத்திரம் அல்லது தந்தை வழிக்குடும்பம்), இருக்குவேத மரபாகவும், திருவள்ளுவர் கண்ட முப்பால் அரசு மரபாகவும் அமைந்துள்ளது.

இருக்குவேத முனிவர்களில் வசிட்டரினும் முற்பட்ட ஆரியப் பழமையும், வேதப்பழமையும், இருக்குவேத மந்திரங் களிலேயே மிகப் பெரும்பாலானவற்றை ஆக்கியவர் என்ற வேத மரபுத் தலைமையும் ஒருங்கே கொண்டவர் விசுவாமித்திரர் (வேத மொழி: விசுவா-உலக அன்னை; மித்திரர்-நண்பர்; சமஸ்கிருத

இலக்கண உரை மரபில் பதஞ்சலி: கி.மு. 2-ம் நூற்றாண்டில்) இதனை விசுவம்-இயலுலகு, மித்திரர் - நண்பர் எனப் பிரிக்க முயன்று குழப்பியுள்ளனர், அல்லது கௌசிகர் அல்லது குசிகர் (வேதமொழி: குச-வேத வேள்விக்குரிய தெய்வப்புல் அதாவது தருப்பை என்ற அறுகம்புல்). இந்திய வரலாற்றுப் பேராசிரியர் அரங்கசாமி ஐயங்கார் (Pre-Muselman period of India) சுட்டிக் காட்டியுள்ளபடி, அப்பழங்கால மருபுக்கேற்ப, அம்மாமுனிவர் பண்டை ஆரியரின் அரசர் அல்லது ஆட்சித் தலைவராகவும், வேள்விக்காலத் தலைமைச் சமய குருவாகவும், போர்க்காலப் படைத்தலைவராகவும், அமைதிக்கால நீதித் தலைவராகவும், திருமணம் போன்ற சமுதாய விழாக்களின் வினைமுறைத் தலைவராகவும், (மந்திரங்களை ஆக்கி அறிவித்த பேராசிரியராக வும்) அதாவது ஆரிய இனமரபில் பிறந்த ஒரு தமிழ் மரபுச் சித்த ராகவும் ஒருங்கே விளங்கினார். அத்துடன் அக்கால ஆரிய ரிடையே வருணக் கருத்து பிறக்கவில்லை என்பதைக்குலபதி (குலத்தலைவன்), விசாம்பதி (மக்களின் தலைவன்: விச்மக்கள்) ஆகிய இருக்குவேத அரசரைச் சுட்டிய சொற்கள் காட்டுகின்றன. ஏனெனில் இங்கே குலம் என்ற சொல் சாதி அல்லது வருணம் குறிக்கவில்லை. நாட்டு மக்கள் அனைவரையும் குறித்தது என்பதையும்; விச் - என்பதும் பின்னாளைய கடைவருணமாகிய வைசியர் என்ற மூன்றாம் வருணம் குறிக்கவில்லை, நாட்டு மக்கள் அனைவரையுமே சுட்டிற்று என்பதையும் காணலாம்.

திருவள்ளுவர் பெருமான் குறிக்கொண்ட நாடும் அரசும் இதே நகர்நாடு அரசுப் பண்பு அல்லது வேள்புலக் குடியரசு மரபிலிருந்து மாறுபட்டதன்று.

> நாடுஎன்ப, நாடா வளத்தன : நாடு அல்ல
> நாட வளம்தரும் நாடு

இங்கே நாடு என்ற பெயர்ச் சொல்லையே முப்பால் முதல்வர் நாடுதல் (இனநலம் குறிக்கொள்ளுதல்) என்ற வினைப் பொருளடியாகப் பிறந்ததென்ற குறிப்புக் காட்டியுள்ளார். ஐங்குரவர் மரபில் நின்று நாட்டுக்குத் தாமே தாயாக, தந்தை யாக, ஆசானாக, கோவரசனாக, தெய்வமாக அமைந்த மன்னர், மக்களைத் தன் குழந்தைகள் நிலையில் வைத்து, அவர்கள் வளங் களை அவர்கள் அறிந்து நாடு முன்பே நிறைவு செய்து, அத்துடன் அமையாமல், அவர்கள் நாடாத, அறியாத வளங்களையும் (இனக்

கல்வி அதாவது தேசீயக்கல்வி மூலம்) அறிந்து நாடுவிக்க வல்லவனாய் இருத்தல் வேண்டும். என்று திருவள்ளுவர் விரும்பி யுள்ளார். திருக்குறளின் கல்வி பற்றிய அதிகாரங்கள் இறைமாட்சி அதிகாரத்தினையடுத்து அமைந்தள்ள தன் மெய்ம்மை விளக்கம் இதுவே!

நகர்-நாடு அரசு அல்லது குடியரசு மரபில் வந்த வேளிர் பண்டைத் தமிழக அதாவது தென்னக எல்லை கடந்து இந்திய, நாகரிக உலகமெங்குமே பரவியிருந்தனர். கன்னட, ஆந்திர, கலிங்க, மராத்திய, குசராத்திய எல்லையெங்கும் பரவி ஆட்சி செய்த சளுக்கரும் மேற்கு, கிழக்கு, வடக்குப் பகுதிச் சாளுக் கியரும் இரட்டரும் (இராச்டிர கூடரும்) மேலைக் கங்கர் (பண்டை வடகொங்கமும் கொங்கு நாடும் ஆண்டவர்) கீழைக்கங்கர் (கலிங்கம் ஆண்டவர்) ஆகியோரும் கி.பி.7ம் நூற்றாண்டு வரை வேளிராயிருந்து, பின்னரே அரசர், பேரரசராயினர் என்பது மேலே கூறப்பட்டது. தவிர, தமிழக அரசர் பேரரசர் வேளிர் ஆகியோ ருடன் போட்டியிட்டுக் கடலாட்சி செய்த குறும்பரும் ஆந்திரரும் கலிங்கரும் (பிற பண்டை வேள் நாடுகளின் ஆட்சியாளர்களும்) வேளிர் அல்லது குடியரசுகளின் கூட்டிணைவுகளாகவே (Republican Federations) நெடுங்காலம் ஆண்டவராவர். அம் மரபினர் பலர் உரோமனிய ஜீலியசு சீசரையும் (கி.மு. 1ம் நூற் றாண்டு) பிரான்சு நாட்டு நெப்போலியனையும் (கி.பி. 19ம் நூற்றாண்டு) போல, குடியரசுத் தலைவராயிருந்து அதைக் கைப்பற்றியே பேரரசராயினர்.

புத்தர்பிரான் (கி.மு. 6ம் நூற்றாண்டு) பிறப்புக்குரிய சாக்கியமரபு, அதே காலத்துக்குரிய மகாவீரர் பிறப்புக்குரிய வைசாலிநகரம் (காசி விசாலாட்சியம்மனை நினைவூட்டும். பெயர்: விசாலாட்சி என்பதன் தமிழ் வடிவம் சாலி - நெல்) ஆகியவை முறையே குடியரசுக்குழுவாகவும் குடியாட்சி நகரமாக வுமே நிலவியிருந்தன. தவிர, கி.பி. 4-ம் நூற்றாண்டில் சிற்றரசன் நிலையில் (ஒருவேளை வேளிர் நிலையில்) இருந்த குப்த மரபின னான முதலாம் சந்திரகுப்தன் லிச்சாவியர் என்ற குடியரசுக் குழு மரபிலிருந்து பெண் கொண்டதன் பயனாகவே எளிதில் பேரரசு நிலை எய்தினான் என்று வரலாற்றாசிரியர் வின்சென்ட் சுமித் குறிப்பிடுகிறார். சங்ககாலத் தமிழக முடியரசர் (சேரர், கொங்குச் சேரர் உட்பட) மேற்கொண்ட வழக்க மரபை இது நினைவூட்டு

கிறது. இதே மரபும் சூழலும் கி.பி. 4ம் நூற்றாண்டு வரை இந்தியப் பரப்பெங்கும் நீடித்திருந்தது என்பதையும் இது காட்டுகிறது.

தமிழக, இந்தியப் பரப்புக்களில் காஞ்சி, உச்சைனி, வைசாலி போன்ற நகரங்களும், தமிழகத்தில் சோழர் காலம் வரை நிலவியிருந்த மணிக்கிராமத்தார், நானாதேசக்குழு, திசையாயிரத்து ஐந்நூற்றுவர் குழு போன்ற உலகநாடுகள் அளாவிய வாணிகக் குழுக்களும் பிற தொழிலமைப்புகளும் உண்மையில் வேள்புல நிலையிலிருந்தும் கூட்டுக் குடியரசு நிலையிலிருந்தும் மேலும் முன்னேறி மலர்ச்சி பெற்று வளர்ந்த தன்னாட்சி நகரங்கள் (City Corporation) வாணிக, தொழில் தன்னாட்சி அமைப்புக்கள் (Mercantile or Industrial corporations) ஆகியவையே என்று அறிகிறோம். இவற்றுட் பல இன்று நாட்டுக் கோட்டை வணிகர், செங்குந்தர், கட்டி முதலியார் ஆகியோர் போன்று, குடியரசு மரபு தேய்வுறப் பெற்றுச், சாதி மரபுகளிடையே சாதிமரபுகளாக உறைந்துவிட்டன. தவிர, காஞ்சி (தமிழகம்), வல்லபி (குசராத்), நாலந்தா (பீகார்), விக்கிரமசிலா (அசாம்) முதலிய பல்கலைக் கழகங்கள் இதே வேள்புலத் தன்னாட்சி மரபினைப் பின்பற்றி எழுந்த தன்னாட்சிக் கல்வி நிறுவனங்களேயாகும்.

கீழே விளக்கப்பட இருக்கிறபடி, பண்டைத் தமிழரசரின் ஆட்சிப் பரப்பும் வேளிர் ஆட்சிப்பரப்பும் தாண்டித் தமிழுலகின் மீதே கலையாட்சியும் இயலாட்சியும் மொழியாட்சியும் இலக்கிய வாழ்வின் ஆட்சியும் பரப்பிய முச்சங்க மரபு என்பது தொல்பழங் காலத்திலேயே முகிழ்த்த இத்தகைய கல்வி நிறுவனம் அல்லது இத்தகைய பாரிய தேசீயப் பல்கலைக்கழக அமைப்பேயாகும். நாகரிக உலகெங்குமுள்ள பல்கலைக்கழக மரபுகள் இன்னும் இக்கோமரபு, சங்கமரபு பேணியே வருகின்றன. அவற்றின் வேந்தர், துணைவேந்தர் கோமரபிலும் குடியரசு மரபிலும் வந்தவர் களேயாவர்.

தமிழகத்தில் மூவரசுகளும், வடபால் சிசுநாகர், நந்தர், மோரியர், குப்தர் ஆகியோரால் வளர்க்கப்பட்ட மகத அரசுமே தொல்பழங்கால இந்தியாவில் வேளிர் இணைவால் ஏற்பட்ட ஆதிகால முடியரசுகள் என்று கருத இடமுண்டு. ஏனெனில் தமிழ்ப் பேரரசரின் முற்கால இமயப் படையெடுப்புகளுக்கும், அதனையொட்டிப் புத்தர் கால அரசன் அசாதசத்துரு (கி.மு. 6ம் நூற்றாண்டு), மோரியர் (கி.மு. 3ம் நூற்றாண்டு), சமுத்திரகுப்தன்

(கி.பி.5ம் நூற்றாண்டு) ஆகியோரின் தமிழகப் படையெடுப்பு களுக்கும் இம்மரபுப் போட்டியே வழிவகுத்தது என்னலாம். உண்மையில் வரலாற்றுக்கால முழுவதும் வடமேற்கு, மேற்கு இந்தியப் பரப்பு கொங்குநாட்டுத் தாயாதிச் சண்டையையே நினைவூட்டவல்ல பாரதப் போருக்கும் (அயலவர் படையெடுப்பு களுக்கு, அயலவர் ஆட்சிகளுக்கும் தான் ஆளானதேயன்றி, இந்தியாவின் தெற்கு, கிழக்குப் பரப்புகளைப் போன்று தேசீய அரசு பேரரசுப் போட்டிகளுக்கு உரியதாகப் பெரிதும் நிலவ வில்லை! மூன்றாவதாக, தமிழல்லாத பிற இந்தியத் தாய்மொழி கள் மிகப்பலவும் உலகத் தாய்மொழிகள் கூட) இலக்கிய மொழி களாக உருவாவதற்கு நெடுநாள் முன்பிருந்தே மதுரை மாநகர் வளர்த்த தமிழுடன் விதர்ப்ப நாடு வளர்த்த பாளி, பாகதம், சமஸ் கிருதம் போன்ற அவ்வக்கால சமய இலக்கிய மொழிகள் அவ் வெல்லாத் துறைகளுக்குமுரிய தென்மொழியான தமிழுக்கு எதிரிடையாக வடமொழி எனத் தழைத்துப் போட்டியிடும் நிலை ஏற்பட்டது. இதே மரபூழிக்குரிய செய்தியேயாகும்.

சங்ககால வேளிர் அனைவருமே தம் ஆட்சி மரபை வேள் என்றும் ஆட்சிக்குடி மரபினரை வேள்மான் (வேள்மகன்), அல்லது வேள்மாள் (வேள்மகள்) என்றுமே வழங்கினர். ஆயினும் அவர்களில் சிலர் வேள் என்ற இப்பொதுப் பெயருடனாக, கோ, இருங்கோ, கோமான் (கோமான்), என்ற பட்டங்களையும், இன்னும் சிலர் அப்பொதுப் பெயருடனாக அல்லது பொதுப்பெயர், பட்டம் ஆகிய இரண்டனுடனாக ஆய் என்ற தனிப் பெயரையும் இணைத்துக் கொண்டனர். பாண்டிநாட்டுப் பகுதியான நாஞ்சில் நாடு அல்லது வேள்நாடு ஆண்ட திருவாங்கூர் அரசர் கி.பி. 10 ம் நூற்றாண்டு கடந்தும் ஆய்வேள் மரபினர் என்றே தமிழக வரலாற் றில் குறிக்கப்பட்டு வந்துள்ளனர்.

இம்மூன்று சொற்களில் கோ (அரசன்) என்ற சொல், அதன் விரிவுகளான கோன் (அரசன்), கோல் (அரசன் கைக்கோல், ஆட்சி, ஆட்சித்தன்மை, கோன்மை) (ஆகியவற்றுடனே குடியரசுக் காலம் கடந்து அம்மரபு மறக்கப்பட்ட பின்னும் முடியாட்சிக்குரிய அரசரையும் குறிக்கும் பொதுச் சொல்லாக நீடித்து வந்துள்ளது. ஆனால் ஆய் என்ற சொல்லோ, வேள் என்ற சொல்லோ கூட, குடியரசு மரபு மறக்கப்பட்டுவிட்ட முடியாட்சிக் காலங்களில் ஆட்சி மரபு குறித்த சொற்களாக நீடிக்கவில்லை. முன்னது

தொடக்கத்தில் ஒரு திணைக்கு உரிய மக்கட் பெயராகவும் (முல்லைநில ஆயர்), அதன் பின் ஒரு சாதிமரபு குறித்த பெயராகவும் (இடையர்) தேய்ந்து இழிபுற்றுக் குறுகி விட்டது. பின்னதோ, வேளிர் என்ற அதன் பழைய பன்மை வடிவம் உட்பட, குடியரசு மரபு மறக்கப்பட்டபோதே ஆட்சி மரபும் பொருள் மரபும் இழந்துவிட்ட பழஞ்சொல்லாகிவிட்டது. ஆயினும் முடியரசுகள் இழந்து விட்ட பழைய கோமரபுப் பண்புகள் பலவற்றையும் அவற்றின் பொது முறையான இலக்கிய வழக்காறுகள் இன்றும் குறித்துக் காட்டுகின்றன.

ஆய் என்ற சொல் தாய் அல்லது தந்தை, தலைவி அல்லது தலைவன், ஆசான், மேலாளர் (Master, Overlord) ஆகிய பொருள்களின் மூலம் ஆதிகாலப் பெண் இறைமை, பெண்வழி மரபு, பெண் ஆட்சி, பெண்டிர் சமயத்தலைமை, பெண்டிர் செல்வ உரிமை ஆகியவற்றையும், கோமரபுக்குரிய ஐங்குரவர் பண்பையும் சுட்டுகின்றது. இதன் விரிவாகத் தாயம் (ஒரு பெண்டிர் விளையாட்டு, குடிவழி உரிமை) தாயாதி (ஒரு கோத்திரத்துக்குட்பட்ட பங்காளி) தாயபாகம் (சொத்துப் பிரிவினை) ஆகிய சொற்கள் இன்னும் தொல்பழமரபு சுட்டுவனவாய் நிலவுகின்றன. இதுபோலவே வேள் (முருகன், மன்மதன், மணமகன், வீரமும் அழகும் இளமையும் ஒருங்கே கொண்டவன்) என்ற சொல்லும், அதன் விரிவுகளான வேள்வி (சமயவினைமுறை, வழிபாடு), வேட்டல் (வழிபட்டு நேர்ந்து கொள்ளல், விரும்புதல்; மணம் புரிதல்: தெலுங்கு: பெள்ளி, மலையாளம்: வேளி-திருமணம்) ஆகியவையும் இறைமை, சமய ஆட்சி, அரசியல் ஆட்சி, நீதிமுறை ஆட்சி, பண்பாட்சி முதலிய கோமரபின் முழுநிறை ஆட்சிப் பண்பை உணர்த்துகின்றன.

கோ, ஆய், வேள் ஆகிய மூன்று சொற்களும் இவ்வாறு தமிழக, இந்திய, நாகரிக உலகத் தொல்பழங்கால அரசியல் வரலாற்றையே தம்முள் கொண்டியல்கின்றன. கோ (மலை, தலைவன்) என்ற சொல் குடியரசு, முடியரசு ஆகிய இரண்டனுக்கும் உரிய பொது மூல அரசுமரபையும் அம்மரபின் குறிஞ்சித் திணை யூழியையும் குறித்துக் காட்டுகிறது. அதுமட்டுமன்று, வேளிரிணைவால் ஏற்பட்ட ஆதி முடியரசுகளின் தனித்தன்மைகளையும் இதுவே விளக்குவதாம். ஏனெனில் அவை இவ்வூழியிலேயே மற்ற வேள்புல குடியரசுகளினின்றும் பிரிவுற்றன. ஆய் என்னும் சொல் குடியரசு மரபின் முல்லைநில மரபைச் சுட்டுகிறது.

பின்னே விளக்கவிருக்கிறபடி, பெண் இறைமையும் பெண் ஆட்சியும் பெண் வழி மரபும் மாறியமைந்ததும், முல்லை நில மரபு ஆட்சி மரபிலிருந்தே ஒதுங்கித் தனி மரபாகப் பிரிய நேர்ந்ததும் இம் முல்லைநில ஊழியிலேயாகும். மூன்றாவதாக வேள் என்ற சொல்லே, குடியரசு மரபின் முழுமலர்ச்சி காட்டும் சொல் ஆகும். குடியரசு மரபு மருத நிலத்திற்குத் தாவி, ஐந்திணை நிலங் களிலும் படர்ந்து பரவிய பேரூழி இதுவே கீழே விரித்துரைக்கப் படவிருக்கிறது.

குடியரசுக்கும் முடியரசுக்கும் உரிய பொது மூலமரபு என்பது உண்மையில் மனித இன நாகரிக சமுதாய அரசேயாகும். இந் நாகரிக சமுதாய அரசும், அதற்குரிய அடிப்படையாயமைந்த மனித இன் நாகரிக சமுதாயமும் நாகரிக உலகில் ஐந்திணை விரவிய நிலத்திலேயே தோன்றி வளர்ந்து தொடர்ச்சியறாத முழுநிறை மலர்ச்சியடைந்தது. முழு மலர்ச்சியடைந்த பின்னும் அத்தகைய ஐந்திணை விரவிய நிலமே அதன் மலர்ச்சியை இடையறாது ஊக்குவதற்குரிய உயிர் விதைப்பண்ணையாகவும் அமைந்தது. இத்தகைய ஐந்திணை விரவிய தன்மை மேலே சுட்டப்பட்ட நாகரிக உலக உயிர் மண்டிலத்தின் கடல் மலை விரவிய நாடுகளுக்குரிய பொதுத்தன்மை ஆகும். அதேசமயம் அது பண்டைத் தமிழகத்துக்கும் அதன் வரிவாகிய இந்தியாவுக் கும், அதன் செறிவிறுக்கமாகிய கொங்குத் தமிழகத்துக்கும் சிறப்புப்பண்பு ஆகும். இதனை உணர்ந்தே பண்டைத்தமிழர் மலை வனப்பகுதி அல்லது குறிஞ்சி, காட்டுவளப்பகுதி அல்லது முல்லை, ஆற்று வளப்பகுதி அல்லது மருதம், கடலோர வளப் பகுதி அல்லது நெய்தல் என்ற நானிலங்களையும், அவற்றுடனே வளமற்றது போலத் தோற்றுகிற, ஆனால் இனவளம் ஊக்கும் திறனுடைய புன்காடு, கரிசற்காடு அல்லது மணற்காடு ஆகிய பாலை என்பதையும் இணைத்து, மனித இன மலர்ச்சிக்குரிய நிலப்பரப்பை ஐந்திணைகளாக வகுத்துக் கொண்டனர்.

மனித இன வரலாற்றாசிரியரான பேராசிரியர் ஆர்னால்டு டாயின்பீ கண்டு கூறியுள்ளபடி, மனித இன நாகரிகமும் பண்பாடும் நாகரிக சமுதாய அரசும் குறிஞ்சியில் முதல் முதல் பிறந்து உரம் பெற்று, முல்லையிலேயே நெடுங்காலம் தவழ்ந்து விளையாடி வளம் கண்டு, மருதத்தில் சென்று தங்கிய பின்பே உலக சமுதாய அரசாகப் புதுமலர்ச்சி பெற்று நெய்தல் பாலை

ஆகிய சேய்திணைகளில் மட்டுமின்றி, தாய்த் திணைகளாகிய குறிஞ்சி முல்லை ஆகியவற்றிலும் புதுவளர்ச்சியைப் பரப்பி, மனிதஇன நாகரிகத்தை அதன் இன்றைய நிலையில் திணை கடந்த அதாவது திணைவரம்பற்ற நாகரிக சமுதாய அரசுப் பரப்பாக்கிற்று.

கோ என்ற சொல்லுக்குரிய மலை என்ற பொருளும் அதன் சொல்விரிவுகளாகிய கோபுரம் (மலையரசனின் மலை போன்ற பெரும்படிச் சின்னம்), கோட்டை (கோ, கோடு - மலை, மலை யோடிணைக்கப்பட்ட மலை போன்ற பாதுகாப்பு), கோட்டம் (ஆதி மனித இனப் பரப்பில் மலைப்போக்குகளால் விளைந்த பிரிவு நாட்டுப் பெரும்பிரிவு, கோயில்வளாகம்) ஆகியவையும், அதே சொல்லினுக்குரிய மலையரசனாகிய குலமுதல்வன் என்ற பொருளும் அப்பொருள் மரபின் விரிவாகிய கோத்திரம் போன்ற சொற்களும் வேள்புலக் குடியரசு மரபின் குறிஞ்சி நிலப் பிறப்பு வளர்ச்சி வளங்களைக் குறித்துக் காட்டுகின்றன.

கோ என்ற சொல்லின் ஆவினம் (கன்றுகாலி) என்ற பொருள், அச்சொல்விரிவு பொருள்விரிவு மரபு விரிவுகளாகிய கோன்(அரசன், இடையன்), கோவன், கோவலன், கோபன் (அரசன், இடையன்),முல்லைநிலத் தெய்வமான கண்ணன் அல்லது மாயோன்), கோவி அல்லது கோபி (இடைக்குடி நங்கை, கண்ணன் காதல் துணைவியாகிய நப்பின்னைப் பிராட்டி அல்லது திருமகள், வைணவ நங்கை, வைணவ நங்கையரும் வட இந்திய வைணவரும் நெற்றியில் அணியும் ஒற்றை நாமம்), கோகுலம்(கண்ணன் பிறந்த ஊர்: குலம்குடி, குடியிருப்பு), கோல் (இடையர் கைக்கோல், மன்னர் கைக்கோல், ஆட்சி, ஆட்சி தன்மை, அழகு) ஆகியவையும்; இதுபோலவே ஆய் (வேள் குடிப்பெயர், தலைவி- தலைவன்; ஆட்சியாளரைத் தேர்ந்தெடுத் தல், ஆராய்தல், தேர்ந்து உயர்ச்சி காணல், அருமை, சிறப்பு), ஆயம் (ஆதரவான முட்டுக்கோல், ஆதரவு, அரசர் சுற்றம், உயர்குடி நங்கையரின் பாங்கியர்குழு, அரசியல் மேலவை அறிஞர் பேரவை; கிரேக்கம்; Areopagitica ஆரியர் மலையிருக்கை அல்லது அறிஞர் அவை, பண்டை ஆங்கிலம்: Witenasemot அறிவு வந்தவரவை, நாட்டுச் சட்டமன்றம்) ஆகிய சொற்களும் வேள்புல மரபின் முல்லைத் திணைக்குரிய நீடுவாழ்வையும் செறிவார்ந்த மலர்ச்சியையும் உணர்த்துகின்றன.

தமிழ் இலக்கண மரபில் தமிழர் போர் முறை ஆனிரை கவர்தலிலும் மீட்டலிலும் தொடங்கிக் கோட்டை முற்றுகையிலும் காப்பிலும் கோட்டைக்கு வெளியே களப்போரிலும் முதிர்வுற்றன. பாரதக்காதை பொதுவாகவும் அதன் விராட பருவம் சிறப்பாகவும் காட்டும் குறிஞ்சி முல்லை மருத மரபுப் பண்புகள் இவையே! கோட்டையின் மதியரண், காட்டரண், நீரரண்(அகழி) ஆகிய வற்றில் நாம் இம் முத்திணை மலர்ச்சிப் பண்பேக் காண்கிறோம். கோட்டை என்ற தமிழ்ச்சொல்லுடன் அதன் குறிஞ்சி அல்லது மலை சார்ந்த மரபுப் பண்பும் மராத்தி எல்லை கடந்து இரசபுதனம் வரை பரவியுள்ளன. சீனரிடமிருந்து துருக்கியரிடமிருந்தும் வெடிமருந்து வெடிக்கலம் (துப்பாக்கி) ஆகியவை உலகில் பரவும் வரையிலும் அது கடந்தும் கூட நாகரிக உலகெங்கும் கோட்டைகளே அரசர் இளங்கோக்கள் வலிமைக்குரிய சின்னங்களாகக் கருதப்பட்டு வந்துள்ளன.

வேள்புல மலர்ச்சியின் குறிஞ்சித்திணை மரபுக் காலத்திலேயே வேள்புல இணைவாகிய ஆதி முடியரசுகள் அத்தாய் மரபிலிருந்து பிரிந்தன என்பது மேலே சுட்டப்பட்டது. இவ்வூழியின் பெண்இறைமை, பெண் வழிமரபு ஆகியவற்றிலிருந்தே இந்தியா வெங்குமுள்ள கோயிற்குருமாரும், கோயில் மரபு தழுவிய இசைவேளாளர் போன்ற கலை வகுப்பினரும் பிறரும் தனி மரபுகளாகப் பிரிந்து வாழ்கின்றனர் என்னலாம். வடமேற்கு இந்தியப் பரப்பில் இவர்கள் நட்வர் என்ற தாழ்த்தப்பட்ட மரபினராயுள்ளனர். முல்லைத்திணை மரபோ இன்னும் புரட்சிகரமான மாறுதல்கள் கண்டது. மனித இனம் வேய்ங்குழலும் நரம்பிசையும் பறை முழக்கும் பிறவும் கண்டு முழுநிரை இசை வளர்த்த திணை இதுவே. இப்பழந்தமிழிசை மரபுகள் வேதகால இசை (கி.மு. 1000), ஆதிகிரேக்க இசை (கி.மு. 8ம் நூற்றாண்டு), சீன இசை ஆகியவற்றுடன் தொடர்புடையவை. இக்காலத் தமிழ்க் கவிதையும் (கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடல்) ஆதிகிரேக்க காலக்கவிதையுடனும் (Pastora odes) சீனக்கவிதை மரபுடனும் தொடர்புடையன. தமிழர் இத்திணையில் வளர்த்த கற்பு மரபு (பெண் ஆட்சி மரபு) கூட கிரேக்க உரோம சீன எல்லை வரை ஒளிபரப்பியிருந்தன என்றுகூற இடமுண்டு. சீனப்பேரரசர் பேணிய கற்புச் சின்னமான பெருவளைவுகள் (arches) இதற்குச் சான்றுகள் ஆகும். கிரேக்கர் அறியாத தாய்மைச் சிறப்பினை உரோமர் உணர்ந்து மதித்திருந்தனர் என்பதும் இம்மரபின் தடம் ஆகும்.

முல்லை மரபில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுபாடுகள் பலவற்றுக்கு வழிவகுத்த பெருந்திருப்பமாவது, குறிஞ்சி மரபு அல்லது கோமரபுக் காலத்துக்குரிய பெண் இறைமை, பெண் ஆட்சி, பெண்வழி மரபு, பெண்வழிச்செல்வ உரிமை ஆகியவை படிப்படியாக ஆணுக்கும் உரிமைப்பட்டு, பின் ஆண் வழிக்கு மாற்றப்பட்டு வந்ததே ஆகும். (குறிஞ்சி முல்லை நிலைகளுக் குரிய இத்தடங்களைக் கேரளத்தில் செறிவாக, தமிழகத்திலும் இந்தியாவிலும் தென்கிழக்காசியாவிலும் பசுபிக்மாகடல் தீவப் பரப்பிலும் பிற தென்னுலகப் பகுதிகளிலும் அப்பாலும் பரவ லாகக் காணலாம்). பெண்ணுடன் ஆண் வாழ்விலும் ஆட்சியிலும் சரிசமபங்கு கொள்ளும் இக்கற்புநிலை நாகரிகத்தளத்திலேயே பெண்பாலார் அக(வீட்டு) ஆட்சிக்கும் ஆண்பாலார் புற (நாட்டு, உலக) ஆட்சிக்கும் சிறப்புரிமை உடையவர் ஆயினர். முல்லைத் திணைக்குரிய தெய்வமாகிய கண்ணனின் காதல் துணைவி யான நப்பின்னைப்பிராட்டியே (மராத்தி குசராத்தி நாட்டு ராதா கிருட்டிண வழிபாட்டு மரபுக்குரிய ராதையே) கண்ணகிக்கு முன்னோடியான கற்புத் தெய்வமாகக் கருதப்பட்டாள் (பிற்கால இந்து சமய மரபு ராதையைக் காமக் கிழத்தியாக்கி இழிவுப்படுத்தி யுள்ளது.)

ஆட்சிப் பண்பு மரபின் இப்புரட்சியே சமய, சமுதாய வாழ்வு களிலும் பண்பாடுகளிலும் மொழி மரபுகளிலும் பெருந் திருப்பங் களை உண்டுபண்ணிற்று. தொல் பழங்காலத்தில் அன்னை (கன்னித்தாய்) வழிபாட்டு மரபு அன்னையின் மகன் (சேய் அல்லது முருகன்) வழிபாடாகவும் அன்னையின் ஆண்கிளை அல்லது அண்ணன் (தாய்மாமனாகிய மாயோன்) வழிபாடாகவும், அன்னையின் காதல் துணை அல்லது ஆண்பாதி (அம்மை யப்பன் அல்லது சிவபிரான்) வழிபாடாகவும் மூவகை அல்லது திணை வகையில் இருவகைப்பட்டது.

இம் மும்மை மரபின் தடங்களை நாம் தமிழக, இந்திய பரப்புகளில் மட்டுமின்றி நாகரிக உலக முழுவதிலும், நாகரிக உலக சமயங்கள் அனைத்திலும் காணலாம். நாகரிக உலகுக்குப் புறம்பான உலகின் வடகோடிப் பண்படா இனங்களிடையே (Maine: Ancient Law) அன்னை வழிபாடோ, பெண் ஆட்சி மரபோ, கோமரபு மலர்ச்சியோ தழைக்கவில்லை. ஆதலால், இயற்கையாற்றல் வழிபாடுகளான பல தெய்வ வணக்கமன்றி,

ஓரிறை வணக்கம் மலரவில்லை என்று அறிஞர் கூறுகின்றனர். மாறாக, நாகரிக உலகிலே பெண்வழி மரபுடனும் வேள்புலக் குடியரசு மரபுடனும் மலர்ந்து கோமரபு மலர்ச்சியாகவே ஓரிறை வழிபாடு தோன்றி வளர்ந்தது. அத்துடன் மேலே சுட்டியபடி, குடியாட்சி மரபுக்கு மூலமாய் அமைந்த இந்த ஓரிறை வழிபாடு அம்மரபில் நின்றே இயல்பாகக் குடிமை இறைமை (Divine Family) என்ற நிலையில் தாய், தந்தை, சேய் (Mother, Father, Son) இணைவான மூவொருமை இறைமைக் கோட்பாடாயிற்று. இதுவே பண்டைத் தமிழ் மரபில் சிவன், உமை முருகன் (சோமாஸ்காந்தம்) என; புராணமரபில் சிவன், திருமால், நான்முகன் என; கிறித்தவ மரபில் தந்தை இறை (God the Father) மகன் இறை (God the son) தூய ஆவிஇறை (God the Holy spirit) என; உமர்கய்யாமின் இசுலாமிய சூபிமரபில் அணங்கு (the Lady or God the mother) ஏடு (வேதம் அல்லது குரான்), தேறல் கிண்ணம் (இறையருள் அல்லது பக்தி) என நாகரிக உலக சமயங்களில் படர்ந்து பரவி யுள்ளது. சமய, சமுதாய, பண்பாட்டு ஒழுக்கத் துறைகள் சார்ந்த அறிவுத் துறைகளில் கூடத் தமிழரின் நாடு மொழி இறை ஆகிய சாவாமூவா மும்மைப்பண்பாகவும்; இயலிசை நாடகம் என முத்தமிழாகவும்; அறம்பொருள் இன்பமென முப்பாலாகவும்; பதிபசுபாசம் என, சத்துசித்து ஆனந்தம் என, திருக்கு திருசிய விவேகம் எனப் பலவாறான முப்பொருள் திறங்களாகவும் அதே மலர்ச்சி பல கிளை மரபுகளை வளர்த்துள்ளது என்று காணலாம்.

குறிஞ்சி முல்லை மரபு ஊழிகளில் ஏற்பட்ட இம்மாறுபாடு களின் பயனாகவவே, பெண்ணுருவாயிருந்த இறைவி ஆண் உருவ இறைவனானதுடன், பெண்டிரிடமே தங்கியிருந்த தெய்வ வழிபாடு (கணியன் பூசனையாளன், வானூலார்: பெண்பால் கணிகை தேவராட்டி, தேவடியாள்; தாசி-கடவுள் அடியார் ஆகிய இன்றைய இசைவேளாளப் பெண்டிர் பெயர்கள்; அடிகள்-துறவி) ஆண்களுக்கு மாறிற்று. அல்லிமரபினரான பண்டைய அரசியர் பின்னாட்களில் ஆண் அரசர் ஆயினர். அத்துடன் தற்காலிகமாகத் தொடக்கக் காலத்தில் கோமரபுரம், கிட்டத்தட்ட நிலையாக ஆய்மரபும் மூலமரபினின்று பிரிந்து சமயத் துறையில் தனி மரபான திருமால் வழிபாடும் (அன்னை வழிபாடும் கன்னி வழிபாடும் கன்னி வழிபாடும்) சமுதாயத் துறையில் திணை சார்ந்த தனிமரபாக, கிட்டத்தட்ட தனிச் சாதி மரபாகப் (ஆயர் அல்லது இடையரும்) பிரிய நேர்ந்தது. திணைதோறும் தெய்வங்கள்

மாறினும், இத்திணை (ஓரளவு குறிஞ்சித்திணையும்) மட்டுமே. கோமரபின் இறைமைப் பிளவு காரணமாக சமய சமுதாய வாழ்வில் தனி மரபுகளாக ஒதுங்கியுள்ளது காணலாம். இது மேலும் (அச் சமுதாய, சமயத்துறை அறிஞரால்) ஆராய்தற்குரியது.

வேள்மரபின் வேர்முதல் பண்பு குறிக்கும் கோ, கோயில், அம்பலம், பொதியில் ஆகிய சொல் மரபு, பொருள் மரபுகளிலும் மேற்குறித்த மலர்ச்சி போக்கின் சாயல்களை நாம் காண்கிறோம். முருக, திருமால் வழிபாடுகளில் கோ என்ற சொல் கோமரத்தை (கோயில் திருமரம், கொடிமரம்) மட்டுமின்றி மாடுகளைக் கட்டும் கட்டுத்தறியாகிய கம்பத்தையும் (கந்து, கந்தில்: கந்திற்பாவை) சுட்டிற்று. இதுவே இலிங்க வழிபாடாகவும் (கந்து, கந்தம்-இலிங்கம்: கந்தன்-முருகன்) மலர்ந்தது என்பதைச் சங்கப் பாடல்கள் சுட்டுகின்றன. இதற்கேற்பப் பொதியில் (வெட்ட வெளி) சோலையாகவும் (பொதும்பர்-சோலை), முருகனின் குன்று தோறாடலாகவும் மலர்ந்தது. (இது பெரிதும் கொங்கு நாட்டுமரபு ஆகலாம்) அத்துடன் திருமால் வழிபாட்டின் கோ அல்லது இறைவன் பசுமலை, பசுஞ்சோலை அல்லது நீலவான் ஆகியவற்றின் வண்ணத்தவனாக விண்டு (விண்-நீலவான்; சமஸ்கிருத வடிவம்: விஷ்ணு) எனவும் கோயில் விண்ணகரம் (விண்டு- திருமால்: நகரம் நகரும் இல்லங்கள் அல்லது கிடைகள் அமைந்த பேரூரின் நடுவெளியிடம்; சமஸ்கிருத வடிவம்: விஷ்ணு க்ருகம்) எனவும் வழங்கின.

வேள்மரபு மலர்ச்சியில் குறிஞ்சி முல்லை மரபுகளில் கண்ட புரட்சிகரமான இம்மாறுபாடுகளை விட மருதத் திணை மரபில் அது அடைந்த மலர்ச்சி மாறுபாடு குறைந்ததன்று. சில பல வகைகளில் மேம்பட்டதேயாகும். ஏனெனில் மேலே குறித்தபடி, மருதநிலமரபே ஐந்திணை மரபாக மட்டுமன்றி, திணைவரம்பு களை அழித்து வளர்ந்த தற்கால மனித இன நாகரிகச் சமுதாய மரபாகவும் வளர்ந்துள்ளது. நாகரிக உலகில் இந்தியாவுக்கு மட்டும் தனித்தன்மை அளித்த தளமும் இதுவேயாகும். மனித இன நாகரிக வாழ்வில் கொங்குத் தமிழகம் வகித்து வந்துள்ள மைய இடம் விளக்குவதும் இத்தளமே!

ஐந்திணை மலர்ச்சியின் போக்கில் மருதநிலையின் மரபின் போது ஏற்பட்ட இந்தப் பெருந்திருப்பத்தை நாம் ஐந்திணைகளின் இறைமை மலர்ச்சியிலேயே காணலாம். இறைமரபு மலர்ச்சியின்

தொடக்கத்தில் கோமுதல்வி பெண் நிலையில் கன்னித்தாயாக வும், பின்னர் குறிஞ்சி மரபிலேயே அத்தாயின் ஆண்கிளை யாகிய மாயோனாகவும் மாறும் நிலை ஏற்பட்டது என்பது மேலே கூறப்பட்டது. குறிஞ்சி முல்லைத் திரிபாகிய பாலையிலோ அத் தாயின் வீரத்திருஉரு மீட்டும் அவ்விருவரின் பெண்வடிவான மாயோள் (நாரணி, திருமாலின் கிளைப்பாதி: சிவை, சிவபிரானின் மறுபாதி) அல்லது கொற்றவை ஆயிற்று. ஆனால் மருத நில மரபில் ஏற்பட்ட ஐந்திணை மலர்ச்சி அல்லது நாட்டு மலர்ச்சி யின் முழுநிறைவும் அதன் புதுவளமுமே வேந்தன் (நாட்டு புது வாழ்வு வேய்ந்தவன்) அல்லது மழைத் தெய்வமாகிய இந்திரன் என உருவகிக்கப்பட்டு, அந்த இரு பண்புகளின் ஓர் உருவான வேந்தன் அல்லது இந்திரன் மருதத்திணைக்கு உரிய இறைமை ஆனான். அம்மழையின் கருவளமாகவும், கடலுழவாகிய மீன்முத்து சங்குபவளப் பயிர், கடல் வாணிகம் முதலான புதுவளங்களின் தாயகமாகவும், விளங்கிய கடலகத்தின் தெய்வமாகிய வருணனே நெய்தல் திணைக்குரிய இறைமை பெற்றான். இந்த ஐம்மை இறைமையே ஐங்குரவையும் சுட்டி ஐயுரு இறைமை (பஞ்ச மூர்த்திகள்) மரபு ஆயிற்று.

இங்கே மனிதஇன சமுதாய வளம் படைக்கும் வேள் அல்லது குடியரசனே இயற்கையில் மழை வளம் தரும் வேந்தன் அல்லது இந்திரனாகவும், அவ்வேளரசரின் வேள் குடிமக்களே வேளாளர் அதாவது அம்மழைவள அடிப்படையான உழவாண்மை வளமும் அது சார்ந்து வளர்ந்த வாழ்வு வளங்களும் படைக்கும் குடியரசமரபின் மலர்ச்சிக்குரியவர்களாவும் (தேவர்களாகவும்) உருவகிக்கப்பட்டது காணலாம். இது கீழே விவரிக்கப்படவிருக் கிறது.

மேலே காட்டியபடி, வேள் என்ற சொல்லும் அதன் பழம் பன்மை வடிவான வேளிர் என்ற சொல்லும் தம் சங்க காலக் குடியரசு மரபுப் பொருளை இழந்து, அப்பொருளில் சங்க காலத் துக்குப் பிற்பட்ட முடியரசுக் காலங்களில் கிட்டத்தட்ட வழக்கிறந்த சொற்கள் ஆகிவிட்டன. சமஸ்கிருதத்தில் கூட, முதலில் பெண் என்ற பொருளும், பின்னர் மக்கள் என்ற பொருளும் கொண்ட ஜன என்ற சொல்லடியாகப் பிறந்த ஜனபத (குடியரசு) ராஸ்ட்ர (நகர்- நாடு அரசு; ராஜ்-வேள்; த்ர- காத்துப் பேணு) (வேள்-ராஜ், ராஜன்ய) ஆகிய சொற்களின் நிலையும் இதுவே, ஆயினும் வேள்

அல்லது வேளிர் என்ற சொல்லின் மரபு விரிவாகத் தொல்காப் பியத்திலும் திருக்குறளிலும், சங்க இலக்கியத்திலும் அருக லாகவே வழங்கப்படும் வேள்வி, வேளாண்மை, வேளாளர் ஆகிய சொற்கள் வேள்புல அரசின் மருதத் திணை, மருதத்திணை கடந்த ஐந்திணை மலர்ச்சிகளை நமக்கு நன்கு புலப்படுத்திக் காட்டு கின்றன. (இது முழு அளவில் பின்னர் விளக்கப்படவிருக்கிறது.

தொல்காப்பிய மரபிலும் தமிழிலக்கண மரபிலும் தமிழிலக் கிய மரபிலும் குறிஞ்சிநில மக்கள் குறவர் என்றும் முல்லை நில மக்கள் ஆயர் என்றும், பாலைநில மக்கள் எயினர் என்றும், நெய்தல் நிலமக்கள் மீனவர் என்றும் அழைக்கப்பட்டது போல், மருதநில மக்கள் வேளாளர் என அழைக்கப்பட்டனர். எல்லாத் திணைகளிலிருந்தும் ஆளும் மரபில் பயின்ற குடிகள், அருந்திற லாளர்கள் அறிவாளர்கள் ஆகிய அனைவரும் நாட்டு வாழ்வின் நடுத்திணையாகி விட்ட மருதத்திணையின் புதிய ஐந்திணை மையத் தலைநகர்களைச் சூழ வந்து புதுக் குடியமர்வுற்று ஐந்திணைவளமும் அதன் அப்பாலைய வளமும் ஆண்டு புது நாகரிக வாழ்வு தொடங்கிய நிலையை இது காட்டுகிறது.

இலக்கண மரபில் இப்புதுவள, புதுநாகரிக வாழ்வின் மையம் என்ற முறையில் மருத நிலமே இவ்வூழியில் சிறப்புப்பட நாடு எனப்பட்டது. (பின்னாட்களில் பாண்டிய நாடே சிறப்புப் படத் தமிழ்நாடு, தென்னாடு எனச் சுட்டப்பட்ட மரபினை இது நினைவூட்டுவது ஆகும்) அரசனும் இதற்கு ஏற்ப இந்நாட்களில் நாடன் என்றும், அதே மூச்சில் வெறபன் (மலையாண்டவன்) துறைவன் (கடலாண்டவன்) என்றும் அழைக்கப்பட்டான். இவற்றை ஒட்டியே, மருத நிலத் தெய்வமாகிய வேந்தன் அல்லது இந்திரனும் ஐந்திணை உட்கொண்ட நாட்டின் தெய்வமாக உயர்த்தப்பட்டான். வேளிர் அரசர் தலைமையில் இத்தேசீயத் தெய்வத்தின் பெயரால் தேசீய அளவிலேயே இந்திர விழா எடுக்கப்பட்டது.(கோமரபில் முன்னம் மலர்ந்த அம்மையப்ப னுடன், இப்போது மலர்வுற்ற கோவேள் அல்லது கோவரசனான இந்திரனும் ஒன்றுபடுத்தப்பட்ட இவ்வழிமரபையே தென்கிழக் காசியப் பரப்பு நமக்குச்சுட்டிக்காட்டுகிறபடி) திருக்குறள் கால முதல் காப்பியக்காலம் (கி.பி. 3-6 நூற்றாண்டுகள்). தேவார பெரியபுராண காலம் வரை நாட்டு வாழ்த்து, இறைவாழ்த்து, அரசு வாழ்த்து ஆகியவற்றுடன் அவற்றுக்கும் முந்து நிலையாக மழை

வாழ்த்தும் (வான்-வானவர், அந்தண்மை-அந்தணர் வாழ்த்துக் கள்) அதுபோலவே காப்பியங்களிலே, நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகியவற்றுடன் ஆற்றுப்படலமும் சிறப்பிடம் பெற்றன.

தமிழகத்தின் பொங்கல் விழா, காவேரியின் பதினெட்டாம் பெருக்கு, பரிபாடல் விரித்துரைக்கும் வைகைப்புனல்விழா, இந்தியாவின் போகிப்பண்டிகை, (போகி- இந்திரன்) கேரள மாநிலத்தின் ஓணவிழா (தென்னகப் பெருவேந்தன் மாவலியின் புகழ் நினைவுவிழா) ஆகியவை (மேலையுலகின் கிறிஸ்துமஸ் பண்டிகை, ஈத் பண்டிகை ஆகியவை கூட ) வேந்தன் அல்லது இந்திரன் பெயரால் நிகழ்த்தப்பட்ட இப்பண்டைப் பெருந்தேசீய மக்கள் விழாவின் மரபில் வந்தவையேயாகும் என்னல் தகும் (இது மனித இன நாகரிக உலகளவில் ஆய்வுக்குரியது).

தற்கால நகரங்களைப் போலவே மருதநிலமும் முன்பே வளர்ந்துவிட்ட பொருள் வளம், பண்பு வளம், அறிவு கலை வளங்கள், ஆகியவற்றைப் பேணிப் பரப்பும் நிலமாக மட்டுமே மனித இனவாழ்வில் இடம் பெற்றுள்ளது. அவற்றை ஆக்கிப் படைத்து வளர்க்கும் மரபு அதற்கு என்றும் கிடையாது. மனித இன வரலாற்றில், மருத நிலத்துக்குரிய இதே இயல்பு முடியரசுக் கும் உரியதாகும். குடியரசு மலர்ச்சியில் தோன்றி வளர்ந்த மரபுகள், பண்புகள், வளங்கள் ஆகியவற்றைப் பேணிப் பரப்புவதன்றி, அது தனக்கென அவற்றை முதனிலையாக ஆக்கிப் படைப்ப தில்லை. இதனாலேயே நாம் வரலாற்றில் கொங்கு மாநிலம் போன்று குறிஞ்சி முல்லை விரவிய சிறுபாலைகளாகிய மராத் தியம், இரசபுதனம் (இராஜஸ்தான்) நேபாளம், சுவிட்சர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய நிலங்களிலேயே குடியரசு மரபுடன் வீரமரபு விரவுவது காண்கிறோம். உபநிடதங்களும் புத்த சமண சமயங் களும் இத்தகு வீரக் குடியரசு மரபுகளிலிருந்து தோன்றியவையே யாகும். இது போலவே வரலாற்றில் கொங்கு தமிழகத்தை உள் ளடக்கிய தமிழகம் அல்லது தென்னகம் போன்று குடியரசு மரபும் வீரமரபும் பேணி, வேள்புல நிலையையே வேள்புல அரசு மலர்ச் சியை ஐந்திணை யளாவப் பரப்பும் வாய்ப்புப் பெற்ற நிலங்களில் தான் மக்களினங்கள் கடலோடி இனங்களாக நிலவிவந்துள்ளன என்று காண்கிறோம். வரலாற்றுக் கால பிரிட்டானியர், உலாந்தர் (டச்சுக்காரர்), போர்ச்சுக்கீசியர், பண்டைக்கால பினிசீயர், கிரேக்கர், அராபியர், மலேசிய இந்தோனேசிய மக்கள் ஆகியோரே உலகின்

இத்தகைய கடலோடி இனங்களாய், கடலரசு கடற் பேரரசுகளாய் நிலவி வந்துள்ளனர் என்பதன் சூழல் விளக்கம் இதுவேயாகும்.

பழந்தமிழகத்திலும், பழங்கொங்குத் தமிழகத்திலும் நாகரிக உலகில் முடியரசருக்கு முற்பட்டே வேளிர் ஐந்திணை மலர்ச்சியில் முன்னேறியிருந்தனர். பழங்கொங்குத் தமிழகத்தில் நன்னன் ஆண்ட கடம்பமரபினரும் குறும்பரும், பழந்தொண்டை நாட்டுப் பரப்பிலும் அப்பாலும் திரையர் இளந்திரையர் (திரையர் என்ற சொல்லே கடலோடிகள் என்ற பொருளுடையது), ஆந்திரர், கலிங்கர் ஆகியோரும், அகல் உலகில் பசிபிக் மக்கள் பீனிசியர், கிரேக்க அதேனியர் ஆகியோருமே இம்மெய்மைக்குச் சான்றுகள் ஆவர். பிற அரசர் பேரரசர் தம் ஆட்சியுட்பட்ட இத்தகைய இனங்களின், துணையாலேயே கடலாள முனைந்து வந்தனர் என்பது காணலாம். (திரையர் என்ற சொல் திராவிடம் எரித்ரேயம் அல்லது செங்கடல் நிலம், துரேனியம் அல்லது கிரேக்க கடற் பகுதி, எதுருசுக்கானம் அல்லது தொல், பழங்கால உரோமர் தாயகம் ஆகிய பெயர்களுடன் தொடர்புடையதென்று திருத்தந்தை ஈராசு கருதியுள்ளார்.

குடியரசு முடியரசு மரபுகள் ஒரே மூல மரபில் தோன்றிப் பண்புகள் விரவப் பெற்றே வளர்ந்தாலும், அவற்றிடையே அடிப்படைப் பண்புகளிலும் பண்பு வளர்ச்சிப் போக்குகளிலும் ஆட்சியிலக்குகளிலும் பண்பிலக்குகளிலும் குறிப்பிடத்தக்க உயிர்நிலை வேறுபாடுகள் உண்டு. இவற்றுள் தலைமையானவை ஆள்வோர் ஆளப்படுவோர் வேறுபாடு கால இடம் கடந்த இன இலக்கு ஆகியவையேயாகும். ஏனெனில் குடியாட்சியில் குடிகளுக்காகவே, குடிவளத்துக்காகவே ஆட்சி அமைந்திருந்தது. முடியாட்சியிலோ ஆட்சி அல்லது ஆளுபவர் வளத்துக்காகவே நாட்டாட்சி என்ற நிலைமை உள்ளார வளர்ச்சியடைந்தது யார் ஆள்வது என்பதைக் குடியாட்சியில் மக்களே முடிவு செய்வர். முடியாட்சியில் ஆட்சியளரே அதனை முடிவு செய்ய முற்பட்டனர். இவ்வகையில் 'மக்களால் மக்களுக்காக மக்கள் மூலமே நடத்தப் படுவது குடியாட்சி' என்ற குடியரசின் குறிக்கோளுக்கு முடியாட்சியைவிட, இன்றைய மறைமுக அரசியல் குடியாட்சியை விட, பண்டைய நேர்முகச் சமுதாயக் குடியாட்சியே மிகப் பேரளவில் உகந்ததாயிருந்தது என்று காணலாம். ஏனெனில் பின்னதே இயல்பான குடும்ப விரிவாயமைந்த சமுதாய வாழ்வில்

மலர்ந்து அதனுடன் வளரும் தன்மையுடையதாயிருந்தது. அத்துடன் அது கீழிருந்து மேலாக வளர்வது; முன்னதைப் போலவோ, முடியாட்சியைப் போலவோ, அது மேலிருந்து கீழாக மக்கள் மீது சுமத்தப்படுவதன்று.

குடியரசு மரபில் ஆள்பவர் அல்லது ஆட்சித் தலைவர் (கோ அல்லது வேள்) குடிகளுள் ஒருவராய், முதற்குடிமகனாய், மற்றக் குடிமக்களுடன் குருதி மண வாழ்வுத் தொடர்புறவு கொண்ட வராய் அமைந்திருந்தனர். முடியாட்சியில் இத்தொடர்பு குன்றி யதனாலேயே ஆள்பவர் அயலாராகக் கூட இருக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. அத்துடன் செயல் நிலையில் குடியரசுக்கு நாட்டு மக்களின் மக்கட்படையன்றி (ஆங்கிலம்: Fyrd அல்லது Militia அல்லது National Army) நிலவர ஊதியம் பெற்று உழைக்கும் நிலைப் படையோ (Standing Army), தம் அணுக்க உற்றார் உறவினரான நாட்டு மக்களேயன்றி ஊதிய மூலம் அமர்த்தப் பெற்ற நிலையான அரசியற்பணிக்குழுவோ (Poid or Permanent Civil Serice) மக்கள் மரபு வழக்காறும் (ஆங்கிலம்: Conventions) அவ்வக்கால மக்கள் மனமறிந்த கருத்து மாறுபாட்டு மரபுகளும் (Common Law) அன்றி வகுத்தியற்றப்பட்ட நிலைச் சட்டம் (Written or Condified or Statutory Law) அல்லது சட்ட ஆக்க முறையோ (Legislative Methods) கிடையாது. இவை முடியாட்சி மரபு ஊக்கிய பண்புகள் ஆகும்.

நாகரிக உலகில், இந்தியாவில், தமிழகத்திலே கூடக் கொங்குத் தமிழகமே சிறப்பு முறையில் குடியரசு மரபின் பிறப்பிடம், வளர்ச்சியிடம், அதன் சாவாமூவாக்கன்னி மலர்ச்சி யாகிய உயிர் விதைப் பண்புக்குரிய இடம் என்று கூறத்தகும். ஏனெனில் அதன் வேள்புலப் பண்புகள் புற உலக, புறத்தமிழகத் தலையீடின்றி இயல்பாக வளரும் வாய்ப்புப் பெற்றால் அதன் விளைவு எவ்வாறு இருக்கும் என்பதை உலகில் இரு கோடிகளில் நிலவிவந்த அல்லது நிலவி வந்துள்ள இருபரப்புகள் காட்டும் முதலாவது வரலாற்றாசிரியரால் பண்டைச் சமதருமப் பேரரசு (an Ancient Socialist Empire) என்றே பாராட்டப்பட்டுள்ள தென் அமெரிக்காவின் இங்காப் பேரரசு (கி.பி. 12-15 நூற்றாண்டுகள்) ஆகும். இது ஐரோப்பிய அரசியல் வேட்டைக்காரர்களாலேயே மீளா அழிவுக்களாயிற்று, இரண்டாவதோ கடல் கடந்த இந்து சமய, இந்திய சமுதாயப் பரப்பு என்றே அறிஞரால் வருணிக்கப் படும் பாலித்தீவின் கலைவாழ்வுச் சமுதாயம் ஆகும். தற்கால

மேலை நாகரிகம் என்னும் புயற்சூறாவளியினால் அது வாடி வதங்கத் தொடங்கியுள்ளது. இந்த இரண்டினையும் மங்கி மறுக வைத்த நாகரிகச் சூழல்கள் வாங்கி (சப்பானியர் போல) விழுங்கி வளரும் கொங்குச் சமுதாயம் மேற்கூறியவற்றின் இயல்பான குறிக்கோள் நோக்கி இன்னும் மலர்ச்சியுறும் நிலையுடையது என்னல் தகும்.

தமிழகத்தில் மூவரசுகள் வேளிர் இணைவாலேயே தோன்றி வளர்ந்திருந்தாலும், அம்மூவசு நாடுகளின் எல்லையிலேயே அவ்வரசர்களுக்கு அடங்கியும் அடங்காமலும், நட்பாகவும் பகை யாகவும் வேளிர் பலர் ஆண்டு வந்தனர். ஆயினும் தமிழ் மரபு அம்மூவரசுக்குப் புறம்பாகத் தொண்டை கொங்கு நாடுகளையே குடியரசுகளுக்கேயுரிய பரப்புகளாகவும், அதேசமயம் இருவேறு தனித்தன்மைகளையும் இறுவேறு தனி முழுமைகளையுமுடைய இரு நாடுகளாகவும் கணித்து வந்திருந்தது. வரலாற்றுப் போக்கு இக்கணிப்பை மெய்ப்பிப்பதாகவே அமைந்துள்ளது.

பண்டைப் பெருந் தொண்டை நாடும், பண்டைப் பெருங் கொங்கு நாட்டில் இன்றைய கொங்குப் பரப்பாகிய அகநாடு கடந்த புறப்பகுதிகளும் சங்க காலங்களில் கொங்கு அக நாட்டைப் போலவே முற்றிலும் வேள்புலப் பரப்புகளாக விளங்கி யிருந்தன. ஆயினும் அக்காலத்தை அடுத்து உடனடியாகவே அவை தம் வேள்மரபுகளை முடியரசு பேரரசுகளாக்கிக் கொண் டன. தவிர இவ்விருவகைப் பரப்புகளுமே தமிழக மூவரசு நாடு களையும் இந்தியாவின் மற்றப் பகுதிகளையும் போன்று குடியரசர் களை மட்டுமன்றிக் குடியரசுப் பண்பு, குடியரசு மரபு ஆகியவற் றையே முற்றிலும் இழந்து மறந்துவிட்டன. அத்துடன் அவை வரலாற்றில் என்றும் திரும்பக் குடியரசுப் பண்புக்கு மீளாமல், தம் தனித்தன்மைகளை அறவே கைவிட்டுப் புறஉலகின் முடியரசு பேரரசுப் போட்டிப் பரப்புகளுடன் பரப்பாகித்தம் தனிநிலை, தனிப்பண்புகளைப் அழியவிட்டு விட்டன. அவற்றின் பண்டைய மண்டல எல்லைகளும் கொங்கு நாட்டு எல்லையைப் போல இன்றும் பண்பு பண்பாட்டு எல்லையாய் நிலவாமல், இலக்கிய மரபு அல்லது வரலாற்று மரபுக்கு மட்டுமேயுரிய எல்லைத் தடங் களாய் விட்டன.

இன்றைய கொங்கு நாட்டெல்லையிலும் சங்ககால இறுதிக்கு இரண்டு நூற்றாண்டுகள் முன்னாகவே தொடங்கி

அவ்விறுதிக்குள் வேளிர் ஆட்சிகள் பெரும்பாலும் தம்மிடையே போட்டிகளுக்கு ஆளாகி, வெளியிலிருந்து ஊடுருவிய அரசு பேரரசுகளுக்குப் படிப்படியாக இரையாயின. ஆயினும் சங்க காலத்திலும் சரி, பிற்காலத்திலும் சரி - கொங்கு நாடு தன் பரப்புக் குரிய வேள்புலங்கள் எவற்றையும் முடியரசாக மலர விடவில்லை. அது மட்டுமன்று, சங்க காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி- எந்தப் புற அரசுகளும் பேரரசுகளும் கொங்கு நாட்டில் புற அரசு பேரரசுகளாக ஒரு சில நாட்கள் கூட நீடிக்கவில்லை. மற்றும் அவை அக அரசு பேரரசுகளாக ஆண்டபோதும் ஏனை மண்ட லங்களின் அக அரசு பேரரசுகளைப் போல நாட்டின் பழமையான தனித்தன்மைகளையோ, குடியரசுப் பண்பையோ மாற்றித் தன் வயப்படுத்திவிடத் துணியவில்லை. ஏனெனில் அவையாவுமே எத்தனை நூற்றாண்டுகள் தொடர்ந்த போதிலும் வரலாற்று நோக்கில் குறுகிய இடைக்கால நிகழ்ச்சிகளாக அல்லது தற்காலிக அரசியல் அலைகளாக மட்டுமே நிலவின. திணைநிலை ஆராய்ச்சி யாளர் ஆய்ந்துணர்ந்து கூறும் முறையில் தமிழக, இந்தியப் பரப்பிலேயே வேறு எந்தத் திணைநிலை பரப்பையும் (Regional Units) விடத் தற்காலக் கொங்குநாடு, அறிஞர் மட்டுமே அறிந்த வெறும் வரலாற்று மரபெல்லையாக அமையாமல், மக்கள் வாழ் விலேயே நின்று நிலவவல்ல தனித்தன்மையும் தனிப்பண்பு பண்பாட்டெல்லையும் உடையதாய் இயல்வதன் காரணம் இதுவே.

கொங்கு என்பது ஒரு நாட்டின் ஒரு மரபெல்லையின் பெயராக மட்டும் நிலவவில்லை. அது தமிழ் மரபுப் பரப்பில் பூத்த ஒரு தனித் தமிழ் மரபின் பெயராக, தனிப் பண்பு பண்பாட் டின் பெயராக இன்றும் நிலவி வந்திருப்பது வருவதும் இதனாலே யேயாகும். மற்றும் அது உலகிலிருந்தும் இந்தியாவிலிருந்தும், தமிழகத்திலிருந்தும் வேறுபட்டு நிற்கும் தனிப் பண்பு மட்டு மன்று; அதுவே அப்பரப்புகளின் பழம் பண்பு ஆகும். இது மட்டு மன்று. அது அவற்றின் பழமைபண்பு மட்டுமாய் அமையாமல், அவற்றின் வருங்காலத் தேசீய மலர்ச்சிகளுக்கு இன்றியமை யாத உயிர் மரபுப் பண்பாகவே நிலவுகிறது.

கொங்கு நாட்டில் ஓரளவு நீடித்த ஆட்சியமைத்த சேரர், கங்கர், சோழர், பாண்டியர் ஆகியோர் கூட தாம் ஆண்ட கால முழுவதிலும் கொங்குத் சேரர், கொங்குச் சோழர், கொங்குப் பாண்டியர் என்ற நிலையிலேயே ஆண்டிருந்தனர். புறமண்டலங்

களை யாண்ட சேர சோழ பாண்டிய மரபினருடன் அவர்கள் தொடக்ககால குருதித் தொடர்பு அல்லது குடித்தொடர்பு அன்றி வேறு எத்தகைய தொடர்பும் கொள்ளாமல், தனிக்கொங்கு மரபின ராகவே ஆண்டனர் ஆண்டு மாண்டனர். நாட்டைத் தம் வயப் படுத்துவதற்கு மாறாக அவர்கள் தாமே நாட்டின் வயப்பட்டு, நாட்டு வாழ்விலேயே தாமும் இரண்டறக் கலந்து விட்டனர், நாட்டின் குடியரசுகளை அவர்கள் தமக்கு இரையாக்கிக் கொண் டாலும், குடியரசுப் பண்பாடுகளை அவர்கள் தமக்கு இரையாக்கிக் கொண்டாலும், குடியரசுப் பண்பாடுகளை அவர்கள் தாமே குடியரசுப் பண்புகளுக்கு இரையாகி அப்பண்புகளிலேயே தம்மை இழைய விட்டுச் சென்றனர்.

கொங்கு நாட்டு வேளிருட் பலவும் சங்க காலத்திலேயே முடியரசால் முறியடிக்கப்பட்டுத் தம் ஆட்சியிழந்தவரேயாவர். ஆனால் ஆட்சியாளர்தான் ஆட்சியிழந்தனரேயன்றி, ஆட்சிக்குரிய மக்கள் சமுதாயம் தம் தனித்தன்மையையோ, தம் தொல் பழங் காலக்குடியரசு மரபையோ, வாழ்வையோ, பண்பையோ சமய ஒழுக்க மரபுகளையோ ஒரு சிறிதும் இழந்துவிடவில்லை, மறந்து விடவில்லை; கை நெகிழ விட்டு விடவும் இல்லை. கொங்கு நாட்டு மன்னரும் சரி, கொங்கு நாட்டின் மீது படையெடுத்துத் தாக்கிய பிறநாட்டு மன்னரும் சரி கொங்கு நாட்டின் இம்மக்கட் பண்பை மதித்துப் பேணிப் பாராட்டத் தவறவில்லை. ஏனெனில் பின் கூறப்பட்ட பிற நாட்டினரே வேளாளர் வேட்டுவர் போட்டியை ஊக்கியவராயிருந்த நிலையிலும் கூட, அவர்கள் இருசாரருக்கும் ஒருங்கே கொங்கர், காமிண்டர் ஆகிய பட்டங்கள் தந்து தம் சார்பில் அவர்களை ஆள விட்டனர். தவிர, கொங்கு நாடாண்ட முடிமன்னர் மட்டுமன்றி, அவர்கட்கு முற்பட்ட வேள்புல ஆட்சியாளர்கள் கூட மக்களின் மரபு மூலமாகவும், மக்களின் இயல்பான தலைவர் மூலமாகவுமே பெரும்பாலும் ஆட்சி நடத்தினர். சங்ககாலத்துக்கு முன்பே ஊறிவிட்ட இந்தக் கொங்கு மக்கள் பண்பே, கொங்கு நாட்டின் காலங்கண்ட, ஆனால் காலங்கடந்து வளரும் தனித்தன்மை ஆகும். அதனைத் தொல்பழங் காலத்திலேயே கண்டதன் விளைவாகத் தான், மேலே கூறியபடி தமிழ்மரபு இந்நாட்டைக் கொங்கு நாடு என்று பண்புப் பெயர் சூட்டிப் பாராட்டிற்று என்னல் தகும். கொங்கு என்னும் சொல், தமிழ் எவ்வளவு பழமையான சொல்லோ,

அதனினும் ஒரு சிறிதும் குறையாத பழமையுடைய பண்பார்ந்த சொல் என்பது இங்கே நினைவுகூரத்தக்கது ஆகும்.

உயிராறுகளில் நீர்வளம் வற்றிய பின்னும் அடிநில ஊற்றின் வளம் சுரத்தல் போல, குடியரசுகளின் புற வீழ்ச்சிக்குப் பின்னும் கொங்கு மக்களின் உள்ளத்தின் உள்ளார்ந்த இயலுணர்வான குடியரசுப் பண்பு மேல்நிலைத் தனியாட்சிகளைத் தம் வயப் படுத்திக் கொண்டு அம்மேல் நிலையாட்சிகளின் நிழலிலேயே புதுமுறைத் தனிமலர்ச்சிகள் கண்டுள்ளது. அதன்மூலம் அது மக்கள் தனிவாழ்வுரிமை, கூட்டு வாழ்வுரிமை, தன் முடிவுரிமை ஆகியவற்றைச் சமுதாயத் தன்னாட்சிக்குரிய புதிய கட்டுக்கோப்பு களாக மாற்றியமைத்துக் கொண்டது. இது மட்டுமன்று, சாதி மரபு உருவில் நின்றே அது புறமண்டலச் சாதிமரபுகளைப் போலத் தனித்து நின்றுவிடாமல், தம்மைச் சூழ ஒத்திசைவுப் பண்பு பரப்பி, நாடு மாநாடு பெருநாடு, குடியரசுக்குழு, உலகம் ஆகிய மலர்ச்சிகளைப் பேணி முன்னேறி வரத்தலைப் பட்டுள்ளது.

கொங்கு நாட்டு வேளிரிடையே தலைசிறந்தவனென்று கூறத்தக்கவன் தகடூர் வேளாகிய அதிகமான் ஆவன். அவன் மரபினர் சங்க காலத்துடன் முற்றிலும் தனி ஆட்சி இழந்துவிடாமல் கங்கர் பாண்டியர் சோழர் காலங்கடந்தும் அவ்வக்கால மேலாட்சி நிலைகளுக்கு உட்பட்டுத் தம் தனியாட்சி மரபு நீட்டித்திருந் தனர். இதைவிடக் குறிப்பிடத்தக்க தனிமுறையில் தற்காலக் கொங்கு நாடும் அது கடந்து பண்டை வடகொங்குப் பகுதியும் பரவியாண்ட கட்டியர் என்ற வேள் மரபினர் கங்கர் பாண்டியர் சோழர் காலம் மட்டுமன்றி விசயநகர மரபின் ஆட்சிக்காலம் (கி.பி. 15,16 ம் நூற்றாண்டு) கடந்தும் தம்-தனியாட்சி மரபு காத்து வந்தனர். அத்துடனமையாமல் இன்று வரைகூட அம் மரபினர் தம் அரசியல் ஆட்சிமரபு இழந்தும் தம் சமுதாய ஆட்சி மரபும் சமுதாயக் கட்டமைப்பும் இழவாமல், கட்டி முதலியார் என்ற பெயரில் தனிச் சாதிமரபுக் குழுவினராகவே இயங்கி வருகின் றனர். (கொங்கு மரபின் உரம்பாய்ந்த குடியரசுப் பண்புக்கு இதுவும் ஒரு சான்று ஆகும்.)

இந்தியாவிலும், சிறப்பாகத் தமிழகத்திலும் கொங்குத் தமிழகத்திலும் சாதிக்கட்டு மரபுக்கும் ஊராண்மை நாட்டாண்மை மரபுகளுக்கும் பண்டை வேளிரின் குடியரசு மரபுகளுக்கும் இடையேயுள்ள இணையறாத் தொடர்பை மேலே சுட்டப்பட்ட

கட்டியர் மரபுக் குறிப்பு முனைப்பாக எடுத்துக்காட்டுகிறது. நம் காலம் வரை இது போல் நீடித்து வரும் நெல்லை மாவட்டக் கோட்டை வேளாளர் மரபு, திருச்சி மாவட்டக் கோட்டைக் கள்ளர் மரபு, பாண்டிய நாட்டுக் கோட்டை வணிக மரபு ஆகியவையும் இதே தொடர்புக்குரிய பரவலான சான்றுகள் ஆகும்.

வட இந்தியாவில் இரசபுதன மாநிலத்தில் அம்மாநிலப் பெயரே (இரசபுத்திரர், இராசன்யர்-வேளிர்; இரசபுதனம் வேள் நாடு), அதன் பண்டைவேள் புலத் தொடர்பு சுட்டிக்காட்டு வதாகும். அதனை ஒட்டிய மேலை இந்தியப் பரப்பு முழுவதுமே இன்றும் இராஷ்டிரம் (வேள்நாடு) என்ற பண்டைப் வேள்புல மரபுக்குரிய பெயரடியாகக் குசராத் (கூர்ச்சர ராஷ்டிரம்) சௌராஷ் டிரம் (கொங்குநாட்டு வேட்டுவர் குடித்தொடர்பு சுட்டும் வில்லியர் என்பவர் பிறபட்ட பழங் குடியினத்தவராக வாழும் பகுதி (சு-நல்ல; ராஷ்டிரம்; நகர்-நாடு அரசத் தொகுதி அல்லது வேள்நாடு) மகாராஷ்டிரம் (பெரிய வேள் நாடு) என்ற நாட்டினப் பெயர் களுடையதாக நிலவுவது காணலாம்.

அரசியல் மாறுபாடுகளாலோ, போர்காலக் கொந்தளிப்பு களாலோ உலகில் பொதுவாக ஏற்படும் சமுதாயக் குழப்பம், மக்கள் வாழ்க்கைச் சீரழிவு, பொருளியல் நிலைகுலைவு ஆகியவை பொதுவாக இந்தியாவில் அயலாட்சிக் காலம் வரை ஏற்பட்ட தில்லை என்று அறிகிறோம். பண்டைப் பெருங்கொங்குத் தமிழகத் தொடர்புடைய மேலை இந்தியப் பரப்புக்கு இது சிறப்பு வகையில் பொருந்தி வந்துள்ள நிலை ஆகும். இராமன் ஆண் டாலும் இராவணன் ஆண்டாலும் அத்தகைய மேல்நிலை ஆட்சி மாறுபாடுகள் பற்றிக் கவலைப்படாமல் இந்திய மக்கள் சமுதாயம் தன்னாட்சி அடிப்படையிலும் குடியரசு மரபுமுறையின் அடிப் படையிலும் அமைந்த தம்மரபு நெறியில் வீறமைதிய்டன் வாழ்வு நடத்திக் கொண்டேயிருந்தது. இதனைப் பல வரலாற்றாசிரி யர்கள் சுட்டிக்காட்டியேயுள்ளனர். ஆனால் இது சாதிமரபின் பின்னணியில் உயிர் மரபுடன் நிலவும் குடியரசுப் பண்புக்குரிய உயிராற்றல் என்பது காணாமல், அதைச்சாதி மரபு அல்லது சாதி வருண மரபுக்குரிய உயிரற்ற திறம் என்று அவர்கள் கருதியுள் ளனர். சாதி வருண முறையின் தடம் எதுவும் இல்லாமலே இதே பண்புத் திறம்பழஞ் சீனமக்கள் சமுதாயத்திலும் நிலவி வந்துள் ளது என்பதையும், இந்தியாவிலும் கொங்கு நாடு, தமிழகம்,

பழங்கொங்குத் தமிழகம் ஆகிய மையங்களிலிருந்து கால இடத் தொலைவில் விலகுந்தோறும் இப்பண்பு குறைந்து வந்துள்ளது என்பதையும் அவ்வரலாற்றாசிரியர் நுனித்துக் காணவில்லை.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் (1939-1945) பண்டைச் சமுதாயக் குடியரசுகளின் மக்கட் படையினை நினைவூட்ட வல்ல ஊர்க்காவல் படையும் பிறபுதிய மக்களாட்சி மரபுகளும், சமதரும மரபுகளும் (பங்கீடு முதலியன) வகுத்தே இந்தியா விலும் பிறநாடுகளிலும் மேலாட்சியாளர் மக்கள் வாழ்வமைதி காக்க முற்பட்டிருந்தனர் என்பதும் இங்கே கவனிக்கத்தக்கது ஆகும்.

உண்மையில் தென்னக கொங்குப் பரப்பு மையத்திலிருந்து தென்னகமெங்கும் இந்தியாவெங்கும் தென்கிழக்காசியாவெங்கும் வைதிக இயக்கம் என்ற பெயரால் ஒரு புதிய தேசிய இயக்கத்தை திட்டமிட்டு உருவாக்கியவர் கி.பி. 14ம் நூற்றாண் டில் பண்டைக் கொங்குத் தமிழகப் பரப்பில் விசயநகரப் பேரரசை நிறுவிய வித்யாரணிய அடிகளேயாவர், இந்தியாவின் நான்கு சங்கர மடங்களில் ஒன்றாக அப்பரப்பில் நிலவிய ஒரு மடத்தின் தலைவராயிருந்த அவர் இதற்குரிய படிப்பினைகளை யும் நெறிமுறைகளையும் கொங்குநாட்டு மக்கட் குடியாட்சிப் பண்பிலிருந்தே பெற்றிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அப்பெரியார் தாம் ஒரு சமயமடம், வகுப்பு மடத்தின் தலைவராயிருந்தும்கூட, அகல் தேசீய நோக்குடன் எல்லா வகுப்பு மரபுத் தலைவர்களையும் மட்டுமன்றி, புத்தர், சமணர், சைவர், வீரசைவர், வைணவர், கிறித்தவர், இசுலாமியர் உட்பட எல்லாச் சமயத் தலைவ்ர்களையும் தோழமையுடன் அழைத்து ஒருங்கு கூட்டி, அவர்கள் ஒத்துழைப்புடனேயே தம் தேசீய சமுதாயக் திட்டத்தைத் தம் அரசியல் செல்வாக்காலும் அறிவுத் திறத்தாலும் பண்பாட்டுப் பெருமிதத்தாலும் கட்டமைத்துப் பரப்பினர்.

வித்தியாரணிய அடிகளாரின் சாதி சமய ஒத்திசைவுத் திட்டம் கொங்கு நாட்டு வாழ்வில் மட்டுமே வழிவழி மரபாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒத்திசைவுப் பண்பின் கொங்கு நாடு கடந்த அகல் தேசீயப் பரப்பீடேயாகும். ஏனெனில் அத்திட்டத் தின் மையக் கூறுகள் இரண்டுமே தமிழகத்துடனும் தொடர்புடை யவை ஆகும். கோயில்களிலும் திருமணங்களிலும் ஒரே சமஸ்கிருத

மொழி மந்திரங்களை வழங்குவது, அவர் இயக்கத்தின் பெயரால் வைதிகத் திருமணங்கள் என்றே இன்றும் வழங்கப்படும் திருமணங்களில் தாலிகட்டினை மைய வினைமுறையாக்குவது என்பவையே அம் மையக் கூறுகள் ஆகும்.

சங்க காலத்தையடுத்து எழுந்த சைவ வைணவ பக்தி இயக்கத்தின் பயனாக இந்தியாவெங்கும் தென்கிழக்காசியா வெங்கும் இசை நாடக மரபுகளோடியையத் தமிழகப் பக்திப் பாடல்களும் தமிழ் மந்திரங்களும் பரவின. ஏனெனில் தமிழே அன்று அப்பரப்பெங்கும் போட்டியற்ற தெய்வமொழி, இலக்கிய மொழி, பண்பாட்டு மொழி, ஆட்சி மொழியாய் இலங்கிற்று. ஆனால் அடிகளார் காலத்துக்குள் பாலி பாகத சமஸ்கிருத மொழி கள் மட்டுமன்றி, தமிழுடனொத்த பல இந்திய, உலகத் தாய் மொழிகளும் இலக்கிய நிலைக்கு உயர்ந்து வந்தன. தமிழ் இலக்கிய மரபுகள், தமிழ் மணவாழ்த்து மரபுகள், பக்தி காலத் தமிழ்ப் பாடல்கள், தமிழ் மந்திரங்களினிடமாக, தாய்மொழிகள் இடையே பொது வழக்காகச் சமஸ்கிருத பாலி பாகத மந்திரங்கள் பரப்பப்பட்ட நிலைக்குரிய விளக்கம் இதுவே. அம்மொழிகளில், சிறப்பாகச் சமஸ்கிருத மொழியில், இக்காலத்துக்குள்ளாக தமிழ்ப் பக்திப் பாடல்கள், மந்திரங்கள் முதலியன மொழிபெயர்க்கப் பட்டு விட்டன, மொழிபெயர்க்கப்படத் தொடங்கின. சமஸ்கிருத மந்திர மரபு என்பது இவ்வாறாகப் பழைய தமிழ் மந்திர மரபு களிலிருந்து இயல்பாய் மலர்ந்த ஒரு பிற்கால மரபுத் திரிபே யாகும்.

இந்து சமய மறுமலர்ச்சியின்போது இந்தியாவெங்கும் பரவிய கோயில் மரபுக்குரிய மொழியாகிய தமிழ் இவ்வாறு சமஸ்கிருத மந்திர மரபாகத் தமிழக மையத்திலிருந்தே திரிபுற்று வழங்கத் தொடங்கிற்று. உலகில் முதல் முதலாகச் சமஸ்கிருதம் தென்னக எழுத்துருவில் தென்னத் தொன்மரபுகளுடனேயே, தென் கிழக்காசியாவிலேயே காணப்படுவது இதனாலேயாகும்.

தாலிகட்டு இன்றைய வைதிகத் திருமணத்தின் ஒரு பகுதியாயினும் அது இன்றும் பண்டைத் தமிழகமாகிய தென் னகத்திலேயே கொங்கு மையத்திலிருந்து நெடுந்தொலைவு பரவவில்லை. சங்க காலங்களில் தாலி தமிழகமெங்கும் வழங்கி னாலும் சிறுவர் சிறுமியர் காப்பணியாக அரையிலும் கையிலும் கழுத்திலும் அணியப் பெற்றே வழங்கப்பட்டு வந்தது. இம்மங்கலக்

காப்பணி பெண்டிருடனும் மணமகளுடனும் மணவினையுடனும் தொடர்பு கொண்டது. முல்லை நில நாகரிக ஊழிக்குரிய பெண்டிர் அக ஆட்சிச்சின்னம் அல்லது பட்டம் என்ற முறையிலேயேயாகும். இது கொங்கு நாட்டில் பிறந்த மரபே என்று கருதத்தகும். ஏனெனில் இந்தியாவெங்கும் முல்லை நிலக்கற்பு நாகரிகம் வேளிர் மலர்ச்சியின்போது சமுதாய முறையில் ஆயர்மரபாகவும் சமய மரபில் வைணவ மரபாகவும் முற்றிலும் ஒதுங்கிவிட்டது. அவ்வாறு ஒதுங்காது முழுமரபாய் இயன்ற கொங்கு மரபிலேயே வேள்மரபு அல்லது வேளாளமரபு மக்களின் பொது மரபாக, மணவினை மரபாகப் பரவியிருக்க வேண்டும் என்பதில் ஐய மில்லை. தாலியுடன் இணைந்த நெறிப்பட்ட மரபு இன்னும் குசராத்தி நாடளாவிப் பரவியுள்ள நிலை இதைச் சுட்டிக்காட்டு கிறது. தவிர, தமிழகத்திலேயே வேளாளர் மரபினிடையேகூட கார்காத்த வேளாளர் தாலியைத் திருமணத்துடன் இணைக் காமல், கன்னிப்பருவக் காப்பு விழா(விளக்கிடு கலியாணம்) என்பதனுடன் தொடர்புபடுத்தி வந்துள்ளனர் என்பது இங்கே குறிக்கத்தக்கது ஆகும். கேரள நாட்டு நிலையும் இதில் வேறு பட்டதன்று. மேலும் கொங்கு நாட்டில் திருமணத்தை வேளாளர் மரபுக் குருமாரே நடத்த, அம்மரபு மறந்து பிறநாட்டுப் பிற மரபினர் பிராமணர்களை வைத்து நடத்துவதும் கொங்கு நாட்டின் தாலிகட்டுப் பழமையை உணர்த்துகிறது.

கொங்கு பரப்பின் குடியரசு மரபு வழிவந்த குடிமக்களின் உயிர் மலர்ச்சிப் பண்பு காரணமாக அதன் ஒத்திசைவுப் பண்பின் அடிப்படையாக உருவாக்கப் பெற்ற வைதிக இயக்கம், வைதிக நெறி என்ற பெயரால் தென்னகமெங்கும் இந்தியாவெங்கும் அப்பாலும் இந்திய சமுதாய அடிப்படையாக மட்டுமன்றிப் பழமையான இந்து சமயத்தின் புதிய அடிப்படையாகவும் புதிது பரவியுள்ளது;பரவி வருகிறது. காலவலிமையும் ஆட்சி வலிமை யும் உடைய புதிய உலக சமயங்களின் முன்னே உலகின் மாண்டு மறைந்த பிற தொல் பழங்காலச் சமயங்களைப் போலச் சரிவுற்று விடாமல் இந்து சமயமும் இந்திய சமுதாயமும் புதிய சமயம், புதிய நாகரிகங்கள், புதிய சீர்திருத்த இயக்கங்கள் ஆகிய எல்லா வற்றுக்கும் ஈடுகொடுத்து நிற்கும் உறுதிப்பாட்டின் மறைதிறவும் இதுவே! ஆயினும் இவ்வுறுதிப்பாடு பயிர்நல உறுதிப்பாடாக அமையாமல், களையாக வளரும் முட்காட்டின் உறுதிப்பாடாகவே நிலவி வந்துள்ளது, வருகிறது. ஏனெனில் அடிகளார் நெறி

கொங்கு வாழ்வின் உயிர் மரபும் உயிர் மலர்ச்சி மரபம் அற்ற, உயிர்ப்பண்பின் உள்ளீடற்ற மரச் சட்டமாகவே உறைந்துவிட்டது. இதற்குரிய காரணங்கள் இரண்டு. முதலாவதாக, அவர் வகுத்த திட்டம் இவர் வகுத்த நாட்களில் சாதி சமயம் சாராத முழுத் தேசீயத் திட்டமாகவே அமைந்திருந்தாலும், அதை அமைத்த அப்பெரியாரின் ஒரு சாதிமட, சமயமடத் தலைவராகவே அமைந்த காரணத்தினால், இன்று அது சாத சமய சமுதாய அரசியல் குழு நலங்களின் ஆதிக்க அமைப்பாக மாறி இந்திய சமுதாயத்தில், இந்திய சமயத்தில் மாறாத, உயிர் மலர்ச்சியற்ற, மாற்றவோ திருத் தவோ முடியாத அடிப்படையாக ஆக்கப் பெற்று வருகிறது. அத்துடன் கொங்கு வாழ்வில் இயல்பாக அமைந்த குடியரசு மரபின் உயிர்த்துடிப்பை மட்டுமன்றி, அதனை வளர்க்கும் திற முடைய குடியரசு மரபில் வந்த தலைமையையும் அது முற்றிலும் இழந்துவிட்டது. சமுதாயத் தலைமைக்கும் மாறாக, அது சமுதா யத்தைச் சுரண்டிவாழ முற்படும் ஒரு பிற்போக்கான குழு நலத் திற்குரிய குருட்டுத் தலைமையாய் விட்டது. தேசியவாதிகள், சமய சமுதாயச் சீர்த்திருத்தவாதிகள் ஆகியோரின் தேசீய ஒருமைப் பாட்டுக்கும், அவ்வகைக்குரிய நன்முயற்சிகளுக்கும் அது நிலை யான தடங்கலாய், தேசீய வாழ்வுக்கே ஒரு மாபெருந் தடையாய், அமைந்துள்ளதன் காரணம் இதுவே.

அடிகளாரின் திட்டம் இழந்துவிட்ட இந்த இரு பண்புகளை யும், சங்ககாலக் குடியரசு மரபில்வந்து அதன் உயிர் மலர்ச்சியும் உயிர் மரபுத் தலைமையும் முற்றிலும் இழவாது நிலவும் கொங்கு வாழ்வு இன்றும் பேரளவில் பெற்றுத் திகழ்கின்றது. கொங்குத் தேசீயம் இந்தியத் தேசீயத்தில் தன் பொறுப்புணர்ந்து செயலாற்ற முற்படுமேயானால், அது கொங்கு தேசீய வாழ்வுக்கும் நாகரிக உலகுக்கும் கூட இத்துறையில் படிப்பினையாகவும் வரலாற்றுப் பாடமாகவும் முன்மாதிரியாகவும் திகழத்தக்கது ஆதல் உறுதி.

குடியரசு மரபுக்கும் கொங்கு மக்கள் சமுதாய கட்டமைப்புக் கும் இடையேயுள்ள மரபுமலர்ச்சித் தொடர்பு, அதன் தோற்ற வளர்ச்சி, வரலாற்று விளக்கம், தேசீய வாழ்வில், நாகரிக உலக வாழ்வுகளில் அதற்குரிய பயன்வள அருமைப்பாடு ஆகியவை வரும் பிரிவுகளில் விளக்கப்படவிருக்கின்றன.

## ii. பண்டைக் குடியரசு மரபின் ஒளி நிழற்படிவங்கள்: கொங்கு நாட்டுச் சமுதாயத் தன்னாட்சி மரபு

சாதி வருண முறையில் சாதி மரபும் வருண மரபும் ஒன்றுக் கொன்று தொடர்பற்ற இரு வேறு மரபுகள் என்பது காணாமல், தொடக்ககால வரலாற்றாய்வாளர் இரண்டும் ஒன்றே என்று கருதினர். அத்துடன் அவ் இணைப்பட்ட முறைமை ஆரிய திராவிட இனக்கலப்பின் விளைவு என்றும் ஆரியரால் முதலில் தமக்குள்ளும் (மூவருணம்) பின்மற்ற மக்கள் மீதும் (சூத்திரர், தாழ்த்தப்பட்டவர், ஆதிவாசிகள்) சுமத்தப்பட்ட ஒன்று என்றும் விளக்க முற்பட்டனர்.

இந்திய சமுதாயமும் இந்து சமயமும் சாதி வருண முறையும் படைப்புடன் படைப்பாகக் கடவுளால் உருவாக்கப்பட்டவை என்றும், சாதி வருண முறையே இந்து சமய வாழ்வின் அடிப்படை என்றும் அணிமைக்காலங்களிலிருந்து இந்து சமய சமுதாய ஆட்சியாளர்கள் என்போர் வலியுறுத்தி வந்துள்ளனர், வருகின்றனர். வரலாற்றாசிரியர், ஆராய்ச்சியாளர், புலவர், அரசியல் தலைவர்கள் சாதிமுறைச் சமுதாயத்தை எதிர்க்கும் சமுதாய சமயச் சீர்த்திருத்தவாதிகள், புரட்சியாளர்கள் ஆகியோர் கூட (காந்தியடிகள் ஒருவர் நீங்கலாக) இந்த நம்பிக்கையில் உறுதியாகப் பங்கு கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஏற்கெனவே சமய சமுதாய ஆட்சி வகுப்பினரின் குழு நலங்கள் வற்புறுத்தி வந்துள்ள மரபுக்குப் புதிதாக எழுந்த ஆராய்ச்சியாளரின் விளக்கம் ஓரளவு உகந்ததாகவே அமைந்துள்ளது. ஏனெனில் இதன் அடிப்படையில் இந்தியாவெங்கும் பிராமணரும் மற்ற உயர் வகுப்பினரும் நாட்டு மக்களிடையே தாம் தனிப்பட்ட ஆரிய மரபினர்அல்லது (ஆண்வழியிலேனும்) ஆரியக் குருதிக் கலப்பு மிக்கவர் என்று பெருமை கொண்டு தம் உயர்வு நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்துள்ளது. அதே சமயம் இதே அடிப்படையில் வட இந்தியத் தாய்மொழிகள் பேசுவோர், சிறப்பாக அம்மொழிகள் பேசும் உயர்குடியினர், தம் மொழிகளே ஆரிய இன மொழிகள் என்றும், தாமே ஆரிய மரபினர் அல்லது ஆரியக் கலப்பு மிக்க மரபினர் என்றும் புதிய உரிமை கொண்டாட முடிகின்றது. (தம் தாய் மொழிகள் இழந்துவிட்ட பழமைச் சிறப்புகளைக் கூடச் சமஸ்கிருதத்தில் கண்டு ஆறுதல் பெறும் உணர்வு அவர்களை வலிந்து சமஸ்கிருதப் பற்றாளர்களாக்கி வந்துள்ளது.)

சாதி வருண முறைமையில் சாதி மரபு வேறு, வருணமரபு வேறு என்று கொண்டவர் ஆசிரியர் மறைமலையடிகளார். சாதி மரபை அமைத்தவர்கள் வேளாளரே என்றும், வருண மரபை அதனுடன் இணைத்து, அந்த இணை மரபுக்குக் கடவுட் படைப் பாதாரம் தந்து அதனை வலியுறுத்தியவரே ஆரியர் என்றும் அவர் கருதினார். இங்கே அடிகளார் வேளாளர் என்றது தமிழகத்தின் ஒரு வேளாள மரபையோ அல்லது பல வேளாள மரபுகளின் தொகுதியையோ கூட அன்று. தென்னகமெங்கும், இந்தியா வெங்கும் அதே, படிநிலையினையுடைய சமயச் சார்பற்ற இந்தியா வின் சமுதாய ஆட்சி வகுப்பினையே அவர் வேளாளர் என்ற சொல்லால் குறிப்பிட்டார் என்பது தெளிவு. ஆரியர் என்று அவர் கூறுவதும் பிராமணர் உள்ளிட்ட ஆட்சி வகுப்பினரையே என்று காணலாம்.

தற்காலப் பொருளியல் சமுதாய முறை ஆய்வாளர், சிறப்பாக அறிஞர் குணா, சாதிசயத்தின் தோற்றம் என்ற தம் ஆய்வேட்டில், பெயரளவில் அடிகளார் கருத்தை ஒதுக்கினாலும், அதற்குத் தம் புதிய பொருளியல் சமுதாயவியல் ஆய்வு மரபின் படி, புது விளக்கமே தந்துள்ளார். நாகரிக உலகெங்கும் இயல்பாக மறைந்துவிட்ட ஆதிமனிதனின் இனமுறை வேறுபாடுகளை (Tribal Organisations) இந்தியாவில் மட்டுமே நிலவுடைமை ஆட்சியாளர் (Class of Feudal Landlordism) அழியாது பாதுகாத்து, அதன்மீது தொழிலடிப்படையில் சாதி மரபு முறை எழுப்பினர் என்றும், சமய குருமார் அதற்கு வருணப்பூச்சும், கடவுட் படைப் பாதாரமும் வழங்கியுதவினர் என்றும் அவர் விளக்க முற்பட் டுள்ளார்.

அடிகளாரும் சரி, புதிய பொருளியல் சமுதாயவியல் ஆய்வாளரும் சரி-இரு சாரருமே இன வேறுபாட்டுக் கோட்பாட் டின் சாயலிலிருந்து முழுவதும் விலகிவிடவில்லை என்பது காணலாம். ஏனெனில் ஆரியர், பிராமணர், சமயகுருமார் என்ற சொற்கள் கிட்டத்தட்ட ஒரேபண்பு குறித்த சொற்களாகவே வழங்கப்பட்டுள்ளன; அது போலவே திராவிடர், வேளாளர், நிலவுடைமையாட்சியாளர் என்ற சொற்களும் பெரிதும் பழைய மரபுச் சொற்களுக்கு ஈடான புதிய மாற்றுச் சொற்களேயாகும் என்று காணலாம். தவிர, ஆசிரியர் குணா கூறும் இனமரபு (tribe) என்பது வரலாற்றுக் காலத்துக்கு நெடுநாள் முன்பே நாகரிக

உலகம் கடந்துவிட்ட ஒரு படிநிலை ஆகும். நாகரிக உலகுக்கு வெளியேயிருந்து வந்த பண்படா இனங்களுக்கு மட்டுமே அது அணுக்க கால உரிமையுடையது. அதனிடமாக நாகரிக உலகம் கண்டது இனமரபு அன்று; குடியரசு அடிப்படையிலமைந்த குலமரபேயாகும். இது கீழே விளக்கப்படவிருக்கிறது.

உழைப்பின் பயன் பெறாமலே கூலிக்கு உழைப்பவராகிய அடிநிலை வகுப்பினர், உழைப்பின் பயனை ஆள்பவராகிய உயர் வகுப்பினர், இரு சாராரிடையேயும் பாலம் போல, அதேசமயம் இருசாராரையும் நிலையாகப் பிரித்து வைப்பவராய், அத்துடன், தம் போட்டிகளால் அப்பிரிவினையை நிலவரப்படுத்தி வளர்ப்பவராக விளங்கும் நடுத்தர வகுப்பினர் ஆகிய மூவகுப்பு வேறுபாடு நாகரிக உலக முழுமைக்கும் பொதுவாக வளர்ந்து வந்துள்ள, வளர்ந்து வரும் வகுப்பு வேறுபாடு ஆகும். ஆனால் இந்தியாவிலே உலக முழுமைக்குமுள்ள இந்த வேறுபாடு மட்டுமன்றி, இதற்கும் அடிப்படையாயமையும் சாதி வருண முறை வேறுபாடு அதற்கும் முற்படத் தோன்றி வளர்ந்துள்ளது, வளர்ந்து வருகிறது. ஆய்வாளர் எவரும் இந்த வேறுபாட்டிலோ, வேறுபாடு கடந்து அவற்றிடையே மிளிரும் அடிப்படை ஒருமைப்பாடுகளிலோ, இரண்டும் கலந்தமைந்த சிக்கல்களிலோ, குளறுபடிகளிலோ கருத்துச் செலுத்தவில்லை.

சாதி வருண மரபு முறை மூவகுப்பு மரபு முறையினின்றும் அடிப்படைப்பண்புகளில் வேறுபட்டதன்று. ஏனெனில் இந்தியா வெங்கும் சாதிகள் பல, எண்ணற்ற பல்வகையினவாக மாறுபட்டாலும், வருண முறை வடக்கே மூன்று (வேதமும் மூன்றே), தெற்கே கருத்தளவில் நான்கு (வேதமும் நான்கு) நடைமுறையில் ஒன்று என இடத்துக்கு இடம், காலத்துக்கு காலம் வேறுபட்டாலும், எங்கும் அவ்இணை மரபு உண்மையில் மூவின வகுப்பாகவே இயல்கின்றது. அவையே, சமய சமுதாய ஆட்சி மரபும் தன்னுரிமையும் முழுதளவில் கொண்டு வாழும் பிராமணர் வகுப்பு; அவர்களுடனாக வட இந்தியாவில் அவர்களைச் சார்ந்து அவர்களுடன் இணைந்த அடுத்த இருவருணம். அவ்வுரிமைகளைப் பேரளவில் அல்லது ஓரளவில் கொண்ட, ஆனால் உரிமை வரையறுக்கப்பட்ட பிராமணரல்லாத சமுதாய ஆட்சி மரபு வகுப்பு; உரிமைகள் பெரிதும் சிறிதும் மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு என்பவையேயாகும். இதனாலேயே உலகெங்கு

முள்ள மூலவகுப்புப் போராட்டத்துடன் போராட்டமாக, இந்தியா விலும் இந்திய நாகரிக பரப்புகளிலும் பழைய மூலவகுப்புகளும் புதிய மூலவகுப்புகளும் தம்மிடையே நடத்தும் போராட்டமும் இணைந்து கலந்து, இந்திய மக்கள் வாழ்வு போராட்டத்தினுள் போராட்டமாக, இரட்டைப் போராட்டமாக நிலவுகின்றது.

நிகழ்காலச் சிக்கல்களை இறந்தகால மரபுகளால் விளக்கு வதும், அவ்விளக்க ஒளிகளின் மூலம் சிக்கல் தவிர்த்து அல்லது சிக்கல் திருத்தி, வருங்கால வாழ்வைக் கட்டமைக்க உதவுவதும் தான் வரலாற்றின் பண்பு-வரலாற்றின் மெய்ம்மரபுக் காட்சியொளி ஒன்றுதான் இவ்வகையில் அதற்குரிய ஆற்றல் சான்ற திறம் வழங்குவதாகும். வழக்கறிஞரின் திறமை வாய்ந்த வாத ஆதாரக் கோட்பாடுகள் இவ்வகையில் சமுதாயத்துக்கு நீடித்து நிலையாக உதவமாட்டா.

இன்றைய சாதி மரபுகளுக்கும் வருணமரபுக்கும் இடையே அவ்வக் காலச் சட்டங்களும் ஆட்சியாளர் அல்லது ஆட்சி வகுப் பினர் தரும் விளக்கங்களும் வழங்கும் தொடர்பன்றி வேறு மரபுவரன் முறையான தொடர்பு கிடையாது. சாதி மரபு, வருண மரபு ஆகியவையோ அவை சார்ந்த கருத்துக்களோ இந்திய சமுதாய வாழ்வில் அல்லது சமுதாய நடைமுறைக் கருத்துக் களில் என்றேனும் நிலவியதாக வேத உபநிடதங்களிலோ, சங்க கால இலக்கியத்திலோ, பழங்கால இடைக்கால இலக்கியங் களிலோ கூடக் காண முடியாது; இவற்றின் பெயர்கள் கூட அறியாதவை அவை. அத்துடன், இந்தியாவின் வரலாற்று மரபு களுடனோ, இலக்கிய வாழ்வுகளுடனோ, சமய வாழ்வுடனோ, இன்றளவும் இந்தியாவின் அவற்றிடையே காணப்படும். வேறுபாடுகளுடனோ மேற்குறிப்பிட்ட இனக்கலப்புக் கோட்பாடு, அதன் புதிய பதிப்புகள் கூட ஒரு சிறிதும் பொருந்தவில்லை; முற்றிலும் முரண்பாடாகவே உள்ளன.

ஆரிய திராவிட இனக் கலப்புக் கோட்பாட்டுக்கு ஏற்ப இந்தியாவில் சாதி வருண முறையின் செறிவிறுக்கம் பொதுவாக மேற்கிருந்து கிழக்காக, வடக்கிருந்து தெற்காக, வடமேற்கிலிருந்து தென்கிழக்காகக் குறைந்து வரவில்லை; அத்திசைகளில் கூடியே வந்துள்ளது, வருகிறது! தவிர, வடக்கே மூன்று வேதங்களும் மூன்று வருணங்களும் மட்டுமே மதிக்கப்பட, தெற்கில் நான்கு வேதம், நான்கு வருணம் (பகவத்கீதை: சாதுர்வர்ணயம் மயாச்ரஷ்டம் -

நான்கு வருண அமைப்பு என்னால் படைக்கப்பட்டது), என்ற வாய்ப்பேச்சினிடையே நடைமுறையில் நான்குமன்று; மூன்று மன்று; ஒரே வருணம் தான் இன்றுவரை உள்ளது. இரண்டாவ தாக, முதல் வருணத்தவராகிய பிராமணர் மேற்கை விடக் கிழக் கிலேயே, வடக்கைவிடக் தெற்கிலேயே படிப்படியாக வாழ்க்கைச் சிறப்பு, கல்வியறிவுச் சிறப்பு (குறிப்பாக, அவ்வக்கால ஆட்சி மொழிக் கல்வி சிறப்பு) செல்வச் சிறப்பு, அரசியல் பதவி மேம்பாடு ஆகியவற்றை உடையவர்களாகவும், அவ்வக்கால அரசியல் மாறுபாடு, ஆட்சிமொழி மாறுபாடு, ஆட்சிக்குரிய சமய, பண்பாட்டு மாறுபாடு ஆகியவற்றுக்கிசைய எளிதாகத் தம்மை மாற்றியமைத்துக் கொண்டு விடும் மரபுடையவர்களாகவும் உள்ளனர். மூன்றாவதாக, இந்துசமய வாழ்வில் வேதமுறைத் தெய்வவழிபாடுகளும், வேதவேள்வி முறை அதாவது உயிர்ப்பலி வேள்வி முறைகளும் (உயர் குடியினரிடையே) அறவே மறக்கப் பட்டு, வேத மரபு அறியாத கோயில் வழிபாடும் சிவ திருமால் வழிபாட்டு நெறிகளுமே இந்து சமய மரபுகளாக என்றும் போல் இன்றும் நின்று நிலைத்து வளர்ந்து வருகின்றன. நான்காவதாக, தம்மை ஆரியர் என்று கூறிக்கொண்டும் நம்பிக் கொண்டும் வரும் பிராமணரால் கூட, பசுக்கொலை உட்பட்ட வேதமரபின் கொலை வேள்வி முறைக்கு மாறான பசுவழிபாடும் ஊன் மறுத்த உணவும் பொதுவாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன, வருகின்றன. இறுதி யாக ஊன் மறுத்த இவ்வுணவுப் பண்பில் முனைத்த பிராமணர் கள், பெரிதும் தென் இந்தியப் பிராமணர்களாய், பஞ்சதிராவிடர் என்றே அழைக்கப் பெறுகின்றனர். ஊன் மறுத்த உணவும் பெரிதும் சைவ உணவு என்றோ, சிறுபான்மையாக வீர வைணவ உணவு அல்லது சமண உணவு என்றோதான் அழைக்கப்பெறு கிறதேயன்றி, ஆரிய உணவு என்றோ, பிராமண உணவு என்றோ அழைக்கப் பெறவில்லை.

இச் செய்திகள் இந்திய நாகரிகத்திலோ, சமய வாழ்விலோ, சமுதாயப் பண்பாட்டிலோகூட ஆரிய ஆதிக்கத்தைக் காட்ட வில்லை; மிகத் தெளிவாகத் திராவிட அல்லது தமிழின ஆதிக் கத்தையே காட்டுகின்றன. (பிராமணர்கள் வேளாளரையும் வள்ளுவரையும் போலப் பண்டைத் திராவிட சமயகுருமார் மரபில் வந்தவர்களே! இது கீழே விளக்கப்படவிருக்கிறது). புத்த சமண சமயப் பரப்பும், சைவ, வீர சைவ, வைணவ எழுச்சி மரபுகளும் மிகத் தெளிவாகத் தென்னகத்திசைத் தமிழினத் திராவிடப் பண்பாட்சியின் வலிமையையே காட்டுகின்றன.

வேத வேள்வியின் பலியீட்டு முறைக்கு ஒத்த பலியீட்டு முறைகளை இந்தியாவிலும் உலகெங்கும் சிறு தெய்வவழிபாடு களில் காணலாம். ஆகவே வேதநெறியும் பலி வழிபாடும் இரண்டுமே ஆரிய நெறி, திராவிட நெறி என்ற வேறுபாடு கடந்து மனித இன நாகரிகம் தோற்றுவதற்கு முற்பட்ட பழமையான மரபுகள் என்றே பொதுவாகக் கொள்ளல் தகும். ஆயின் நாகரிக உலகில், சிறப்பாக இந்திய சமுதாயத்தில் நாகரிகத்துக்கு முற்பட்ட பழமையில் கூட, நாம் கோமரபுக்குரிய அன்னை வழிபாடு, சிவ திருமால் வழிபாடு ஆகியவற்றின் தடங்களை அல்லது வேர் மூல மரபுகளைத்தான் காண்கிறோம். எனவே வேதநெறி என்பது இந்தியாவினுள் அல்லது அதற்கும் அப்பாற்பட்ட திராவிட நாகரிகத்தின் ஆசிய எல்லைக்குள் வந்த ஆரியர் மேற்கொண்ட பழமை மட்டுமே என்று கருதல் தகும். மேலை உலகில் (ஐரோப் பாவில்) கூட, ஆரிய அல்லது இந்தோ ஐரோப்பிய இன நாகரிகம் என்று முந்திய வரலாற்றாசிரியர் கூறுபவை யாவும் அவ்வினத் தவர் படிப்படியாகத் தென்திசை நாகரிக உலகுடன் தொடர்பு பட்ட நிலையில், தொடர்புபட்ட அளவில் வளர்த்துக் கொண்ட நாகரிகங்களன்றி வேறல்ல என்பதை உலகளாவிய வரலாற்றுக் கண்ணோட்டம் தெளிவாகக் காட்டும் கிரேக்கரும் உரோமரும் (செமிட்டிய இனத்தவரும்கூட) தமக்கு முற்பட்ட தொல்பழங்கால நாகரிகங்களின் நகர், நாடு, அரசுமரபும் அன்னை வழிபாடும் கோயில் வழிபாடு மரபும் பின்பற்றியவர்களேயாவர் என்பதும் இங்கே காணத்தகும்.

இந்தியாவுக்கே உரிய சாதி வருண முறையும் சரி, நாகரிக உலகுக்குப் பொதுவான மூவகுப்பு முறையும் சரி- இரண்டுமே முற்றிலும் இன அடிப்படையிலோ, பொருளியல் அடிப்படை யிலோ மட்டும் விளக்கம் பெற முடியாதவை. ஏனெனில் இவை யாவுமே நாகரிக உலக முழுமைக்கும் பொதுவான பண்புகள், பொதுவான சூழல்கள். அவை நாகரிக உலகுக்குப் பொதுவான மூவகுப்பு முறைமையின் வேறுபாடுகளைக்கூட விளக்க முடியாது. இப்பொது மாறுபாடுகளையும், கீழ்த்திசையிலும் இந்தியாவிலும் இடத்துக்கு இடம், காலத்துக்கு காலம் ஏற்படும் வேறுபாடுகளையும் நாம் அந்தக் கால இடங்களின் வரலாற்றுச் சூழல், அரசியல் சூழல்களில்தான் தேட வேண்டியவர்களாகிறோம்.

தவிர, பொதுவுடைமை இயக்க, சமதரும இயக்க மூலவர் களான அறிஞர்கள் கார்ல் மார்க்சு, எங்கெல்சு, லெனின்

ஆகியோரின் கோட்பாடுகள் சுட்டிக்காட்டுகிறபடி, பொருளியல் சமுதாய இயல் உயர்வு தாழ்வுகள் தனிமனிதனின் தற்காலிக உயர்வு தாழ்வுகளாக மட்டும் நின்றுவிடுவதில்லை. அவை சமுதாய வாழ்வுகளுடனும், அவற்றுக்குரிய பழக்க வழக்க மரபு களுடனும், சமய ஒழுக்கமுறைக் கருத்து மரபுகளுடனும் சட்டங் கள், ஆட்சியமைப்பு, ஆட்சிமுறை ஆகியவற்றுடனும், பின்னிப் பிணைந்து தொடர்பு கொண்டே வருபவை ஆகும். இத் தொடர்பு களின் மூலமே அவ்வுயர்வு தாழ்வுகள் முதலாளித்துவ சமுதா யத்தின் அல்லது சமய சமுதாயத்தின் நிலையான உயர்வு தாழ்வு வகுப்புகளாக வளரும் ஆற்றலைப் பெற்று வந்துள்ளன, வருகின் றன. சமதரும வாணர்கள், பொதுவுடைமையாளர்கள் பெற்றுள்ள இந்தப் படிப்பினைகளே அரசியலைக் கைப்பற்றிச் சமுதாய, சமய, பொருளியல் அடிப்படையையே மாற்றியமைக்கும் புரட்சி கரமான முயற்சியில் அவர்களைத் தூண்டுகின்றன என்பது கண்கூடு.

இனவேறுபாடு, சமுதாய வேறுபாடு, தொழில் வேறுபாடு, பொருளியல் வேறுபாடு ஆகிய அனைத்தின் பயனாக விளையும் தற்காலிக உயர்வு தாழ்வுகளின் பின்னணியில் இருந்து கொண்டு, உயர்வு தாழ்வுகளை நிலையான உயர்வு தாழ்வுகள் ஆக்குவதுடன், உயர்வுகளை மேன்மேல் உயர்வுகளாக வளரக்கவும், தாழ்வுகளை மேன்மேல் தாழ்வுகளாகப் பெருக்கவும், வகை செய்வது அவ்வக்கால மேல்நிலை வகுப்பினரின் தனிப்பட்ட அரசியல் செல்வாக்கேயாகும். எனவே இந்தியாவுக்கும், புறஉலகுக்கும் இடையே மட்டுமின்றி இந்தியாவிலேயே இடத்துக்குஇடம், காலத்துக்கு காலம், சூழலுக்கு சூழல் ஏற்பட்டுள்ள, ஏற்பட்டு வரும் சிறப்பு வேறுபாடுகளுக்கு வரலாற்றில் அவ்வக்கால இடச் சூழலுக்கேற்ப இத்தகைய அரசியல் செல்வாக்கின் போக்கில் ஏற்பட்டு வந்துள்ள, ஏற்பட்டுவரும் தனித்திருப்பங்களே காரணம் என்னலாம்.

இன்றைய உலகின் அரசியல் சார்பான மறைமுகக் குடியாட்சி (Political or Indirect Democracy) முறை பண்டைக்கால உலகின் சமுதாயவியல் நேரடி குடியாட்சி, (Socialist or Direct Democracy) முறையிலிருந்து வேறுபட்டது என்பது மேலே காட்டப்பட் டுள்ளது. ஆனால் மேலையுலகில் அடுக்கடுக்கான பண்படா இனங்களின் அலைபாய்வுகளால் கி.பி. 11ம் நூற்றாண்டிலிருந்து 16-ம் நூற்றாண்டுக்குள்ளாகச் சமுதாய நேர்முகக் குடியாட்சி முறை தகர்வுற்று, முடியாட்சியிலும் சரி, குடியாட்சியிலும் சரி

தற்கால அரசியல் மறைமுகக் குடியாட்சிப் பண்பே நிலைபெற்று வந்துள்ளது. இந்தியாவுக்கு வெளியே, சிறப்பாக மேலையுலகில் இனமுறை (Tribal Organisation) வேறுபாடு மட்டுமின்றி, குலமுறை அதாவது சமுதாய முறையான பாகுபாடும் முற்றிலும் அழிந்து விட்டதற்குரிய காரணம் இதுவே. இந்தியாவிலோ, இதே பண்படா அலைகள் தேசீயப் பண்புகளில் ஓரளவு சீர்குலைவு உண்டு பண்ணியதன்றி அதனை அழிக்கவோ, முற்றிலும் மாற்றியமைக் கவோ இயலவில்லை. மேலையுலக ஆட்சியும் அதனால் ஏற்பட்ட பண்புத் தாக்குதல்களும் நுழையும் வரை இந்தியாவிலோ, கீழ்த் திசையிலோ மறைமுகக்குடியாட்சி மரபுகள் வந்து புகவில்லை; குலமுறை அல்லது அரசியல் சமுதாய வகுப்பு இந்தியாவில் மட்டும் முற்றிலும் அழியாமல் சாதி வேறுபாடுகளுக்குரிய மூல அடிப்படையாக நீடிக்க வழி வகுத்த சூழல் இதுவே! மேலே சுட்டியபடி இக்குலமுறை மரபு இனக்குழு மரபு (Tribal Organisation) அன்று; அரசியல் சமுதாயமுறை (Social Organisation) சார்ந்ததே என்பது கருதிக் காணத்தக்கது ஆகும்.

பண்டைச் சமுதாயக் குடியரசுகளுக்கும், முடியரசுகளுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தில் நாகரிக உலக முழுவதிலுமே பழமையான குடியரசு முறைப்பட்ட ஆட்சிகள் தடங்கெட அழிந்து போய் விட்டன. ஆயினும் அப்போராட்டம் அரசியல் துறையுடன் நின்று விடாமல், எங்குமே பண்புத்துறைப் போராட்ட மாக மாறி நின்று நிலவியே வந்துள்ளது, வருகிறது. உலகப் பெருஞ்சமய மரபுகளை, சமய சமுதாய இயக்கங்களை அரசியல் இயக்கங்களைகூட இயக்கி வரும் மரபு இதுவே. ஏனெனில் அது அரசியல், சமய, சமுதாய, கலை, அறிவியல், பண்பாட்டுப் போராட்டங்களாக உலகெங்குமே வேறு வேறு வடிவில் நீடித்து வந்துள்ளது. இது வருங்கால உலகநாடுகளின் ஒப்பியல் வரலாற் றாய்வுக்குரிய செய்தி ஆகும். இந்தியாவில் சாதி வருண முறை வேறுபாடுகளுக்கும் அது சார்ந்த சமய, சமுதாயப் பண்பாடுகளுக் கும், கருத்து மரபுகளுக்கும் வழி வகுத்த சூழல் இது!

சமுதாய ஆட்சி வகுப்பு, சமய ஆட்சி வகுப்பு ஆகிய இரண் டின் தோற்ற வளர்ச்சி தளர்ச்சிகள், அவற்றிடையே ஏற்பட்ட தற்காலிக முரண்பாட்டுப் பூசல்கள், அவற்றின் நிலையான கூட்டிணைவுச் செயற்பாடுகள் ஆகியவை நாகரீக உலகுக்குப் பொதுவானவையே. ஆயினும் இந்தியாவுக்கு வெளியே உல

கெங்கும், சீன ஜப்பான் நாடுகளில்கூட, இந்த இரு வகுப்புகளும் நாளடைவில் இணைந்து ஒரே உயர்வகுப்பு அல்லது ஆட்சி வகுப்பாகியுள்ளது. நடுத்தர வகுப்போ மீண்டும் அடிநிலைப் பொதுமக்களிடமிருந்தே பெரிதும் புதிய வகுப்பாக எழுந்து வளர்ந்துள்ளது. ஆனால் கீழ்த்திசையில்கூட இந்தியாவில் அல்லது இந்திய நாகரீகப் பரப்பில் மட்டுமே சமய சமுதாய வகுப்புகள் போல இயங்கும் இரண்டு வகுப்புகளும் அரசியல் வகுப்புகளாக மாறி, பிறப்படிப்படையாகவே முதலில் ஒரே வகுப்பாகவும், பின்னர் நிலையான இருவகுப்புகளாகவும் (இரண்டுக்கு மேற்பட்ட வகுப்புகளாகக்கூட) மாறியுள்ளன. அத்துடன் உலகில் வேறெங் கும் இல்லாத நிலையில், சமுதாய உரிமையின் பெயரால் ஆளும் வகுப்பு நடுத்தர வகுப்பாகி, சமய உரிமையின் பெயரால் ஆளும் வகுப்பே உயர் வகுப்பாகியுள்ளது. இதுமட்டுமன்று. கீழே விளக்க இருக்கிறபடி, இந்த இரு வகுப்புகளுமே சமுதாய, பொருளியல் ஆட்சி வகுப்பாகவோ, சமய ஆட்சி வகுப்பாகவோ தோற்றி னாலும் அவ்வாறே அவை தம்மை ஆர்வமுடன் சிலபல காலமாகக் குறித்துக் கொண்டு வந்தாலும், உண்மையில் அவை இரண்டும் அரிசியல் வகுப்புகளே. இரண்டுமே குடியரசு முடியரசு பண்புப் போராட்டத்திடையே படிப்படியாக ஒன்றன்பின் ஒன்றாக, ஒன்றினுள்ளிலிருந்து மற்றொன்றாகத் தோன்றிய இரண்டு (அல்லது மேற்பட்ட) அரசியல் ஆட்சி வகுப்புகளேயாம்.

குடியரசு முடியரசுப் பண்பாட்டுப் போராட்டத்தில் இந்தியா வில் மட்டுமே ஏற்பட்ட இத்தனி வளர்ச்சிகளுக்குரிய காரணங்கள் நான்கு; இந்தியாவிலும், தமிழகத்திலும், கொங்குத் தமிழகத் திலும் குடியரசு முடியரசுப் போராட்டச் சூழல்களிடையே செயற் பட்ட இரண்டு அல்லது மூன்று தனி மரபுகள், அவற்றுடன் இணைந்து செயல்பட்ட ஒரு சூழல் ஆகியவையே அவை.

தனி மரபுகளுள் முதலாவதாகக் குறிக்கத்தக்கது வேளிர் இணைவால் பிறந்த தமிழ் மூவரசையும் (நான்காவதாக மகதப் பேரரசையும்) மூன்று (அல்லது நான்கு) என வரையறுத்த பண்டைத் தமிழ் இந்திய மரபு ஆகும். இரண்டாவது மூன்றாவது மரபுகள் தமிழகத்திலும் தமிழகத்துக்குப் புறம்பாக இந்தியாவிலும் இரு வேறு மரபுகள் போலச் செயற்பட்டு வந்துள்ள மொழிமரபின் இருவடிவங்களேயாகும். ஏனெனில் தமிழகத்தில் மட்டுமே மூவரசு களும், வேள்புலங்களும் மொழித் துறையில் மரபுப் போட்டி

இடாமல் தம்முள் ஒத்து ஒரே தமிழ்ச் சங்கத்தை ஏற்றுத் தமிழ் என்ற ஒரே மக்கள் மொழித் தேசீயம் பேணும்நிலை ஏற்பட்டது. இதுவே இயல்பாக இந்தியா அளாவ, நாகரீக உலகளாவ வளர்ந்திருக்க கூடிய, வளர்ந்திருக்க வேண்டிய மரபு அல்லது பண்பு ஆகும். ஆனால் தமிழக, சீன ஜப்பான் மரபுகள் நீங்கலாக, நாகரீக உலக முழுவதிலுமே இந்த நிலை அணிமைக் காலம் வரை ஏற்பட வில்லை. மேலையுலகில் சமய, ஆட்சி நாகரீக பண்பாடுகள் காரணமாக வழக்கிழந்த மொழிகளான இலத்தீனும் கிரேக்கமும் அரபு மொழியும் மொகலாய இந்தியாவில் வழக்கிறந்த பழம் பாரசீகமொழியும் சமய ஆட்சி, அரசியல் ஆட்சி, இலக்கிய அறிவு, பண்பாட்சி மொழிகளாக விளங்கியது போல, இந்தியா வில் புத்த சமண சமய காலங்களிலும் மக்கள் மரபிழந்த அல்லது வழக்கிழந்த பாலி, பாகத, சமஸ்கிருத மொழிகளே இலக்கிய சமய, அறிவு, பண்பாட்டுமொழிகளாகப் புது வளர்ச்சியடைந்தன. இவ்வாறாக ஒரே தேசீய மொழிமரபு இந்தியாவில் தென்பால் மக்கள் மொழித் தேசீயமான தமிழ் அல்லது தென்மொழித் தேசீய மாகவும், வடபால் வழக்கிறந்த மொழித் தேசீயமான பாலி அல்லது பாகத அல்லது சமஸ்கிருத மொழித் தேசீகமாக வும் இரு கிளை மரபுகளாக இலங்கிற்று. இந்தியாவில் மட்டு மன்றிச் சீன சப்பான் நீங்கலான நாகரீக உலகப் பரப்பு முழு வதிலுமே தமிழ் ஒன்றுதான் தொன்று தொட்டு மனித இன மரபின் முழுச்சமய ஆட்சி (தெய்வ) மொழியாகவும் தேசீய ஆட்சி மொழி, சட்டமொழி, இலக்கிய பண்பாட்டு மொழியாக வும் இயங்கி வந்துள்ளது.

இந்த இரண்டு அல்லது மூன்று பண்பு மரபுகளுடன் இணைந்து செயலாற்றிய நான்காவது சூழல்மரபு மூவாயிர ஆண்டுகளாக (கி.பி. 1500 வரையும் அதுகடந்தும்) இந்தியா வின் வடமேற்குக் கணவாய்கள் வழியே புகுந்த பண்படா இனங்களின் அலை பாய்வுகள் அவற்றின் விளைவாக அயற் பண்பாட்டுக் கலவைகள், மயக்கங்கள், பண்பாட்டுச் சீர்குலைவுச் சுழற்சிகள் ஆகியவையேயாகும்.

இம்மரபுகள், சூழல்கள் ஆகியவற்றிடையே நீடித்து வளர்ந்த குடியரசு முடியரசுப் பண்பாட்டுப் போராட்டத்தில் நாம் மூன்று தளங்களைக் காணலாம். மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக இந்திய நாகரீகப் பரப்பு முழுவதுமே அடுக்கடுக்கான அலைபாய்வுகளாய்ச்

செயலாற்றி வந்துள்ளன. இப்பரப்பின் எல்லா இடங்களிலும் அவை உடனடியாக ஒரே சமகாலத்தில் ஒரே நேர் அலைவீச்சாகப் பரவிவிடவில்லை. ஆயினும் அவற்றின் அடுக்கடுக்கான செயற்பாடுகளை நாம் கிட்டத்தட்ட ஒரு சீர்படவே இந்திய, தமிழக வரலாறுகளில் வகுத்துக் காணலாம்.

முதலாவது தளத்தில் வேளிரிணைவாலோ போர் வெற்றி களாலோ, அரசியற்புரட்சிகளாலோ தோன்றிய முடியரசர்கள் மணஉறவு, நட்புறவு ஆகியவற்றின் மூலமாக வேளிருடன் மேலும் இணைந்தும், பகைமை மூலமாக அவர்களை அழித்தும் படிப்படியாகத் தம் ஆட்சி எல்லையையும் வலிமையையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொண்டனர். அத்துடன் முடியரசரும் முடியரசரும் மோதிக் கொண்ட போதெல்லாம், இந்த நட்புறவு, பகைமையுறவு ஆகியவைகள் வேளிரையும் பிரித்து ஒருவருடன் ஒருவர் போராடச் செய்தன. ஆனால் இத்தகு போராட்டங்களில் எந்த முடியரசு வென்றாலும் தோற்றாலும், பொதுவாகக் குடியரசு களின் அழிவே அவற்றால் விரைவு படலாயிற்று, மற்றும் இத்தளத் திலேயே வேளிர்பலர் முடியரசருடன் நட்புறவு கொள்வதனுடன் அமையாமல், அவர்களிடம் படைத்தலைவராகவும் அமைச்சராக வும் அமர்ந்து பணியாற்ற முனைந்திருந்தனர்.

தவிர, இத்தளத்திலேயே முடியரசரும் குடியரசரும் தம்முள் ஒத்திசைவான போட்டியிட்டு, தமிழுலகுக்கே (தமிழ் ஈழம் உட்பட) ஒருமை அளித்த தமிழ்ச் சங்கம் அமைத்து அதன் மூலம் தமிழுக்கும் தமிழ் புலவருக்கும் பேராதரவு காட்டி அதனை, அவர்களைப் பேணினர். இதுபோலவே இரு சாரரும் தம்முள் ஒத்திசைவான போட்டியிட்டுக் கலையும் தொழிலும் வாணிகமும் வளர்த்தனர். அனைவரும் சேர்ந்து ஊக்கிய இந்தத் தொல்பழந் தேசீயப் பண்பாட்டின் மூலம் புலவர் வகுப்பினரும், அவர்கள் துணைவர்களான பாணர், பாடினியர், கூத்தர், பொருநர், விறலியர், முதலிய கலைவகுப்பினரும், கணக்காயர் (பேரா சிரியர்), இளம் பாலாசிரியர் (பள்ளி ஆசிரியர்), கணியர் (வானூலார்), சமய அறிஞர் புரோசர் (சமய குருமார்) மருத்துவர், நோட்டர் (பொன்மணி தேர்வாளர்) முதலிய அறிஞர், கலைஞர் வினைத் திறலாளர் வகுப்பினரும் வளர்ச்சியுற்றனர்.

இவ்வகுப்புகளின் ஆதரவு நாடி முடியரசரும் குடியரசரும் தம்முள் நட்டு போட்டியிட்டனர். ஆனால் வேளிர்களைப் போல,

இவ்வறிவு கலை சமயவகுப்பு பிளவுபடாமல், வேளிர் குடியரசர் ஆகியோரிடையே கூடப் பிரிவுறாமல், தேசீயப் பண்பார்ந்த வகுப்பாகவே ஒருமனமுடன் செயல்பட்டது. (கடைச்சங்க இலக்கியம் காட்டும் தமிழ்மரபுப் பெருமை இது) ஏனெனில் தமிழ்மொழி ஒருபுறம் மக்கள் மொழியாகவும் ஆட்சி கலை அறிவு பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளுக்கும் உரிய ஒரே மொழியாகவும்; மறுபுறம் அரசர், வேளிர், பொதுமக்கள், மேன்மக்கள், ஆகிய எல்லாரையும் இணைக்கும் ஒரே மொழி யாகவும் நாகரீக உலகின் முழு உரிமை தேசீய மொழியாய் (பண்டைச் சீன சப்பான் மொழிகள் போல) இயங்கிற்று.

போரும் வீரப்போட்டிகளும் முடியரசுகளின் ஆட்சி விரிவுக்கு மட்டுமே பயன்பட்டன. ஆட்சியுறுதியும் ஆட்சி வளமும், சிறப் பாக முடியரசின் ஆட்சியுறுதியும் ஆட்சி வளமும், இந்த ஆதரவுப் போட்டிகளையே பெரிதும் சார்ந்தவை ஆயின.

இரண்டாவது தளமே வரலாற்று முறையில் முடியரசுக் காலத்தின் அரசியல் தேசீயத்தளம் ஆகும் என்னலாம். இத்தளத்தில் முடியரசர் வேள்புலங்களை விழுங்கிய பின்னும் பழைமை வாய்ந்த அரசுரிமைக்கு உரியவரான குடியரசு மரபுகளில் பெண் எடுத்துத் தம் முடியுரிமையை மேன் மேலும் வலுப்படுத்திக் கொள்வதில் பெருமுனைப்பும் பேரார்வமும் காட்டினர். (வேள் புலங்களின் ஆட்சியுரிமை ஆதி நாட்களில் பெண்டிருக்கே உரியதாயிருந்தது என்பது இங்கே நினைவு கூரத்தக்கது ஆகும். தவிர, வட இந்தியா வில் முதலாம் சந்திர குப்தனின் லிச்சாவிக் குடியினர் மணஉறவும், கொங்கு நாட்டிலேயே சேரர், கொங்குச் சேரர் ஆகியோரின் வையாவிக் கோமான்குடிப் பெண்டிர் மணஉறவும் பிறவும் இதே சூழலை விளக்குவன ஆகும்) அத்துடன் தொன்று தொட்டு ஆட்சியுரிமையும் ஆளும் பயிற்சி மரபும் மக்கள் தொடர்பும் உடையவராயிருந்த வேளிக்குடியினரையே அரசர்கள் தேர்ந் தெடுத்துத் தம் உரிமைச் சுற்றம் ஆக்கிக் கொண்டனர். இது மட்டுமோ? இரண்டாம் மனைவியை மணஞ்செய்து கொள்பவர் எப்படியாவது தம் முதல் மனைவியைப் பசப்பி ஊக்குவித்து அவளைக் கொண்டே தாலி கட்டுவிக்கத் துடிப்பது போல, முடியரசர்களும் தொன்று தொட்டு மக்கள் ஆட்சி மரபுக்கு இயல்பான உரிமையுடையவராயிருந்த வேள் குடியினரையே தமக்கு முடிசூட்டும் தனி உரிமையுடையவராக அமைத்துக்கொள் வதில் ஆர்வமும் அக்கறையும் பெருமையும் கொண்டனர்.

இதே தளத்தில் மேலை நாட்டு முடியரசரைப் போலவே இந்தியாவிலும் முடிமன்னர் தம் பெருமக்கள், சமயக்குருமார், பொதுமக்கள் உட்பட எல்லா நாட்டு மக்களையும் ஒருங்கே கவரும் முறையில் மொழி, சமயம், வாழ்கை வளம் ஆகியவை சார்ந்த தேசீய வளர்ச்சிகளை நேரடியாக ஊக்கி மேம்படுத்த முனைந்தனர். அத்துடன் மொழிப்புலமை, கலைத்திறம், சமய அறிவு, போர்வீரம், கல்வி, உழவுதொழில் வாணிகம் முதலிய துறைகளில் மேம்பாடு ஆகிய சிறப்புடையவர்களைத் தேர்ந் தெடுத்து அவர்களுக்குப் பரிசுகளும், பட்டங்களும், தனிப்பட்டய உரிமைகளும், விருதுகளும், பதவிகளும், மானியங்களும், வரிசை களும் வழங்கி அவர்களை பெருமக்களுடன் பெருமக்களாக உயர்த்தினர். முடியரசரின் அரசியல் சுற்றமான பெருமக்கள் வகுப்பு இதனால் விரிவுற்று முடியரசருக்குரிய தேசீய ஆதரவுகள் மேன்மேலும் பெருகின. இவ்வாறாக, நாடு நகர்ப் பாதுகாப்புக்காகப் பண்டைப் குடியரசர் கட்டியெழுப்பிய கற்கோட்டை அரண் வரிசைகளைப் போல, முடியரசரும் தம் அரசுரிமைக்கும் ஆட்சிக் கும் நல்லுறுதிப் பார்டும் மக்கள் ஆர்வ ஆதரவு வளமும் பெருக்க முறும் வகையில், இத்தகைய வகுப்பு வரிசைகளையே தம் தேசீயப் பண்பாட்டுக் கோட்டையின் நல்லரண் வரிசைகளாகக் கட்டமைத்துக் கொள்ள முற்பட்டனர்.

மூன்றாம் தள ஊழியே நாகரிக உலகில் இந்தியாவுக்கும் இந்தியாவில் தமிழகத்துக்கும் வேறுபட்ட தனித் தன்மைகளும் கொங்குத் தமிழகத்துக்குத் தனி உயர் சிறப்பும் வழங்கிய ஊழி ஆகும். ஏனெனில் முதலிரு ஊழிகளை விட மூன்றாம் ஊழி இந்தியாவில் எளிதாக எதிர்ப்பின்றிப்பரவிற்று. ஆனால் தமிழகத் திலும் தென்னகத்திலும் அது எதிர்ப்புகளைக் கடந்தே வெற்றி காண வேண்டியதாயிற்று. அது சமயம் பண்டைக் கொங்குத் தமிழகத்தில் பொதுவாக, அதன் அக நாடாகிய தற்காலக் கொங்கு நாட்டில் சிறப்பாக மூன்று ஊழிகளுமே போதிய அளவில் செய லாற்ற முடியாமல் போயின. அதன் ஊன்றிய குடியரசு மரபும் குடியரசுப் பண்பும் இதனைத் தடைப்படுத்தி நின்றன, தடைப் படுத்தியே வருகின்றன. இது கீழே விளக்கப்பட இருக்கிறது.

இந்தியாவின் முடியரசர்களிடையே தமிழக மூவேந்தர் (மற்றும் மகதப் பேரரசர்) போன்று வேளிரிணைவால் அமைந்த தொல்பழமை வாய்ந்த இயல் மரபினரும் உண்டு! பல்லவர்

(பழந்திரையர் மரபினர்), கங்கர், வாணர், கடம்பர், சளுக்கர், இரட்டர், யாதவர், (தேவகிரி ஆண்ட ஆய் மரபினர்) போன்று வேளிர் மரபிலேயே வந்த புது அரச மரபினரும், வடமேற்கு ஓரக் கணவாய்கள்வழி இந்தியாவுக்கு வந்து இந்தியருடன் இந்தியராகக் கலந்துவிட்ட பார்த்தியர், ஊணர் போன்றாரின் அயலின அரசுகளும் உண்டு. தவிர, தோள் வலியாலும் வாள் வலியாலும் அரசுரிமை நாடிப்பெற்றவர்களும் அரச மரபின் உட் பூசலகளிடையே மரபுரிமை பெற்றும் பெறாமலும் தம் தனி வல்லமைகளாலோ செல்வாக்காலோ முடியுரிமை கொள்ள முனைந்தவரும் பலர். அத்தகு சூழல்களில் இயல்பாகவே பெரு மக்கள் வகுப்பினரிடையே பலரும் புதிய மரபுகளுக்கு ஆதரவு காட்டத் தயங்கி ஆர்வ ஆதரவாளர், எதிர்ப்பாளர், நடுநிலையாளர் எனத் தம்மிடையே பிளவுற்றுப் பிரிவுறலாயினர்.

பல்லவர் போன்ற புதிய மரபுக்குரிய அல்லது பார்த்தியர்; குசாணர், ஊணர் போன்ற அயல் மரபுக்குரிய அரசர் பேரரசர்கள் இவ்வகைப்பட்ட புதிய சூழ்நிலைக்கு ஆளான போது தமக்கு ஆர்வ ஆதரவு முன்வந்த பெருமக்களையும் பிறரையும் மற்றப் பெருமக்களிடமிருந்து பிரித்து உயர்த்திப் புதிய உயர் வகுப்பினர் ஆக்கினர். தமக்கு ஆதரவு வலிமை வழங்கத்தக்க இனமரபு, மொழிமரபு, சமய மரபு ஆகியவற்றையும் அவர்கள் தேடி அணைத்து உயர்த்தவும் முற்பட்டனர். அத்துடன் எதிர்த்தவர் களின் மொழிமரபு, சமய மரபுகளை அவர்கள் இதுபோல மற்றப் பெருமக்கள் படிநிலையிலிருந்தும் நீக்கிப் பொதுமக்கள், அல்லது அவர்களிலும் தாழ்ந்த கீழ்ப்படி நிலைகளுக்குத் தள்ளினர்.

மேற்கண்ட முறையில் உயர்த்தப்பட்ட புது வகுப்பினரை ஆட்சியாளர் தம் அரசியற் சுற்றத்தினும் உயரிய அரச குருமார் ஆக்கினார். அவர்களுக்கும் அவர்கள் ஆட்சிக்குப் படிப்படியாக மாற்றப்பட்ட கோயில்கள், சமய நிறுவனங்களுக்கும் மானியங்கள், தனிப்பட்ட முறையில் இறையிலி (வரியில்லாத) மானியங்கள் ஆக்கப்பட்டன. அவர்கள் வாழ்க்கைவளம், கல்விவளம் ஆகியவற் றிற்கென அரசர்கள் தனி அமைப்புகள் (சதுர்வேதி மங்கலங்கள், வட இந்தியாவில் திரிவேதி மங்கலங்கள், வேதபாடசாலைகள், சமஸ்கிருதக் கல்விச்சாலைகள், சமஸ்கிருதத்திலேயே புதிய இலக்கிய, சமய நூல் வளர்ச்சியாதரவுகள் ஆகியவை) ஏற்படுத் தினர். இதுபோலவே எதிர்ப்பாளர் ஆகிய காரணத்தினால் தாழ்த்தப் பட்டவர்களுக்குப் புதிய ஆட்சியில் உரிமைகள் படிப்படியாக

மறுக்கப்பட்டு அவர்கள் பொதுமக்கள் அல்லது பொதுமக்களிலும் கீழ்ப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டனர்.

நாகரீக உலகெங்கும் நம் நாட்டுக்குள் தோன்றிவிட்ட மூவகுப்பு முறையைப் போன்ற ஒரு மூவகுப்பு முறையாக இந்திய நாகரீகப்பரப்பில் சாதி வருணமுறை அமைந்தவகை இதுவே. பழைய பெருமக்கள் வகுப்பிலிருந்து பிரிக்கப்பட்டு உயர்த்தப் பெற்ற புதுவகுப்பே உரிமை வரம் பெற்ற அல்லது தனித் தன்னாண்மை, தனிச்சிறப்புரிமைகள் பெற்ற உச்ச உயர் ஆட்சி வகுப்பாகவும், அவர்களையடுத்துப் பழைய ஆட்சி வகுப்பின் எஞ்சிய பகுதியினர் தம் உரிமைகளை மட்டாகக் கொண்டு உரிமை வரம்புபட்ட நடுத்தர வகுப்பாகவும், பழைய பொது மக்களும் உயர்வகுப்புகளிலிருந்து ஒதுக்கித் தள்ளப்பட்டவர் களும் பிற்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாகவும் உரிமைகள்படிப்படியாக அகற்றப்பட்டவராகவும் பிரிவற்றனர். (எவ்வகைக் கட்டுபாடும் விரும்பாத குடியரசுக் குழுவினரே இவ்வூழியில் மலைப்பகுதிகளுக்குச் சென்று ஒதுங்கிய பழங்குடி யினர் ஆவார்கள் என்று கருத இடமுண்டு. விந்தியப் பகுதிகளில் பேரரசமைத்து ஆண்ட கோளா மரபினரை இதற்குச் சான்றாகக் கூறலாம்).

இந்தியாவில் புத்த சமண சமயங்கள் மேலோங்கியிருந்த ஊழியும் மேற்கண்ட குடியரசு, முடியரசுப் பண்பாட்டுப் போட்டிக் குரிய முதல் இரண்டு தள ஊழிகளும் கிட்டத்தட்டச் சம காலத்தவை என்னலாம். இதுபோலவே சங்க காலத்திலிருந்தும் மோரியர் ஆத்திரர் ஆகியோர் வீழ்ச்சிக் காலத்திலிருந்தும், வட மேற்கிலும், வடக்கிலும் நேரடியாக, ஆனால் தென் பெரும் பகுதியிலும் கீழ்ப்பெரும் பகுதியிலும் சைவ, வீரசைவ, வைணவ மலர்ச்சிகளின் துணைக்கொண்டும் வளர்ந்த இந்து சமய மறு மலர்ச்சி ஊழி, மேற்கண்ட முடியரசுக்கால மூன்றாம் ஊழி ஆகியவையும் கிட்டத்தட்டச் சமகால ஊழிகளாக விளங்கி வந்துள்ளன.

முதல் இருதள ஊழிகளில் தமிழ் அல்லது தாய்மொழி அடிப்படையாக அமைந்த மக்கள் மொழித் தேசீயம் மூன்றாம்தள ஊழியிலேயே படிப்படியாகப் புத்த சமண சமயங்களுக்குரிய பாலிபாகத மொழிகள் அல்லது புதிய இந்து சமய மறுமலர்ச்சிக் குரிய சமஸ்கிருத மொழி என வழங்கி வந்த மொழித் தேசீயமாக மாறிற்று.

பழைய அரசியற் வகுப்பாகிய பெருமக்கள் வகுப்பிலிருந்து பிரித்து உயர்த்தப்பட்ட புதிய அரசியல் வகுப்பு அரசகுருமார் வகுப்பு என்ற முறையில் சமயத்தின் பெயரால் மட்டுமன்றிச் சமஸ்கிருதத்தின் பெயராலும் பொது மக்களுக்கும் பெருமக்க ளுக்கும் மட்டுமன்றி, தன்னை உயர்த்தி வைத்த அரசர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் மேலாகத் தன்னை மேம்படுத்திக் கொள்ள முடிந்தது. அரசரும் ஆட்சியாளரும் இதில் அவர்களின் வழியில் குறுக்கிடவில்லை. மனமார ஒத்துழைத்தனர். ஏனெனில் அவர்கள் கோரிய சமயஉரிமை, யாவரையும் கவர்ந்தது. தவிர, புதிய முடியரசர் மட்டுமின்றி, எல்லா அரசர் பேரரசருமே அவர்களால் உடனடியாகப் பெற்ற ஆதாயம் மதிப்பிடற்கரியதாயிருந்தது.

இதுவரை அரசர்களால் போர் வலிமை மூலம் குடியரசர் களை வீழ்த்தவும், நல்லாட்சியில் மக்களைக் கவரவும் மட்டுமே முடிந்தது. மக்கள் தம் பழைய குடியரசு மரபைமறக்கும்படி செய்ய அவர்களால் முடியவில்லை. பழைய பெருமக்கள் மரபோ, அதில் இடம் பெற்ற பழைய சமயகுருமார் மரபோ, புலவர் அறிஞர் கலைஞர் மரபுகளோ, முடியரசருக்குத் தம் ஆதரவைத்தான் வழங்க முடிந்தது; குடியரசு மரபை மக்கள் மறக்கும்படி செய்வதோ, அதைத் தாமே மறந்து மக்கள் மறக்கும்படி செய்வதோ, அதைத் தாமே மறந்து விடுவதோகூட அவர்கள் கனவுக்கும் ஆற்றலுக்கும் இயல்புக்கும் அப்பாற்பட்ட செய்தியாய் அமைந்திருந்தது. புதிய அரசியல் வகுப்போ சமஸ்கிருதச் சார்பானசமயச் சார்பு மூலம் இதனை மிக எளிதில் செய்து முடிக்கும் ஆற்றலும் வாய்ப்பும் உடையதாயிற்று.

உண்மையில் புதிய வகுப்பினரால் தம் ஆதரவுக்குரிய அரசருக்குரிய சமஸ்கிருதச் சார்பான சமயத்தின் பெயரால் மரபாதரவுக்கும் மக்கள் ஆதரவுக்கும் மேம்பட்ட தெய்வீக ஆதரவையே வகுத்துத்தர முடிந்தது. சூரிய மரபு, சந்திர மரபு, அக்கினி மரபு போன்ற புதிய ஆட்சி மரபு, புதிய தெய்வீக கால்வழி மரபு ஆகியவைகளையே அரசருக்குப் பெற்றுத் தரும் அல்லது அவற்றை உறுதிப்படுத்தித் தரும் ஆற்றலும், அவற்றுக் குத் தம் சமஸ்கிருத மொழியில் புதிய ஆதாரங்கள் வகுத்துத் தரும் வாய்ப்பும் அவர்களுக்கு எளிதில் அமைந்துவிட்டன. (சமஸ்கிருத மொழியும் சமஸ்கிருதக் கல்வியும் இதற்கேற்ப அவர்களுக்கு மட்டுமே. அதிலும் அவர்களில் ஆண்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட மொழியாக, கல்வியாக இயன்றன.)

ஆந்திரர், கடம்பர், வாணர், கங்கர், சாளுக்கியர், ஆகியோரையும் தம் எல்லை கடந்து பேருலகாள முற்பட்ட பிற அரசர் பேரரசர்களையும் போலவே பல்லவர்களும் தமிழ் அல்லது தாய்மொழி மரபுக்கு மாறாக பாலி பாகத சமஸ்கிருத மரபுகளையே தொடக்கத்தில் முற்றாதரவாக மேற்கொண்டிருந்தனர். இது மூன்றாம் தள ஊழிக்குரிய பண்பே என்பதனைப் புத்த சமணச் சார்பான பாலி பாகதங்களின் முற்பட்ட வழக்கே காட்டுகிறது. பல வரலாற்றாசிரியரும் பல புலவோரும் பல்லவரையும் பிறரையும் தமிழகத்துக்கு அல்லது தென்னகத்திற்கு அல்லது இந்தியாவுக்கே அயலவர் என்று கருதவைத்தற்குரிய சூழ்நிலை இதுவேயாகும். (சமஸ்கிருத இலக்கிய மரபுமட்டுமன்றி, பின்னாளைய உருது அல்லது இந்துஸ்தானி அல்லது இந்தித் தேசீய மரபும் தென்னகத்திலிருந்தே வட திசைக்குப் பரவியவை ஆகும் என்பது கூர்ந்து கண்டுணர்ந்தற்குரிய செய்த ஆகும். )

ஆட்சி மொழி மாறுதலும் சமய மாறுதலும் முடியரசு பேரரசுகளின் அரசு நெறி முறைச் சூழல் வாய்ப்புகளுக்குக்குரியனவே என்பதை வரலாற்றாய்வுகள் காட்டும், ஊணப் பேரரசன் தோரமாணன் (கி.பி.6ம்நூற்றாண்டு) தனக்கு முற்பட்ட குப்தப் பேரரசரின் வைணவ சமயத்தையும் அவர்களை ஆதரித்த வைணவ சமயத் தலைவரையும் ஒதுக்கித் தள்ளி, சைவ சமயமே தழுவி தன் தலைநகரான உஜ்ஜைனியில் அச்சமயத்துக்கும் சமயத்தலைவருக்கும் புது வாழ்வும் புதுமலர்ச்சியும் அளித்தான் என்பதை அறிஞர் ஏ.எஸ்.பி. ஐயர் **(THREE MEN OF DESTINY)** **எடுத்துக்காட்டியுள்ளார்.**

மூன்றாம் தளத்தில் ஏற்பட்ட இத்தகு புதிய சூழ்நிலைகளிடையே அரசுக்கு முடிசூட்டும் பழைய பெருமக்களின் உரிமையில் முடியரசுக்கு இருந்த அக்கறையும் ஆர்வமும் பெரிதும் குறையலாயிற்று. ஏனெனில் குடியரசு மரபுக்கும் அதனுடன் வேளிர்க்கும் கோமரபிற்கும் உரியதெய்விகக் கால்வழி மரபுரிமையும் ஆட்சி மரபுரிமையும் ஒருங்கே அரசராலும் பெருமக்களாலும் பொதுமக்களாலும் மறக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் பெருமக்களின் முடிசூட்டும் உரிமை மட்டுமின்றி, அரசுக்கு அரசு மரபும் (சத்திரிய மரபும் அரசர் குலப்பிறப்புரிமையும்) அரசன் ஆட்சிக்குத் தெய்வீக ஆதரவும் ஒப்புதலும் வாங்கித் தரும் உரிமையும் அதை மறுத்துவிடும் உரிமையும்கூட, படிப்படியாகப் புதிய ஆட்சி வகுப்பினரிடமே மெல்ல வந்தடைந்தன.

தமிழ் மாக்கவிஞரான கம்பநாடர் (கி.பி. 9 அல்லது 10 அல்லது 12-ம் நூற்றாண்டு) இராமபிரானின் முடிசூட்டு விழா வருணனையினடையே, பழைய முடி சூட்டு விழா மரபையும் அதில் அவர் நாட்களுக்குள்ளாக ஏற்பட்டு வந்திருந்த மாறுதலின் சாயலையும் நமக்கு ஒருங்கே நயம்பட இணைத்துக் காட்டியுள் ளார். 'வெண்ணெய் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி' என்ற அவர்பாடல் வரியில், அவரை ஆதரித்த புரவலரான வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் வேள் மரபு அல்லது வேளாள மரபின் முன்னோரே தம் பழைய மரபுரிமையின் மதிப்பை விடாமல் மணிமுடி எடுத்துக் கொடுக்கின்றனர். ஆனால் சூட்டவில்லை! புதிய வகுப்பினரான வசிட்டரே அதை அவர்களிடமிருந்து அமைச்சர் சுமந்திரர் கைப்பட வாங்கிச் சூட்டுவதாகக் கவிஞர் முடிக்கிறார். புதிய மரபினரின் அந்நாளைய புதிய அரசியல், சமுதாயச் செல்வாக்கை 'வசிட்டனே' என்ற சொல்லில் கம்பநாடரே பயன்படுத்தும் 'ஏ'காரம் தொனிப்படுத்திக் காட்டுகிறது.

மூன்றாம் தளத்தில் பல்லவர் காலத்தை ஒட்டி (கி.பி. 3-6 நூற்றாண்டுகள்) முடிமன்னர் மரபுகளுக்குப் பேராதரவாக முடி மன்னராலேயே பழைய ஆட்சி வகுப்பினின்று பிரித்தெடுத்து உயர்த்தப்பட்ட புதிய வகுப்பினர் நாளடைவில் மன்னர்களை யும் நாட்டாட்சி அயலாட்சி மரபுகளையும் ஆக்கவும், அழிக்கவும், ஏற்றவும் இறக்கவும், ஆட்டிப்படைக்கவும் மாற்றவும் வல்லமை பெற்றவராயினர். அயல் மரபாட்சி அயலாட்சிக் காலங்களில் இது மேலும் வளர்ந்தது. இந்திய தேசீயத்துக்கே பல வகைகளில் புது வழிகாட்டிச் சென்ற வீர சிவாஜியின் (கி.பி.17, 18ம் நூற் றாண்டு) காலத்துக்குள், இந்துப் பேரரசே அமைத்துவிட்ட அம் மக்கட் பெருந்தலைவனுக்கு மொகலாயப் பேரரசர் வகித்த (சக்கரவர்த்தி அல்லது சாம்ராட்) என்ற பட்டமோ அரசு மரபினன் (இராசபுத்திரருக்கு அளிக்கப்பட்ட சத்திரியன்) என்ற உரிமையோ அவற்றிற்குரிய தெய்வீக ஒப்புதலோ மறுத்து விடும் அளவுக்கு அவர்கள் ஆற்றலும் பேரவாவும் வளர்ந்து விட்டன. வீர சிவாஜிக்குப் பின் வல்லமைச்சர் (பேஷ்வா) என்ற முறையில் அவர்களே ஆட்சியைக் கைப்பற்றி, அயலாட்சிக் காலத்தின் நடுப்பகுதி (1857) கடந்தும் இந்தியாவின் பெரும் பரப்பிலும் அரசர், பேரரசராக அல்லது அமைச்சராக ஆண்டனர்.

வேளிர் மரபில் வந்த ஆய்வேள் ஆட்சியாக மட்டுமின்றி அதன் மலர்ச்சியாக 17-ம் நூற்றாண்டு வரை குடியாட்சியாகவே (எட்டு வீட்டு பிள்ளைமார் ஆட்சியாகவே) நடைபெற்ற திரு வாங்கூர் ஆட்சியை அதன் வல்லரசான மார்த்தாண்டவர்மன் மரபினர் அயலாட்சி ஆதரவு பெற்றுப் புதிய வகுப்பினரின் நலங் களுக்கே முதலிடம் கொடுத்த ஆட்சியாக மாற்றி ஆண்டனர். ஆட்சியின் இத் தனிச் சலுகைகள் 20-ம் நூற்றாண்டின் பேரமைச் சராகவும் அரசத் துணைவராகவும் நாடாண்ட பேரறிஞர் வயவர் சி.பி. இராமசாமி ஐயரின் ஆட்சிக்காலத்திலேயே அகற்றப் பட்டன.

இந்திய வரலாற்றில் இரண்டாவது மூன்றாவது தள ஊழி களில் காணப்படத்தக்க புரட்சிகரமான இந்த மாறுபாடுகளையெல் லாம் ஒருபுறம் வேள் என்ற சொல்லின் புதுச் சொல் விரிவு, புது மரபுவிரிவு ஆகியவையே வரலாற்றில் ஓட விடப்படும் ஒரு வண்ணத்திரைப்படம் போல நமக்குக் காட்டுகின்றன. மற்றொரு புறம் அதற்கிசைந்த உரை விளக்கங்களாக அவ்வூழிகளில் தமிழக, தென்னக, இந்தியப் பரப்புகளில் எழுந்த சாதிப்பெயர் மரபுகள் விளங்குகின்றன.

மேலே காட்டியபடி, வேள் (பழம் பன்மை: வேளிர்) என்ற குடியரசு மரபுக்காலச் சொல்லுக்கு இறைவன், சமய ஆட்சித் தலைவர், வேட்கோவர், (வேளார், பூசனையாளர், குயவர்) அரசியல் ஆட்சித்தலைவர், படை ஆட்சித் தலைவர், நீதி ஆட்சித் தலைவர், சமுதாய ஆட்சித் தலைவர், குடும்ப ஆட்சித்தலைவர், காதல்தலைவர் முதலிய எத்தனையோ பொருள்கள் உண்டு. ஆனால் உழவர் என்ற ஒரு பொருள் மட்டும் கிடையாது. இதற் கேற்றபடியே, இச் சொல்லின் புது விரிவாகிய வேளாண்மை, வேளாளர் என்ற சொற்களுக்கும் தொடக்க காலங்களில் உழவு, உழவர் என்ற பொருள்கள் இருந்ததாகக் தெரியவில்லை, ஏனெனில் உழவர் வாழ்வையே விரத்துரைக்கும் தமிழரின் தனி இலக்கியத்துறை ஒன்று உண்டு. அது வேளாண்பாட்டு என்று இன்றுவரை அழைக்கப்பெறவில்லை. பள்ளுப்பாட்டு என்றே வழங்கப்பட்டு வருகிறது. (பள்ளர்-உழவர்; பழனம்-வயல் மலை யாள மாநில வழக்கு; செறுமர்-உழவர், செறு-வயல்.) தவிர திருக்குறளில் உழவு என்ற ஓர் அதிகாரமே உண்டு. அதில் இச் சொற்கள் வழங்கப் பெறவில்லை. அதே சமயம், வேள்வி,

வேளாண்மை ஆகிய இரு தொடர்புடைய சொற்களை நாம் தொடர்புடைய பொருள்களிலேயே விருந்தோம்பல், ஒப்புர வுடைமை, ஆள்வினையுடைமை ஆகிய அதிகாரங்களில் காண் கிறோம். ஆனால் இங்கே அவற்றின் பொருள்உழவு அன்று அதிகாரப் பெயருடன் பொருந்திய நிலையில் அவற்றின் பொருள், உரையாசிரியர்களே காட்டுகிறபடி, ஒப்புரவாட்சி அதாவது அறி வாலும் முயற்சியாலும், பண்பாலும் நன்பொருள் ஈட்டி அதனைக் கொண்டு மக்கள் வாழ்க்கை வளப்பயிர் அல்லது மக்கட் பண்பு வளப் பயிர் வளர்த்தலாகிய இன உழவாண்மைப் பண்பு என்பதே யாகும். வேள்வி அல்லது வழிபாடு என்பதும் உண்மையில் இப் பண்புகளின் கனவியல் உருவான இறைமை வழிபாடு அல்லது இப்பண்பு பேணல் என்பதேயாகும்.

சங்க இலக்கியத்தில் பதினென்கீழ்கணக்கு ஏடுகளில் ஒன்றான திரிகடுகம் வேளாளன் என்ற சொல்லுக்குத் தரும் பண்பு விளக்கமும் இதுவேயாகும். அச் சொல்லுடன் தாளாளன், கோளாளன் ஆகிய சொற்களும் அப்பாட்டில் ஒரு நிலைபடத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

> 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
> தாளாளன் என்பான் கடன்படா - வாழ்பவன்
> கோளாளன் என்பான் மறவாதான்: இம்மூவர்
> கேளாக வாழ்தல் இனிது.'

இங்கே தாளாண்மை என்பது ஒருவன் கடன்படாமல் வாழ்தல் அதாவது தன் உழைப்பையே தான் நம்பி, பிறர் உழைப் பின் பயனாகப் பிறனைச் சார்ந்து வாழாமல், தானே ஈட்டும் தன்னாண்மை முயற்சியாளன் என்ற பொருளைச் சுட்டுகிறது. கோளாண்மை என்பது மறவாமை அதாவது ஒருவன் கடமை யும் குறிக்கோளும் மறவாது ஈட்டுதல். வளத்துக்கு உரமாயுதவும் முறையில் பட்டறிவாலும் கல்வியாலும் ஆய்வாலும் பெறும் அறிவு கலைத் துறைகளின் பயிற்சி மறவாது கடைபிடித்து நிற்பது என்ற பொருள் தருவது ஆகும். இவ்விரு பண்புகளும் கருவிப் பண்பு மட்டுமே. ஒன்றுடன் ஒன்று உறவு கொண்டு தொடரும் இவை வேளாண்மைக்குரிய படிகள், வேளாண்மை யையே இலக்காகக் குறிக் கொண்டவை ஆகும். இக் குறிக்கோட் சொல் உண்மையில் வேளின் உழவாண்மை என்ற உருவகப் பொருளுடையதாய், குடியரசாட்சி குறிக்கொண்ட இலக்கான இன உழவாண்மை அதாவது மக்கள் வாழ்க்கை வள, பண்பு வளப்பயிர் வளர்த்தல் என்று பொருள் காட்டுவதாகும்.

இலக்குப் பண்பின் பெயர் என்ற முறையில் வேளாண்மை என்ற சொல்லும் பண்புப் பொருளும் தாளாண்மை (அருந்திற லாண்மை), கோளாண்மை (இனவள அறிவாண்மை) என்ற மற்ற இரு கருவிப் பண்புகளையும் உள்ளடக்கியதேயாகும்.

திருவள்ளுவரும் அவரைப் பின்பற்றிய சங்ககாலப் புலவர் களும் கம்ப நாடர் போன்ற பிற்காலத் தமிழ்க் கவிதை மரபினரும் மனித இன வாழ்வின் எல்லாவள ஆட்சி பண்பாட்சித் துறை களையுமே- குடும்ப வாழ்வையேகூட -இனப் பேருழவாண்மைத் துறைகளாகவே உருவகித்துள்ளனர் (தமிழ்ச் சொல் புலம் - அறிவு, வயல், துறை, நாடு). திருவள்ளுவர் வில்லை ஏராகக் கொண்டு வீரப்புகழ்ப் பயிர் வளர்ப்பவர் (வில்லேருழவர்) என வீரரையும், சொல்லை ஏராகக் கொண்டு சுவை நலப் பயிர், அறிவுப்பயிர், பண்புப்பயிர் வளர்ப்பவர் (சொல்லேருழவர்) எனப் புலவரையும் இன உழவராகவே மதித்தார். வேளிரையும் இதுபோலவே அவர் வீறாண்மை, திறலாண்மை, அறிவாண்மை, பண்பாண்மை ஆகிய ஏர்கள் கொண்டு மக்கள் வாழ்வுபயிர், பண்பு வளப்பயிர், (வேளாண்மை) வளர்ப்பவ ரெனவே கொண்டார் என்பதில் ஐயமில்லை, 'நாடென்ப நாடா வளத்தன' என்று அவர் நாட் டுக்குத் தந்தவிளக்கம் இதனைக் காட்டும். சங்ககாலப் புலவர்கள் கற்புடைப் பெண்டிரை இதுபோலவே தம் இளமை நலமும் பண்பு நலமும் ஏராகக் கொண்டு கணவன் வீரம் பாய்ந்த மார்பையே நிலமாக உழுது குடும்ப நலம், வாழ்க்கை நலம், நாட்டு நலம், ஆகியவற்றை விளைவிப்பவர் என வருணித்துள்ளனர்.

மேலைக் கிறித்தவ உலகில் மக்கட் பண்பார்ந்த ஆன்மீக ஆட்சியாளரை இதே மரபில் நின்றே சமயவாணர் இன மேய்ப்பர் (Pastor, Spiritual Shepherd) என்று குறிப்பது காணலாம். ஆனால் சமய ஆட்சியையும் குடும்ப சமுதாய ஆட்சியையும் நாட்டாட்சி, இன ஆட்சியையும் ஒரே ஆட்சியாகக் கொண்ட வேள்புலக் குடியரசு மரபில் வந்த தமிழர் இவையெல்லாவற்றையும் உள் ளடக்கிய அவ்விலக்கியல் குடிமக்கள் ஆட்சியின் தன்மையையே வேளாண்மை, வேள்வி என்றனர். அதனைப் பண்பாகக் கொண்ட பண்பாட்சியாளரையே (பண்புசான்ற குடியரசரையே) வேளாளர் என்றனர்.

இன்று இசைவேளாளர் என்றால் பாடும் வேளாளர் என்றும் வணிக வேளாளர் என்றும் நம் காலத் தமிழர் எண்ணுகின்றனர்.

அத்தொகைச் சொற்களின் தமிழ் மரபுப் பொருள்கள் இவையல்ல: இசைக் கருவிகளை ஏராகக் கொண்டு இன்ப, பேரின்பப் பயிர் வளர்ப்பவர்கள், வாணிகத்தை அல்லது கடல்நில வாழ்வை ஏராகக் கொண்டு வாழ்வு வளப்பயிர் வளர்ப்பவர்கள் (தமிழ்ச் சொல் ஏர்க்கலப்பை, அழகு, வாழ்கைநலம்) என்பவையே அம்மரபுக் குரிய பொருள்கள் ஆகும்.

வணிகர், வாணிகம் ஆகிய (வண்மை, வளம் ஆகியவற் றுடன் தொடர்புடைய) சொற்கள் தமிழில் மட்டுமன்று, சமஸ் கிருதத்திலும் உண்டு, ஆயினும் சமஸ்கிருத மரபில்கூட கடை வருணமாகிய மூன்றாம் வருணப் பெயர் 'வேள்' என்ற பழந் தமிழ்ச் சொல் மரபில் வந்த பழைய இருக்குவேத மொழிச் சொல் லான விச் (நாட்டு மக்கள்) என்ற சொல்லடியாகவே மலர்ந் துள்ளது காணலாம். வேளாண்மை என்றசொல்லின் மூலமுதற் பொருள் உழவு அன்று, வாணிகமும் அன்று: அது ஆளுபவர் ஆளப்படுபவர் வேறு பாடற்ற கனவியற் குடியாட்சிப் பண்பே என்பதை இது தெற்றெனக் காட்டுகிறது.

தொல்காப்பிய இலக்கண மரபில் மருத நில அல்லது ஐந்திணை நில ஆட்சியாளர் அல்லது தெய்வம் வேந்தன் என்றும், அந்நிலத்தின் அல்லது நிலங்களின் எல்லாக் குடியரசு மரபுக் குடியாளருமே வேளாளர் என்றும் அழைக்கப்பெற்றனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அம்மரபில் வேளாளர் என்ற சொல் மருத நிலம் வாழ்மக்கள் என்ற பொதுப்பொருளும், ஐந்திணை ஆளும் மக்கள் என்ற சிறப்புப் பொருளும் ஒருங்கே கொண்டதன் சூழல் விளக்கம் இதுவே!(ஏனெனில் மருத நிலமே அன்று நாடு, நாட்டின் அகநாடாக விளங்கிற்று. இது கீழே விளக்கப்படவிருக் கிறது.)

வேளாண்மை என்ற சொல் இன்று உழவாண்மை என்ற நேரடிப் பொருளில் சில பல நூற்றாண்டுகளாகவே வழங்கத் தெடங்கியுள்ளது. ஆனால் அச்சொல் தொடக்கத்தில் உவம உருவக சொல்லாய், இன உழவாண்மை அதாவது குடியரசுப் பண்பாட்சியே குறித்து, உவம உருவகப் பொருளும் வேள் என்ற வேர்ச்சொற் பொருள்களும் பண்புகளும் மரபுகளும் மறக்கப்பட்ட பின்னாட்களிலேயே உழவாண்மை என்ற நேர் பொருள் சுட்டத் தொடங்கிற்று என்னலாம்.

கிட்டத்தட்ட இதே காலச் சூழலிலேயே பழந்தமிழ் சொற்களான நூல் (science), பனுவல் (Research), பட்டாங்கு (Philosophy) ஆகியவையும் பொருள் மரபு கெட்டழிந்து புத்தகம் (நூல், பனுவல்), மெய்ம்மை அல்லது சாத்திரம் (பட்டாங்கு) என்ற பொருள்கள் சுட்டின.

திருக்குறளையும் சங்க இலக்கியத்தையும் போலவே, தொல்காப்பியமும் ஒரே ஒரு நூற்பாவில் வேளாண்மைக்கும் உழவுக்கும் உள்ள இத்தொலைவுத் தொடர்பைச் சுட்டிக் காட்டுகிறது.

**'வேளாண் மாந்தர்க்கு**
**உழுதூண் அல்லது பிறிதூண் இல்லை'**

இங்கே உழுதூண் (உழுது ஈட்டிய உணவு உண்ணுதல்) பிறிதூண் (பிற வழியில் ஈட்டிய உணவு உண்ணுதல்) இல்லை (எதிர்மறை வலியுறுத்து) ஆகிய அரிய வழக்குகளின் பொருட் பண்புகளை உரையாசிரியரும் பிறரும் காணாது குடியரசு மரபு மறந்த தம் கால மயக்கங்களுக்கேற்றபடி பொருள் கூறிச் சென்றனர். உழவு, உழைப்பு ஆகிய சொற்பகுதித் தொடர்புகளும் அவர்கள் கால ஊழி காணாதவை ஆகும்.

பேரரசன் அவுரங்கசீப் கிட்டத்தட்ட இந்தியா முழுதாண்ட நிலையிலும் தலையணி தைத்தும் வேதநூல்படி செய்துமே தம் வாழ்வு நடத்தினார். உலகில் எந்தப் பேரரசும் காணாத பெருவளம் பெருக்கிய இங்காப் பேரரசர் தம் உணவுக்குத் தாமே உழைத்தனர். தமிழக மரபிலேயே ஏகம்பவாணரும் சடையப்ப வள்ளலும் ஆயிரவேலி, ஆயிர ஏர் படைத்தவராயினும், தாமே முதல் ஏர் பிடித்து உழைத்து உண்டு பிறரையும் உண்பித்தவர் ஆவர். தொல்காப்பிய நூற்பா குறித்த தமிழ்க் கருத்து மரபு இதுவே. வேளாளர் என்பவர் வள்ளுவர் பண்பு வழுவாது தாமே உழுதுஉண்டு (உழைத்துப் பெற்ற பொருளே தாமும் துய்த்து) அது கொண்டே உலகு புரத்தற்கும் உரியர். இது பிற்காலத்தவர் கருதியது போல வேளாளர்க்குரிய புகழ்ப் பண்பு அல்லது புலவர் பாடும் சிறப்புப் பண்பு அன்று - வேளாளர் என்ற சொல்லே குறித்த (வேள்நிலைப் பண்பாட்சியாளர் என்ற பொருள் ஆகும்.

வேளாளர் இனத்துக்கே உரிய காப்பியம் என்று கருதத்தக்கது **ஏர் எழுபது.** அதனைப் பாடிய கம்பநாடர் திருவள்ளுவரைப் போலவே வேளிர் பெருமைகள் (அரச மரபினர் பெருமைகள்)

சமயவாணர் பெருமைகள் ஆகியவற்றையெல்லாம் வேளாளர் பெருமையாகப் பாராட்டத் தவறவில்லை. குடிமன்னர், பண்பு மன்னர், வணிக மன்னர், என்று அவர்களைப் புகழவும் அவர் தயங்கவில்லை. ஆனால் திருவள்ளுவர் வேளிருக்குரிய நேரடிப் பெருமையாகக் கூறியவற்றையெல்லாம் (வேள்வி, வேளாண்மை) அவர் உழவுக்கும் உழவர்க்கும் மட்டுமே உரியதாகப் பாடுகிறார். அவர் காலத்துக்குள் ஏற்பட்ட அரசியல், சமய, சமுதாய மாறுதல் களிடையே, வேள் மரபின் அம் மும்மரபுக் கூறுகளும் மறக்கப் பட்டு விட்ட நிலையையே இது காட்டுகிறது.

ஆரிய (அதாவது இந்தோ-ஐரோப்பிய இனப் பேராராய்ச்சி யாளரான அறிஞர் ராகுல் சங்கிருத்தியாயனர் (Volga to Ganga என்ற தம் ஆராய்ச்சியடிப்படையான கலை- ஏட்டில்) அவ்வினத் தவரிடையே உழவும் ஏரும் புதிது புகுந்த காலநிலையை (கி.மு. 1000) நமக்குச் சித்தரித்து காட்டியுள்ளார். நாகரிக உலகில் உழவுக்கு முற்பட்ட ஐந்திணைச் சிறுபயிர்த் தொழிலுக்குரிய காலத் தொல் பழமையை இது நமக்குக் கருத்துருவில் வழங்கு வதாகும். ஏனெனில் ஆரியர் அதனை நாகரிக உலகில் வந்து கைக்கொள்வதற்குப் பன்னூறாண்டுகளுக்கு முன்னரே அது நாகரிக உலகில், சிறப்பாகத் தமிழகத்தில் பரவிவிட்டதாதல் வேண்டும்.

நாகரிக உலகில் ஆதி நாட்களில் உழவில்லாமலே ஐந்திணைகளிலும் இயல்பான சிறுவளம் அல்லது முறையான சிறு பயிர்த் தொழில் வளங்கள் இருந்தன. இன்றைய நாகரிக உலகின் கூல வகைகள், காய் கனி பூ- வகைகளில் பலவும் வளர்ப்பு விலங்கு புட்களில் பலவும் ஏரும் களைக்கொட்டும் வண்டிகளும் (சக்கரங்களும்) கூட அன்று கண்டுணரப்பட வில்லை. மேலே கூறியுள்ளபடி, குறிஞ்சி முல்லைப்படிகள் கடந்து, மனித இன நாகரீகம் மருத நிலத்தில் ஊன்றி ஐந்திணை யளாவப் பரவிய வேளாண்மை மலர்ச்சிக் காலத்திலேயே இவை யாவும் உலகெங்கும் படிப்படியாக வளர்ந்தன. தொழில் (கூடி வினையாற்றுதல் தொழு, மாட்டுப்பட்டி; தொழுதி, கூட்டம்), பயிர் பயிர்ப்பு (நீடித்துப் பயின்று வருவது நீண்ட காலம் பயிற்று வித்துப் படைத்துருவாக்கி வளர்க்கப்படுவது; ஆயிரங்காலத்துப் பயிர் என்ற வழக்கு காண்க) என்ற தமிழ்ச் சொற்கள் இம்மலர்ச்சி களையே சுட்டுகின்றன. இன்று எல்லா வகை ஆற்றல்கள்,

திறங்கள், அறிவுகள் உடைய மக்களும் சிற்றூர்களிலிருந்து நகரங்களில் வந்து குழுமி மீண்டும் சிற்றூர்ப் பரப்புகளின் மீது ஆட்சி பரப்புவது போலவே, மருதநில ஐந்திணை மலர்ச்சியூழியிலும் பேருழவாண்மை பெருந்தொழிலாண்மை ஆட்சித் திறலாண்மை அருந்திற அறிவாண்மை பண்பாட்சி ஆகியவற்றில் பயின்ற மக்கள் எல்லாத் திணைகளிலுமிருந்து மையத்திணையான மருதத் திணையிலமையப் பெற்ற ஐந்திணை நாட்டுத் தலைநகரங்களைச் சூழவந்து கூடி மீண்டும் ஐந்திணை யளாவப் பரவி உழவாட்சி, தொழிலாட்சி, வாணிக ஆட்சி முதலானவற்றில் தலைப் பட்டனர். புதிய கூலவகைகளையும் புதிய பயிர் முறைகளையும் கருவிகளையும் (ஏருழவையும்) புதிய கால்நடை பயிர்ப்பினங்களையும் (cattle breeding) மருத நிலத்துக்குக் கொண்டுவந்து அவற்றை மீண்டும் ஐந்திணைகளிலும் பரப்பியவர்கள் அவர்களே. விதை வளத்துடன் மண்வளமும் உரவளமும் கண்டு வையவித்த வளம் பெருக்கியவர்களும், உழவுக்கும் உழவர்க்கும் வளம் தரும் கால்நடை வளர்ப்பு, பால் வளப் பண்ணை, வாணிகம், நெசவு, உலோகத் தொழில் முதலிய பிற தொழிலாட்சிகள் கண்டு பெருக்கியவர்களும் கலைகள் இயல்கள் அறிவு நூல்கள் படைத்துக் கோளாளராகவும் தாளாளராகவும் ஒருங்கே விளங்கியவர்களும் இந்த இன உழவாட்சியாளராகிய பெரு வேளாளரேயாவர்.

இங்ஙனமாக இந்தியாவில் முடியரசின் முதல் இரு ஊழிகளில் பிராமணரும் வேளாள்ரும் (தமிழ்; வேளாளர் இன உழவாளர்; அந்தணர்-அந்தண்மை அதாவது மழையின் பண்பு உடையவர்; பார்ப்பார்- வாழ்க்கை இலக்கு நோக்குபவர்) உட்பட்ட ஆட்சிப் பெருங்குடி மக்கள் ஐந்திணைகளிலிருந்தும் வந்து மருத நிலத்தில் குழுமி, திணை மரபு கடந்த புதிய சமுதாயத்தின் ஆளும் வகுப்பினராய்ப் பரவினர். அவர்களில் பெரும்பாலோர் ஆட்சி யிழந்த பழைய வேளிரும் வேள்புலக் குடியரசு மரபில் வந்த தன்னாட்சி யாளருமேயாவர். அவர்கள் பேணிய பிறப்பு மரபு முற்றிலும் நேரடியான ஆதி மனித இனப்பிரிவுக்கு (Tribal Organisation) உரியது அன்று; நேர் மாறாக, அது குடியரசு மரபில் வந்த அதன் நாகரிக உலகச் சமுதாய மலர்ச்சி வடிவமேயாகும். அத்துடன் மேலே குறித்தபடி (கீழே விளக்கப்படும் முறையில்) முதலிரு ஊழிகளிலும் மன்னர் வழங்கிய பட்டங்கள் இப் பெரு வகுப்பினரின் தொகையைப் பெருக்கியதனுடனன்றி, (மேலை யுலகப் பெருமக்கள் பட்டங்கள் போலவே) வழி வழி மரபுத்

தொடர்பையும் வலியுறுத்தின. பட்டங்களின் வேறுபாட்டால், அவர்களிடையே மரபு வேறுபாடுகளும் பெருகின. வேளாளர் என்ற ஒரே நாகரிக சமுதாயத்தின் தேசீய இனம் இதனால் மூவகுப்புகள், அவற்றின் சாதி மரபுகளாக நாளடைவில் பிளந்து தகர்வுற நேர்ந்தது.

பொதுவாக முதல் இருதள ஊழிகளிலேயே பொதுமக்கள், பெருமக்கள் என்ற இரு வகுப்பு வேறுபாடு மெல்லத் தலை தூக்கிற்று என்னலாம். ஏனெனில் குடியாட்சியில் ஆள்வோர்-ஆளப்படுவோர் வேறுபாடு கிடையாது. ஆனால் முடியாட்சியில் தொன்று தொட்டு நிலவிய தனி உயர்வு பெறாத பழங்குடிகளே பெரிதும் பொதுநிலை மக்களாயினர். புதிய குடியாட்சி மரபினரும் (தன்னாட்சி நகர், தன்னாட்சித் தொழிற்குழுக்கள் ஆகியவை சார்ந்தவர்களும் அவர்களுடன் வந்த அருந்திறலாளர், அறிவாளர், பெருந்தொழிலாட்சியாளர், முடியரசரால் உயர்த்தப்பட்டவர்கள் ஆகியோரும்) பெருமக்கள் வகுப்பாகத் திரண்டனர். மேலே கண்டபடி, குடியாட்சி மரபின் புதுமலர்ச்சியால் வந்த வாணிகத் தொழில் நிறுவனக் குழுக்கள் தன்னாட்சி நகரக் குழுக்கள் ஆகியவையும் புதுமரபுகளாக இணைந்து பெருமக்கள் வகுப்பைப் பெருக்கின. வழிவழி மரபாக வந்த பட்டங்கள் அவர்கள் உயர்வு களின் அல்லது பிரிவுகளின் சின்னங்கள் ஆயின.

தமிழகம், தென்னகம் உட்பட இந்தியா எங்குமே (புற உலகில் கூட) இம்மன்னரூழிக் காலப்பட்டங்களே பல சாதி மரபு, குடிமரபுகளின் பெயர்களாகவோ அல்லது மரபுச் சின்னங் களாகவோ அல்லது அதன் மதிப்புக் குறியீடுகளாகவோ பெய ருடன் ஒட்டிய குடிப்பெயராக வழங்குவது காணலாம். இயற் பெயர்கள் போலன்றி தூய தாய்மொழிச் சொற்களாய், அதாவது தாய்நிலை தாய் இனமரபுச் சொற்களாய், விளங்கும் இப்பெயர்கள் மனித இன வரலாற்றாய்வுத் துறையில் உயிர்நிலை முதன்மை யானவை என்று கருதத்தக்கவை ஆகும்.

பட்டங்களின் எல்லையும் சாதிமரபுகளின் எல்லையும் எப்போதும் முற்றிலும் ஒன்றுபட்டு நிலவுவதில்லை. சில பட்டங் கள் சாதி அல்லது சாதிக்குழு குறிப்பவையாகவும், சில பட்டங்கள் வேறு வேறு சாதி மரபு, வருண மரபுகளுக்கிடையில் விரவியவை யாகவும் வழங்குகின்றன. ஏனெனில் சாதிமரபுகள் என்பவை குடிமரபு, குலமரபு, வகுப்பு மரபுப் பட்டங்களின் வேறுபாடுகள்,

தொழிற்குழுக்கள் தன்னாட்சிக் குழுக்கள் முதலிய பல்வேறு மரபுகள் வழிவந்தவை ஆகும். அத்துடன் மூன்றாம் ஊழிகாலத்தில் புதியவகுப்பு பரப்பிய வருணமுறையாட்சியில் சாதி மரபுகளின் படிநிலையானது வகுப்பினுள் மட்டுமின்றி வகுப்புக்கு வகுப்பு அதாவது வருணத்திற்கு வருணம் என்ற நிலையிலும் உயர்த்தப் பட்டும் தாழ்த்தப்பட்டும் மாறுபட்டு வந்தது.

வேள்புலக் குடியரசர் ஊழியில் மேலே சுட்டியபடி வகுப்பு வேறுபாடே கிடையாது. அறிஞர் ரூசோ (18-ம் நூற்றாண்டு) அறிஞர் கார்ல் மார்க்ஸ் (19-ம் நூற்றாண்டு) ஆகியோர் இதனையே ஆதி சமதரும அல்லது ஆதிப் பொதுவுடைமைச் சமுதாய ஊழி என்று குறித்தனர். அத்துடன் இவ்வூழியில் கோவரசர் அல்லது குடியரசருடன் அவர்கள் சார்ந்த குழுவின் எல்லாக் குடிமக்களும் உறவினரே - பிறப்புவழியுறவு, மணவழியுறவு அல்லது உணர்வுறவு அல்லது மரபுறவு அல்லது பண்புறவு பேணியவர்களேயாவர். வேளிர் வழி வந்த முடியரசரும் பிறரும் தொடக்கத்தில் இம்மரபு மறவாது அதனை உணர்வு வழிமரபாகக் கொண்டவர்களேயாவர்.

உறவு முறைகளைச் சமுதாய எல்லை முழுவதிலும் கணித்து எண்கணிப்புப் போலப் பரப்பி உறவுப் பெயரிடும் ஆற்றல் இன்னும் உலக மொழிகளிடையே தமிழுக்கு மட்டுமே உண்டு என்பது ஓர்ந்து காணத்தக்க செய்தி ஆகும். மானியங்கள் சிறப் புரிமைகள், ஆகியவற்றுடன் சேர்த்து மன்னர்வழங்கிய பட்டங் களில் தலையானவை இத்தகைய உணர்வுறவுத் தன்மை வாய்ந்த உறவுமுறைப் பட்டங்களேயாகும். அதே சமயம் அப்பட்டங் களைப் பெறுபவரின் அறிவு, திறமை, பதவி, சேவை, தனி மரபுகள், தனித்துறைச் சிறப்பு ஆகியவற்றைக் குறிப்பவையாகவும் பல பட்டங்கள் அமைந்தன.

பண்டை ஆய்வேள் மரபில் வந்து அரச, பேரரச மரபின ராகவே ஆண்ட யாதவரும் இரட்டரும் அம்மரபுகளே சுட்டிக் கோன், கோனார் (கோவரசர்), மாதவர், ரெட்டி (ராஸ்ட்ரம்வேள்-வேள் என்ற சொல்லின் மரூஉ; ச்ரேஸ்டி - முதலியார் என்பதன் மரூஉ எனவும் கொள்வதுண்டு) என்றும் வழங்கப்பட்டனர். ராஜீ (ராஜ-வேளிர்) ராயர் அல்லது அரையர் அல்லது முத்துராஜா (முத்து-அரசர்; மூன்று தரை ஆண்டவர் என்று கொள்வதும் உண்டு) முதலியவையும் இது போன்றவையாகும்.

வேளிர் அல்லது வேள் குடியினர் அல்லது அதற்கு ஈடான சிறப்புப் பெற்றவர்கள் மன்னரால் சிற்றரசர் அல்லது இளவரசராகக் கருதப்பட்டு பிள்ளை என்ற பட்டம் வழங்கப்பட்டனர். முடியரசுக் குரிய கூரிய அல்லது முக்கதுப்புடைய மணிமுடியன்றி (crown) இளவரசன் அணியும் வளைவான முடி (பண்டைத்தமிழ்: மண்டை ஆங்கிலம்; coronet) பண்டைவேளிருக்குரியதேயாகும். உல கெங்கும் பெருமக்கள் அணியும் தலைப்பாகைக்குரிய மூலமரபு இதுவே என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது ஆகும்!

மேல்கடற்கரையில் யூதர் அல்லது சிரியா நாட்டுக் கிறித்தவ வணிகரும் அரபு நாட்டு இசுலாமிய வணிகரும் இதற்கு ஈடான பட்டமாக மாப்பிள்ளை (Mappillias சிரிய கிரித்தவர்; Moplahs, அராபிய இசுலாமியர்) என்று சிறப்பிக்கப்பட்டனர்.

தந்தை பெயர் பிள்ளைக்குப் பட்டமாவதுபோல, சமுதாய ஆட்சித்துறைகளிலும் சிறப்பு வாய்ந்தவர்க்கு மன்னர் தம் பெயர், மரபுப்பெயர், விருதுப்பெயர் ஆகியவற்றையே பட்டமாக அளித்தனர். மன்னர் மரபினரேயன்றி மன்னரை வென்ற பிற மன்னரும் அவர்களின் படைத்தலைவரும் துணைவரும் வெல்லப் பட்டவர் பெயர்களை விருதுப்பெயர்களாக ஏற்றனர். இதனால் பல்லவரும் கலிங்கரும் அவர்களை வென்ற அரசரும் படைத் தலைவர்களும் அவர்களால் பட்டமளிக்கப்பட்டவரும் ஒருங்கே பல்லவராய், காளிங்கராயர் போன்ற பட்டங்கள் தாங்கினர். (வேளாளரிடமும் அவர்களுடன் ஒத்த வேறுபல மரபினரிடமும் இவற்றை நாம் இன்று காணலாம்)

பிள்ளை, மாப்பிள்ளை என்பது போன்ற, ஆனால் அதனினும் மதிப்புமிக்க பட்டமாக தம்பி, தங்கச்சி, நம்பி, நம்-தம்பி, நம்பியார்- (கேரள மக்கள்திறக் குருமார்) நம்பூதிரி (நம்பிதிரு) தம்பிரான் (திருவாங்கூர் அரசன் தந்தைமரபு) எம்பிரான் திரி (எம்பிரான் திரு) சாமூதிரி (சாமிதிரு) போன்ற பட்டங்கள் வேள் நிலையிலேயே உரிமையுடன் வாழ்ந்த பெருமக்கள், சமயக்குருமார் ஆகியோ ருக்குத் தரப்பட்டன.

அரசகுருவாக மூன்றாம் ஊழியில் உயர்த்தப்பட்ட பெருங்குடி மக்களும் பிறரும் அவ்விரு ஊழிகளிலுமே ஐயர் (தந்தை) ஐங்கார் (ஐயன்-தந்தை; காரு-தெலுங்கு மொழியின் மதிப்பு விகுதி) ஐயா (தந்தை, பாட்டன்), போற்றி (நாஞ்சில் நாட்டு வழக்கு; பாட்டன்; போற்றுதற்குரியவர்) எனச் சிறப்பிக்கப்பட்டனர், வட இந்தியா

வெங்கும் பண்டிதர் (காசுமீர பிராமணர்) பண்டா (ஒரிய பிராமணர்), பண்ட் (வடமாநிலப் பிராமணர்), பட்டர் (படித்துப் பட்டம் பெற்றவர்) என்ற விருதுகள் வழிவழி மரபாகிச் சாதிமரபு (பெரும்பாலும் பிராமண மரபு) குறிக்கின்றன.

அரசியல் வகுப்பாக மாறாத நிலையில் இந்தியாவெங்கும் கோயில் குருமார் பிற்பட்ட வகுப்பினராகவே வாழ்கின்றனர். தமிழகத்தில் ஆண்டி (ஆண்டை-கடவுள் முருகன்) பண்டாரம் ஆகியோர் பிற்பட்ட வகுப்புகளுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பண்டை அன்னை வழிப்பாட்டாளர் மரபு (கடவுளடியார் வகுப்பு) நிலையும் இதுவே. அது தென்னகத்தில் இசை வேளாளராகவும் வடமேற்கு இந்தியாவில் நட், நட்வர் எனும் தாழ்த்தப்பட்ட மரபாகவும் நிலவுகின்றது.

சங்ககாலத்தில் வணிகராவோர் செட்டி, எட்டி, காவிதி எனப்படிப்படியாக உயரிய பட்டங்கள் வழங்கப்பட்டிருந்தனர். இவற்றுள் செட்டி (செட்டு-கட்டுதிட்டம் வாணிகக்குழு: சமஸ் கிருதம்; ச்ரேஷ்டி; குசராத்தி; shetty sait) மட்டுமே இன்று வழங்கு கிறது. பன்னாட்டு வாணிகம் கடல் வாணிகம் சுட்டிய மற்ற இரு பட்டங்களும் வழக்கிறந்தன.

படைத்துறை, கப்பல் துறை, கப்பற் படைத்துறை ஆகிய வற்றின் சார்பில் படையாட்சி (வன்னிய மரபினர்) முதலி (படை முதலிய Lieutenant), நாய்கர் (நாய்கன், மாநாய்கன்-கப்பல் தலைவன், நாவாய்-கப்பல்), நாயர் (ஐதர் அலி காலம் வரை ஆந்திரப் படைவீரர்) என்ற பட்டங்கள் வழங்கின. அயலாட்சிக் காலத்திலும் இன்னும் கூட நாயக் என்பது (Lieutenant Naik) படைத்துறைப்பட்டமாகவே வழங்கி வருகிறது.

குடும்ப மரபுத் தொழிலாகிய நெசவுத் தொழில் உயர் வுடையதாகக் கருதப்பட்டதனால் அத்தொழிலாளர் சேணியர் (சேண்-உயர்வு), சாலியர் (சால், சால்பு-மேன்மை) ஆரியர் (ஆர்-நிறைவு) பட்டாரியர் (படுமுனைப்பான: அல்லது பட்டா சாரியார்; பட்டம், ஆரியர்) எனச் சிறப்பிக்கப்பட்டனர்.

விசுவாமித்திரர் மரபில் வந்த ஆரிய வேள்விக்குருமார், வேள்வி சார்ந்த கலைகளான (வேதாங்கங்கள்) மருத்துவம், அறுவை, வானூல், நிலக்கணிப்பு, காலக் கணிப்பு ஆகிய துறை அறிஞர் ஆகியோர், சோமாசி (சோமயாஜி, சோமயாகம் செய்தவர்)

சட்டர்ஜி (சத்ரஜித்-சத்ரவேள்வி வீரம்) ஆசிரியர் அல்லது ஆசாரியர் (ஆச்சாரி என்ற தமிழ்வடிவில் பிராமண மரபு, ஆசாரி என்ற தமிழ் வடிவில் கம்மியர் மரபு), வேளார் (குயவர் அல்லது வேட்கோவர்) ஆயினர். மூன்றாம் ஊழியில் இவர்களில் பலர் நடுத்தர வகுப்பினும் கீழ்நிலைப்படிகளுக்குத் தாழ்த்தப்பட்டு அணிமைக்காலங்களில் இடங்கை வலங்கைப் போராட்டத்தில் இடங்கையராக நின்று போராடும் நிலைப்பெற்றனர். சௌராட்டிர நாட்டுப்பிராமணர், கேரளத்தில் அப்பளமிடும் பிராமணர், நாடக மாடும் பிராமணர் ஆகியோர் நிலையும் இதுவே.

மூன்றாம் ஊழிக்காலத்தில் குடியரசு மரபில் வளர்ந்த புத்த சமண சமயங்களில் நீடித்த பெருமக்கள் வகுப்பினர் (வேளிர் அல்லது சத்திரியர்) வட மாநிலத்தில் நான்காம் வகுப்பினர் (சூத்திரர்) ஆக்கப்பெற்றனர் என்பதைப் பேரறிஞர் பண்டாரகர் அம்பேத்கர் (Who Are Sudras) விளக்கியுள்ளார்.

குடியரசு மரபில் வந்த ஊர்க் கணக்கர் மரபு தென்னகத்தில் கருணிக வேளாளராகவும் (வள்ளலார் பெருமான் பிறந்த மரபு) குசராத்தில் நாகர பிராமண மரபாகவும் வடஇந்தியப் பரப்பில் நாகரீ எழுத்தைப் படைத்து வழங்கிய காயஸ்த பிராமண மரபாகவும் இயல்கின்றது.

உழவுத் தொழிலில் சிறந்தவர்க்கென்று தமிழகத்திலன்றி வேறு எந்நாட்டிலும் சங்க காலத்திலன்றி, வேறெக்காலத்திலும் அரசரால் தனிப்பட்டம் வழங்கப்பட்டதாக அறியக்கூடவில்லை. அத்துடன் அந்நாளில் வேளிர் மரபினரின் ஒரு பகுதியினர் மட்டுமே தனிப்பட அருந்திறப் பெருந்தொழிலாய் அன்று நிலவிய இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்று கருத இடம் உண்டு. ஏனெனில் கிழார் என்ற இதற்குரியபட்டம் பெற்ற வரும் பெறாதவரும் சங்க காலத்தில் இம்மரபுக்குரிய புலவர் களுள் இடம்பெற்றிருந்தனர் என்று காண்கிறோம். உயர் உழ வாண்மையை உள்ளடக்கிய வேளாண்மை மலர்ச்சி சங்க காலத் துக்கு முன்னரே பெருகத் தொடங்கிவிட்டது என்பதை இது காட்டுகிறது. சங்க காலத்துக்குப் பின்னோ, படிப்படியாக நாட்டின் மற்ற தொழில்கள், வாணிகம் ஆகிவற்றைத் தாண்டி உழவாண் மையே பெரும்பாலார் தொழிலாகி (பஞ்சம், வறுமை காரணமாக) வளர்ந்துவிட்டதனால் வேளாண்மை என்ற பெயரே நாளடைவில் உழவாண்மை என்ற நேரடிப் பொருள் கொள்ளத் தொடங்கிவிட்டது.

தொழிலும் வாணிகத்திலும் செல்வ வளத்திலும் கல்வி வளத்திலும் உலகில் முதலிடம் வகித்த தமிழகமும், இந்தியாவும், சீனமும், கீழை நாடுகளும் அணிமை அயலாட்சிக் காலங்களி லேயே (கி.பி.16ம் நூற்றாண்டின் விசய நகர ஆட்சிக்குப் பிறபட்டே, திடுமெனச் சரிவுற்று, மீண்டும் முற்றிலும் சிறுதிற உழவும் சிறுதிற அரைகுறைக் கல்வியும் சிறு கைத்தொழிலும் நம்பி வாழ வேண்டிய பண்பிலா அடிமை வறுமைப் பரப்புகளாக மாறின. அயலாட்சியாளர் மேலையுலகப் புதிய முதலாளித்துவ வேட்டையாளர் ஆகியோருக்கும் கீழையுலகச் சாதி வருணக்குழு நல வேடருக்கும் இந்நிலை ஒருங்கே உகந்ததாயிருந்தது. தேசீயத் தலைவர்கள்கூட வரலாறும் மரபும் மறந்த இந்தச் சூழ்நிலையே பண்டைய இந்தியா என நம்பி அதனை கிராம எளிய வாழ்வு வாழ்ந்த இந்தியா, ஆன்மீக இந்தியா, என அயலாட்சி வகுப்பினர் காதுகளுக்கினிதாகப் பாடி வந்தனர். (கார்ல் மார்க்சும் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றறிஞர் சிலரும் இம்மயக்க மாறாட் டத்தைக் கடிந்து மெய்மை சுட்ட முயன்றுள்ளனர்.)

கோவரசு மரபின் மூவொருமை இறைமை மலர்ச்சியுடன் மலர்ச்சியாகவே தமிழர் முப்பால் அல்லது மூவேதம் (பழைய ஆரியரின் மூவேதம் இதே மரபினதே) முப்பால் நெறி, முத்தமிழ், இவற்றுடனொத்த தொழில், கலை, அறிவுத்துறைகளின் மும்மை நூல்களில் பயின்றவர் என்ற முறையிலேயே பண்டைச் சமய குருமாருக்கும் தொழிலாசிரியருக்கும் (அம்மரபிலே இன்று பிராமணர் கம்மியர் போன்றோருக்கும்) முப்புரி அல்லது மும்மை முப்புரிநூல் படித்தவர் என்ற சிறப்புத் தோன்ற மதிப்புச் சின்ன மாயிற்று. அக ஆட்சிச் சின்னமாகக் கொங்கு நாட்டிலேயே பிறந்த மும்முடிச் சின்னமாகிய மூன்று முடியிட்ட தாலி மரபினை ஒத்த, புற ஆட்சி சின்னமே இது என்பது நோக்கத்தக்கதாகும் (வெற்றிச் சின்னமாகிய பொட்டு நெற்றியில் இடப்படுவது போல, ஆட்சிச் சின்னங்களாகிய இவை கழுத்திலும் தோளிலும் அணியப்படு கின்றன.)

தமிழரிடையே நான்காம் வேதம் என்ற மரபு திருக்குறளில் முப்பாலுக்கு ஆன்மிகத் திறவு கோலாக வைக்கப்பெற்றுள்ள பாயிரம் (அகல் இந்திய மரபில் உபநிடதம், ஆகமம் போன்றது) குறிப்பதாகும். அரசகுருவினராக விளங்கிய மூன்றாம் ஊழிக்குரிய புதிய வகுப்பினர் இதே மரபில் தமக்கென வகுத்துக் கொண்ட

நான்காம் வேதமே அதர்வ அல்லது அதர்வண வேதம் (அதர்வன்-அரசகுரு) ஆகும். தமிழகத்துக்கு வெளியே நால்வேத மரபு முற்றிலும் பரவாத நிலையின் விளக்கம் இதுவே.

நாகரீக உலகினின்று இந்தியா வேறுபட்டு உயர்வுற்று வழிகாட்டும் தலைமை நிலையே வகிப்பதற்குக் காரணமாயிருந்தது. வேள்புலக் குடியாட்சி மரபும் அதன் வழியிலிருந்து பெரிதும் விலகாதிருந்த (ஐங்குரவர் மரபு பேணிய) ஆதி முடியரசு மரபுமே யாகும். ஆனால் இந்தியா வேறுபட்டதனுடன் அமையாமல், முதலில் சமய சமுதாய அறிவுப்பண்பாட்டிலும் பின்தொழில் வாணிகச் செல்வவளங்களிலும் படிப்படியாகத் தாழ்ச்சியுற்று அடிமைக் கீழ்த்திசையின் அடிமை நாயகமாக மாறி வந்தமைக்கு முடியரசின் இரண்டாம், மூன்றாம் ஊழிகள், சிறப்பாக மூன்றாம் ஊழியே காரணம் ஆகும். அவ்வூழிகளில் முற்றிலும் மறக்கடிக்கப் பட்டு வந்துள்ள குடியரசு (தமிழ்) மரபுகளும், குடியரசு பண்புகளும் பண்பாடுகளுமே உயிர் மலர்ச்சியிழந்த சாதி வருண மரபு, அதன் சார்பான சமநிலையுணர்வும் உயிர்த்துடிப்புமற்ற இந்து சமய வாழ்வு, இந்திய தேசீய வாழ்வு ஆகியவற்றைச் சீரமைத்து உயிர்பூட்டவல்லவை ஆகும். அதற்குரிய திறவு மேலையுலக நாகரீகமரபில் இல்லை-தமிழ் மரபில், கொங்குத் தமிழக மரபிலேயே பொதிந்து கிடக்கிறது.

நாகரீக உலகில் இந்தியாவின் வேறுபாடுகளை மட்டுமன்றி, இந்தியாவில் தெற்கு, வடக்கு, மேற்கு கிழக்குப் பரப்புகள், தென்னகம், தமிழகம் ஆகியவற்றின் வேறுபாடுகளையும், அவற்றுள் கொங்குத் தமிழகத்தின் தனித்தன்மைகளையும் முத்தள ஊழிகளின் செயற்பாடுகளே விளக்குகின்றன.

இந்தியாவின் வடமேற்கு, வடக்குப் பரப்புகளில் ஆட்சியாளரிடையிலும் பழைய ஆட்சி வகுப்பாகிய நடுத்தர வகுப்பினரிடையிலும் அயலினத்தவர் மிகுதி கலப்புற்றிருந்தனர். புதிய வருண முறைச் சமுதாயத்தில் எளிதாகத் தம் உயர்வை நிலை நாட்டிக் கொள்ளும் ஆர்வத்தால் அவர்கள் புதிய வகுப்பினருடன் மனமார ஒத்துழைத்து இரண்டாம் அல்லது மூன்றாம் வருணமாக இடம் பெற்றனர்.

வேளிர் மரபை விடாது காத்த இராசஸ்தான் (இராசபுதனம்: ராஜ், ரஜபுத்ர-வேள்) பரப்பின் வீர மக்கள் புதிய இசுலாமியப்

படையெழுச்சியைத் தடுக்க உதவிய நிலை ஏற்பட்டபோது அவர்களுக்கு தனிச் சலுகையாக அக்கினி மரபு என்ற புதிய மரபு படைத்துருவாக்கி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் முகலாய ஆட்சி, சிறப்பாக அக்பர் ஆட்சி, புதிய வகுப்பினரை மேலும் உயர்த்திய நிலையிலேயே அதே வேளிர் மரபினராகிய மராத்தியர், தென்மராத்தியராகிய கொங்கணியர் (சிவாஜி மரபினர்) ஆகியோருக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டது. (வான்புகழ் அறிஞர் அண்ணாவின் சந்திரமோகன் நாடகம் இக்காட்சியை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது)

தமிழகத்திலிருந்து குடியரசு மரபிலூறிய கொங்குப் பரப்புக் கடந்த வடபால் பரவிய சைவ, வீரசைவ வைணவ சமய எழுச்சி கள் காரணமாக, கோயிற்குருக்கள் உட்பட்ட பழைய ஆட்சி வகுப்பினர் அனைவரிடையேயும் (பக்திப் பண்பில் ஈடுபட்ட புதிய வகுப்பினரிடம் கூட) சாதி வருண எதிர்ப்பு முனைப்பா யிருந்தது. (பகவத் கீதையும் ஞான தேவரது (பகவத் கீதையின் மராத்திய மொழி பெயர்ப்பும் இதற்கு முனைப்பான சான்றுகள் ஆகும்) இப்பரப்புகளே புத்த சமண நெறிகள் நீடித்து நிலவிய பகுதிகள் ஆகும். ஒரே வருணம் என்ற முறைமை தென்னகம் முழுவதும் செயற்படுத்தப்பட்ட நிலைக்குரிய விளக்கமும் இதுவே. வட மாநிலத்தைப் போலவே இத்தென்பரப்பிலும் பழைய ஆட்சி வகுப்பினர் அனைவருமே நான்காம் வகுப்பு (சூத்திரர்) என்ற புதிய இடைநிலை வகுப்பில் சேர்க்கப் பட்டனர்.

இந்தியாவின் மேல்கோடியிலும் (பாக்கிஸ்தானின் சிந்து மாநிலத்திலும்) கீழ் கோடியிலும் (வங்காள தேசத்திலும்) இந் நான்காம் வகுப்பு மரபு பரப்பப்படவில்லை. இதே பரப்புகள் சோழ, சாளுக்கிய ஆட்சிகளுக்கும் உட்படாது தமிழ் இந்திய நாகரீகப் பரப்பின் புறப்பகுதிகளாகவே அமைந்தன. இந்நிலை யிலேயே இவ்விரு கோடிகளிலும் வரலாற்றுக் காலங்களில் இசுலாமும் அயற்பண்பாடுகளும் எளிதில் காலூன்றி அவற்றை அணிமைக்காலங்களில் இந்தியாவின் அண்டை நாடுகளாக்க நேர்ந்தது.

கொங்கு நாட்டைப் போலவே தொண்டை நாடும் குடியரசுப் பரப்பாக அமைந்த போதிலும், அது அம்மரபின் சமதருமப் பண்பை (வருணமுறை எதிர்ப்பை) விட சமய அறிவுப் பண்பி லேயே பெரிதும் கருத்தூன்றிற்று. பல்லவர் காலமுதல் அது

பண்டைக் குடியரசு கால இந்தியாவின் (தமிழ் அல்லது மாண்டு பட்ட தாய்மொழிகளின்) கலையறிவுப் பண்டாரங்களை புதிய வகுப்புக்குரிய சமஸ்கிருத சமய சாத்திர இலக்கிய கருவூலங் களாக வளர்ப்பதில் முந்திடம் பெற்றது. அதே சமயம் அதுவே சமய எழுச்சிகளிலும் சைவ, வீரசைவ மலர்ச்சியின் பரவாத நிலை யிலும் வைணவ மலர்ச்சியை- அதுவும் சாதி வருண மரபு எதிர்ப்பு இன்றியே- கிழக்கிந்தியாவில் பரவவிட்டது. இதனால் கீழ்திசை வைணவம் சாதி மரபின் எதிர்ப்பில் முனைப்புக் காட்டவில்லை. ஆயினும் பக்தி இயக்கம் இதனால் செறிவு குன்றிவிடவில்லை. ஏனெனில் சைவ மூவருக்கும் முற்பட்ட மணிவாசகரின் உறு முனைப்பான பக்தி இயக்கமும் ஆழ்வார்களின் செறிவான பக்திப் பண்பும் இத்திசைப் பக்தி இயக்கமாகப் பரவிற்று. மற்றும் இப் பரப்புகளிலேயே அன்னை வழிபாடும் நீடித்துள்ளது.

கொங்கு நாட்டின் மேல் பால் கடற்கரையும், அதன்மிகு தொலைவில் கீழ்பால் வங்கமும் தென்கிழக்காசியாவும் பெண் வழி ஆட்சித் தடம் முற்றிலும் மாறாமல் காத்துள்ளன. வேள்புலக் குடியரசு மலர்ச்சியின் ஆண் மரபு மலர்ச்சி முற்றிலும் சென்று பரவாத பரப்புகளே இவை, புதிய வகுப்பினரைப் பெண்ணுரிமை மறுப்புக்குப் போராட வைத்த பரப்பு இதுவே என்னலாம். கல்வித் தெய்வம் (கலைமகள்), செல்வத் தெய்வம் (திருமகள்), ஆற்றல் தெய்வம் அல்லது ஆட்சித் தெய்வும் (மலைமகள்) ஆகியவர் களையே பண்டை இந்து சமயம் பெண்பாலராகக் கொண் டிருந்தது. ஆனால் சமஸ்கிருத மரபில் வந்த புதிய இந்து சமயமோ (சுமார்த்த இந்து நெறி) உச்ச உயர் வருணப் பெண்டிர் சீதை, துரோபதை போன்ற காவிய அன்னையர், கலைமகள், மலைமகள் போன்ற பெண் தெய்வங்கள் உட்படப் பெண் பாலினம் முழு வதையுமே (சமஸ்கிருத நாடகங்களில் சமஸ்கிருதம் பேச உரிமை யற்ற) கல்வியுரிமை, செல்வ உரிமை, ஆட்சியுரிமை மறுக்கப் பட்ட நான்காம் வகுப்பினராக்க முனைத்தது. பெண்கள் தம் சாதி வருண மரபினும் உயரிய மரபினருக்கே உரியவர் என்ற மரபு முறை இப்பரப்புகளில் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்தியச் சட்டத்தில் மருமக்கள் தாயமுறை, தாயபாகமுறை போன்ற தனி வேறுபாடுகளுக்குரிய பரப்புகள் இவையே.

**சம்ஸ்கிருத இன்ப நூல்கள் (திருக்குறள் போன்ற தமிழ் மரபு நூல்களின் மரபினின்று விலகி) பெண்டிரை முற்றிலும்**

கவர்ச்சிக் சரக்காக்கி விட முனைந்துள்ளன. தற்கால மேலை யுலக நாகரிகமும் அதன் அடிவருடிகளான பல எழுத்தாளர் மரபுகளும் இன்று இதையே பின்பற்றி வருகின்றன.

தமிழக, தென்னக, இந்திய வரலாறுகள் காட்டும் இந்தப் பின்னணியிலேயே நாம் கொங்குத் தமிழகத்தின் வரலாற்றை சிறப்பாக, சமய சமுதாயப் பண்பு பண்பாடுகளின் வரலாற்றைக் காண்டல் வேண்டும். ஏனெனில் கொங்கு நாட்டு மக்களும் அறிஞர்களும் வரலாற்றாசிரியர்களும் திணைநில ஆய்வாளர் களும் காணும் கொங்கு நாட்டின் தனித்தன்மை என்பது உண்மை யில் மேற்கண்ட மூன்றுதள ஊழிகளுக்கும் மிகுதி ஆட்பட்டு மாறுபடாத நிலையேயாகும். இத்தனித்தன்மையை நாம் முக்கூறு கள் கொண்ட தனித்தன்மையாக வகுத்துணரலாம்.

முதலாவதாகக் கூறத்தக்கது மிகு பழமை ஆகும். நாகரிக உலகம், இந்தியா, தமிழகம் ஆகிய பரப்புகளில் முடியரசின் மூன்று ஊழிகளிலும், சிறப்பாக இரண்டாம், மூன்றாம் ஊழி களிலும், முனைப்பாக மூன்றாம் ஊழியில் ஏற்பட்ட புது மாறுதல் கள் கொங்குப் பரப்பை அணிமை அயலாட்சிக் காலம் வரை, இன்று வரை கூட, முற்றிலும் பாதிக்கவில்லை. எனவே கொங்கு நாட்டின் தனித்தன்மை இன்றைய கொங்கு நாட்டுக்கு மட்டுமே உரியதாயினும், அதன் பழமை தமிழகமுழுமைக்கும் இந்தியா வுக்கும் நாகரிக உலகுக்குமே பெரிதும் உரியது ஆகும்.

இரண்டாவது கூறு அத்தனித்தன்மையின், பழமை, அல்லது அப்பழமையின் தனித் தன்மை ஆகும். ஏனெனில் இத் தனித் தன்மைக்குரிய பழமையின் சாயல்கள் சங்க காலத்திலேயே, அதற்கும் முற்பட்டே தொடங்கியவை. அவை கொங்கு மக்கள் உள்ளத்தில் ஊறி வழிவழி மரபாக வந்தவை; கொங்கு நாட்டின் ஐந்திணை நிலமரபில் பிறந்து வேள்புலக் குடியரசு மரபின் ஐந்திணை மலர்ச்சியில் அதன் பிறப்பிலிருந்தே மும்முறை வடிகட்டி வந்த தொன்மையும் பழமையும் தனிச் சிறப்பும் உடை யவை.

மூன்றாவது கூற்றினையே நாம் தெய்வீகமாய் வந்தமைந்த கூறு எண்ணலாம். ஏனெனில் எல்லாத் தனித்தன்மைகளும் பழமைகளும் நல்லனவாய், கால இடங்கடந்த உலக நலன் அதாவது வள்ளுவ நலன் உடையவையாய் இருந்து தீர வேண்டும் என்பது கிடையாது. ஆனால் கொங்குப் பழமையும் கொங்குத்

தனித் தன்மையும் கடல் கொண்ட குமரித் தமிழக மரபில் தோய்ந் தவை. அவை வருங்காலக் கொங்குத் தமிழகத்துக்கும், தமிழகத் துக்கும், இந்தியாவுக்கும், நாகரிக உலகுக்கும் அகல் உலகுக்கும் கூட நீடு நலம் தருபவை - நீடு நலம் மட்டுமன்றி, அவற்றின் வாழ்வுக்கு, வளர்ச்சிக்கு இன்றியமையா உயிர் வளம் தருபவை ஆகும்.

கொங்கு நாட்டுக்கும் வெளியிலிருந்து தமிழரும், தமிழினத் தவரும், இந்தியரும் நாகரிக உலக மக்களும் பேரளவாக வந்து கலந்தும் கொள்ளும், இன்னும் கலந்துகொள்ளவிருக்கும் நம் காலங்களில் கூட, அக் கலப்பு கொங்கு மக்களின் கொங்கு மரபை-கொங்கு மக்கள் சமுதாய அமைப்பு, பண்பு, பண்பாடு ஆகியவற்றை நிலையாக மாற்றிவிட முடியவில்லை. ஏனெனில் அதன் ஆற்றல் பழமையாற்றல், தனித் தன்மை ஆற்றல் மட்டு மன்று, அது புதுமை ஆற்றலாகவும் உயிர்த்துடிப்பும் உயிர் மலர்ச்சிப் பண்பும் உடைய ஆற்றலாகவுமே இயங்குகிறது. அது புது வரவினர் பண்பை ஏற்றுத் தான் மாறுவதுடன் நில்லாமல், அவர்களையும் தன் இனமாக்கி இயைவிப்பது; தன் ஒப்பற்ற ஒத்திசைவாற்றலின் திறத்தால் அது நாளடைவில் அவர்களையும் தம் வயமாக மாற்றியமைத்து விட வல்லதாகியுள்ளது. இது வியப் புக்குரியதன்று. ஏனெனில் கொங்குப்பண்பு என்பது நாடு கடந்து, கால இடச் சூழல் கடந்து பரவவல்ல தமிழர் இறைப்பண்பு, வள்ளுவப் பண்பு ஆகும். உலக முழுவதற்கும் மனித இன நாகரிக முழுவதற்கும் உரிய பழமை நல, பயின்று வளர்ந்த பண்பு நலத்தின் மரபுத்திறம் அதுவே!

சங்க காலத்திலிருந்தே, முடியரசின் முதலாவது இரண் டாவது ஊழிகளுக்கு முன்னிருந்தே கொங்கு நாட்டு ஆட்சி முடி யரசால் முடியரசின் நேரடியாட்சியாக நடத்தப் பெறவில்லை. அது வேள்குடி மரபில் வந்த தலைவர் மூலமான குடி மரபாட்சி யாகவே இருந்து வந்தது. வேள்புலக் குடியரசர் ஆட்சிக் காலத்தில் கூட இதே நிலை இருந்திருக்க வேண்டும் என்னல் தகும். அவர்கள் ஆட்சி இயல்பான மக்கள் வாழ்க்கை நலம். குடி சமுதாய நலம் ஆகியவற்றிலிருந்து மலர்ந்து, ஆண் பெண் பாலர் உள்ளடங் கலாக இயல்பான மக்கள் தலைமை மூலமே, மக்கள் மனமறிந்த மரபு நெறிகள் மூலமே நடைபெற்றது என்பது காண்டற்குரியது ஏனெனில் அவர்களின் ஆட்சி மரபை வேளாளர்- வேட்டுவர், ஆட்சி

மரபுகளாகப் பிரித்தாள முற்பட்ட வேற்றரசரும் சரி, மற்ற நாட்டரசரும் சரி - இருசாராருக்கும் ஒரே பட்டமாகக் கொங்கர், குடவர் அல்லது கவுண்டர் அல்லது கௌடர், காமிண்டர் என்ற காவலுரிமை, ஆட்சியுரிமை விருதுகளே வழங்கினர்.

'கொங்கர்' என்ற இவ்விருதுப் பட்டம் காட்டும் உயரிய குடியாட்சிப் பண்பு அதாவது மீஉயர்வார்ந்த தேசீயப் பண்பின் திறம் நினைக்க நினைக்க இனிப்பூட்டுவதாகும். இவ்வினிப்பு, அதன் சொல்லும் பொருளும் கடந்த நாகரீக உலகின் ஒப்புயர்வற்ற பண்பினிப்பேயாகும். ஏனெனில் உண்மையான குடியரசுப் பண்பு வாய்ந்த ஒரு நாட்டில் அதன் பதிவிகளிலெல்லாம் மிக உயரிய பதவி அந்நாட்டின் குடிமகன் (இக்காலத் தமிழ்ப் பொருளான அம்பட்டனன்று, பண்டைப் பொருளான குடியுரிமையாளன், Citizen and Voter of a self-governing democracy) என்ற பதவியேயாகும். குடியரசு நாட்டின் குடியாட்சி மரபில் எல்லாப் பதவிகளையும் வழங்கும் பெரும் பதவி அதுவே! எல்லாப் பதவியினருக்கும் உரிய இன்றியமையா அடிப்படைத் தகுதியும் அதுவே!

இன்றும் உலக மொழிகளிலே, தமிழிலே கூட, 'கொங்கர்' என்றசொல் ஒன்றுக்கு மட்டுமேயுள்ள குடியரசு மரபுப்பண்பு கூர்ந்து கண்டு வியந்து பாராட்டி மகிழ்தற்குரிய ஒன்றாகும். உலகின் வேறு எந்த மக்கட் சுட்டு வழக்கும் ஒரு நாட்டுக் குடிமக்கள் பெயராகவும் அந்நாட்டின் ஆட்சியுரிமை பெற்றவர்கள் பெயராகவும் இயங்கவில்லை, இயங்கியதில்லை! கொங்கன், கொங்கர் என்ற சொல் ஒன்று மட்டுமே கொங்கு நாட்டான், கொங்கு நாடாள்பவன் என்ற இரு குடியரசு மரபுப் பொருளும் ஒருங்கே தருகின்றன. சேரன், சோழன், பாண்டியன், தமிழன், இந்தியன், ஆங்கிலேயன் போன்ற எந்தச் சொற்களும் இம்மரபுச் சிறப்புடையனவையாய் இயங்கவில்லை என்பது தெளிவு.

கொங்கு நாட்டு சாதி மரபினர் பலரும் தம் வினை தீர்க்கும் தாயத்து ஆகச் சாதிப் பெயருடன் கொங்கு என்னும் புனிதச் சொல்லை (தமிழ்: புனிறு - பிறப்பிலிருந்தே தொடரும் தூய்மை) தொங்கவிட்டுக் கொள்ள முனைவதில் வியப்பில்லை!

கொங்கு நாட்டவரிடம் காணப்படும் தமிழ் மரபிலூன்றிய இந்த ஆழ்ந்த குடியரசுப் பண்பு பண்டும் அணிமைக்காலத்திலும் முடியரசர், முடியரசின் மூன்றாம் தள ஊழிக்கால அறிஞர்

ஆகியோருக்குக் கண்ணுறுத்தலா யிருந்து வந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தற்கால ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிகளுக்கே அடிப்படையாயுள்ள பழைய வரலாற்றுக் கையேடுகள், முடியரசின் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், சாதி மரபினருக்குரிய மரபு வரலாறுகள் ஆகியவற்றையே தன் வயப் படுத்தி விடத்தக்க கால வண்ணக் கலவையாக அது செயலாற்றி யுள்ளது.

கால வண்ணத்தாலும் கால மயக்கத்தாலும் இடைக்கால அணிமைக்கால ஊழிகளில் போர் வீரர் என்ற பொருளுடைய மறவர் (மறம்; அறத்துக்கு மாறானது). அரசர் வேவுப் படை யினரான கள்வர் (திருடர், கொள்ளைக்காரர்), குடியுரிமை குறித்த குடிமகன் (அம்பட்டன்), பொதுமகன் (வேசி மகன்) பண்டைக் கோயிற் குருமாரைக் குறிக்கும் தேவராளன் (தேவடியாள்-விலைமகள்) கணியான் (வானூலார், சமயகுரு- பெண்பால்: கணிகை-வேசி), திரை மரபினரான திராவிடர் (ஓடி வந்தவர்) வேள்மரபினரான வேளாளர் (புது வடிவம்; வெள்ளாளர்-பெண் பால் வெள்ளாட்டி-வேசி) ஆகிய சொற்களைப் போலவே கொங்குத்தங்க மரபில் வந்த 'கொங்கன்' என்ற (முருகனின்) தெய்வ மரபு பெயருக்குரிய சொல்லும் பண்பற்றவன், வேலை யாள் போன்ற இழி பொருள்களுடையதாகக் கருதப்பட்டு வந்துள் ளது.

சங்க காலப் பலகணி ஒன்று மட்டுமே இவ்வகையில் தற்காலக் கொங்கு நாட்டு வரலாற்றாசிரியர் கண்களை மட்டு மன்றி, மரபு வரலாற்றாசிரியர்களின் கண்ணோட்டத்தையும் வரலாற்று வாய்ம்மைகளின் மெய் வண்ணம் நோக்கிக் கொண்டு செல்ல உதவுவதாக அமைந்துள்ளது. இது வரும் பிரிவில் விளக்கப் படவிருக்கிறது.

## iii. கொங்கு நாகரிக வளர்ச்சி:
## வேளாளர் - வேட்டுவர் மரபு மலர்ச்சி

தமிழ் என்ற சொல்லின் பண்பு விரிவே, பண்பு முனைப்பே கொங்கு என்பது. அதுபோலவே தமிழ், கொங்கு என்ற சொற் களின் மலர்ச்சி விரிவு, மலர்ச்சி முனைப்பே வேளாண்மை என்ற சொல் - அது கோமரபு, வேள்மரபு ஆகியவற்றின் மலர்ச்சி சுட்டிய சொல் ஆகும். இது போலவே, மழ கொங்கம் என்ற கொங்கு

நாட்டின் சிறப்புப் பெயரிலும் அந்நாட்டின் ஒரு பகுதியான மழநாடு என்ற பெயரிலும் இடம் பெற்ற மழ என்ற உரிச் சொல் வீரம், அழகு, இனிமை, இளமை என்றென்றும் நின்று நிலவிச் சாவா மூவா மலர்ச்சி வளம் வழங்கும் பண்பு என்ற அம் மரபின் முழுப் பொருள் வளமும் சுட்டுகிறது. வேள் (முருகன், மன்மதன்) என்ற தெய்வப்பெயரிலும் முருகன், கந்தன் (முருகு-அழகு, இளமை, தேன்; கந்தம்-மணம்; கந்தழி-இலிங்கம்) என்ற தெய்வப் பெயர்களிலும் நாம் இதே கோமரபில் வந்த இதே மரபுப் பொருள் மலர்ச்சிகளைக் காணலாம்.

தமிழ், கொங்கு, வேள், முருகு, கந்தம், மழ என்ற இந்த ஆறு சொற்களும் இவ்வாறு (முருகவேளின் ஆறு முகங்கள் எனும்படி) கோமரபில் வந்த தமிழ் மரபு, கொங்கு மரபு, முருகன் மரபு, மழவர் மரபு, வேளாண்மை - வேட்டுவ மரபு ஆகியவற்றின் ஒருமை நிறைவைக் குறித்துக் காட்டுகின்றன. (மழவர் என்ற சொல் வேளாளர் மரபையும் வேட்டுவ மரபையும் ஒரே இணை மரபாகக் குறிக்கும் சொல் ஆகும்.)

கொங்கு நாட்டின் எல்லா மரபினரும், சிறப்பாக அதன் குடியரசு மரபு வழிவந்த ஆட்சியுரிமையையுடைய வேளாள - வேட்டுவர் மரபினரும் நாகரீக உலகளாவிய இந்த மலர்ச்சியின் முழுநிறை மலர்ச்சியின் முழுநிறை பண்புக்கு உரியவராவர். பண்டைய வரலாறும் இன்றைய வாழ்வும் ஒருங்கே தெரிவிக்கும் பண்பு மரபின் மெய்மை இது!

இந்தியாவுக்கு வெளியேயுள்ள வேள்மரபின் நாகரிக உலகப் பழமையையும் விரிவையும் மேலே காட்டியுள்ள உலகளாவிய நகர்-நாடு அரசு மலர்ச்சியும் அன்னை வழிபாடும் தெளிவுபடுத்து கின்றன. அதுபோலவே அன்னையின் சேய் ஆகிய வேள் வழிபாட் டின் மிகு பழமை விரிவுக்கு மேலையாசியாவெங்கும் பரவி வந்ததாக விவிலியப் பழைய ஏற்பாட்டுப் பகுதி (கி.மு. 7-ம் நூற் றாண்டு சுட்டும் வேளின் தங்கக் காளை வடிவ (Bel, Belial) வழிபாட்டு மரபு சான்று பகரும். வேளாளர் - வேட்டுவர் மரபுக்குப் பொதுவாகவும் வேட்டுவ மரபினருக்குச் சிறப்பாகவும் உரிய வடுகநாதர் அல்லது ஐயனார் (அய்யப்பன் அல்லது நகர் - காவல் தெய்வமான சாத்தா) என்ற தெய்வ மரபின் பழமையைக் குமரிக் கண்டப் பகுதியாகக் கருதப்படும் வட அமெரிக்கக் கலிபோர் னியா மாநிலத்துச் சாத்தா மலைமரபு (Mount Shasta) சுட்டிக் காட்டும்.

இந்தியாவினுள்ளேயே, இன்றைய தமிழக எல்லைக்கு வெளியேயுள்ள வேள்மரபினர் (தென்னகத்தின் நாயர், நாயகர், நாயுடு, ரெட்டி; மராத்தியர்: இரசுபுத்திரர்; கூர்க்கர்; சீக்கியர் முதலியோர்) பெரிதும் வரலாற்றுக் கால முழுமையும் வேளாண்மை மலர்ச்சியின் முற்பாதிக் கூறாகிய வீரமரபு பேணிய அளவில் அம்மலர்ச்சியின் பிற்பாதிக் கூறுகளாகிய பேருழவாண்மை, பெருவாணிகம், பெருந் தொழிலாண்மை முதலியவற்றை முதனிலையாக அதாவது மரபு மலர்ச்சிப் பண்பாகப் பண்டே படைத்து உருவாக்கிப் பேணினர் என்று கூற முடியாது. ஏனெனில் வேள் என்ற சொல்லே பரவியுள்ள தமிழின எல்லையிலும் சரி (மலையாளம்-வெள்ளாளர்; Belgaum, Sravana, Belgola; பல்லாளர் என்ற மன்னர் மரபுப் பெயர், கவுண்டர் என்பதன் திரிபாகிய கௌடா) அதற்கு அப்பாலும் சரி, வேளாண்மை என்ற தமிழ்ச் சொல்லின் மலர்ச்சி ஆகியவை சென்றெட்டவில்லை என்பது தெளிவு. பிற்பட்ட இலக்கண மரபில் மருதநிலத்தைக் கடைநிலம் என்று வகுத்து வேளாளரையும் கடையர் (பெண்பால்-கடைசியர்) என்று குறித்துச் சூத்திரர் என்ற சொல்லுடன் ஒன்றுபடுத்திய மூன்றாம் ஊழியின் தென்னக மரபே, வேள் என்ற இச்சொல்லும் அதன் விரிவு. மரபுகளும் வடபால் வழங்காமல் தடுத்துள்ளது என்னல் தகும். கேரள மாநிலத்திலும் தமிழிலும் அதை வெள்ளாளர் (வெள்ளத்தை ஆள்பவர் என்ற புதுமரபுப் பொருளுடன்) திரிந்து வழங்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

இது மட்டுமன்று,

பேரறிஞரும் பெருந்தலைவருமான வயவர் சி.பி. இராமசாமி ஐயர் சுட்டியுள்ளபடி, இந்தியாவிலோ நாகரிக உலகிலோ, ஆட்சி மரபையும் வீரமரபையும் உயர் மரபுகளாக மதிப்பது போல, உழவு மரபு, தொழில் மரபு வாணிக (வட்டி) மரபு ஆகியவற்றை மதித்ததில்லை. இதற்கு மாறாகத் தொன்று தொட்டே இவற்றை, உயர்வாக மதித்த இனம் தமிழினம் (அடுத்தபடியாக ஒரளவில் யூதர், பார்சி இனம்) மட்டுமேயாகும். (கி.பி. 16ம் நூற்றாண்டு வரை கிறித்தவ இசுலாமிய மரபுகள் வட்டித் தொழிலை எதிர்த்ததனாலேயே மேலையுலகில் யூதரும், நடுவுலகில் பார்சிகளும், இந்துக்களும், இந்தியாவில் மார்வாடிகள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ஆகியோரும் பிறரும் மட்டுமே இத்துறையில் தனியாட்சி நடத்தினர் என்பது இங்கே குறிப்பிடத்

தக்கது ஆகும்.) இசுலாமிய உலகில் மட்டுமின்றி இசுலாமிய ஆட்சிக்கால இந்தியாவில் கூட, வட்டித் தொழில் பார்சிகள், இந்துக் கள் கையிலேயே இருந்தது.

வேளாண்மை என்ற சொல் பொருள்மரபு மலர்ச்சியுடன் கூடவே வேளாண்மையின் முற்பாதி மலர்ச்சியை மட்டுமன்றிப் பிற்பாதி மலர்ச்சியையும் தற்காலத் தமிழக மண்டலங்களான பாண்டி மண்டலம் (தற்காலக் குமரி மாவட்டம் இதனுள்ளடங்கிய வேள்நாடு என்னும் பழம் பிரிவே) சோழமண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம், (மூன்றுவேள் நாடுகளைக் கொண்டது) ஆகிய மண்டல மரபுகளும் தெளிவுபடக் காட்டு கின்றன. இம்மண்டலங்கள் ஒவ்வொன்றிலுமே வேளாள மரபுகள் தனிமரபாகவோ, பல மரபுகளாகவோ, நாட்டு மக்களிடையே நாட்டுமக்கள் பொதுச் சமுதாய வாழ்வுடன் ஒட்டியோ ஒட்டாமலோ வாழ்கின்றனர். ஆனால் கொங்கு மண்டலம் ஒன்றில் மட்டுமே (ஓரளவு நாஞ்சில் நாட்டிலும்) வேளாள மரபுநாட்டு வாழ்வி லிருந்து பிரிக்க முடியாத நிலையில் நாட்டுப் பெயரே தாங்கிக் கொங்கு வேளாளர்-கொங்கு வேட்டுவர் மரபாக இயங்குகிறது. வேளாளர்-வேட்டுவர் இணைமரபன்றி வேறு பழமையான தனி வேளாளர் மரபு இம்மண்டலத்தில் இன்றும் பெரிதும் இடம்பெற வில்லை. மற்ற எந்தமண்டலத்தின் வேளாளரையும் விட இக் கொங்கு வேளாளரே தம் தாய்நிலத்தில் பெரும்பான்மையினராக, தாய்நிலத்தின் ஒரே வேளாண் மரபாக, தாய்நில வாழ்வுடன் ஒன்றிய பழமையும் மரபும், மரபு மலர்ச்சியும் உடையவ்ராக நிலவு கின்றனர்.

இது மட்டுமோ?

பிற மண்டலங்களிலுள்ள வேளாளர் வேளாண்மை மலர்ச்சி யில் பிற்பாதிக் கூறலாகிய உழவாண்மையைப் பேணிய அளவில் அதன் முற்பாதிக் கூறாகிய (தென்னக இந்திய நாகரிக உலக மரபுகள் பேணிவந்துள்ள) வீர மரபை முதனிலையாக அதாவது மரபு மலர்ச்சியாகப் பேணி வந்துள்ளனர் என்று கூறமுடியாது. அது தொடர்பான சமய சமுதாய வினைமுறை சார்ந்த ஆட்சி மரபைக் கூட நாட்டு மரபாகப் பேணி வந்துள்ளனர் என்று கூற இயலாது ஏனெனில் வேளாளர் மரபுகளிடையே மட்டுமன்றி சாதி மரபு களிடையிலேயே கொங்குவேளாளர் - வேட்டுவர் மரபு ஒன்றும் மட்டுமே வீரமரபும் குடியரசு மரபில் வந்த முழுமை ஆட்சி மரபும்,

ஒத்திசைவு மரபாகிய நாட்டு வாழ்வும் மரபும் ஒருங்கே காத்துப் பேணி வந்துள்ளது என்று காணலாம்.

இவ்வாறு தமிழகத்தின் வேறு எந்த வேளாளர் மரபினரையும் விட, இந்தக் கொங்கு வேளாளர், மரபே தாய்நில வாழ்வுடன் ஒட்டிய தாயகமரபாக நிலவுகிறது. மண்டலங்களிடையேயும் கொங்கு வேளாளர் மரபினருக்கும் கொங்கு மண்டலத்துக்கும் உரிய இதே தேசீய மரபுப் பிணைப்பு பாண்டி மண்டலம், சோழ மண்டலம், தொண்டை மண்டலம் ஆகிய பிற மண்டலங்களுக்கு அறவே கிடையாது. தொண்டை மண்டலத்தையோ, சோழ மண்டலத்தையோ, பாண்டி சேர மண்டலத்தையோ தாயகமாகக் கொண்ட வேளாள மரபு என்று கூறத்தக்க எந்த வேளாண் மரபை யும் (நாஞ்சில் நாட்டு வேளாளர் மரபு, நாட்டுக் கோட்டை வணிகர் மரபு நீங்கலாக) நாட்டு வரலாறுகளோ மரபு வரலாறுகளோ கூட அறியமாட்டா!

கொங்கு நாட்டு வேட்டுவப் பெருங்குடி மக்களே அந் நாட்டின் (பண்படா எயினர் அல்லது வேடர் மரபில் வந்த) தால் பழங்குடிகள் என்றும், கொங்கு வேளாளர் சோழர் ஆட்சிக் காலங் களில் கி.பி. 9 அல்லது 10-12 நூற்றாண்டுகளில்) சேர, பாண்டிய நாடுகளிலிருந்தோ, சோழநாட்டிலிருந்தோ, வந்து குடியேறிய அல்லது குடியேற்றப்பட்ட மரபினரே என்றும் வரலாற்றாராய்ச்சி யாளர் பலர் கருதியுள்ளனர், கருதி வருகின்றனர். வேளாளர் குடியேறும் அல்லது குடியேற்றப்படும் வரை கொங்குநாடு, சிறப்பாக இன்றைய கொங்குநாட்டின் வடபெரும்பகுதி வளமற்ற பாலை, குறிஞ்சி, முல்லைப்பரப்பாகவும், பண்பற்ற பரப்பாகவுமே நிலவி வந்ததென்றும் அவர்கள் கொள்கின்றனர். இக்கருத்து வரலாற்று மெய்மை நிலைகளுக்கும், மெய் மரபுகளுக்கும் எவ்வளவு நேர் எதிர் முரணானது என்பது மேலே விரிக்கப்பட் டுள்ளது. ஆனால் இம்முடிவுகளுக்கு அவர்கள் பிற வரலாற்று ஆதாரங்களுடன் மரபு வரலாற்று ஆதாரங்களையும் அணிமைக் கால (கி.பி. 15-16ம் நூற்றாண்டுகளுக்குரிய) வேளாளர் வேட்டுவர் மரபின் உட்பூசல் பற்றிய மக்கட் பாடல்களையும் ஆதரவாக எடுத்துக் காட்டுகின்றனர்.

மேலீடாகப் பார்ப்பவர்களுக்கு ஆராய்ச்சியாளர் கருத்தும், மரபு வரலாறுகளின் கருத்தும் ஒன்றே என்று தோற்றக்கூடும். ஆனால் இது போலித் தோற்றமேயாகும். ஏனெனில் சாதி மரபு

வரலாறுகள் சோழநாட்டிலிருந்து கொங்கு வேளாளர் வெளியேறி வந்த காலத்தைப் பட்டயச் சான்றுடனேயே கலி 807 (கி.மு. 2293) என்றும், கொங்கு வேளாளப் பெரியன் கூட்டத் தலைவரான வேணாவுடையார் அல்லது வேணாடர் சோநாட்டிலே (உண்மையில் சோழ நாட்டு எல்லையிலுள்ள கொங்கு நாட்டுப் பகுதியாகிய குழித்துறை வட்டாரத்திலே) தங்கி வாழ்ந்த காலத்தை கலி 1200 (கி.மு.1900) என்றும் குறிக்கின்றன. இது இன்று நாம் சங்ககாலம் (கி.மு.600-கி.பி. 250) என்று மதிப்பிடும் காலத்துக்கு 2000 அல்லது 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் ஆகும்; அது மட்டுமன்று. ஆரியர் இந்தியாவிற்குள் வந்த காலம் (கி.மு. 1500) என வரலாற்றாசிரியர் மதிப்பிடும், கால எல்லைக்கும் இது 700 அல்லது 400 ஆண்டு முற்பட்டது ஆகிவிடுகிறது. பட்டயங்கள் தரும் கலி ஆண்டுகளைச் சக ஆண்டுகள் (கலி 3178 அல்லது கி.பி. 78ல் தொடங்குவது) எனக் கொண்டே வரலாற்றாராய்சியாளர் தம்முடிவுடன் இந்த ஆதாரங்களை இணைக்கின்றனர். இந்த ஆண்டு மாறாட்டங்கள் மெய்யானால், அதுவே ஆதாரங்களின் கால வண்ண மயக்கத்தையும் காட்டுவது ஆகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஆனால் இவற்றின் கால வண்ணத்திரிபு காலமாறாட்டத்துடன் அமைவதன்று. பெயர் மாறாட்டம், மொழிமரபு மாறாட்டம்; பண்பு மரபு மாறாட்டம் ஆகியவை இவற்றிலும் பிற நாட்டு மரபு வரலாறுகளிலும் மலிந்தே உள்ளன. இதனைப் புலவர் குழந்தை போன்ற வரலாற்றாசிரியர் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதே மரபு வரலாறுகள் சங்க காலப் பசும்பூண் பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் (கி.பி 1, 2ம் நூற்றாண்டுகள்) சங்க காலத்துக்குப் பிற்பட்ட பாண்டிய பல்லவர்கள் (கி.பி. 8, 9ம் நூற்றாண்டுகள்) ஆகியோரே வேளாளர் ஆட்சி மரபுக்குப் போட்டியாக வேட்டுவ ஆட்சி மரபினரைப் பாண்டி நாட்டிலிருந்தும், கொல்லிமலைக்கு அப்பாலுள்ள வடுக நாட்டிலிருந்தும் கொங்கு நாட்டுக்குள் கொண்டு வந்து குடியேற்றியதாகக் கூறுகின்றனர்.

வெளிநாட்டிலிருந்து வந்ததாகக் கூறப்படுவதே சமுதாய உயர் மதிப்புச் சின்னம் என்ற கருதப்படும் அணிமைக்கால மரபுகளே இவை. பொதுவாகச் சாதிமரபு வரலாறுகளும் சரி, அவற்றுக்கும் ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிகளுக்கும் ஆதாரமான

சோழர் கால பட்டயங்கள் கல்வெட்டுகள், கொங்கு தேசத்து ராசாக்கள் போன்ற நாட்டு மரபு வரலாறுகள், அணிமைக்கால மக்கட்பாடல்கள் ஆகியவையும் (மரபுவரலாற்றாசிரியர்களின் சொல்லாராய்ச்சிகளும் கூட) கால வண்ணம் தோய்த்து அதன் சாயம் பூசப்பட்ட அரைகுறை மெய்மைகள் அல்லது மெய்மை களின் உருத்திரிபுகளேயாகும் என்பது மேலே சுட்டப்பட்டது. உண்மையில் அவை நமக்குக் காட்டும் பழங்கொங்கு நாட்டின் சித்திரம் சங்க இலக்கிய பலகணி மூலமாகவும் பழமையாராய்ச்சி களின் மூலமாகவும் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே நமக்குத் தெரியவரும் கொங்கு தமிழகத்தின் பழமை வளச் சித்திரத்துக்கு முற்றிலும் மாறான முரண்பாடுகளை உடையது ஆகும். சங்க இலக்கிய ஆராய்ச்சி, அதன் துணை கொண்ட தமிழ் மொழி, தமிழ்ச்சொற்களின் தொல்மூல மரபாராய்ச்சி உலக வராலாற்று ஒப்பீட்டாராய்ச்சி ஆகியவற்றின் ஒளி மூலமாகவே நாம் கால வண்ணம் படர்வித்துள்ள இத்தகைய திரிபு முரண்பாடு களகற்றி வண்ணத் தோய்வற்ற முழு மெய்ம்மை வரலாறு காண முடியும்.

கொங்குநாட்டு வரலாற்றை வகுத்தவர்களில் பலர் சங்க காலத்தையே ஒதுக்கிவிட்டுப் பிற்காலச் சாயம் தோய்ந்த (புராணப் பண்பு வாய்ந்த) வரலாறே வழங்கினர். ஆயினும் சங்கப் புலவருள் ளும் புரவலருள்ளும் வேளிருள்ளும் யார் யார் கொங்கு நாட்டவர் என்று வரலாற்றாசிரியருள் சிலர் ஆய்ந்து காண முற்பட்டதுண்டு. பெருங்கவிஞர் புலவர் குழந்தையோ புலவர், புரவலர், வேளிர் ஆகியோரிடையே யார் யார் கொங்க நாட்டவர் என்று ஆய்வ துடன் அமையாமல், யார் யார் கொங்கு வேளாள மரபினர் என்றே விளக்கமுனைந்தார். அத்துடன் இவ்வடிவப் படையிலேயே அவர் சாதிமரபாராய்ச்சியாளர், ஆராய்ச்சியாளர் ஆகிய இருசாரார் முடிவு களையும் ஒதுக்கித்தள்ளி, கொங்கு வேளாளர் மரபினரும் கொங்கு வேட்டுவ மரபினரும் பிறரும் கொங்கு நாட்டுக்கேயுரிய தொல் பழங்குடிகளேயாவர் என்ற தம் முடிவை வலியுறுத்திக் காட்டினார்.

சங்ககாலக் கொங்கு நாட்டு வரலாறு காண்பதில் பொது வான காலவண்ணம் மட்டுமன்றி, கொங்கு நாட்டுக்கேயுரிய தனிப்பட்ட காலமரபு வண்ணமும் தலையிட்டுத் தடுத்து வந்துள் ளது. கொங்காண்ட சேர சோழ மரபினருடன் கொங்கு மக்கள் பொதுவாக கொண்டிருந்த பாசம் சோழர் காலத்திலும் சோழருக்கு

பிற்பட்ட காலத்திலும் தனி வளமும் வளர்ச்சியும் பெற்றது. ஏனெனில் அந்நாட்களில் கொங்கு நாடாண்ட கொங்குச் சோழர் கொங்குப்பாண்டியர் ஆகியோருடன் அவர்களின் கீழிருந்தும் தனியாகவும் சில பிற்காலக் கொங்குசேரரும் ஆண்டனர். சங்க காலப் பெருங் கொங்குத் தமிழகம் தற்கால கொங்குநாட்டு எல்லை யளவாகக் குறுகி வந்த காலமும், கொங்கு நாட்டினுள் தமிழகச் சைவ சமய எழுச்சி முதலிலும், அதனையடுத்து பண்டை வட கொங்க அல்லது கன்னடப் பகுதியிலிருந்து வீரசைவ சமய எழுச்சி யும் புகுந்து பரவிய காலமும் இதுவே. பழைய குடியரசு மரபுகள் பழைய எல்லை மரபுகள் மறக்கப்பட்ட இப்புதுச்சூழலிடையே தான் கொங்குநாடு சேரநாட்டின் ஒரு பகுதி என்ற கருத்தும் அதன் நாகரீகம் சேர சோழ நாட்டு நாகரீகத்தின் ஒரு புது நிழற் படிவே என்ற கருத்தும் மக்களிடையே மெல்லத் தோய்ந்து பரவின. பரவ விடப்பட்டன. தெய்வப்பாவலர் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் 'சேரர் கொங்க நாடு', 'சேரர் கொங்கு நன்னாடு' என்ற மணி முழக்கப் பாடல்களின் மூலம் இதனை மக்கள் மரபில் உறுதிப்படுத்த உதவிற்று.

நம் கால அணிமை நாட்களிலேயே இம் மரபை ஒட்டிக் கேரள மாநில ஆராய்ச்சியாளர் சிலரும் தமிழக ஆராய்ச்சியாளர் பலரும் கொங்கு நாடுதான் சேரநாடு (கேரளம் அன்று) என்றோ, சேரநாடு கொங்குநாட்டுப்பகுதி அல்லது கொங்கு நாடு சேர நாட்டுப்பகுதி என்றோ, கொங்குநாட்டின் மேற்பகுதி சேர நாட்டுக் குரியது என்றோ இவையல்ல என்றோ வாத எதிர்வாத ஆய்வில் இறங்கினர்(அன்றைய, புதிய மலையாள, புதிய தமிழக மொழித் தேசீய மரபுகள் இதற்கு நெய் வார்த்தன) சங்கப்பாடல்களிலேயே சேரர் கடற்கரைத் தலைநகரான வஞ்சி என்ற கருவூருக்கும், கொங்கு நாட்டின் பண்டைய உள்நாட்டுத் தலைநகரான கரூவூர் என்ற வஞ்சிக்கும் ஒரே பெயர்களிட்டு வழங்கி வந்த இந்த இவ் ஆராய்ச்சித்துறைக் குழப்பங்களை, மேலும் மேலும் பெருக்கிற்று.

இம்மரபு மயக்கம், ஆராய்ச்சிக்குழப்பம் ஆகியவற்றிடையே, ஓயாது கொங்கு, கொங்கர் என்றே பாடிய சங்ககாலப் பதிற்றுப் பத்துக்கும் கொங்குநாட்டுக்கும் உள்ள தொடர்புகள் அறியப் படாமல், அது சேரநாட்டுக்கு மட்டுமேயுரிய காப்பியம் என்று கருதப்பட்டது. ஆனால் தமிழக வரலாற்றுப் பேரறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி இக்குழப்ப மயக்கங்களகற்றி, அக்காப்பியத்தின்

இறந்துபட்ட மயக்கங்களகற்றி, அக்காப்பியத்தின் இறந்துபட்ட முதற்பத்து உள்ளடங்கலாக முற்பட்ட ஆறு பத்துக்கள் மட்டுமே சேர நாடாண்ட பெருஞ் சேரரைப் பாடின என்றும், இறந்துபட்ட கடைசிபத்து உள்ளடங்கலான இறுதி நான்கு பத்துக்களும் முப் பெருங் கொங்கு நாடும் வென்றாண்ட கொங்குப் பெருஞ் சேரரைப் பாடியவை என்றும்தெளிவுபடுத்தினர். இதன் மூலமே அவர் முதன்முதலாகச் சங்ககாலக் கொங்கு வரலாறு கண்டு, அதனை ஒரு தனி வரலாற்றாராய்ச்சி ஏடாக இயற்றித் தந்துள்ளார்.

கொங்குநாட்டுப் பழமை பற்றிய இச்சங்க இலக்கியப் புத்தாராய்ச்சி ஒளிகள் கொங்கு நாட்டு வரலாற்றின் மீது மட்டுமின்றி, கொங்கு நாட்டு, மரபுவரலாறுகள் மீதும் கொங்கு நாட்டு மக்கள் வாழ்க்கைப்பண்பு மரபுகள் மீதும் பெருவிளக்கம் வழங்குபவையாக உள்ளன!

தற்காலக் கொங்கு நாட்டெல்லையிலேயே கொங்குச் சோழர் ஆட்சித் தொடக்கத்தில் தென்கொங்கு என்று இன்று கூறப்படும் சேர பாண்டிய சோழ எல்லைகளே நாடும் நகரும் உழவாண்மை, தொழிலாண்மை, பண்பாண்மை வளமும் உடை யனவாயிருந்தன. இன்று வடகொங்கு மேல் கொங்குப் பரப்பினை அடுத்த பகுதிகள் முழுவதும் (கோவை, பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களின் பெரும் பகுதிகளும்) நிலவகை, வாழ்வு வகை ஆகிய இரு துறைகளிலும் பெரிதும் வற்றற் பாலைகளாக விளங்கின. ஆனால் தற்காலக் கொங்க நாட்டின் பெருந்தலை நகர்களான கோவை, சேலம், ஈரோடு ஆகியவற்றை உட்கொண்ட இப்பகுதிகள் தாம் இன்று கொங்கு வாழ்வுக்குரிய அகநாட்டின் அகநாடு என்று கூறத்தக்க வளமுடையவை என்பதில் ஐய மில்லை. சங்ககால நிலையும் இதில் வேறுபட்டதன்று. ஏனெனில் பிற்காலத்தில், கொங்குப் பெருவழி என்று கூறப்பட்ட சங்ககால நாகரீக உலக வாணிகப் பெருவழி முழுவதும் இப்பகுதிகளி னூடாகவே சென்றது. இப்பகுதிகளின் கூலவளம் (அரிசிவளம், கரும்புவளம் உட்பட) பொன்மணிவளம், பிற சரக்குவளம் ஆகிய வற்றின் பயனாகவே பண்டைத் தங்கநாணயப் புதையல்கள் கொங்கு நாடெங்கும் பேரளவாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (அரிசியும், கரும்புத் தொழிலும் இரும்பு பொன் சுரங்கத் தொழிலும் ஒருவேளை நெசவுத் தொழிலும் கூடப் படைத்துரு வாக்கி உலகுக்களித்த கொங்கு முன்னோர்கள் வாழ்ந்த பகுதிகளே

இவைதாம். இது மேலே சுட்டப்பட்டது.) சேரப் பேரரசருக்கு ஒரு சிறிதும் பின்னடையாமல் கொங்கு பெருஞ்சேரர் புலவர்களுக்கு வழங்கிய நூற்றாயிரங்கணக்கான காணங்கள் (பொன் நாண யங்கள்) கொங்கு அகநாட்டின் வடபகுதிக்கே சிறப்பான இச்சங்க கால வளத்தினை வலியுறுத்துகிறது. சோழ பாண்டிய பல்லவரும் கங்கரும் அவாவுற்று மீண்டும், மீண்டும் படையெடுத்தழித்த பகுதிகளும் இவையாகும்.

கொங்கு நாட்டின் சங்ககால, இக்கால நிலவள உழவாண்மை வள, பண்புவள நிலைகளுக்கிடையே சங்க காலத்துக்கும், சோழர் காலத்துக்கும் இடைப்பட்ட ஊழியில் ஏற்பட்ட பெரும்பள்ளத்தை இந்நிலை சுட்டிக்காட்டுகிறது. இப்பள்ளம் கொங்கு நாட்டின் வட எல்லையையே பெரிதும் தாக்கிற்று. சேர, பாண்டிய, சோழ எல்லையையே பெரிதும் தாக்கிற்று. சேர, பாண்டிய, சோழ எல்லைப் பகுதிகளை அவ்வளவாகப் பாதிக்கவில்லை என்றும் தெரியவருகிறது. இவ்விடைக்காலத்தில்தான் களப்பிரர் எழுச்சி என்ற இந்தியாவின் வடமேற்குக் கணவாய் வழியான அலை பாய்வுகளின் கடைசி வீச்சு தமிழகத்தைத் தாக்கி மூவரசுகளையும் புதிய பல்லவ மரபையும்கூடச் சில பல நூற்றாண்டுகளாக அலைக்கழித்து. கொங்கு நாடே அதன் பேரழிவுக்கு மிகுதியும் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. பண்டை வடகொங்கு நாடாண்டு இன்றைய கொங்கு நாட்டையும் சங்க காலத்தின் பின் வென்று ஆட்சி செய்த கங்க மரபு அரசர்கள் இந்த அலைபாய்வின் முன்னணிச் செயல்வீரரேயாதலால் அவர்கள் வரலாறு இதனை நமக்கு சுட்டிக்காட்டவில்லை. இவ்வலைபாய் வுக்குச் சற்றுமுன்னும், அதன் பின்னும் நிகழ்ந்த சோழ பாண்டியர் படையெடுப்புகளும் இதே நிலைக்கு உதவின என்பதில் ஐய மில்லை. (இவை பின்னர் விளக்கப்படவிருக்கிறது)

தற்கால கொங்கு நாட்டின், சிறப்பாக அதன் வட பகுதியின் வளத்துக்கு நாட்டின் மரபு வரலாறுகளும் வரலாற்று ஆதாரங் களும் ஆர்வமுடன் விரித்துரைக்கும் சோழர் காலச் சீரமைப்பே காரணம் ஆகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இச்சீரமைப்புக் கும் அதனால் நிரப்பப் பெற்ற இடைக்கால பள்ளத்துக்கும் முற்பட்ட சங்ககாலக் கொங்கு நாட்டு வளத்துக்கு இதுபோலவே ஒரு முந்திய சீரமைப்பு (வேள் புலத்தொடக்க கால வேளாண்மை மலர்ச்சியே) காரணம் ஆகும் என்று காணலாம். கால வண்ணம்

தோயப்பெற்ற மரபு வரலாறுகள் நாட்டு மரபு வரலாறுகள் ஆர்வமுடன் சுட்டிக்காட்டாது மறந்துவிட்ட, மறக்கடித்து மறைத்த முந்திய சீரமைப்பே இது. குடியரசு மரபு மறக்கப்பட்டு வந்த கால மரபு வரலாறுகளும் ஆதாரங்களும் அவற்றினடிப்படையான ஆராய்ச்சிகளும், முந்திய குடியரசு மரபுக் காலத்திய முதல் சீரமைப்பை அறியாத நிலையில் அல்லது மறந்த நிலையில் அல்லது நோக்காத நிலையில், இடைக்காலப் பள்ளத்தையே கொங்கு நாட்டின் தொல்பழமை நிலையாகவும், சோழர் கால மறுசீரமைப்பையே முதற் சீரமைப்பாகவும் (சங்க இலக்கியம் நோக்காது) கொண்டது இயல்பேயாகும்.

கொங்கு வேளாளர் வரலாறு என மரபு வரலாறு ஆய்ந்து தொகுத்துள்ள அறிஞர் செல்வி டி.கே. சக்தி தேவியார் அம் மரபு வரலாற்றாசிரியர் வழி நின்று அதற்குரிய ஆதாரங்களையே பின்பற்றி, கொங்கு வேளாளரின் மூலத் தாயகம் சோழ நாடே எனக் கொள்கிறார். சோழ கொங்குப் பரப்புகளில் ஓடும் காவிரி யாற்றின் தெற்கிலுள்ளவர்கள் தென்தலை வேளாளர், வடக்கி லுள்ளவர்கள் வடதலை வேளாளர் என்றும் தென்தலையினரே தலைமை நிலையுடையவரென்றும் அவர் காட்டுகிறார். வடதலை யினரே தொண்டை மண்டல மரபுகளாய் பிரிய, கொங்கு வேளாளரும் பிறரும் தென்தலையினரினின்றும் பிரிந்து படர்ந்து பரவினர் என்றும் அவர் வகுத்துரைக்கிறார். இவற்றையடுத்து, வேறு எவ்வகைப்பட்ட மரபு விளக்கங்களிலும் ஆய்வு விளக்கங் களிலும் இறங்காமலே அவர் திடுமெனக் கொங்கு வேளாளரின் வேளாளர் இனப் பொதுத்தலைமை பற்றி ஒரு முடிவு அறிவித்து விடுகிறார்; 'வடதலை வேளாளராகிய துளுவ வேளாளர் (அதாவது தொண்டை மண்டலத் துளுவ வேளாளர்) கொண்டைகட்டி வேளாளர் (கொண்டல் கட்டி வேளாளர் அதாவது தொண்டை மண்டல வேளாளர்) கார்காத்தார் ஆகிய எல்லா வேளாளர்களை யும் விடக் கொங்கு வேளாளரே உயர்ந்த மூத்த இனமாகக் கூறப் பட்டது. வேளாள இனத்துக்கே மூத்த இனமாகக் கூறப்பட்டது. வேளாள இனத்துக்கே மூத்த குடிமகன், கொங்கு வேளாளப் பெரியன் குலத்தின் தலைவரான வேணாடரேயாவர், இதுவே அறிஞர் விரித்து விளக்க முற்படாது முடிக்கும் முடிவு!

அறிஞர் இங்கே விரிக்காது குறிப்பாக விட்டு விட்ட விளக்கமும் உண்டு. விளக்காமலே முடித்த முடிவும் உண்டு.

குடியரசு மரபில் வந்த வேளாண் மரபின் மரபுச் சொற்களாகத் தம்மையறியாமலே சுட்டிச் சென்ற மறைநிலை விளக்கமும் உண்டு.

முதலாவதாக, வடதலையாருக்குத் தலைமை நிலையுடையவர் தென்தலையினர் என்றும், அத்தென்தலையாரின் தலைவர் ஆன வேணாடரே கொங்கு வேளாளர் தலைவராதலால் கொங்கு வேளாளர் இருதலை வேளாளருக்கும் தலைவராவார் என்றும், அவர் வாதிடுகிறார் என்பது தெளிவு. விரிக்காது குறிப்பாகத் தெரிவிக்கப் பட்ட விளக்கம் இதுவே ஆகும். ஆனால் தென்தலையின் பொதுமைத் தலைவரான வேணாடர் எவ்வாறு கொங்கு வேளாளரின் சிறப்புத் தலைவராய், அம் மரபினராகவே கருதப்பட்டு வந்துள்ளார் என்பதோ, தாய் மரபான தென்தலைக்குச் சேய் மரபான கொங்கு வேளாளர் மரபு எவ்வாறு தலைமை ஏற்க முடிந்தது என்பதோ விரிக்கப்பெறவில்லை. இதுபோலவே காவிரி தென் தலை வடதலைகளை மட்டுமே குறிப்பிட்டுவிட்டு, பின் தண் பொருநையாறு, பழையாறு ஆகிய ஆற்று வெளிகளுக்குரிய பொதுவான பாண்டி நாட்டு, சிறப்பான நாஞ்சில் நாட்டு வேளாள மரபினரையும் பிறரையும் உள்ளிட்ட வேளாளரினம் முழுமைக் குமே கொங்கு வேளாளர் எவ்வாறு தலைவராவார் என்பதும் விளக்கப்படவில்லை.

இந்நிலையிலும் குடியரசு மரபில் வந்த மூத்த குடிமகன் 'வேணாடர்' ஆகிய வேளாள மரபுச் சொற்களே வரலாற்று மரபு களுட்சென்று இம் முடிவுக்கான விளக்கம் காண வழிவகுக்கின் றன! ஏனெனில் 'மூத்த குடிமகன்' என்ற அறிஞரின் சொற்றொடர் வேள் (Duke, குடியரசு தலைவர், கோமகன்; Prince, முதற் குடிமகன், கோமகன், இளவரசன்) என்ற சொல்லின் மலர்ச்சி மரபு காட்டுகிறது. வேணாடர் என்ற தலைவரின் பதவிப் பெயரோ அவ்வேள் மரபை மட்டுமன்றி அதன் மலர்ச்சியில் ஒரு திருப்பமாய் அமையும் வேள்நாடு (Federal Republic) என்ற அமைப்பையும் குறித்துக் காட்டுகிறது. வேள்மரபு வேளாண் மரபாக மலர்ச்சியுற்ற தற்குரிய மலர்ச்சித் திருப்பத்தையும், வேளாளர் இனத்துக்குரிய தாய்மூல மரபையும் ஒருங்கே குறிக்கும் சொல் இது! இது தமிழக வரலாற்றுச் சொல் மட்டும் அன்று - தமிழக, தென்னக, இந்திய வரலாற்றுச் சொல் ஆகும்.

கோவரசு மலர்ச்சி, குடியரசு மலர்ச்சி, அரசு மலர்ச்சி ஆகிய ஒரே தொடர்பான மலர்ச்சிக் கோவையில் வேள்நாடு என்னும்

தொகைச்சொல்லும் மரபும் மரபுப் பொருளும் நடுநாயக இடம் வகிப்பதாகும். ஏனெனில் ஆதிகால முடியரசு (சேர, சோழ, பாண்டியர், மகத அரசர்) முதலில் வேணாடர் (Persident of a Republican Federation) பதவி வகித்தே முடியரசுப் பதவி பெற்ற னர். குறும்பர், ஆந்திரர், கலிங்கர் ஆகியோரும், புத்தபிரான் மரபினரானசாக்கியரும் கொண்ட வீடு ரெட்டி அரசரும் தேவகிரி யாதவ மரபினரும் பிறரும் வேணாடராயிருந்தே அரசர் பேரரச ராகத் தம்மை வளர்த்துக் கொண்டிருந்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கம், காஞ்சி, வல்லபி, நாலந்தாப் பல்கலைக் கழகங்கள் ஆகியவையும் காஞ்சி, வைசாலி, காசி போன்ற தன்னாண்மை நகரங்கள் (City Corporations), சோழர் கால உலக வாணிகக் குழுக் கள், தொழிற் குழுக்கள் (Commercial or Industrial Corporations) ஆகியவையும் வேணாடு என்ற அமைப்பிலிருந்து எழுந்த கிளை மலர்ச்சிகளே. இதுபோல மேலே கட்டியர் மரபு, செங்குந்தர் மரபு, நாட்டுக்கோட்டை வணிகர் மரபு, பிராமணர் மரபு உட்பட்ட பிற சாதி மரபுகள் ஆகியவற்றின் செய்திகள் மூலம் குறித்துக் காட்டியுள்ளபடி, அவற்றுக்கெல்லாம் முற்பட்ட மூலமான வேளாண்மை மலர்ச்சியின் பிற்பாதிக் கூறாகிய பேருழவாண்மை, பெருந்தொழிலாண்மை, பேரறிவாண்மை, அருந்திறலாண்மை ஆகிய மலர்ச்சிகளும் 'வேள் நாடு' என்ற மைய மூல மரபு வழி மலர்ந்த நேர் மலர்ச்சிகளில் வரலாற்றுத் தலைமை சான்ற ஒன்றேயாகும்.

இந்த மைய நேர் மரபு மலர்ச்சிக்குரிய நாகரீக உலக, இந்திய, தமிழகப் பகுதி கொங்குத் தமிழகமே என்பது கீழே விளக்கப்படுகிறது!

இன்றைய தமிழகத்தையும் சங்ககாலப் பெருந் தமிழக த்தையும் விடத் தொல்பழமையும் தொன்மை விரிவகலமும் உடையது கடலால் பெரும்பகுதி விழுங்கப்பட்ட பண்டை மாபெருங் குமரித் தமிழகம். அதன் மைய மலையாகிய குமரி மலையின் (பண்டைப் பொதியம், பண்டை மலையம், அல்லது பண்டைத் திருமலை) ஒரு தற்காலத் தமிழகக்கிளையே குமரி முதல் குடகு வரை நீண்டு கிடக்கும் மேற்குத் தொடர்ச்சி மலை யின் பகுதி (சையமலை). இம்மையத் தமிழ்த் தெய்வ மாமலை யைச் சுற்றியே தமிழர் வாழ்வும், தமிழ் வாழ்வும், வேளாண்மை மலர்சியும் படர்ந்து வந்துள்ளன. சங்க காலத்தில் இதன் வடகோடி யில் (நாஞ்சியில் நாட்டில்) ஒன்றும், தென்கோடியில் (நாஞ்சில்

நாட்டில்) ஒன்றும், நடுவில் (கோயமுத்தூர் மாவட்டம், அதனை ஒட்டிய மைசூர், குடகு மேல் கடற்கரைப்பகுதி ஆகியவற்றில்) ஒன்றுமாக மூன்று வேள்நாடுகள் உருவாகியிருந்தன. இவற்றுள் நடுவாக அமைந்த வேள்நாடு சங்க காலத்தை அடுத்து அதன் பின்னும் நீண்ட காலமாக வேள்நாடு என்று மட்டுமன்றி வேளாள நாடு என்றும் தனிச் சிறப்புப்பட அழைக்கப்பட்டு வந்தது என்று அறிகிறோம்.

மரபு வரலாறு வேளாளரினத் தலைவராகக் குறித்துக் காட்டும் வேணாடர் மாண்ட தொல் பழமை சான்ற இந்த வேணாடு களின் மரபில் வந்து இன்றும் மாளா மரபாய், உயிர் மரபாய் நிலவுகின்றவேள் நாட்டுத் தலைமை மரபினர் ஆவர். அவர் மூலம் நாம் இம்மாண்ட மும்மரபுகளுக்கும் அப்பால் நாலாவதாக, அல்லது நாலாவதும் ஐந்தாவதும் ஆக, மேலும் இரு வரலாற்று வேணாட் மரபுகளைக் காண்கிறோம். ஏனெனில் மரபு வரலாறும் வரலாறும் ஒருங்கே சுட்டுகிறபடி, கொங்கு நாட்டின் சோழ நாடெல்லையிலுள்ள குழித்தலை வட்டாரத்தில் ஒன்றும் கொங்கு நாட்டின் பாண்டிய சேர நாட்டெல்லையிலுள்ள பழனி வட்டாரத் திலொன்றுமாக கொங்குநாட்டுத் தென் பகுதியிலும் இரு வேணாடுகள் நிலவியதாக அறிகிறோம். கொங்கு நாட்டுத் தென் பகுதியிலுள்ள இரு வேணாடுகளுக்கும் வேளாளரினத் தலைவ ரான தென்தலை வேணாடரே தலைவராவார் - மரபு வரலாறுகள் ஒன்றை அவரது பழைய தாயக மரபு என்றும் மற்றொன்றைப் புதிய மரபு என்றும் குறிக்கின்றன.

பழனிப் பகுதிக்குரிய வேணாடே திருநெல்வேலி மாவட்ட அம்பாசமுத்திரம் (பண்டை ஆய்க்குடி) திருக்குறுங்குடி, களக் காடு, கோட்டாறு, திருவதங்கோடு, பத்மநாபபுரம், திருவனந்த புரம் எனத் தலைநகர் மாற்றம் பெற்று, 18-ம் நூற்றாண்டுக்குள் நாஞ்சில் நாடாகவும் திருவாங்கூர் நாடாகவும் மலர்ச்சி மாறுபாடு கள் பெற்றது. இவ்வாறு நாஞ்சில் நாடு என்று இன்று வழங்கும் பாண்டி நாட்டுப்பகுதியும், இன்றும் மருமக்கள் தாயத்தடம் மாறாது நிலவும் அதன் பழமைச்சான்ற வேறாண்மரபும் தென்கொங்குப் பழனி வட்டத்தினின்று புடைபெயர்ந்து சென்ற கிளை மலர்ச்சியே யாகும் என்பதை இது காட்டுகிறது.

குமரி மலைத் தொடர்ச்சியாகிய சையமலை சூழ்ந்த இந்த ஐந்து வேளிர் நாடகளில் கொங்கு நாடே மூன்று வேளிர் நாடுகளை

உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது என்பதையும், அவற்றுள்ளும் வடபாலுள்ள பண்டைத் தமிழகத்தின் மைய வேள் நாடே (கோவைப் பகுதிகள்) முழுமலர்ச்சிப் பகுதியாக வேளாளர் நாடு எனச் சிறப்பிக்கப்பட்டிருந்தது என்பதையும், கொங்கு நாட்டின் ஏனைய இரு வேள்நாடுகளுக்கும் அதுவே முற்பட்ட பழமையும், பெருமையும் புகழும் உடையதென்பதையும் காண்கிறோம். மூன்றும் ஒரே வேள் நாட்டின் வரலாற்றுக்காலப் புடை பெயர்ச்சி களேயாகும் என்பது தெளிவு.

மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து வேணாடுகளுக்குள்ளே, வட கோடி வேணாடு இன்றைய தமிழக எல்லைக்கு அப்பால் நெடிது வடக்கேயுள்ளது ஆகும். இதனால் இது மேலே காட்டியபடி கலிங்கம் ஆந்திரம் முதலிய பிற இந்தியப் பகுதிகள் போலவே வேளாண்மையின் முழுமலர்ச்சி காணாது முற்பாதி மலர்ச்சி யுடன் நின்று விட்ட வேள்நாடு ஆகும். மற்றநான்கு வேணாடு களில், இன்றும் உயிர் மரபுடன் நிலவும் வேணாடுகள் கொங்கு நாட்டின் சோணாட்டு எல்லையிலுள்ள வேணாடும், அதற்கு அடுத்தபடியாக அணிமைக்காலம் வரை வேணாடாய் நிலவி யிருந்த இன்றைய நாஞ்சில் நாடும் மட்டுமேயாகும். இவற்றிலும் உயிர் மரபுத் தலைமையுடையது முன்னதே. ஐந்தனுள்ளும் இடையேயுள்ள இரு வேணாடுகளும் (பழனி வட்டார, கோவை வட்டார வேள்நாடே) வேளாளர் நாடு என்ற முழுநிறை மலர்ச்சிப் பெயரைப் பண்டே கொண்டு விளங்கிற்று. அதுவே இன்னும் உயிர் மரபுடன் எஞ்சியுள்ள குழித்தலை வட்டார, பழனி வட்டார வேணாடுகளின் மூலத்தாயகம் என்பது இதனால் விளக்கம் பெறுவதாகும். சங்க காலத்திய அல்லது சங்க காலத்தினும் முற்பட்ட வேளாண்மை மலர்ச்சியின் தாயகமும், அதன் முழு நிறை மலர்ச்சியின் தாயகமும் நடுமைய வேள்நாடு அல்லது வேளாள நாடே (கோவை வட்டாரமே) என்பதையும்; அதன் மாண்ட மரபுக்குரிய மாளா உயிர் மரபே வேணாடர் என்ற இன்றைய கொங்கு வேளாண் மரபிற்குரிய வேணாடு என்பதை யும்; பழனிவட்டாரத்துப் பழைய வேணாடும், நாஞ்சில் நாட்டு வேணாடும், மைய வேணாட்டிலிருந்து அவரது உயிர் மரபு மலர்ச்சி பெற்ற ஒரு கிளை மலர்ச்சிப் பாதையைக் குறிப்பனவே என்பதையும் இவ் ஒப்பீடுகள் விளக்குகின்றன.

சாதிமரபு வரலாறுகளும் மொழிமரபுகளும் தரும் ஒளிக்

கீற்றுகள் இதே மெய்ம்மையை வலியுறுத்தி மேலும் தெளிவு பிறப்பிக்கின்றன.

கொங்கு வேளாளர் தம் தாயகமரபாகப் பற்றார்வத்துடன் சோழ நாட்டையே (அடுத்தபடியாகச் சேர பாண்டிய நாடுகளையே) சுட்டுகின்றனர். அதே சமயம் கொங்கு வேளாள உட்படத் தமிழக வேளாள மரபினர் (பல வணிக மரபினர் உள்ளங்கலாக) யாவருமே தம் முழு இன மரபையும் கங்கை மரபு என்றுதான் குறித்துக் கொள்கின்றனர். கோத்திர மரபு அற்ற அல்லது அதனை இழந்துவிட்ட வேளாண் மரபினர் சிலர் பலர் கூடத் திருமண வினையின்போது தம்மைக் கங்கை கோத்திரத்தார் என்றே கூறிக் கொள்கின்றனர். மேலே விளக்கியுள்ளபடி, இங்கே கங்கை என்பது காவிரியைத்தான் சுட்டுகிறது என்று கொள்வதே பொருந்தும் (முதனிலை மரபாக வேளாண் மலர்ச்சி வடபாற் கங்கைக் கரைவரை என்றுமே எட்டியதில்லை) தமிழ் மரபிலேயே சோழநாடு காவிரியுடன் தொடர்புடையது மட்டுமன்று, சிறப்புபடக் காவிரிநாடு என்றே அழைக்கப்பெறுவது ஆகும். எனவே மேலீடாகப்பார்த்தால், இவ்வகையில் நாம் கொங்கு வேளாளரின் ஆர்வ முடிவை ஏற்று, வேளாளர் இனத்தின் மூலத்தாயகம் சோழ நாடே என்று முடிவு செய்ய இடமுண்டு. (சைவ சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த மைய நாடு சோணாடே என்பதும் இம் முடிவுக்கு வலிமை சேர்க்கத் தக்கதேயாகும்) ஆனால் வேளாள இனத்தவரின் மரபுரைகள் இந்த ஆர்வமுடிவுடன் முரணுகின்றன.

வேளாளப் பேரினத்தவருள் கார்காத்தார் பெயருடனேயே கார்மண்டலம் (கங்கவாடி அல்லது இன்றைய வடகொங்கு, பண்டை வடகொங்கு அளாவிய பகுதி), தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் பெயரடனேயே துளுநாடு (குடகு நாடு உள்ளிட்ட பண்டைமேல் கொங்கு நாடு) ஆகியவை தொடர்புடையவை. இம்மரபினரும் தொண்டை மண்டல (கொண்டல் கட்டி) வேளாளரும் (நாட்டுக் கோட்டை வணிகரும் பிறரும் கூட) தம் மரபு வரலாறுகளில் தாம் நாகநாடு அல்லது கங்க நாட்டிலிருந்தே சங்க காலத்தை ஒட்டிய ஒரு தொண்டைமானால் குடியேற்றப்பட்டவராக அல்லது பிறிது காரணங்களால் அடியேறியவராகக் கூறுகின்றனர். வேளாளரினத்தின் மூலமலர்ச்சித் தாய் மரபாகக் கருதப்பட்டு வந்துள்ள கங்கை அல்லது காவிரி மரபு சோழ நாட்டைக் குறிக்கவில்லை. அந்த ஆற்றுடன் தொடர்புடைய

பண்டைக் கொங்கு நாட்டை, சிறப்பாகக் குடகு நாடும் மேல் கடற்கரையும் காவிரியும் அளாவிய மைய வேளாள நாட்டையே குறிக்கின்றது என்பது இதனால் பெறப்படுகின்றது ( நாகநாடு என்பதுகூட நாயர், நாய்கர், நாயுடு போன்ற தமிழகத்துக்கு அப்பாற்பட்ட தமிழின நாட்டு மரபுகளுடனே மிகு தொடர்புடைய தாகக் காணப்படுகிறது. அதுவும் குடகு நாடகவே இருத்தல் கூடும். )

நாகரிக உலகக் குடியரசு மரபில் முகிழ்த்த வேள்-வேளாண்மை மலர்ச்சி குறிஞ்சியில் பிறந்த முல்லையில் முதிர்ந்து மருதத்தில் தங்கி ஐந்திணையளாவித் திணைவரம் பழித்த பின்பே இன்றைய மனித இன நாகரிகச் சமுதாயமாயிற்று என்பது மேலே கூறப்பட்டது. இது பொது முறையில் உயிர் மண்டிலமாகிய நாகரிக உலகின் ஐந்திணை விரவிய பல பரப்புகளுக்கும் உரியதேயாகும். ஆயினும் அதன் இடையறா முழுநிறை வளர்ச் சிக்கும் முழுநிறை உயிர் மரபுக்கும் வளத்துக்கும் உரிய ஒரே உலகப்பகுதி ஆனைமலை, வெள்ளிமலை, குடகுமலை, மேல் கடல், காவிரியாறு என்ற இந்த மலையாறு கடலளாவிய பகுதி யாகிய கொங்கு நாட்டின் வேளாள நாடேயாகும். இதிலிருந்து இரு மலர்ச்சிப் பாதைகள் இம் முழு வேளாண் மலர்ச்சியைத் தமிழகமெங்கும் கொண்டு சென்றன. ஒரு பாதை மலையோர மாகத் தெற்கு நோக்கிச் சென்று பழனி வட்டாரப் பகுதியில் வந்து தங்கி, பின் அங்கிருந்து பாண்டி நாட்டின் நாஞ்சில் நாட்டுப் பகுதி சென்று பாண்டிநாடு முழுவதும் ஓரளவு சேர நாட்டிலும் பரவிற்று. இரண்டாவது பாதை காவிரி நோக்கிச் சென்று காவிரி யின் போக்கிலேயே தென்கிழக்காக முன்னேறிக் குழித்தலை வட்டாரப் பகுதியில் தங்கி, பின் கிழக்காகச் சோழநாட்டிலும் வடக்காகத் தொண்டை நாட்டிலும் பரவிற்று.

மேற்கண்ட இரு பாதைகளுமே கொங்கு நாட்டின் நீள அகல முழுவதும் கடந்தே சென்றன என்று காணாம்.

களப்பிரர் எழுச்சிக்கால அலைபாய்வு தமிழக முழுவதை யும் பொதுவாக வடபால் பாதித்த அளவு தென்கோடியிலுள்ள நாஞ்சில் நாடு, தென்பாண்டி நாடு ஆகியவற்றின் மலர்ச்சி யைத் தாக்கிக் குலைக்கவில்லை. ஆனால் கொங்கு நாட்டின் வடபெரும்பகுதி முழுவதும் மலர்ச்சி வளம் முற்றிலும் இழந்து விடவே, வேளாண் மரபினர் சேர பாண்டிய சோழ நாட்டு எல்லை

வரை துரத்தி ஒதுக்கப்பட்டனர். கங்கர் ஆட்சியின் இறுதிக் காலத்திலும் சோழர் காலத்திலும் தொடங்கப்பட்ட வேளாண் மறுமலர்ச்சிக்கு இத்தெற்கு, தென் கிழக்குப் பகுதிகளே (சோழ நாட்டெல்லையிலுள்ள கொங்குப் பகுதியாகிய குழித்தலை வட்டாரம், சேர பாண்டிய நாட்டெல்லையிலுள்ள கொங்குப் பகுதியாகிய பழனி வட்டாரம் ஆகியவையே) மூலதலங்களாய் அமைந்தன. இம் மூலதளங்களிலிருந்து மறுமலர்ச்சிப் பாதை வடக்காகவோ, காவிரிக் கரையளாவி வடகிழக்காகவோ சென்று மீண்டும் கொங்கு நாட்டை இன்றைய நிலைக்கு வளப்படுத்தின.

முல்லை நிலவாழ்வுக் காலத்தில் பொதுவாகத் தமிழகத்திலும் இந்தியாவிலும் வேளாளப் பேரினத்தின் மலர்ச்சியில் இருந்தும் ஆயர் அல்லது இடையர் (கோவேளாளர் அல்லது கோவைசியர்) தனி மாயோன் வழிபாட்டு மரபுடன் பிரிந்தது போலவே, குறிஞ்சி நிலத்தில் குறவரும் (முருக வழிபாட்டு மரபு), நெய்தல் நிலத்தில் மீனவரும் (வருணன் - பிற்கால மீனத்திருப் பிறப்புக்குரிய மாயோனாக மலர்ச்சி) மருதநிலத்தவரான மூன்றாம் ஊழிப்புது வகுப்பினரும் (சிவபெருமான் மரபிலிருந்து விலகி நின்ற இந்திரன் முதலிய வானவர் மரபு) பிரிந்தனர். (இந்தியாவெங்கும் ஒருவேளை நாகரீக உலகெங்கும் கூட பழங்குடியினர், மலங்குடியினர் இவ்வாறு பிரிந்து ஒதுங்கி திணைமரபினரே யாதல் கூடும்). இந்த மரபுச் சிதறல் பெரிதும் முடியரசுக்கும் அதன் மூன்றாம் ஊழிக்கும் உரியதாதலால், நாகரீக உலகெங்கும், இந்திய, தமிழகப் பரப்பெங்கும் நடைப்பெற்ற இச்சிதறல், கொங்கு நாட்டிலோ, பண்டைப்பெரும் கொங்குநாட்டின் விரிநிழல் படிவாகிய (Projection Shadow) நடுமேட்டு நிலப்பகுதியிலோ (விந்தமலை சூழ்ந்த பகுதியிலோ) அதன் தெற்கிலுள்ள தெக்காணப் பகுதியிலோ நெடுநாள் நிகழவில்லை. இப்பரப்பு முழுமையிலும் வேளாண்மை மலர்ச்சி பெறாத குறிஞ்சி, முல்லை, மரபின் வேளிரே, வேணாடரே வேளாண் மரபினராக, அதேசமயம் யாதவர் இராஷ்டிரகூடர், ரெட்டி போன்ற ஆட்சி மரபினராக நிலவியுள்ளனர் என்பது காண்கிறோம்.

உலகில், இந்தியாவில், தமிழகத்தில் வேறெங்கும் இல்லாத நிலையில் கொங்கு நாட்டின் கொங்கு வேளாளர்-வேட்டுவர் மரபினரிடம் மட்டுமே நாம் காணும் குடியரசு மரபின் ஐந்திணை மலர்ச்சியும் ஒருங்கமைத்த நிலை இந்த வரலாற்று மரபில் வந்த

விளைவேயாகும். ஆயினும் நாகரீக உலகில் ஆங்காங்கேயும் (மேலையுலக மூவர்கள், சப்பானிய ஐனுக்கள் (Inus) போன்ற வர்கள்) இந்தியாவில் விந்தச் சூழலையும் போலவே கொங்கு நாட்டு மலைப்பகுதிகளிலும் இத்தகைய திணைநிலை ஒதுக்கீட்டு நாகரீகங்கள் வந்து படிவுற்றுள்ளன. கொங்கு அக நாட்டிலும் உள்நாட்டிலும் மட்டுமே இவ்வாறு பிரியாமல் ஒதுங்காமல் முல்லை, மருதம், நெய்தலாகிய மற்றத் திணை மரபினங்களைப் போலவே குறிஞ்சி மரபில் வந்த பழம்பெரும் கோமரபினராகிய வேட்டுவ மரபினரும், வேளாளருடன் இணைபிரியாத வேளாள ராகவே ஐந்திணை மலர்ச்சியாகிய வேளாண்மை மலர்ச்சி முழு வதுமே நிறைவுறப் பெற்று, பண்டைக் குடியரசு மரபில் வந்த குடியாட்சி மரபை (கொங்குப் பண்பை) அவர்களுடன் இன்றும் பங்கு கொண்டு வளர்த்து வருகின்றனர்.

மக்களால் விருப்பார்வத்துடன் இராசாசி என அழைக்கப் பட்டு வந்துள்ள கொங்குநாட்டுப் பெரியார் சக்கரவர்த்தி இராசகோபாலசாரியார் தாம் இந்தியத் தலைவராயிருந்த போது வள்ளுவ அரசியலின் சிறப்பைப் பாராட்டியது போலவே, தாம் தமிழக முதல்வராக அமைந்த காலங்களில் ஐந்திணை மரபும் இணைந்த கொங்கு வேளாளரின் தேசீய உழைப்பாற் றலை வியந்து போற்றியுள்ளார். ஆனால் முடியரசர் பொது வாக, சிறப்பாகத் தமிழரின் கடல் கடந்த உலகாட்சியில் முனைந்த பாண்டிய பல்லவரும் பிற்காலச் சோழரும் போன்று கோமரபில் வந்த முடியரசர் இந்த வேட்டுவர் மரபு மற்றத் திணை மரபு களைப் போலக் கொங்கு வேளாள மரபில் தோய்ந்து ஒன்றி விடாமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அவ்விரு மரபினரை யும் பிரித்தாளும் வினைமுறை மேற்கொண்டனர். இவ்வகையில் பாண்டிய பல்லவர்கள் கொங்குப் பெருஞ்சேரரால் அடக்கி ஒடுக்கப்பட்ட அதியமான்-ஓரி-காரி மரபினரை மீண்டும் உயர்த்தி வேளாளருடன் போட்டியிட்டு மோதவிட முயன்றனர். (கொங்கு நாட்டின் வடபகுதி முழுவதும் பாலையாக, கொங்கு வாழ்வு வளப்பரப்பில் ஒரு வரலாற்றுப் பள்ளமாக ஆக்கப்பெற்ற குருதிப் போராட்டங்களுடன் இது பெரிதும் தொடர்புடையது ஆதல் கூடும்). ஆனால் சோழ மரபினரோ தம் புதிய தேசீய வளத்தின் பெயராலேயே இதனை இன்னும் சிறப்புற நடத்தினர். பழைய முடியரசுக்கு மாறாக அவர்கள் சார்புதலை மாற்றி, வேட்டுவ மரபினருக்கெதிராக வேளாள மரபினர்க்குப் பேராதரவு தர

முனைந்தனர், இதில் மூன்றாம் ஊழிக்குரிய புதுச்சமய, புதுப் பண்பாட்டு ஆர்வமும் கலந்திருந்து என்பதில் ஐயமில்லை. ஏனெனில் சோழர்களின் பட்டயங்களிலும், கல்வெட்டுகளிலும், அவர்கள் கருத்து மரபில்வந்த மரபு வரலாறுகளிலும் நாம் இந்த ஆர்வத்தை, இந்த ஒரச்சார்புகளை முற்றும் காணலாம். மூன்றாம் தளஊழி அலை தமிழகத்தில் உச்சநிலையடைந்து வந்த காலங் களில் (கி.பி.15,16 நூற்றாண்டு முதல்) வடகலை, தென் கலைப் போராட்டங்கள், வலங்கை, இடங்கைப் போராட்டங்கள், நாடார், மறவர் போராட்டங்கள், கேரளத்தில் நாயர் - ஈழவர் போராட்டங்கள் பல இடங்களில் வேளாள மரபினருள்ளேயே சிறுகட்சி, பெருங்கட்சிப் போராட்டங்கள் ஆகியவற்றுடனொப்ப, அதே சமகால ஊழி மரபாகவே கொங்குநாட்டில் வேளாளர் வேட்டுவ மரபுப் போராட்டங்கள் ஊக்கி வளர்க்கப்பட்டன. நாட்டுப் பாடல்கள் நமக்குப் பதிவு செய்து வழங்கும் புதிய மாபாரத மரபு இதுவே!

சங்க காலத்தில் கோமரபு ஆய்மரபும் மிக நெருங்கிய இணை மரபுகளாகவே இயங்கி வந்தது காணலாம். பல ஆய் மரபினர் வேள், கோ ஆகிய இரு பட்டங்களும் ஒருங்கே தாங்கி யிருந்தனர். தற்காலக் கொங்கு நாட்டுக்கு வடக்கிலும், மேற் கிலும், கிழக்கிலும், இருமரபுகளும் முற்றிலும் ஒரே மரபாய் இணைந்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. ஏனெனில் வடபால் இது யாதவர் ஆட்சி மரபிலேயே தனி வேறுபாடுகளை ஊக்கிற்று. (இதுவும் வட இந்திய உலக மரபுகளும் அத்திசை களின் தனி ஆய்வுகளுக்குரியன) ஆனால் கொங்குநாட்டில் மற்ற நாற்றிணை மரபுகளும் வேளாளர் மரபில் முற்றிலும் இரண் டறக்கலந்து இணைந்துவிட்ட பின்னும், பாலை மரபு (மறவர் மரபு) இணையாத தெற்கு வடக்கு கிழக்கு திசைகளிலிருந்து வந்த முடியரசு மரபுகளின் தூண்டுதலே கிட்டத்தட்ட முழு வேளாண்மை மலர்ச்சியும் பெற்று வேளாளர் மரபாகவே மாறி யிருந்து வேட்டுவ மரபைத் தனித்து நின்று சமுதாய தளத்தி லேயே குடியரசுப் போட்டி நிகழ்த்த வைத்துள்ளது என்னலாம்.

தமிழக (பண்டைப் பெருந்தமிழக) எல்லையெங்கும் சிறப் பாகக் கொங்குத் தமிழக (பண்டைப் பெருங்கொங்குத் தமிழக) எல்லையெங்கும் நிலவிவரும் முனைப்பான முருக வழிபாட்டில் நாம் இன்னும் இந்தக் குறிஞ்சி மரபுக் காலத்துக்குரிய கோமரபின்

தனிப்பட்ட செல்வாக்கினைக் காணலாம். மேலே சுட்டியுள்ள படி தமிழ் மொழி மரபு, சொல்மரபு, பண்பு மரபுகளில் கூட நாம் இந்தக் கோமரபின் ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர்த்துய்கள் ஆகியவற்றைக் காண்டல் தகும்.

சைவ நாயன்மார்களில் சேர அல்லது கொங்குச் சேர அரச ராகிய சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோருடனும், வைணவ ஆழ்வார்களுள் கொங்குச் சேர அரச னாகிய குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோ ருடனும் கொங்கு வரலாறு பெருந்தொடர்பு கொண்டுள்ளது. சுந்தரர் வேடுபறி என்ற அழகிய பாடல் வேட்டுவர் வடிவில் கொங்கு வேளாள நாட்டிலே இறைவனாடிய திருவிளையாடல் களைப் பாடுகிறது. முருகனின் ஒரே காதல் துணைவியான வள்ளி நாச்சியார் (கண்ணனின் பன்முனை மணமும், முருகனின் தெய்வயானை மணமும், சங்ககாலம் அறியாத பிற்கால மரபுகள்) இவ்வேட்டுவ மரபினரேயாவர். பாரதத்தில் விசயனுக்குச் சிவ பிரான் அருள்பாலிக்க வந்த வடிவமும் இவ்வடிவமேயாகும்.

வேள் என்ற தமிழ்ச்சொல் முருகனையும் காதற் கடவுளை யும், வேள்வி என்ற சொல் வழிபாட்டையும் ஒப்புரவையும் (வேளாண்மை) வேட்டம் என்பது காதலையும் வேட்டையையும், வேடு என்பது இறையுணவு மீதிடும் மெல்லாடையையும் வேடரை யும் களவியல் காதலையும், வேட்டு என்ற சொல் மலை தகர்த்துக் காடு நாடாக்க வழிவகுக்கும் சுரங்க வெடியையும் உணர்த்தும். இச் சுரங்கவெடியின் பழமையை 'கல்லுளிச்சித்தன் போனவழி, காடுமேடெல்லாம் தவிடுபொடி' என்ற தமிழ்ப் பழஞ்சொல் காட்டும்.

பண்டை வேளிர்க்கும் அவர் வழிவந்த அரசருக்கும் அவர்கள் உருவிலேயே வழிப்படப்பட்ட ஐயனார் அல்லது சாத்தா னுக்கும் (சாத்தான், சாத்தா: சமஸ்கிருதம், சாஸ்தா-அரசன்; தமிழ்; சாத்து- இறைப்படிவ ஒப்பனை, உழவர் கூட்டம், வணிகள் கூட்டம், அரசர் சுற்றம்; சாத்துப்படி, கோயிற்கட்டளை) வேட்டையாடு தலும் (கொடுவிலங்குகளை அழித்தலும்) செண்டாட்டமும் (Polo : குதிரை மீது அமர்ந்து ஆடும் பந்தாட்டம்) சிறந்த வீரப் பயிற்சிகளாகக் கருதப்பட்டன. (தற்கால அகல் உலக அகழ் வாராய்ச்சியாளர் இச் செண்டாட்டத்தின் கி.மு. 4000 ஆண்டுகளுக் குரிய பிறப்பிடமாக வடமேற்கு பாரசீக நாட்டைக் குறிக்கின்றனர்.)

தென்னகமெங்கும் ஐயனார் கோயில் வெளியில் பக்தர்களால் நேர்ந்து நிறுத்தப்பட்டுள்ள பாரிய மரக்குதிரைகள் ஐயனாரின் ஊர்க்காவலுக்கு மட்டுமன்றி, அவருக்குரிய செண்டாட்டக் கேளிக்கைக்கும் உரியதாகும். அத்தெய்வத்தையும் அதன் மரபில் வந்த (சிவகங்கை மருது பாண்டியர் போன்ற) அரசரையும் தமிழ்ப் புலவர் செண்டலங்காரர் என்று பாடுவதுண்டு. செண்டாட்ட மாகிய குதிரைப் பந்தாட்டத்துக்குரிய மட்டைவடிவே அரசர் கைக்கோலாகவும், (கோதண்டம், பாரதப் போரில் பீமனின் கதாயுதம் அல்லது தண்டம்) அவ்வடிவிலுள்ள பூஞ்செண்டாக வும் மலர்ச்சியுற்றது. (மணம் Scent என்ற ஆங்கிலச் சொல்லின் திரிபு என இதை தவறாகக் கொள்பவர் உண்டு.)

வேளாளர்- வேட்டுவர் மரபின் பொதுத் தெய்வமாகவும் வேட்டுவ மரபினரின் சிறப்புத் தெய்வமாகவும் விளங்கும் வடுகநாதர் அல்லது வைரவர் வேட்டையுடன் மிகு தொடர்புடை யவர் என்பதை அவரது வேட்டை நாய் ஊர்தி காட்டும். வீரபத்திரக் கடவுளுடனும் ஐயனாருடனும், முருகனின் துணைவனான வேளைக்காரப் படையும் (பாண்டி நாட்டுச் சாவேர்ப் படை அதாவது சாவேற்புப்படை) ஒரே தெய்வமரபுத் தொடர்புடைய தாகும் என்பது காணத்தக்கது.

தென்னக இந்திய உலக வேள் மரபு முழுவதிலும் காணப் படுகிற, ஆனால் தமிழக வேளாளர் மரபில் அவ்வளவாகக் காணப் பெற இலயாத வீரமரபினை நாம் கொங்கு நாட்டு வேளாளர், வேட்டுவர் ஆகிய இரு மரபுகளிலுமே ஒப்பக் காண்கிறோம். இரு மரபுகளும் ஒரே இணைமரபாய் முடியரசு ஊழி வரலாற் றால் மட்டுமே பிரிக்கப்பட்ட கிளையின மரபுகள் ஆகியுள்ளன என்பதை இதுவும்; இதுபோன்ற அவர்களின் பிற பொதுமலர்ச்சிப் பண்புக் கூறுகளும் (தமிழ்: மழவர்-வீரர், உழவர்) காட்டும்.

நாடுகளிடையே கொங்கு நாட்டுக்கு மட்டுமே தனிப் பெருஞ்சிறப்பாய் அமைந்துள்ள தனித் தன்மை அல்லது கொங்குத் தன்மை என்பது (கொங்கன், தனித்தன்மையுடையவன், தனித் திருவிளையாடல் புரிபவன், முருகன் அல்லது மதுரைச் சொக்க னாகிய சிவபெருமான்) உண்மையில் கொங்கு வேளாளர்- வேட்டுவர் இணை மரபின் தனித்தன்மை ஆகும். அதுவே நாகரீக உலகின் வேளாண்மை மலர்ச்சிக்குரிய முழு நிறைவுத் தன்மை யின் நாடு நோக்கிய, உலக நோக்கிய அகலவிரிவின் உயர்விதைப் பண்பு என்னலாம்.

கொங்கு வேளாளப் பெருங்குடி மக்களும் கொங்கு வேட்டுவப் பெருங்குடி மக்களும் வேறு வேறு நாட்டவர், மரபினர், பண்பினர் என்பதோ, அவர்களில் எம்மரபினரேனும் மற்ற மண்டலங்களைத் தாயகமாகக் கொண்டு அங்கிருந்து குடியேறியவர் அல்லது குடியேற்றப்பட்டவர் என்பதோ இவ்வாறு தமிழ் மரபு, வரலாற்றுமரபு, மொழி மரபு, நாகரீகமரபு ஆகிய அனைத்துக்கும் முரண்பட்ட மருண்ட நோக்கின் விளைவேயாகும். இது போலவே கொங்கு வேளாள மரபு சோழ நாட்டு வேளாள மரபையோ, பிற வேளாள மரபுகளையோ (பண்டை வடகொங்கு, மேல் கொங்குப் பரப்புகளிலுள்ள மரபுகளையோ கூட) தாய்மரபு அல்லது தாய்மரபுகளாகக் கொண்டது என்று கொள்வதும், கருதுவதும் முற்றிலும் தவறே ஆகும். இவற்றை மேற்கண்ட வேளாண்மை மலர்ச்சி விளக்கம் காட்டும். உண்மையில் கொங்கு வேளாள மரபு தென்னகமெங்குமுள்ள எல்லா வேள் மரபு, வேளாளர் மரபுகளுடன் தொடர்புடைய ஆனால் அவற்றிற் கெல்லாம் மலர்ச்சித் தாயகமான மலர்ச்சி, நிறைவான ஆதி வேளாண் மரபும் முழு வேளாண் மரபும் ஆகும். இது மட்டுமன்று; பிராமணரையும் பிறரையும் உள்ளடக்கிய எல்லாத் தமிழ், தென்னக, இந்தியமரபுகளுக்கும் மூலமான குடியரசு மரபின் நேர்வழி மலர்ச்சி கான்முளை மரபினரே யாவர்.

அறிஞர் செல்வி சக்தி தேவியார் தம்மையுமறியாது மரபு வழி நின்றே பயன்படுத்திய 'மூத்தகுடிமகன்' முதற் குடிமகன் 'வேளாளர் இனத்துக்கே தலைவர் வேணாடர்' என்ற தொடர்களின் பின்னணியிலுள்ள மரபு விளக்கம் இதுவே!

கொங்கு நாடு, கொங்கு வேளாளர் இனம் ஆகிய இரண்டனுக்கும் உரிய தனி மரபுத் தன்மை அல்லது கொங்குத் தன்மையை நாம் கீழ்வருமாறு வகுத்துக் காணலாம்.

பண்டைக் கொங்குத் தமிழகப் பரப்பு பண்டை நாகரீக உலகின் வாணிகப்பெரும் பாதை தன்னூடாக மேற்கு கிழக்காக நேர் குறுக்கே செல்லப்பெற்று அதன் முழுமலர்ச்சி வளத்தையும் பெற்றிருந்தது; ஆனால் அதன் அரும்பெரும் பேறு இது ஒன்று மட்டுமன்று. கிட்டத்தட்ட அதே ஊழியிலேயே, அது போலவே நாகரீக உலகின், தமிழகத்தின் வேளாண்மை முழு மலர்ச்சிப் பாதைகள் இரண்டிலும் கொங்குத் தமிழகம் வடக்கு தெற்கு அல்லது வடமேற்கு தென்கிழக்கான போக்கில் சென்ற இருபெரும் பாதைகளிலும் நேர்குறுக்காகக் கிடந்து அதன் முழு

நிறை மலர்ச்சியும் தேசிய பண்பாட்டுவளமும் பெற்றுவந்துள்ளது. இது மட்டுமா? இரு பாதைகளிலும் சங்க காலத்துக்கு முன்னுள்ள (வடக்கு தெற்கு அல்லது மேற்கு கிழக்கான) முதல் மலர்ச்சிச் சீரமைப்பேயன்றி, சோழர் காலத்திலான (தெற்கு வடக்கு அல்லது தென்கிழக்கு வடமேற்கான) இரண்டாம் மலர்ச்சி அல்லது மறு சீரமைப்பையும் அது பெற்றுத் திகழ்ந்துள்ளது. முழுமலர்ச்சியை நிறைவாகவும் இருமடியாகவும் பெற்றதனாலேயே அது தென் அமெரிக்காவின் 'பெரு'நாட்டு இங்கா மரபுப் பரப்பைப் போல, தமிழக இந்திய, நாகரீக உலக வேளாண்மை, தொழிலாண்மை மலர்ச்சியின் மையமாகத் திகழ்ந்து வந்துள்ளது. இது போலவே அது நாகரீக உலகின், இந்தியாவின் சமுதாயத் துறைச் சமதரும, தேசீய ஒளிபரப்பும் மைய நிலமாகவும் விளங்கி வருகிறது.

வீரமரபு, கால்நடைப் பயிர்ப்பின மரபு (கற்பு நாகரீக அதாவது குடும்பவழி வந்த குடியரசு நாகரீக மரபு) உழவாண்மை, தொழிலாண்மை, வாணிக மரபுகள் ஆகிய ஐந்திற மரபும், ஒருலகு காணவல்ல மனித இன நாகரீகத்தின், தேசீயங்களின் விதைப் பண்பாய்ச் சமுதாய ஒத்திசைவு, கூட்டிணை பண்பு ஒருங்கே கொண்டவையாகக் கொங்கு நாடும், கொங்கு வேளாளர் மரபும் ஒருங்கே இலங்குகின்றன.

நாகரீக உலகப் பழங்குடியினத்தவரின் தொல்பழமைச் சின்னமாக விளங்குபவை கோத்திர குலப்பிரிவு, கோத்திரச் சின்னங்கள் (Totems: பெரும்பாலும் செடிகொடி விலங்கு புள் பண்புகளாக அமைபவை) இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒத்திசைவு அகல்விரிவுக்குரிய (குலம், பெருங்குலம், இனம், பேரினம், நாடு, மாநாடு, உலகம் என்று செல்கிற) குடியரசு மலர்ச்சிப்பண்பு ஆகியவையே இவை நாகரீக உலகின் வேறு எந்தப் பரப்பையும் விடக் கொங்கு நாட்டுக்கும், வேறு எந்த மரபினரையும், பிற பிராமண வேளாள மரபினரையும் விடப் பேரளவாக்க் கொங்கு வேளாளருக்குமே பெருவாய்ப்பாக கிடைத் துள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

உலகில் வேறு எந்த நாட்டின் எந்த மரபினுக்கும் இந்தியா வில் வேறு எந்த பிராமண அல்லது வேளாள மரபினருக்கும் இல்லாத நிலையில் கொங்கு நாட்டு வாழ்வில் கொங்கு வேளாள மரபு நாட்டு வாழ்வே வாழ்வாகக் கொண்டியங்குகிறது. அவர்கள் பெரும்பான்மை வகுப்பாக இன்று விளங்குவது குடியரசு மரபு

மலர்ச்சியறாத அவர்களின் ஒத்திசைவு-அகல் விரிவு மலர்ச்சி யின் விளைவேயாகும். அதுமட்டுமன்று, இந்தியாவெங்கும் சாதி வருண அடிப்படையில் ஏற்பட்டுள்ள சமுதாய, அரசியல், கல்வி, உழவு, வாணிக தொழிலாட்சிப் பிளவுச் சிதறல்கள் கொங்கு வேளாளர் வாழ்வையோ கொங்கு வாழ்வையோ இன்னும் பாதிக்க வில்லை. அது இன்னும் அகல் தேசீய வாழ்வு ஊக்கும் சமுதாயத் தேசீய வாழ்வாகவே இயல்கின்றது. தொல்காப்பிய கருப்பொருள் மரபை நினைவூட்டும் காணி (தனிநில உரிமை, குடிவழிக் கோயில் மரபு: மேலைச் சொல்; Cult) ஆகியவை ஒருளவு பாண்டி நாட்டிலும் பேரளவில் கொங்குநாட்டிலும் இன்னும் நீடித்து நிலவு கிறது.

நாகரீக உலகெங்கும் இந்தியாவிலும், தமிழகத்திலும் பொதுவாகப் புதிய நாகரீகங்கள் பரவாத இடப்பரப்புகளிலும், பழங்குடி, மலங்குடி, தாழ்த்தப்பட்ட இனப் பரப்புகளிலும் சிறப்பாக குடிப்பெயர்கள் இடப் பெயர்கள் (மலை, ஆறு ஆகிய வற்றின் பெயர்கள்) சாதி மரபுப் பட்டப் பெயர்கள் ஆகியவற்றில் மட்டுமே தொல்பழந் தாய்நில அல்லது தாய் இன அதாவது தூய தாய்மொழிப் பண்பு மரபுகள், காணப்படுகின்றன. பழமை வாய்ந்த தெய்வ மரபுகள், சமய வழக்கங்கள், மரபுகள், தெய்வங் களின் பழமையான பெயர்கள், பண்புகள் ஆகியவற்றின் செய்தி களும் இவை ஒத்தவையே. ஆனால் கொங்குநாட்டு வாழ்வில் இந்த உயர்வு தாழ்வு வேறுபாடுகளோ சமுதாய இனப் பிளவு வேறுபாடுகளோ இல்லாமல் வேளாளரிடையேயும் பிற மரபு களிடையேயும் தொல்காப்பிய காலத்துக்கும் முற்பட்ட தொல்காப் பிய திருவள்ளுவ, சங்க காலங்களுக்குரிய மொழிப் பழமைகள், மரபுப்பழமைகள், பண்புப் பழமைகள் ஆகிய எல்லாவற்றையும் காணலாம். திணைநிலை ஆய்வாளர்கள் இவற்றை ஆய்ந்து சுட்டிக் காட்ட முற்பட்டுள்ளனர்.

மேலைக் கிறித்துவ, இசுலாமிய, யூத சமயத்தவர் இறை வனை இயேசுவின் தந்தை, அபிரகாமின் தந்தை என்று கூறுவ துண்டு. சங்க காலபழங்காலத் தமிழர் இறந்த இடம் இறந்த சூழல், ஆகியவற்றைச் சார்த்தி குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், ஆனைமேல் துஞ்சிய பெருமாள் போன்ற பெயர் சுட்டும் மரபும் உடையராயிருந்தனர். புகழ்பெற்ற மகன் பெயரும் ஒருவரின் சிறப்புப் பெயராக வழங்கப் பெற்றது காண்கிறோம். ஆந்தை

(ஆதன் தந்தை) பூதந்தை (பூதன் தந்தை), சாத்தந்தை (சாத்தான் தந்தை) ஆகிய சொற்கள் கடவுள் பெயராகவும் (ஆதன், ஆதி ஆகியவையே கடவுள் சுட்டுவன) இயற்பெயர், சிறப்புப் பெயர் களாகவும் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே வழங்கின என்பதை அவ்விலக்கணத்தில் அச்சொற்களுக்கு விதியமைத் துள்ளதன் மூலம் அறிகிறோம். இப்பெயர்களும் இதுபோல, சங்க காலவழக்கிலிருந்த புலவர் முதலியோர் பெயர்களும், பிற பழக்க வழக்க மரபுகளும் சொல் மரபு, மொழி மரபுகளும் கொங்கு வாழ் விலும் கொங்கு வேளாளர் வாழ்விலும் பிற கொங்கு மரபினர் வாழ்விலும் பேரளவாகக் காணப்பெறுகின்றன.

மனித இன நாகரிகப் பழமை, இந்திய, தமிழகப் பழமை களுக்குரிய ஆராய்ச்சியாளருக்கும் அவற்றில் பயின்று பழக விரும்பும் பண்பாளர்களுக்கும் கொங்கு வாழ்வும் கொங்கு வேளாளர் உட்பட்ட கொங்கு மக்கள் வாழ்வும் ஒரு விலை மதிப்பிட வொண்ணாத கருவூலம் ஆகும்.

கொங்கு வேளாளர் மரபு சாதி மரபுகளிடையே ஒரு சாதி மரபாக, பல வேளாளர் மரபுகளிடையே ஒரு வேளாளர் மரபாக மட்டுமே பலருக்கும் மேலீடாகத் தோற்றமளிக்ககூடும். ஆனால் அது வேளாளர் இனத்தின் வரலாற்றையே தன் வரலாறாகத் தன்னகங் கொண்டு வேளாளர் இனத்தின் மணிப்பதிப்பு, நிறை மணிப் பதிப்பாக இயல்வது ஆகும். அத்துடன் அது தற்கால வேளாளர் இனத்துக்கு மட்டுமன்றி, பிராமண இனத்துக்கும், மற்ற எல்லா இந்திய மரபினருக்கும் உரிய பொதுமூல மரபாகிய வேள் மரபுக் கொழுந்தாய் இன்றும் அதன் பெயரும் பண்பும் மரபும் மீட்டும் உயிர்ப்பித்துப் புதிய தேசீய, புதிய நாகரீக வாழ் வுக்கும் உலகுக்கும் வழிகாட்டவல்ல மரபொளியாய் இயல்கின்றது.

சாதி வருண உயர்வு தாழ்வு பேணிவரும் ஏடாகூடமான மரச் சட்டத்தினுள்ளும், வகுப்பு, நாடு, மொழி இன வேறுபாடு, நிற வேறுபாடு பேணும் சூழல்களினுள்ளும், குடும்ப சமுதாய வாழ்வு கெட்டழியும் தற்கால மேலையுலக வாழ்வுகளிலும், குறிக்கோளும் திட்டமுமின்றி அல்லாடும் தற்கால உலகுக்குத் தமிழ் மொழி யும், தமிழர் திருக்குறளும் போலப் பழைய சமதரும அடித்தளத் தில் நின்றெழும் ஒரு புதிய சமதரும ஒளிக்கம்பமாக, கொங்கு நாடும் கொங்கு வேளாண்மை மரபும் பொங்கொளி வீசுகின்றன.

அதிகாரம் : 3

# சங்கம் கண்ட கொங்கு வாழ்வு

## i. வேள் புலக் குடியரசுக் கோட்டங்கள்

சங்க காலப் பெருங் கொங்குத் தமிழகம் சேர சோழ பாண்டிய தொண்டை மண்டலங்கள் புடைசூழத் தமிழகத்தின் நடுமையமாகவும் அதன் முனைப்பான மரபிளங் கொழுந்தாகவும் விளங்கிற்று. தமிழக வரலாற்றின் வான விளிம்பாகிய தொல் பழங்காலத்திலிருந்தே சங்ககால இறுதிக் காலமாகக் குறிக்கப் படும். கி.பி. 250 (கி.பி. 3ம் நூற்றாண்டின் நடுப்பகுதி) வரை யுள்ள இப்பேரூழியின் முற்பகுதியில் (கி.பி. 1ம் நூற்றாண்டின் நடுப்பகுதி அல்லது பிற்பகுதி வரை) இப்பரப்பு முழுவதும் வேள்புலக் குடியரசுகளின் ஆட்சிக் கோட்டங்களாகவே திகழ்ந் தது. அப்பேரூழியின் பிற்பகுதியில் அவை ஒவ்வொன்றாகக் கொங்குப் பேரரசர் கட்டியெழுப்பிய கொங்குப் பேரரசினால் தனித்தனிக் குடியரசு நாடுகள் என்ற முறையில் விழுங்கப்பட் டுள்ளன.

சங்ககால வேளரசுகள் எண்ணிக்கையில் மிக மிகப் பல வாகவே இருந்திருக்க வேண்டும் என்னலாம். ஏனெனில் அவற்றைப் பற்றி நமக்குத் தெரிவிக்கும் சங்க இலக்கியங்களும் சங்ககால முத்தமிழ் இலக்கிய இலக்கண பரப்புகளும் எல்லாமே நிறைவாக நமக்கு வந்து எட்டவில்லை. இறந்தவையும் மறைந் தவையும் போக, எஞ்சியவைகளும் பெரிதும் சிறிதும் சிதைந்த வடிவிலேயே வந்து கிட்டியுள்ளன. அவற்றால் கூட நாம் பண்ணன், ஏற்றை, வெளியன், அத்தி, முன்றுறை போன்ற பல வேளிர்கள் வகையில் அவர்களின் பெயர் மட்டுமே அறிகிறோம்; பெயர் அறியப்படாத வேள் புலங்களும் இருத்தல் கூடியதே.

இந்நிலையிலும் நாம் சங்கப் பலகணிகள் மூலம் பண்டை மேல் கொங்கு நாட்டில் கோசர், கடம்பர் ஆகியவர்கள் பற்றியும்; பண்டை வடகொங்கு நாட்டில் குதிரைமலை, துவரை நாடு, புன்னாடு, எருமையூர், கங்கநாடு, கட்டிநாடு ஆகியவை பற்றியும்; தற்காலக் கொங்கு நாடாகிய பண்டைத் தென்கொங்கு நாட்டில்

ஙவையாவிநாடு, தகடூர், கொல்லிமலை, குதிரைமலை, கண்டிநாடு, விச்சிநாடு, காழூர்நாடு ஆகியவை பற்றியும் ஓரளவு விளக்க மான செய்திகளை அறிகிறோம். கோலத்துக்காகப் பெண்டிர் இடும் புள்ளிகள் போல, இவை சங்ககாலக் கொங்கு நாட்டின் வரலாற்றுப் போக்கையும் கொங்குமக்கள் வாழ்க்கைப் போக்கை யும் நுனித்துணர வைப்பவையாய் உள்ளன.

இங்கே குதிரைமலை இரு தடவை கூறப்பட்டுள்ளது காண லாம். பெரும் புலவர் ஔவை துரைசாமிப்பிள்ளை கருதியுள்ள படி, அவை ஒரே மலையின் இருபக்க நாடுகளாய் வடகொங்கு தென்கொங்குப் பகுதிகளில் இருந்தவை என்று கருதத்தகும். இரண்டும் ஒரே நாடு என்பவரும் உண்டு.

கொங்கு மக்கள் வாழ்வு அந்நாளைய அனைத்திந்திய அரசியல் வாழ்வு, பெருந்தமிழக முழுவாழ்வு ஆகிய வரலாற்றுச் சக்கரங்களின் சுழற்சியிடையே சுழற்சி மைய அச்சாகத் திகழ்ந் தது. இப்பெருஞ் சுழற்சியின் போக்கை ஒட்டியே நாம் முதலில் மேல்கொங்கு, அடுத்து வடதென் கொங்குப் பரப்பு என அவற் றின் வரலாறுகளை வரிசைப்படுத்திக் காண வேண்டியவர்கள் ஆகிறோம்.

மேலே சுட்டியுள்ளபடி, தொல் பழங்கால இந்தியாவின் ஆதிமுடியரசுப் போட்டிகள் பேரரசு போட்டிகளாக விரிவுற்ற போது, அவற்றின் தொலைவீச்சாகத் தென்திசை வடதிசைப் போட்டி கிளர்ந்தெழுந்தது. இதன் அரசியல் வரலாற்றில் மூன்று மரபுகளையும் அவற்றிடைப்பட்ட இரு திருப்பங்களையும் காண லாம்.

கடல்கொண்ட தென்மதுரையிலிருந்து ஆண்ட முதற் சங்க கால நிலத்தரு திருவிற் பாண்டியன் நாட்களிலிருந்து சோழன் கரிகால் வளவன், இமயவரம்பன், பெருஞ்சேரலாதன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் காலம் வரை (கி.பி. 2-ம் நூற் றாண்டு) நீடித்த முதல் மரபு தென்னக இமயப் படையெடுப்பு விழாவாகவே நடந்தது. ஆனால் இதன் பிற்பகுதியிலேயே முதல் திருப்பம் ஏற்பட்டு, இரண்டாம் மரபு புத்தர் காலப் பேரரசன் அசாதசத்துரு (கி.மு.5-ம் நூற்றாண்டு) மோரியர் (கி.மு. 4-ம் நூற்றாண்டு) முதல் சந்திரகுப்தன் (கி.பி. 5-ம் நூற்றாண்டு) ஆகியோர் காலம் வரை வட அரசர் தென்திசைப் படையெடுப் பாகத் தொடர்ந்தது. மீண்டும் இதனிடையே இரண்டாம் திருப்பம்

ஏற்பட்டுச் சேரன் செங்குட்டுவன் (கி.பி. 2-ம் நூற்றாண்டு) கால முதல் சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திரன் (கி.பி. 11-ம் நூற்றாண்டு) காலம் வரை அது இந்தியாவுக்கு வேளியே அல்லது வட மேற்கேயுள்ள அயலரசருக்கெதிரான தென்திசை - வடதிசைத் தேசீய கூட்டணியாக உருமாறிற்று. (நடு ஆசியாவில் பாக்திரியா பார்த்தியா நாடுகளுடன் வடமேற்கிந்தியாவும் இணைத்து ஆண்ட கனகன் அல்லது குசாணப் பேரரசன் கனிஸ்கன், வடமேற்கிந்தியா மீது 18 முறை படையெடுத்துச் சூறையாடிய ஆப்கன் அரசன் கஜினி மாமூது ஆகியோரே இவ் அயல் மரபுக்குரிய அரசராவர்).

திருப்பங்கள் இரண்டுமே சங்க காலத்துக்குரியன. இரு திருப்பங்களும் முறையே சங்ககாலப் பெருங்கொங்குத் தமிழகமும் தமிழ்ச் சேர நாடுமே நிலைக்களங்களாகவும் தூண்டுதல் காரணங் களாகவும் அமைந்திருந்தன.

புத்தர் பிரான் காலத்தில் (கி.மு. 5-ம் நூற்றாண்டில்) தொடங்கி மோரிய மரபின் அசோகன் காலம் (கி.மு. 3-ம் நூற் றாண்டு) வரை நீடித்த இரண்டாம் மரபுக்குரிய முதல் திருப்பமே தமிழக மக்களின், சிறப்பாகக் கொங்குத் தமிழக மக்களின் உள்ளங் களில் பரபரப்பையும் பல்வகை அதிர்வலைகளையும் எழுப்பி யிருந்தன. பத்திரிகை வாசிப்பவர்கள் இன்று தம் மனைவி மக்க ளிடம் உரையாடும்போது இடைப்பெய்து கூறும் உணர்ச்சிமய மான உலகச் செய்தித் துணுக்குகளைப் போல, சங்கப் புலவர்கள் இந்த அதிர்வலைகளைத் தம் அகப்புறப் பாடல்களில் பதிவு செய்து சென்றுள்ளனர். இம்முறையிலேயே படுமரத்து மோசி கீரனார், மாமூலனார் ஆகிய புலவர்கள் கங்கையாறு, அதன் கிளை யான சோனையாறு, கிரேக்க வெற்றிவீர மன்னன் அலெக் சாண்டர் (கி.மு.4-ம் நூற்றாண்டு) படையெடுப்பின் அதிர்வு காரணமாக அப்பகுதிகளில் ஆண்ட நந்த மரபினர் கங்கைப் படுகையுள் புதைத்து வைத்திருந்த செல்வக்குவை ஆகியவற் றைப் பற்றிப் பாடியுள்ளனர்.

'வெண்கோட்டுயானை சோனைபடியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்!' (குறுந்தொகை 75)

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர் முதல் கரந்த நிதியங் கொல்லோ?' (அகம் 265)

மோரியப் பேரரசனான அசோகன் (கி.மு. 272-231) செதுக்குவித்த பாலிமொழிக் கல்வெட்டுகள் மூலமாக, அவன் பேரரசாட்சி பண்டைப் பெருந்தமிழக எல்லை வரை பரவியிருந்ததாக அறிகிறோம். அவன் பாட்டன் (சந்திரகுப்தன்), தந்தை (பிந்துசாரன்) ஆகியோரின் ஆட்சிகள் விந்தமலைக்கு இப்பால் பரவியிருந்ததாகத் தெரியவில்லை; அசோகன் ஆட்சியிலோ அவன் முதற்போரும் இறுதிப்போரும் அவன் ஆட்சித் தொடக்கத்தில் நிகழ்ந்த கலிங்கப் பெரும்போரே (கி.மு. 271-264) ஆகும். இந்நிலையில் தென்னக வெற்றி பெரிதும் பிந்துசாரன் ஆட்சியிறுதிக்குள்ளாக நடந்திருக்கலாம் என்று வின்சென்ட் சுமித் முதலிய வரலாற்றாசிரியர்கள் கருதியுள்ளனர். ஆனால் உண்மை நிலை தென்னக வரலாற்று மரபு மூலமே விளங்குவதாகும், கலிங்கப்பேரரசும் ஆந்திரப் பேரரசும் குடியரசுக்குழு நிலையிலிருந்து கொண்டே, வடதிசைப் பேரரசுகளுடன் (பர்மிய அரசுகளுடன்கூட) போட்டியிட்டு அவற்றை இறுதியில் விளங்கியவை ஆகும். அசோகன் காலத்துக்கு முன்னரும் பின்னரும் இரு பேரரசுகளும் மாறி மாறி விரிவுற்றுத் தமிழக எல்லையளாவியிருந்தன. எனவே தென்னகம் வென்ற மோரியப் பேரரசன் உண்மையில் சந்திரகுப்தனோ, பிந்துசாரனோ அல்லன்; அசோகனே! பண்டைத் தமிழக எல்லையளாவிப் பரவியிருந்த கலிங்கப் பேரரசின் வெற்றியுடன் வெற்றியாகவே, அவன் பேரரசும் தமிழக எல்லையளாவி நின்று, அதன்பின் தமிழகத்தினுள்ளும் படையெடுக்க முயன்றது. ஆனால் இதில் வெற்றிகிட்டாததனாலேயே அசோகன் தமிழக அரசுகளுடன் நேச ஒப்பந்தம் செய்து கொண்டான்.

கலிங்கப் போருடன் போராகவே தமிழகப் படையெடுப்பு முயற்சி மோரியரால் திட்டமிட்டுத் தொடங்கப்பட்டு அப்பெரும் போரின் இறுதிக் கட்டமாகவோ அம்முயற்சியும் முடிவுற்றது, ஏனெனில் அம்முயற்சியின் முதற் கட்டத்தில் மோரியர் நேரடியாகத் தமிழகத்தைத் தாக்க முற்படவில்லை. தமிழக அரசுகளிடையே ஓர் எல்லைப்புற அரசையே தம் நேச அரசாக்கிக் கொண்டு, அந்நேச அரசைத் தூண்டி மற்றத் தமிழக அரசுகளைத் தாக்கவிட்டது. இதில் தோல்வியுற்ற பிறகே அவர்கள் நேரடித் தாக்குதலுக்கான பெரும்படி ஏற்பாடுகளில் முனைந்தனர். பெருந் தமிழக எல்லையிலுள்ள மலைகளிலும் கணவாய்களிலும் அவர்கள் தேர்கள் செல்வதற்குரிய மலைப் பாறைகளை உடைத்துக் கணவாய்ப்பாதைகள் அமைத்தும், ஆங்காங்கே படை காவல் தளங்கள் நிறுவியும் வந்தனர்.

ஆண்டாண்டாக நடைபெற்று வந்த இப்பெரு முயற்சிகளால், தமிழர் வாழ்விலும் தமிழக மக்கள் உணர்விலும் ஏற்பட்ட அதிர்வுகளை உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார், மாமூலனார் போன்ற சங்கப் புலவர்கள் நம் வரலாற்றுச் செவிப்புலனில் படும்படி எடுத்துக் காட்டியுள்ளனர்.

'விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைந்த
அறை..........................' (அகம் 69)

'மாகெழுதானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைந்த
............................ அறைவாய்' (அகம் 251)

இங்கே வம்ப மோரியர் (வம்பு-புதுமை) என்பது புதிய மரபினரான மோரியர் என்னும் பொருளுடையது. தமிழருக்கு நெடுங்காலம் பழக்கப்பட்ட சிசுநாகர் மரபு, நந்தர் மரபு ஆகியவற்றை ஒழித்து விட்டுப் புதிது வந்த மரபு என்பதனை இது காட்டுகிறது. 'பொன்புனைதிகிரி' 'புனை தேர் நேமி' ஆகியவை பேரரசின் தேர்களுக்குரிய உறுதி வாய்ந்த இரும்புச் சக்கரங்களைக் குறிக்கின்றன. (திகிரி, நேமி-சக்கரம்)

தமிழக அரசுகளுக்கு எதிராக அசோகனால் ஏவிவிடப்பட்ட தமிழகவல்லரசு ஒரு முடியரசு அன்று-தமிழக மூவரசுகளுக்கும் வடதிசை மோரிய கலிங்கப் பேரரசுகளுக்கும் இடையே மேல் கொங்கு நாட்டில் அவற்றுடன் போட்டியிட்டு வளர முற்பட்ட கோசர் என்ற வேள்புலக் குடியரசுக் குழுவேயாகும் கோசர் மரபு, அதன் மூர்க்கமிக்க முதல் தாக்குதலுக்கு ஆளான கடம்பர் தலைவனான நன்னனின் வேளரசு ஆகிய இரண்டுமே மேல் கொங்கு நாட்டுக்குரிய வேள் அரசுகள் ஆகும்.

கோசருக்கும் கொங்குநாடு உட்பட்ட தமிழகத்துக்கும் இடையேயுள்ள தொடர்பு மேலே சுட்டப்பட்டுள்ளது. வரலாற்றாசிரியர் சிலர் பல்லவரை (பஃலவர் என்ற பார்த்தியருடன் ஒன்று படுத்தி) அயலவர் என்று கருதியது போலவே, கோசரையும் (குசாணருடன் தொடர்புபடுத்தி) அயலின மரபினர் என்று கருதியதுண்டு. ஆனால் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி காட்டியுள்ளபடி, அவர்கள் தாயகம் தமிழ்த்துளு நாடாகிய மேல்

கொங்கத்தின் வடகொங்கமளாவிய எல்லையே (குடகுநாடே) யாகும். அத்தாயகத்தில் அவர்கள் வாழ்ந்த வாழ்வையே சங்கப் பாடல் ஒன்று நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

> 'மெய்ம்மவி பெரும் பூண் செம்மற் கோசர்
> கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
> பாகலார் கைப் பறைக் கட் பீலித்
> தோகைக் காவின் துளுநாடு.' (அகம் 205)

கிரேக்க நாட்டு நகர்-நாடு அரசுகளில் ஒன்றாகிய ஸ்பார்ட்டா **(Sparta)** வின் மக்களைப் போலவே, கோசரும் போர் ஒன்றையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு எப்போதும் போர்த்திறப் பயிற்சிகளிலேயே ஈடுபட்டிருந்தவர்கள் ஆவர். அவர்களைக் குறிப்பிடும் போதெல்லாம் சங்கப் புலவர்கள் 'வென்வேல் கோசர்', வாய்வாள் கோசர்', 'இளம்பல் கோசர்' என வாளும் வேலும் தாங்கிய அவர்களின் வீரத் தோற்றத்தையும் இளமை, அதாவது இளமைத் துடிப்பையும் தன்னாண்மைப் போக்கையுமே நம் கண்முன் கொண்டுவருகின்றனர். தவிர, அசோகன் கல்வெட்டுகள் கூறும் சத்தியபுத்திரர் என்ற பெயரையே நினைவூட்டும் முறையில் சங்கப்புலவர்கள் அவர்களை, 'வாய்மொழிக் கோசர்' 'ஒருமொழிக் கோசர்' என்றே குறிப்பிடுகின்றனர், மேலும் 'நான் மொழிக்கோசர்; நாலூர்க்கோசர்' என்றும் அவர்கள் சுட்டப் பெறுகின்றனர்.

தமிழ்-மலையாள மொழிகளில் கொஞ்சு, கொச்சு (மலையாளம்: சிறிய) குஞ்சு (மலையாளம்: குஞ்ஞூ-குழந்தை) குஞ்சி (ஆண்முடிமயிர்) குஞ்சம் ஆகிய சொற்களுடனும் கொச்சி (நாட்டுப் பயிர்) குஞ்சம் ஆகிய சொற்களுடனும் கொச்சி (நாட்டுப் பயிர்) கொச்சி மஞ்சள் ஆகியவற்றுடனும் கோசர் என்ற இனப் பெயர் தொடர்புடையது. சந்திரகுப்த மோரியன் காலத்துக்கு முன்னரே இவர்கள் இந்தியாவுக்கு வடமேற்கே பரவியிருந்தனர் என்று கருத இடமுண்டு. இந்துகோசமலை, ஆரிய மாநிலமடுத்த ஆரகோசா மாநிலம் (மோரிய அரசிலும் இன்றைய உருசிய அரசிலும் பகுதிகளாயிருப்பவை) ஆகிய பெயர்களும் அவ்விடங்களிலிருந்து அலைபாய்ந்த குசாண மரபும் இவர்களுடன் பழந் தொடர்பு உடையவர்களாயிருத்தல் கூடாததன்று.

கொங்கு என்ற சொல்லைப் போலவே கோசர் என்ற சொல்லும் இளமை குறித்தல் காணலாம். சில அறிஞர் 'நான்மொழிக்கோசர்'

என்பதற்குத் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் பேசியவர்கள் என்று பொருள் கொள்ள எண்ணியுள்ளனர். ஆனால் இப்பழங்காலம் மலையாளமோ (வடுகு என்ற மொழியாகவன்றி தனிமொழிகளாகத்) தெலுங்கு கன்னட மொழிகளோ தோன்றாத காலம் ஆகும். உண்மையில் நான்மொழி 'நாலூர்' என்று தொகைகளும், எப்போதும் 'கோசர்' என்றே குறிக்கப்படும் பன்மை வழக்கும், இளமை என்ற (குடியரசு மரபினுக்குரிய தன்னாண்மை குறித்த அடைமொழியும் அவர்கள் குடியரசுக் கூட்டுக்குழுவாய் அமைந்த நான்கு நகர்-நகடு அரசு களின் இணையரசு (Confederacy or Confideration) மரபினரே யாவர் என்பது காட்டுகின்றன. சிந்துவெளி நாகரிக காலத்தி லிருந்தே (கி.மு. 2500) இத்தகைய நாலூர்க் குடியரசுக்குழு நிலவி யிருந்தது என்று திருத்தந்தை ஈராசு கருதியுள்ளார்.

தொல்பழங்காலத்திலேயே வேகமாக வளர்ந்து வந்த இந்த வீரவல்லரசு, கலிங்கப் பேரரசின் வீழ்ச்சிக்கு முன்பே கிழக்கும், வடக்கும் அக்குடியாட்சி வல்லரசாலும்; தெற்கே மற்றத் தமிழக அரசுகளாலும் மேற்கே மற்றொரு கடலக வல்லரசாக வளர்ந்து வந்த கடம்ப அரசாலும் நாற்புறமும் அடைப்பட்டு வளர்ச்சி தடைப்பட்டு முறுகி நின்றது, ஆதல் வேண்டும். தொலைப் பேரரசனான அசோகனின் நேசப்பாசக் கரமேற்று, அவனது கலிங்கத் தாக்குதலுக்கு ஆதரவாகக் கிளர்ந்து இச்சூழுறவு தகர்க்க அவர்கள் எளிதாக முன்வந்ததற்குரிய காரணம் இதுவே!

'துடியன் கடம்பன் பாணன் பறையன்' என்று சங்க காலப் பாடல்கள் விதந்துரைக்கும் தமிழர் தொல்மரபுகள் நான்கில் ஒன்று கடம்ப மரபு. தமிழர் புராண மரபிலே முருகப்பெருமான் கடம்பர் தலைவனாகிய சூரனை வென்றதனாலேயே கடம்பன் எனப்பட்டான். இலங்கையின் கடம்பனாறு, மதுரையின் பழமைப் பெயரான கடம்பவனம் (கோயில் திருமரம் கடம்பமரமே) ஆகியவை அவர்களது தென்திசைத் தொல்பழமரபு காட்டும் பாணர் அல்லது வாணர் (Banas கேரள மரபிலும் புராண மரபிலும் தென்னக முழுதாண்ட மாவலி அல்லது மகாபலிச் சக்கரவர்த்தி யின் மரபினர்) என்பவருடன் போட்டியிட்டும் ஒன்றுபட்டும் அவர்கள் உள்நாட்டுப் பகுதியில் ஒதுங்கி வடகொங்கு, தொண்டை நாட்டுப் பகுதிகளில் அரச மரபுகள் அமைத்து ஆண்டனர். ஆனால் சங்ககால முழுவதும் அவர்கள் மேல் கடற்கரையெங்கும் கடற்

கொள்ளைக்காரராகவும் கடல் வல்லரசாகவும் அமைந்து சேரப் பேரரசருக்கும் கிரேக்கரின் உலக வாணிக வழிகளுக்கும் பெருந் தொல்லை தந்து வந்தனர்.

கடம்பரும் வாணரும் பண்டு தமிழகம் எங்கும் பரவியிருந் தனரோ என்று கருத இடமுண்டு. ஏனெனில் தென் தொண்டை நாட்டுப் பகுதி வரலாற்றுக் காலங்களிலே பாணராஸ்டிரம் (தற்காலப் பண்ணுருட்டி நகர் வட்டாரம்) என வழங்கப்பட்டது. மற்றும் கடம்பர் தலைவர்களுக்குரிய நன்னன் என்ற பெயரில் வேள்புலத் தலைவர்கள் சங்க காலத்திலேயே கொங்குநாட்டு ஆனைமலைப் பகுதியிலும் தொண்டை நாட்டுப்(செங்கண்மா நாட்டுப்) பகுதியிலும் இருந்தனர். மேல் கொங்குநாட்டில் கடம்பர் ஆட்சிக்குரிய பாலி நாட்டிலேயே நாம் சங்ககாலத்தில் நன்னன் என்ற பெயருடையஃவேளிர் சிலர் பலரை, முதன்மையாக இருவரை அறிகிறோம்.

நன்னன் மரபினர் தற்காலக் கன்னட தெலுங்குப் பரப்பெங் கும் சோழர் காலம் வரையிலும் (சோழர் கீழ்ச் சிற்றரசராகவும்) ஆண்டிருந்தனர் என்பதை அப்பரப்பெங்கும் இன்றும் வழங்கும். 'நன்னிச்சோட' என்ற இயற்பெயர் (ஒருவேளை தெலுங்கு மாக் கவிஞன் நன்னயன் பெயர்கூட) காட்டும். நன்னன் என்ற பெயர் சிவபிரான் அல்லது முருகனைக் குறித்த அணிமை மரபிழந்து பழம் பெயராகவே இருத்தல் கூடும். (தமிழ்: நன்னர்-நன்மை, நல்ல, நன்கு) நல்லசிவன் என்ற பெயர் (இவ் ஏட்டாசிரியர் பிள்ளைத் திருநாமம் இது) தென்பாண்டி, நாஞ்சில் பகுதிகளில் இன்றும் வழங்குகிறது.

அசோகன் காலத்துப் பாலி நாட்டுக் கடம்பரை ஆண்ட நன்னன் பரணர் குறிப்பின்படி, பெண் கொலை புரிந்த காரணத் தால் தமிழ்ப் புலவர் உலகம் பாடமறுத்த நன்னாகவே இருத்தல் வேண்டும் என்னலாம். அவன் தோட்டத்துப் பசுங்காய் ஒன்றினைக் கவர்ந்து தின்றுவிட்ட ஒரு சிறுமியின் உயிருக்கு ஈடாக அவள் பெற்றோர் அவள் எடைக்கு எடை தங்கமும் ஒன்பதிற்றொன்பது (81 அல்லது 18) யானைகளும் தருவதாகக் கூறியும் மறுத்துக் கொலை செய்வித்த கொடியோனாக இவன் குறிக்கப்படுகிறான்.

சங்க காலத்திலே பெரும்புகழ் படைத்த நன்னன் சேரன் செங்குட்டுவன் காலத்துப் பெரும் பெயர் நன்னன் ஆவான் அவ னுக்கு நெடிது முற்பட்ட இந்த அசோகன் கால நன்னனை

அவனிடமிருந்து பிரித்துணர நாம் இவனை முதலாம் நன்னன் என்று குறிக்கலாம்.

முதலாம் நன்னன் காலத்திலேயே கடம்பரின் பாலிநாடு பொன்னும், மணியும் கொழித்த நாடாயிருந்தது. நன்னன் அங்கே பாழி என்ற வெல்லற்கரிய வலிமை வாய்ந்த கோட்டை ஒன்றைக் கட்டி வாழ்ந்தான்.

மோரியர்களால் தூண்டப்பட்ட கோசர் கடம்பரைத் தாக்கி நன்னனைப் போரில் தோற்கடித்து அவன் பட்டத்து யானையைக் கொன்று அவனையும் காடுகளுக்குத் துரத்தினர். அவன் நாட்டைக் கைப்பற்றிப் பாழிக் கோட்டையையே தம் மூலதளமாக்கிக் கொண்டு தெற்கு நோக்கி முன்னேறினர். முதலில் அவர்கள் சேரரை எதிர்த்தனர். சேரர் படைத்தலைவன் (வட கொங்கன்) குதிரரை மலை வேளாகிய பிட்டங்கொற்றன் பல கடும் போர்களில் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றான். ஆனால் கோசர் கையே வலுத்திருந்தது. அவர்கள் வாட்டாறு, செல்லூர் ஆகிய போர்க்களங்களில் அதியமான் எழினியை முறியடித்ததுடன் பிந்திய போரில் அவனைக் கொன்றொழித்து முன்னேறினர்.

வெற்றி வீரராகிய கோசர் இப்போது தமிழக மூவரசு நாட்டு எல்லைக்குள்ளேயே வந்துவிட்டனர். போரின் போக்கிலும் இப்போது மாறுதல் ஏற்பட்டது. பாண்டிநாட்டு எல்லையிலுள்ள மோகூரை அவர்கள் தாக்க முற்பட்டபோது, அதன் வேள்படை அவர்களை எதிர்த்துத் தாக்கி வெற்றிகண்டது. அதன்பின் அவர்கள் சோழ நாட்டெல்லையில் அழுந்தூர் வேள் திதியனை எதிர்க்கத் திரும்பியபோது, அவ்வேளிர் தலைவன் அவர்களை முறியடித்ததுடன் நில்லாமல், அவர்களின் மூலதனமாகிய பாழிக் கோட்டை வரை அவர்களைத் துரத்தியடித்தான்.

கோசரின் தென்திசைப் போரின் இக் கட்டத்திற்குள் மோரியரின் கலிங்கப் பெரும்போர் அதன் இறுதிக் கட்டத்தை அணுகி விட்டது. இந்நிலையில் மோரியப் பேரரசின் ஒரு படைப்பிரிவே கோசருக்கு உதவியாகத் தெற்கே அனுப்பப்பட்டு, மேலே சங்கப் பாடல்கள் தெரிவித்துள்ள நிலையில் நேரடிப் பெரும்படை எழுச்சிகளுக்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

தமிழகம் முன் என்றும் கண்டிராத இப்பெரும் படையெழுச்சியின் ஆரவாரம் ஏறத்தாழ முதன் முறையாகத் தமிழக

முழுவதையுமே ஒன்றுபடச் செய்தது. அந்நாளைய தமிழகப் பேரரசனான சோழன் இளஞ்சேட்சென்னியின் தலைமையில் தமிழக அரசர்கள் வேளிர்கள் ஆகிய அனைவரும் அணிவகுத்து நின்றனர். இத் தேசீயப் பெரும்படை மோரியப் படைகளை எங்கும் முறியடித்து, அவற்றின் மூல தளமாகிய பாழிக் கோட்டையையே தரைமட்டமாக்கி அழித்தது.

'எழூஉத் திணிதோள் சோழர் பெருமகன்
விளங்கு புகழ் நிறுத்த இளஞ்செட்சென்னி
செம்புறழ் புரிசைப் பாழி நூறி' (அகம்)

எனச் சங்கப் புலவர் இடையன் சேந்தன் சொற்றனார் இவ் வெற்றியைப் பாராட்டினார். வரலாற்றுப் புகழ்பெற்ற இப்பெரும் போரைச் செருப்பாழி (செரு-போர்) என்றும், இதன் புகழ் வெற்றி கண்ட சோழனைச் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்றும் வரலாறு போற்றுகிறது.

இப்போரின்போது ஏற்பட்ட மூவரசர் (வேளிர்) கூட்டணி 113 ஆண்டுகள் நீடித்ததாகவும் அதன் பின் தன்னால் அழிக்கப் பட்டதாகவும் பின்னாளைய கலிங்கப் பேரரசன் காரவேலன் தன் ஹத்திகும்பா வெற்றித்தூண் (கி.மு. 163 அல்லது 153) கல் எழுத்தில் கூறுகிறான். ஆனால் அவன் வெற்றி நிலைக்கவில்லை என்பதை அடுத்து வந்த ஆந்திரப் பேரரசின் வரலாறும் அதனுடன் சேரன் செங்குட்டுவன் கொண்ட நட்புறவுக் கூட்டும் காட்டும் (இது மேலே கண்ட இரண்டாம் திருப்பத் தொடக்கம் ஆகும்.)

கலிங்கப் பெரும் போரின் (கி.மு. 264) ஒரு பகுதியான இம் மோரியன் தமிழக போராட்டம் கி.மு.268-264 ஆகிய ஆண்டுக் காலத்திற்குரியது என்பதை மேற்கண்ட காரவேலன் கணிப்பு காட்டுகிறது. **இதன் முடிவில் அசோகன் தமிழக அரசுகளுடன் செய்துகொண்ட நேச ஒப்பந்தத்தின் படியே, தன் சார்பில் போரிட்ட கோசரை மற்றத் தமிழக அரசுகளுடன் நட்புறவு கொள்ளும்படி செய்தான் என்று கருதலாம்.** ஏனெனில் தமிழக நேச வல்லரசுகளை அவன் கல்வெட்டுகள் பாண்டியர், சோழர், கேரளபுத்திரர் (சேரர்), சத்தியபுத்திரர் என்ற நான்காகக் குறிக் கின்றன. இது கொங்குச் சேரர் மரபு தோன்றுவதற்கு சில பல நூற்றாண்டுகள் முற்பட்ட செய்தியாதலால், சத்திய புத்திரர் என்ற பெயர் கொங்குச் சேரரைக் குறிக்க முடியாமல். இது பொதுவாகக் கொங்கரையோ, பிந்திய காலங்களில் சத்தியமங்கலம் என்ற

நகர்த் தொடர்புடைய கட்டிமரபினரையோ குறித்ததாகும் என்பர் புலவர் குழந்தை, ஆனால் அதுவும் மிகப் பிற்பட்ட காலச் செய்தி ஆகும். தவிர, சேரருடனும் சோழ, பாண்டியருடனும் ஒப்பாகக் கூறப்பட்ட இவ்வல்லரசு மரபினர் முடியரசல்லராயினும் அவ ருடன் ஒத்த ஆற்றல் சான்ற வல்லரசரான கோசரே என்று துணிந்து கூறலாம்.

அசோகன் காலத்திய நிகழ்ச்சிகளுக்குப் பின் இரண்டு மூன்று நூற்றாண்டுக்கால அளவும் நாம் பெருங்கொங்கு, மேல்கொங்கு நாடுகள் பற்றிக் குறிப்பிடத்தக்க எதுவும் அறிய முடியவில்லை. ஆயினும் கோசர் தொடர்ந்து வல்லரசாகவே நீடித்து வளம் பெற்று வந்தனர் என்பதைக் காண்கிறோம். பொது வாகத் தமிழக அரசுகளுடனும் சிறப்பாகச் சேர அரசுடனும் தொடர்ந்து அவர்கள் நட்பு மேன்மேலும் பெருகிக்கொண்டே தான் இருந்தது. மேலே சுட்டியபடி கொங்கு நாடு உட்படத் தமிழக முழுவதும் அவர்கள் பரவி, அரசரிடமும் செல்வரிடமும் படைவீரர், ஆட்சிப் பொறுப்பாளர், பணியாளர்களாக விளங்கிய காலம் இதுவேயாகலாம். அதே சமயம் கோசரால் அசோகன் காலத்தில் முறியடிக்கப்பட்ட கடம்பர் விரைவில் மீட்சி பெற்றுப் பின் வந்த நூற்றாண்டுக்குள் முதலாம் நன்னன் காலத்திலிருந் ததை விடக் கடலாட்சியிலும் பொன்வளத்திலும் ஆற்றலிலும் பன்மடங்கு வளமுடன் வளர்ச்சி பெற்றிருந்தனர். சேரருடன் அவர்கள் ஓயாது பகைமை கொண்டு போராடினர். இப்போர் களில் கோசர் தொடர்ந்து சேரருக்கு ஆதரவாகவே செயற்பட்டிருந் தனர் என்று கருதலாம்.

பெருஞ்சேரர் காலத்து (கி.பி. 1, 2-ம் நூற்றாண்டு) நன்னன் புலவர்களால் பெரும் பெயர் நன்னன் 'பொன்னங் கண்ணி பொலந் தார் நன்னன்' என்று சிறப்பிக்கப்படுகிறான். அவன் நாட்டுப் பொன்வளச் சிறப்பையும் 'கடம்பின் வாயில்'என்ற பெயருடைய அவன் தலைநகரச் சிறப்பையும் அவர்கள் பலபடப் பாராட்டியுள் ளனர். கந்தபுராணத்தின் சூரபன்மனை நினைவூட்டும் முறையில் அவன் காவல்மரம் அமைந்த மூலதளம் கடலகத்துள்ள ஒரு தீவில் இருந்தது. சேரனின் தொல்பழங்காலத் தலைநகரான நறாவை யும் (பதிற்றுப்பத்தும் கிரேக்கர் குறிப்புகளும் சுட்டுவது) பூழி நாட்டையும் அவன் கைக்கொண்டதனாலேயே, குடக்கோ நெடுஞ் சேரலாதன் காலத்திலிருந்து சேரர்கள் வஞ்சி அல்லது மேல்

கடற்கரைக் கருவூரைத் தம் தலைநகராக்கிக் கொண்டனர் என்று அறிகிறோம்.

குடக்கோ நெடுஞ்சேரலாதன் தம்பியாகிய பல் யானைச் செல் கெழுகுட்டுவன் பூழி நாட்டையும் பண்டை வட கொங்கு நாட்டையும் வென்று நன்னனையும் கீழடக்கினான். இவற்றின் மேலாட்சிகளை அவன் தன் தாயாதி உடன்பிறந்தானான கொங்குச் சேரனிடமே ஒப்படைத்தான். ஆனால் அவன் தமையன் நெடுஞ் சேரலாதன் மைந்தர்களான களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், சேரன் செங்குட்டுவன் ஆகியோர் காலங்களில் நன்னன் மீண்டும் தன்னாண்மை பெற்றுப் பகைவனானான். பண்டைவட கொங்கு நாட்டுப் புன்னாட்டின் நீலமணிக் கல்வளம் அவாவி, அவன் நாட்டின் மீது படையெடுத்தான். சேரர்படைத் தலைவனான வெளியன் வேண்மாள் ஆய்எயினன் பாழிப் பறந்தலைப் போரில் (பறந்தலை- போர்களம்) கொல்லப்பட்டான். ஆயினும் சேரருடன் தொடர்ந்து நடந்த போரில் அவன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலால், கடம்பின் வாயில் போரில் முறியடிக்கப்பெற்றான். இதன் பின்னும் சேரன் செங்குட்டுவன் ஆட்சியில் அவன் கிளர்ந் தெழவே, அப்பெருஞ் சேரன் புராண மரபுக்குரிய முருகனைப் போலவே கடலகத்துள்ள தீவினுட் சென்று அவன் காவற் கோட்டையையும் காவல் மரத்தையும் அழித்து அவன் ஆட்சியை யும் நிலையாக முடிவுக்கு கொண்டு வந்தான்.

இதுவரை சேரர் தாம் மேல் கொங்கிலும், வட கொங்கிலும் வென்ற நாடுகளை, அவ் வெற்றிகளின் போது உடனின்ற தம் தாயாதியரான கொங்குச் சேரரிடமே ஒப்படைத்து வந்தனர் என்று காண்கிறோம். ஆனால் சேரன் செங்குட்டுவன் இப்போது சேரர்-கடம்பர் போரில் தன் பக்கமே ஆதரவு காட்டிய கோசரிடமே கடம்பர் ஆட்சியை ஒப்படைத்தான் என்று கருத இடமுண்டு. இச்சூழல் கீழே ஆராயப்படுகிறது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் கோயிலெடுத்து வழிபட்ட தேசங்கடந்த தேசீயப் பெருவிழாவில் (குத்தாயமாக கி.பி. 180) இலங்கை மன்னன் கயவாகுவும் அவந்தி நாட்டு மன்னனும் அவர்களுடன் ஒப்பாகக் கொங்கு நாட்டுச் சார்பில் கொங்கிளங் கோசரும் வந்து கலந்து கொண்டனரென்றும்: **இலங்கை அரசரும் அவந்தி அரசரும் தத்தம் நாடுகளில் சென்று அங்கே கண்ணகிக்குக் கோயிலும் விழாவும் எடுத்தது**

போலவே, கொங்கிளங் கோசரும் தம் நாடாகிய கொங்கு நாட்டில் சென்று கண்ணகிக்குக் கோயிலும் விழாவும் எடுத்தனர் என்றும் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.

மேலே குறித்துள்ளபடி, வரலாற்றாசிரியர் பலர் சேரரையும் கொங்குச் சேரரையும் ஒரே மரபினர் என்று கொண்டிருந்தனர். அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமியே இரு மரபுகளின் வேறுபாடு கண்டவர் ஆவர். ஆனால் இரு சார்பினருமே கொங்கிளங்கோசர் என்பவர் சேரர் கீழோ, கொங்குச் சேரர்கீழோ பணியாற்றிய உயர் பணியாளர்கள் என்றே கொண்டனர். அத்துடன் இரு சாராருமே கொங்கு நாட்டுத் திருச் செங்கோட்டு மலையிலுள்ள அர்த்த நாரீசுவரர் கோயிலின் தெய்வப்படிவமே பின்னாட்களில் அவ்வாறு கருதப்பட்ட கண்ணகிப் படிவம் என்றும், கொங்கு நாட்டில் கொங்கிளங் கோசரால் விழாவெடுத்து நிறுவப்பட்ட கோயிற்படிவம் அதுவே என்றும் கருதியுள்ளனர். இவ்வகையில் இருசாராருக்கும் இடையேயுள்ள வேறுபாடு மிகச் சிறிதே. முந்தியவர்களில் பலர் அரும்பதவுரையாசிரியரின் உரைக் குறிப்பைப் பின் பற்றிச் சேரன் செங்குட்டுவன் விழாவெடுத்த சேரநாட்டுப் பகுதியே திருச்செங்கோடுதான் என்று குறிக்கின்றனர். (இது கொடுங்கல்லூர்ப் பகவதியம்மன் கோயிலே என்பர் கேரள மாநில அறிஞர்) பிந்தியவரோ கொங்கு நிலவியல் நன்கறிந்து இதனை மறுத்துரைக்கும் கொங்கு நாட்டவரான அடியார்க்கு நல்லார் உரையைப் பின்பற்றி இது கொங்கு நாட்டில் கொங்குச் சேரர் சார்பில் அவர்களின் கீழ் உயர் பணியாளராகச் செயல்பட்ட கொங்கிளங்கோசர் நிறுவியதே எனக் கொள்கிறார்.

பெருஞ்சேரன் விழாவுக்கு விருந்தினர்களாக வந்தவர்களுடன் சோழ பாண்டியர்களோ கொங்குச் சேரரோ சிறப்பிடம் பெற்றதாகக் குறிக்கப்படவில்லை. தமிழகப் பெரும் பேரரசனாக அன்று விளங்கிய சேரன் செங்குட்டுவனுக்குச் சரிசமமாகக் கருதப்பட்ட வல்லரசுகளே அவனுக்குத் தகுதி வாய்ந்த நண்பர்களாகவும் விருந்தினர்களாகவும் கருதப்பட்டனர் என்பதில் ஐயமில்லை. அத்தகைய வல்லரசுகளுள் கொங்கு நாட்டுச் சார்பில் வந்த ஒரே வல்லரசாகத் தான் கோங்கிளங் கோசர் குறிக்கப்படுகின்றனர். விழாக் காலத்தில் கொங்குச் சேரர் ஆட்சி மரபுத் தொடர்பில் அரசேயில்லாத ஓர் இடைவெளியோ, அல்லது இடைவீழ்ச்சியோ அல்லது பிற அவல நிலைகளோ ஏற்பட்டிருக்க வேண்டும்

என்பதைத்தான் இது காட்டுகிறது. ஏற்கனவே மேலே காட்டியபடி கோசர், கொங்கிளங் கோசர் என்ற பெயர்களில் உள்ள பன்மை வழக்கு, இளமை (வீரமரபு, குடியரசு மரபு சுட்டிய குறிப்பு) ஆகியவையும், கொங்கிளங் கோசர் என்ற பிந்திய பெயரே இங்கே சுட்டப்பட்ட நிலையும் பிறவும் அவர்கள் இச்சமயம் கூட்டுக் குடியரசாகவும், பேரரசு வல்லரசாகவும், ஒருவேளை தென் கொங்குப் பகுதியும் மேல் கொங்கு வடகொங்கும் சேர்ந்தாண்ட கொங்கு நாட்டு ஆட்சிக்கேயுரியவர்களாகத் திகழ்ந்திருந்தனர் என்பது காட்டும்.

திருச்செங்கோடும் அந்நாளில் இக்கோசரின் ஆட்சிக்கு உட்பட்டதாயிருந்தது என்று கொள்ளக் கூடுமானால் அவர்கள் நிறுவிய கோயிலும் அதுவாகவே இருத்தல் கூடாததன்று. ஆயினும் அதனை அவர்களின் மூலத் தாயகத்துக்கு அருகாமையில் மேல் கொங்குப் பகுதியிலேயுள்ள மங்களூர் அல்லது மங்கலாபுரம் போன்ற இடங்களில் காண எண்ணுவதே பொருந்துவது ஆக லாம். பழந் தமிழ்த் தெய்வமாகிய தமிழன்னை மரபில் வந்த புது மரபான கண்ணகியின் கன்னி இளமை (நித்திய கல்யாணித் தன்மை) தெய்வத் தன்மை ஆகியவற்றை 'மங்கலா' என்ற பெயர் மிகச் சிறப்புறக் குறிப்பதாகும்.

பண்டை வடகொங்கு நாட்டுப் பரப்பில் குதிரைமலை என்ற வேள்நாட்டைப் பற்றி நாம் தொடர்பற்ற சில துண்டுத் துணுக்கான செய்திகளை மட்டுமே அறிகிறோம். கி.மு. 3-ம் நூற்றாண்டில் கோசர்-சேரர் போராட்டத்தில் குதிரைமலை வேளாள பிட்டங் கொற்றன் சேரர் படைத் தலைவனாயிருந்து பல கடும்போர்களாற்றியும் அவர்கள் வெற்றிப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்ற செய்தி மேலே கூறப்பட் டுள்ளது. இவனை 'வானவர் மறவன்' (வானவர்-சேரர்; மறவன்-வீரன், படைத்தலைவன்) என்றும் 'கோதை நண்பன்' (கோதை-சேரன்) என்றும் விழுமிய ஈகைக் குணமுடையவன் என்றும் சங்கப் புலவர்கள் பாராட்டியுள்ளனர். அவன் மலையில் குறவர் காட்டுப் பசுவின் பாலில் தினைகரைத்து உண்டனர் என்றும் தெரிய வருகிறது. (காட்டுப் பசுவைப் பழக்கி நாட்டுப் பசுவாகப் படைத்துருவாக்கி உலகுக்களித்தவர். கொங்கு நாட்டுத் தமிழரே யாதல் சாலும் என்பது மேலே குறிக்கப்பட்டுள்ளது)

களங்காயக் கண்ணி நார் முடிச்சேரலின் காலத்தில் சேரர் படைத்தலைவனாயிருந்த வெளியன் வேள்மான் ஆய் எயினன் இம்மரபுக்குரியவனே என்கிறார் ஔவை துரைசாமி. சேரர்-கடம்பர் போராட்டத்தில் நன்னனின் வீரப்படைத் தலைவனான மிஞிலியால் இவன் கொல்லப்பட்டான் என்பது மேலே கூறப் பட்டது.

குதிரைமலை எழினி என்பவன் வள்ளன்மை பற்றி புற நானூறு (158) பேசுகிறது இவனும் இம்மரபினன் ஆதல் கூடும்.

பண்டைத் தென் கொங்கு நாட்டுக் குதிரை மலைவேளான குமணன் வரலாற்றில் குறிக்கப்படும் இளவெளிமானும் இக் குதிரை மலையாண்ட மரபினனேயாதல் கூடும். இது கீழே சுட்டப் படுகிறது.

துவரை நாடு என்னும் வேள்புலம் பண்டை வடகொங்கு நாட்டில் இன்றைய கன்னட மாநிலத்துக் காவிரிப்படுகைக்கும் நெடிது வடக்கே தற்போது ஹளபீடு (ஹள-பழைய, பீடு-வீடு) என வழங்கும் பகுதியில் அமைந்திருந்தது. துவார சமுத்திரம் என்ற பெயரில் அது பிற்காலங்களில் தனி அரச மரபுகளுக் குரிய இடமாய் இருந்தது. இங்கேயுள்ள பெரிய ஏரியின் கரையில் காணப்படும் அழிபாடுகள் பண்டைத் துவரை நாட்டின் தலை நகரான அரையம் என்பதன் தடங்களேயாகும் என்று கருதப் படுகிறது. (இன்றைய மக்களிடையே 'ராயர்' என வழங்கப் படும் பெயரும், விசயநகரப் பேரரசின் அப்பட்டமும், பிறர் பலரும் மேற்கொண்டுவரும் இதே சாதி மரபுப் பட்டமும் இந்த வேள் மரபினர் வழிவந்த பட்டங்கள் ஆதல் கூடும்).

துவரையாண்ட வேளிர் இருங்கோவேள் என்று குறிக்கப் பட்டனர். அவர்களே 'புலி கடிமால்' என்ற சிறப்புப் பட்டத் துடனும் புலவரால் பாடப்பட்டனர். பிற்கால 'ஹொய்சளர்' (புலி கொன்றவர்) என்ற அரசு, பேரரச மரபின் பெயர் இதன் மரபு மலர்ச்சியே என்று கருதப்படுகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை வரலாற்றுப் புகழ் சான்ற அப்போர்க்களத்தில் மற்ற இரு தமிழரசருடன் சேர்ந்து எதிர்த்த வேளிர் ஐவருள் இவ்வேளும் ஒருவன். அத்துடன் மூவரசரும் சேர்ந்து பாரியைக் கொன்று ஒழித்தபின், அவ்வள்ளலின் புதல்வியரான அங்கவை, சங்கவை

ஆகியோரைப் புலவர் கபிலர் இட்டுவந்து மணஞ்செய்து கொள் ளும்படி வேண்டியபோது, இருங்கோவேள் மூவரசர் பகைக்கஞ்சி அதை மறுத்ததாக அறிகிறோம்.

கொங்குச் சேரரின் ஆட்சிக் காலத்தில் சேர மரபின் பல்யானைக் குட்டுவன் பிற மேல்கொங்குப் பகுதிகளுடன் சேர இதனையும் வென்று அப்பேரரசிடம் ஒப்படைத்தான்.

புன்னாடு என்ற வேள்புலம் பண்டை வட கொங்கு நாட்டில் முற்கால உலக வாணிகத்துக்குரிய அருமதிப்புடைப் பொருளாகிய நீலமணிக் கற்களுக்குப் பேர்போன பகுதி ஆகும். பண்டை யவனர் இவ்வேள் புலப்பெயருடன் அவ்வளமும் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளனர். சங்க இலக்கியமும் இதனைச் சிறப்பிக்கிறது. புன்னாடர் என்றே வழங்கும் இதன் பன்மைப் பெயர் இது தனிவேள் ஆண்ட வேள்புலமன்று. வேள்புலக் குடியரசுக் குழு என்பதைக் காட்டுகிறது. (இது வேளாளர் நாடு என்ற சங்க கால மைய வேள்நாட்டின் ஒரு பகுதி ஆகலாம்). காவிரியின் கன்னட மாநிலக் கிளையான கெப்பிணி (பண்டைத் தமிழ்க் கீழ்ப் பூவானி) அல்லது கப்பிணி அல்லது கபினி ஆற்றின் கரையிலுள்ள கட்டூர் (கிட்டூர், பிற்காலக் கீர்த்திபுரம்) அதன் தலைநகரமாயிருந்தது.

பாலி நாட்டுப் பெருவேள் நன்னன் புன்னாட்டின் நீலமணிக் கல் வளமவாவி எதிர்த்தபோது, சேரர் முதலில் தோற்றாலும் பின் வென்று நன்னனைக் கீழடக்கினர். இதன்பின் நெடுஞ்சேரலாதன் தம்பி பல்யானை செல்கெழு குட்டுவன் பாலிநாடும் பூமி நாடும் பண்டை வடகொங்கும் வென்று கொங்குச் சேரர் வசம் ஒப்படைத்த போது, வடகொங்குப் பகுதியான புன்னாடும் கொங்குப் பேரரசுப் பகுதியாயிற்று. இதன் பின்னும் புன்னாட்டின் வளமவாவி முதலில் சோழர் படைத்தலைவனான பழையனும், பின் சோழன் பசும்பூட் சென்னியும் கட்டூரைத் தாக்கினார். அந்நாளைய கொங்குச் சேரர் மேலாட்சியின் கீழ் ஆண்ட நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்ற ஐந்து வேளிரும் புன்னாடருக்கு உதவியாக வந்த பழையனை எதிர்த்து முறியடித்துக் கொன்று புன்னாட்டைக் காத்தனர். இப்போரின் பிற்பகுதி கொங்குப் பெருஞ்சேரர் வரலாற்றிற்குரியது.

சங்க காலத்துக்குப் பின் புன்னாட்டு வேள்புல ஆட்சி மரபில் பெண் எடுத்ததன் மூலமே, அப்போது முடியரசராகத் தொடங்கி

விட்ட கங்கர் புன்னாட்டையும் விழுங்கி, பின்னாளைய அரசு வல்லரசு மரபாக வளர்ச்சி பெற்றனர்.

எருமையூர் என்ற வேள்புலம் பண்டை வடகொங்கு நாட்டில் தற்காலத்தில் மைசூர் (எருமையூர் என்பதன் சமஸ்கிருத வடிவமான மகிஷஸபுரி என்பதன் சிதைவு; மகிஷம்- எருமை) என்ற பகுதியில் நிலவிற்று. சங்க காலத்துக்குப் பின் ஒய்சளர் ஆட்சிக்காலக் கல் வெட்டுகளிலும் இப்பெயர் காணப்படுகிறது. இவ்வேள்புலத் தலைவன் எருமையூரன் என்று குறிக்கப்பட்டான். இவ்வேள்புலப் பெயராலேயே (மைசூர் என்ற வடிவில்) அணிமைக் காலம் வரை கன்னட மாநிலத்தின் பெரும் பகுதியளாவிய ஒரு தனியரசும் ஒரு தனி மாநிலமும் அமைக்கப் பெற்று இருந்தன.

சங்ககால வேளான எருமையூரனின் ஆட்சி ஒருபுறம் வடக்கே அந்நாளைய வடுக எல்லைவரையும், மற்றொருபுறம் மேற்கே 'குடகு நாடு' வரையிலும் பரவியிருந்தது. சேரநாட்டில் ஓர் அயிரை மலையும் ஓர் அயிரையாறும் இருந்ததுபோல, அவன் ஆட்சியெல்லையிலும் அதன் பெயரை நினைவூட்டும் முறையில் ஓர் அயிரிமலையும் ஓர் அயிரியாறும் இருந்தன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை இரு முடியரசருடன் சேர்ந்து எதிர்த்த வேளிர் ஐவருள் எருமையூரனும் ஒருவன்.

பிற வடகொங்குப் பகுதிகளுடன் அவற்றுள் ஒன்றாக இவ்வேளிர் புலமும் கொங்குப் பேரரசுக்குட்பட்டது.

கங்கர் என்ற வேள் மரபினர் பண்டை வடகொங்கு நாட்டில் கங்கநாடு அல்லது கங்கவாடி என்றழைக்கப்பட்ட தலைக்காட்டுப் பகுதியை ஆண்டனர். பின்னாட்களில் கங்கவாடியை மட்டுமன்றி அதனுடன் தற்காலக் கொங்கு நாட்டையும் சேர்த்து அரசு வல்லரசாக, சிலகாலம் பேரரசு அல்லது பேரரசுகளாக ஆண்ட கங்கப் பெருமரபினர். இவர்களே, முற்கால வேளிர் தலைவர் கங்கன் என்றும் கங்கர் என்றும் (ஒருமையிலும் பன்மையிலுமாகவே) அழைக்கப்பட்டனர்.

கலிங்க மாண்ட கங்க மரபினரிடமிருந்து பிரித்தறியவே இவர்களின் பிற்கால மரபு வரலாற்றில் மேலைக் கங்கமரபு என வழங்குகிறது என்பது மேலே குறிக்கப்பட்டது. ஆனால் இம்

மேலைக் கங்க மரபே சில காலம் இருமரபுகளாகப் பிரிவுற்றிருந்தது. (இப் பிற்கால வரலாறு பின்னர் விவரிக்கப்பட விருக்கிறது.)

இவ்வேளிரும் கொங்குப் பேரரசுக்கு உட்பட்டிருந்தனர்.

பழையனை எதிர்த்துப் புன்னாடருக்கு உதவிய வேளிர் ஐவருள் கங்கனும் ஒருவன்.

பின்னாளில் முடியரசாக வளர்ந்தபின் இவர்கள் புன்னாட்டை மண உறவால் விழுங்கி வளர்ந்தனர். என்பது மேலே கூறப்பட்டுள்ளது.

கட்டியர் என்ற வேள்புல மரபு பண்டை வடகொங்கப் பகுதியில் ஆண்டு, பின்னாட்களில் இன்றைய கொங்கு எல்லையிலும் ப்ரவிய வேள் மரபு ஆகும். அவர்கள் நாடு கட்டி நாடு. அவர்கள் தலைவன் கட்டி என்று வழங்கப் பெற்றான் மக்களும் படை வீரர்களும் கட்டியர் எனச் சுட்டப்பட்டனர்.

இவ்வேளிரும் கொங்குப் பேரரசுக்கு உட்பட்டிருந்தனர்.

புன்னாடருக்கு உதவியாகப் பழயனை எதிர்த்த வேளிர் ஐவருள் கட்டியும் ஒருவன்.

கட்டி என்ற வேளிர் தலைவனைப் பற்றிய ஓர் இனிய வீரப் பெருமிதக் காட்சியைச் சங்க பலகணி நமக்குக் காட்டுகிறது. சோழ நாட்டு உறையூர் ஆண்ட வேள் தித்தனைத் தாக்கக் கட்டி முற்பட்டிருந்தான். அச்சமயம் தித்தனின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கான கிணைப் பறை ஓசை தொலைவிலிருந்தே கட்டியின் செவிகளில் விழுந்தது. 'இது பகைமைக்குரிய நேரமன்று' என்று கூறி அவன் படையுடன் திரும்பிவிட்டான்.

பண்டைத் தென் கொங்கு நாடே இன்றைய கொங்கு அகநாடாய் இயல்வது.

சங்க கால வேள் புலமாகிய வையாவிநாடு இன்றைய கொங்குநாட்டுப் பழனிவட்டாரத்தில் இருந்தது. இதன் தலைவர் வையாவிக்கோ அல்லது வையாவிக் கோமான் என்றும், மக்கள் ஆவியர் என்றும் சுட்டப்பெற்றனர். அவர்கள் மலையின் பெயரான பொதினியே இன்று பழனி என மருவியுள்ளது. (பழம் நீ எனக் கூறப்படும் புராண மரபுக்கதை இனிதேயாயினும் அதனடியாகப் பழநி என வருவித்து எழுதுவது தவறு, மரபு மாறாட்டச் செயலும்

ஆகும்) இவ்வேளிரின் நகரம் திருமுருகாற்றுப் படைக்கால முதல் திருப்புகழ்க் காலம் வரை இலக்கிய மரபில் திரு ஆவிநன்குடி (இதுவும் திருவாவினன் குடி என்று புராண மரபுக்கதைக் கியையத் திரித்தெழுதி வழங்குகிறது) என்றும், வையாபுரி வைகாவூர் என்றும் புகழ்ப்பெயர்கள் பெற்றுள்ளன. இதனையடுத்துள்ள கோடைமலைத் தொடரில் வாழ்ந்த பண்ணன் என்ற வேள் தலைவன் பெயராலேயே அம்மலைத் தொடர்பண்ணிமலை (தவறான திருத்தம்; பன்றிமலை-சமஸ்கிருதத் திரிபு-வராக மலை) ஆயிற்று என்று கருதப்படுகிறது.

இவ்வேளிர் ஆய்மரபினர் பிற்காலத்தில் தெற்கு மேற்காகப் புடைபெயர்வுற்றுத் திருவாங்கூர் அரச மரபாக மலர்வுற்ற ஆய்வேள்மரபு இதுவாதல் கூடும் என்பது மேலே குறிக்கப்பட்டுள்ளது.

வையாவி நாட்டு வேளிருவள் பெரும்புகழ் பெற்றவன் வையாவிக் கோப்பெரும்பேகன். படரக் கொம்பின்றித் தவித்த முல்லைக்கொடிக்குத் தன் தேரையே அளித்த பாரியின் புகழ் போல, குளிரால் நடுங்கிய காட்டு மயிலுக்குத் தன் போர்வை யையே வழங்கிவிட்டு வந்தவன் என்று இவன் கொடைவண்மை புலவரால் புகழப்படுகிறது. இவன் துணைவி கண்ணகி சிலப்பதி காரக் கண்ணகி போலவே கற்பிற் சிறந்தவள். பிற மகளிர் வயப் பட்டு அவளைப் புறக்கணித்து வந்த பேகனைச் சங்க புலவர் பலர் சென்று பாடி அவள் துயர் களைய விரையும்படி தூண்டினர்.

வையாவிக் கோமான் பதுமன் என்ற வேள் தன் புதல்வியர் இருவரை முறையே சேர மரபின் பல்யானை செல்கெழுகுட்டு வனுக்கும் கொங்குச் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கும் மணஞ் செய்து கொடுத்தான். ஏற்கனவே தாயாதி உடன் பிறந்தா ராயிருந்த அவர்கள் பாசம் இதனால் மேலும் நெருக்கமுடைய தாயிற்று. அத்துடன் அதுவே கொங்குச் சேரர் தமிழகம் கொங்குப் பேரரசில் படிப்படியாக எளிதில் கரைவதற்கும் வழிவகுத்தது என்னலாம்.

தகடூர் நாட்டு அதிகமான் பண்டைத்தென் கொங்கு நாடாகிய இன்றைய கொங்கு நாட்டில் ஆட்சி செய்த வேளிருள் தலைசிறந்தவன். அவன் நகரும் நாடும் ஒருங்கே தகடூர் எனப் பட்டன. தலைவர் அதிகமான், அதிகைமான், அதியமான், அதியன்

என்றும்; மக்கள் அதிகர், அதியர் என்றும்; நாடு அதிகை என்றும் அழைக்கப்படுவதுண்டு.

அதியமானைப் பாடிய சங்கப் பாடல் ஒன்று அவன் முன்னோரே வானவர் நாட்டிலிருந்து கரும்பைக் கொண்டு வந்து பயிராக்கியதாகக் கூறுகிறது. இதனைப் புராணக் கற்பனை சார்ந்த புனைந்துரை எனக் கருதுபவர் உண்டு. வானவர் நாடு என்ற பெயர் சீன நாட்டுக்கும் உண்டு. சேர நாட்டுக்கும் உரியது. ஆனால் இம்மரபுரையின் ஊன்றிய மெய்மை ஒன்றே. ஏதோ ஒரு காட்டுத் தட்டையைப் பயிற்றுவைத்துக் கரும்பாக்கி, அதிலிருந்து சர்க்கரைத் தொழிலையும் கண்டவர் அதிகை நாட்டவர் அல்லது கொங்கு தமிழகத்தவர் என்பதே அது. (உலகெங்கும் பெரிதும் கரும்புக்கு பெயரின்றிச் சர்க்கரைப் பெயரே தமிழ்ப் பெயராக வழங்குவதனடிப்படையில், இது மேலே குறிக்கப்பட்டுள்ளது. கரும்பு-கரும்பயிர்-காசில் நாட்டுப் பயிர்; இந்தி-கன்னா; தமிழ் கன்னல்-கரும்பு)

புன்னாட்டையும் படியூரையும் போலவே இந்நாட்டின் மலைப்பகுதிகளிலும் நீல மணிக்கற்களும் தங்கமும் செல்வ வளங்களாகக் கிட்டின. மேலே சுட்டியபடி, மோரியர் காலத்தில் (கி.மு. 3-ம் நூற்றாண்டு) அதியமான் எழினி என்பவன் கோசரால் வாட்டாறு, செல்லூர் போர்க்களங்களில் முறியடித்துக் கொல்லப் பட்டான்.

அதியமான் நெடுமிடல் அஞ்சி என்பவனைக் களங்காய்க் கண்ணி நாமுடிச் சேரல் வென்றதாகப் பதிற்றுப்பத்து கூறுகிறது. அவன் பசும்பூட் பாண்டியனுக்குப் படைத்தலைவனாகவும் உற்ற துணைவனாகவும் இருந்தான் என்றும் பாண்டியவன் பகைவர்கள் இதனால் ஒன்றுபட்டு இணைந்து அவனை முறியடித்தனர் என்றும் பரணர் பாடுகிறார்.

நக்கீரரின் அகப்பாட்டு (253) ஒன்று பசும்பூட் பாண்டியன் கொங்கரைத் தாக்கித் துரத்தி நாட்டை நண்பர்களுக்குப் பிரித் தளித்தான் என்று கூறுகிறது.

**'வாடாப் பூவிற் கொங்கர் ஒட்டி**
**நாடு பல தந்த பசும்பூட் பாண்டியன்**
**பொன்மலி நெடுநகர் கூடல் ஆடி**
**இன்னிசை ஆர்ப்பு.....'**

பாண்டியன் கொங்கு வேளாள மரபினரைக் கொங்கு நாட்டின் தென் பகுதியிலிருந்து துரத்திவிட்டு, வேட்டுவ மரபினரை அப்பகுதிகளில் குடியேற்றியதனை இது குறிப்பதாக மரபு வரலாறுகள் காட்டுகின்றன. இப்பாட்டில் நெடுமிடல் பெயர் குறிக்கப்படவில்லை. அவன் இம்முயற்சியில் முந்துற இறந்து விட்டதனாலே இப்பாட்டில் இறுதி வெற்றிக்குரிய மதுரை மக்கள் ஆரவாரமும், மற்றொரு குறுந்தொகை (393)ப் பாட்டில் அவன் மாளவும் கொங்கர் ஆரவாரமும் குறிக்கப்படுகின்றன என்று அவர்கள் கொள்வர்.

'கூகைக் கோழி வாகைப் புறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பு.'

அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி மேற்கண்ட குறுந் தொகைப் பாட்டு, கீழ்வரும் அகப்பாட்டு (142) ஆகிய இரண்டை யும் இணைத்து, இவ்வதிகமான் மாள்வு நன்னன் படைத்தலைவ னான மிஞியால் நேர்ந்தது என்று கொள்கிறார். குறுந்தொகைப் பாட்டில் வரும் கொங்கர் என்பதை அவர் கொண்கர் (அதாவது கொண்கானத்தவர்) எனக் கொள்வர். (அகப்பாட்டும் நெடுமிடல் பெயர் கூறவில்லை.)

'கறையடியானை நன்னன் பாழி
உட்டரு மரபின் அஞ்சுவர, பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேமமாகிய பெரும் பெயர்
வெள்ளத்தானை அதிகன் கொன்று வந்து
ஒள் வாள் அமலை ஆடிய....'

தகடூர் வேளிருள் பெரும்புகழ் நிறுவியவன் அதிகமான் நெடுமான் அஞ்சியே யாவன். அவன் சங்க கால வள்ளல்கள் எழுவரில் ஒருவன். கொங்கு நாட்டின் கவிப் பேரரசியான ஔவை யார் அவன் அருந்துணைவராகவும், அவைப் புலவராகவும், அவன் அரசியல் தூதமைச்சராகவும் விளங்கினார். அவரும் பிற சங்கப் புலவோர்களும் அவன் வீரத்தையும், வெற்றிகளையும், கொடைப் பண்புகளையும் வாயாரப் பாராட்டியுள்ளனர். உண்ட வரை நெடுநாள் வாழச் செய்யும் அரு நெல்லிக்கனி ஒன்று அவனுக்குக் கிடைத்தபோது, அதனை அவன் தானுண்ணாது

ஔவையாரை உண்பித்து, அவர் உண்ட பின்னரே அதன் அருமை தெரிவித்தான். இச்செயற்கரும் செயல் கண்டு உவகையும் நன்றிப் பெருக்கும் மீதூரப் பெற்ற அக்கவிஞர் பெருமாட்டி

'நீலமணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும, நீயே!' (புறம் 91)

என்று அவனை மனமுருக வாழ்த்தினார்.

அதியமானின் இவ்வருஞ்செயலையும் அவன் முன்னோர் கரும்புத் தருவித்த புகழையும் இணைத்துக் கொங்கு மண்டல சதகம் பாடுகிறது.

'சாதலை நீக்கும் அருநெல்லி தன்னைத் தமிழ்ச் சொல் ஔவைக்கு
ஆதரவோடு கொடுத்தவன், கன்னலை அங்கு நின்று
மேதினி மீதல் கொடுவந்து நட்டவன்மேன்மரபோர்
மாதிரம் சூழ் அரண் மேவுவதும் கொங்கு மண்டலமே!'

அதியமான் அஞ்சிக்கு அவனைப் போலவே வள்ளல்களாகவும், வேளிர்களாகவும் விளங்கிய கொல்லிமலை வல்வில் ஓரியும் மலையமான் திருமுடிக் காரியும் முறையே உயிர் நண்பராகவும், உயிர்ப் பகைவராகவும் விளங்கினர். அதிகமான் பின்னவனைத் தாக்க எண்ணி, முதலில் காஞ்சியாண்ட தொண்டைமான் இளந்திரையனின் நட்பை உறுதி செய்து கொள்வதற்காக அவனிடம் ஔவையாரைத் தூதுவராக அனுப்பினான். தற்பெருமைமிக்க தொண்டைமான் பளப்பளப்பாக ஒளிவீசும் தன் பாரிய படைக் கலக்கொட்டிலைத் தூதருக்குக் காட்ட முனைந்த போது, அக் கவிஞர் பெருமாட்டி ஆம்! இவையே அழகானவை, அப்படியே புத்தம் புதிய நெய் பூசப்பெற்றுப் பளப்பளக்கின்றன. என் தலைவனோ தான் உண்ணாமலே புலவர்களுக்குக் கொடுத்து வாடுபவன். அவன் படைக்கலங்களோ முற்றிலும் போரில் ஒடிந்தும் குருதி படிந்து துருப்பிடித்தும் கிடப்பவை என்று நா நயம் படக் கூறி அவனை இணக்குவித்து அவன் ஆர்வநேசம் பெற்றார்! அதன்பின் உயிர் நண்பன் ஓரியின் உதவியுடன் காரியின் நாட்டைக் கைப்பற்றினான்.

காரி கொங்குப் பேரரசன் பெருஞ்சேரலிரும் பொறையை அணுகி அவன் உதவியால் அதியமானின் துணையையும் மீறி, ஓரியை முறியடித்துக் கொன்றான். அதன் பின் சோழ பாண்டியர்

உதவிய நிலையிலும் அதியமான் நெடுமான் அஞ்சியும் அவன் வீரப்படைத் தலைவன் பெரும்பாக்கனும் அவர் வீரப்புதல்வன் பொகுட்டெழினியும் கொங்குச் சேரனை எதிர்த்துத் தகடூர்ப் பெரும்போரில் மாண்டனர்.

நமக்கு அரைகுறையாகவே கிட்டியுள்ள சங்க காலக் கொங்கு நாட்டுப் பெருங்காப்பியமாகிய தகடூர் யாத்திரை பல ஆண்டுகள் நீடித்த இத் தமிழகப் பெரும்போரைச் சங்க காலப் புலவரின் நேரடிக் காட்சியாகவே வருணித்துள்ளது.

இப்போர் வெற்றியாலேயே கொங்குச் சேரன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற விருதுப் பெயர் பெற்றான்.

கொல்லிமலை என்ற வேள்புலம் பண்டைத் தென் கொங்கு நாடாகிய இன்றைய கொங்கு நாட்டின் புகழ்சான்ற மரபு ஆகும். அது கொல்லிமலை என்ற மலையினாலேயே அப்பெயர் பெற்றது. அது கொல்லி நாடு என்றும் கொல்லிக்கூற்றம் என்றும் அழைக்கப் பெறுவதுண்டு. அதன் வேளிர் ஓரி என்ற குடிப்பெய ரால் சுட்டப்பட்டனர். கொல்லிமலை இப்போது சதுரகிரி என அழைக்கப்படுகிறது. அது 180 சதுரக் கல் பரப்பு உடையது. அதன் மிக உயரிய கொடுமுடியான வேட்டைக்காரன் மலை 4663 அடிஉயரம் உடையது. அறப்பளீசுரம் என்ற கோயிலும் அதன்மீது அறப்பளீசுரசதகம் என்ற தமிழ்ச் சதக இலக்கியமும் இதற்கு உண்டு. இவ்வேள் புலத்தின் மலைப்பகுதிகளில் புன்னாடு படியூர் தகடூர் முதலிய பிற இடங்களில் கிடைத்த நீலமணிக் கற்களும் பொன்னும் மலிந்திருந்தன. இதன் காடுகளில் சந்தன மரங்களும். பலா மரங்களும் கருங்காலி மரங்களும் மலிந்திருந் தன. தற்காலத்தில் தேக்கு வளமும் இங்கே மிகுதி.

இவ்வேள் புலத்தைச் சூழ, கொங்கு தொண்டை நாடுகளில் வாழும் வில்லியர் தமிழகத்தில் இன்று பிற்பட்ட சமுதாயத்தின ராக வாழ்தாலும் அவர்கள் முன்னோர் பெருவீர மரபினராகப் புகழ் பெற்றவர்களாயிருந்தனர் என்று காண்கிறோம். இவர்கள் தொல் பழங் காலங்களில் பெருங் கொங்குப் பரப்புதாண்டிக் குசராத் மாநிலம் வரை பரவியிருந்தனர் என்பதை அங்கே தனி மொழி யுடன் பிற்பட்ட இனத்தவராய் வாழும் வில்லயர் (Bhils) மரபு காட்டுகிறது. இது மேலே குறிக்கப் பட்டுள்ளது.

இக்காலத்தில் சேலம் அருகாமையில் காணப்படும் மாயமான் குறடு என்ற ஒளிவெளித் தோற்றம் போல, அந்நாளில் இங்கே

கொல்லும் அழகுத் தெய்வப் பாவை (மோகினி) யாகிய கொல்லிப் பாவைஎன்னும் ஒளி நிழல் தோற்றம் நிலவிற்று. இதனைச் சங்கப் புலவோர் 'கடவுள் எழுதிய பாவை' (அகம் 62) 'தெய்வம் எழுதிய வினை மாண்பாவை' (நற்றிணை) எனப் பாடியுள்ளனர். கொங்கு மண்டல சதகமும் இதைக் குறிப்பிட்டுள்ளது.

சங்க காலத்தில் பெரும்புகழ் நிறுவிய கொல்லிமலைத் தலைவன் ஆதன் ஓரி அல்லது வல்வில் ஓரி என்பவன். இவன் வள்ளல்கள் எழுவரில் ஒருவன். 'வெம் போர் மழவர் பெருமகன் மாவண் ஓரி' (நற்றிணை) 'அடு போர் ஆனா ஆதன் ஓரி, 'மாரிவண் கொடை' (புறம் 153) என அவன் இணையிலாப் பெருவீரத் தையும் இசையார்ந்த நெடுங்கொடையும் சங்கப் புலவர் வாயாரப் பாராட்டியுள்ளனர். அவன் உயிர் நண்பனாக அதியமான் நெடுமான் அஞ்சியும், அவன் உயிர்ப்பகைவனாக மலையமான் திருமுடிக் காரியும் விளங்கினர். அவன் துணையுடன் அதியமான் முதலில் காரியின் நாட்டைக் கைப்பற்றி, அவனைத் துரத்தியதும், பின்னர் கொங்குச் சேரன் பெருஞ்சேரல் இரும்பொறையின் உதவியுடன் காரி, ஓரியின் கொல்லி நாட்டைத் தாக்கியபோது, அதியமான் அவனுக்குத் துணைநின்றும் பயனின்றி, வல்வில் ஓரி போரில் முறியடிக்கப்பட்டு வீரமாள்வு எய்தியதும் மேலே சுட்டப்பட் டுள்ளன.

ஓரி என்ற பெயரே கொண்ட வல்வில் ஓரியின் குதிரையும் காரி என்ற பெயரே உடைய மலையமான் காரியின் குதிரையும் அக்காலத்தில் அக்குதிரைகளின் தலைவர்களைப் போலவே வீரப்புகழ் வாய்ந்தவையாய் இருந்தன.

**காரிக் குதிரை காரியொடு மலைந்த**
**ஓரிக் குதிரை ஓரியும்**

**(பத்துப்பாட்டு; சிறுபாணாற்றுப்படை)**

**என இந்த இருபெரு வீரரின் போர்க்கால மோதுதலைச் சங்ககாலப் புலவர் வருணித்துள்ளனர்.**

**தமிழகத்துக்கு வெளியே, சிறப்பாகச் சேர நாட்டில் உள்ள வேள்மரபினர் பெரிதும் இந்த ஓரியின் மரபினராகவே இருந்தனர் என்னல்தகும். அவர்கள் வீரப்புகழுக்குரிய வில்லே சேரர் கொடி யாய் அமைந்தது என்பது இதனைச் சுட்டுகிறது. சேரரின் இந்த வில் பழைய நெடு வில் (Long bow) என்பதனிடமாக மேலை**

யுலகில் கி.பி. 11-ம் நூற்றாண்டில் புதிது பரவிய விசைவில் (Cross bow) ஆதல் கூடும். இவ்விசை விற்படை காரணமாகவே சேரர் வானவர் என்றும், மேல் கொங்கு, வடகொங்கு, தென் கொங்கு, ஆறுகள் வானி என்றும் பெயர் பெற்றன வாதல்கூடும். சோழர், விசயநகரப் பேரரசர், முகலாயர் காலம் வரை இந்த விசை விற்படையின் புகழ் நீடித்திருந்தது. ஆங்கில அரசன் ஹெரால்டு (1066), சோழ இளவரசன் இராசாதித்தன் (10-ம் நூற்றாண்டு) விசய நகரப் பேரரசன் இராமராயன் (1565) ஆகியோர் இந்த விசை வில்லின் தாக்குதலால் உயிர் இழந்தவரேயாவர்.

கண்டிரநாடு என்பது பண்டைத் தென் கொங்கு நாடாகிய தற்காலக் கொங்கு நாட்டில் தோட்டிமலை சார்ந்த வேள்புலம் ஆகும். யானையை இயக்கும் கருவி என்ற பொருளிலிருந்து அம்மலைப் பெயரை வேறுபடுத்திக் காட்டுவது போலச் சங்கப் புலவர் அதனை 'இரும்பு புனையந்தியற்றாப் பெரும் பெயர்த் தோட்டி' என வருணித்தனர். அதன் காடுகளில் காந்தள் மலர்கள் நிறைந்திருந்தன என்றும், யானை வளத்துக்கும் தேன் வளத் துக்கும் அவை பேர் போனவை என்றும் அறிகிறோம். ஆயர்கள் இக்காடுகளில் பசுவளம் பெருக்கி நெய்வளம் கண்டனர் (பால் வளப் பொருள்களில் வெண்ணெயையும் பாலேட்டையுமே மேலையுலக மொழிகள் அறியும்: நெய் என்ற பொருளும் சொல் லும் தமிழுக்கும் இந்திய மொழிகளுக்கும் மட்டுமே உரியன. பண்டைக் கொங்கு நாட்டிலும் தமிழக நெய் என்ற இப்பால் வளப்பொருள் உலக வாணிகச் சரக்காக உருவாக்கப்பட்டது என்பதனை இம்மொழி மரபு சுட்டிக்காட்டுகிறது. முதல் முதல் பசுவைப் படைத்தளித்த நாடும் கொங்குத் தமிழகமே என்பது மேலே சுட்டப்பட்டுள்ளது. தமிழில் மட்டுமே மரவியல் நெய்க்கு முற்பட்ட பழமை நெய்க்கு உரியது).

கண்டிர நாட்டு வேளிர் கண்டிரக்கோ எனப்பட்டனர். சங்க காலப் புகழ்பெற்ற வேளான கண்டிரக் கோப்பெருநள்ளி என்பவன் வள்ளல்கள் எழுவரில் ஒருவன். இவ்வேள் புலப் பகுதிக்குரிய புகழியூர் மலையின் கல்லெழுத்துக்கள் மூலம் இவன் பெயரா லேயே நள்ளியூர் என ஓர் ஊர் இருந்ததாக அறிகிறோம். இதுவே அவன் தலைநகராக இருந்திருத்தல் கூடும்.

புலவர்களுக்குக் கண்டிரக்கோப்பெரு நள்ளி தேர்களையும் யானைகளையும் பரிசில்களாக வாரி வாரி வழங்கினான் என்று

அறிகிறோம். ஆனால் அவன் குருதி மரபின் வண்மை அவன் வண்மையுடனேயே போட்டியிட்டது - அவன் இல்லாதபோது அவனை நாடிவந்த புலவர்களுக்கு அவன் வேள்மனைப் பெண் டிரும் பிள்ளைகளும், பிடியானைகளையும் (பெண் யானை களையும்) குட்டியானை (போதகங்)களையுமே பரிசாகக் கொடுத் தனர் என்ற இனிய செய்தியைப் புலவர் பாடல்கள் நமக்குத் தெரி விக்கின்றன.

ஒரு சமயம் வன்பரணர் என்னும் புலவர் பெருமான் அவனை நாடிக் காட்டு வழிகளில் நடந்து ஒரு மரத்தடியில் பசிவிடாயாலும் களைப்பாலும் சோர்ந்து கிடந்தார். அச் சமயம் பெருவேள் நள்ளியாரோ ஒரு வேடன் போல வந்து ஒரு மானைத் தானே வேட்டையாடி அதன் இறைச்சியை சமைத்து அப் புலவரை உண்பித்தான். அவனே நள்ளி என்று பிற்பட்டே அறிந்த புலவர் பெருமான் அவனை உளமாரப் பாடிப் புகழ்ந்தார் (புறம் 150).

விச்சி நாடு அல்லது விச்சியர் நாடு பண்டைத் தென் கொங்கு நாடாகிய இக்காலக் கொங்கு நாட்டில் தற்காலத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பச்சை மலைப் பகுதியே என்று கருதப்படுகிறது. அதன் சாரல்களில் வளர்ந்த பலா மரங் களின் வளமை பற்றிக் கபிலர் பெருமான் (புறம் 200) பாடியுள் ளார். சந்தன மரங்களும் கருங்காலி மரங்களும் அதன் காடுகளில் வளங்கொழித்திருந்தன. அம்மலை மீதிருந்த வெல்ல முடியாத ஐந்தெயில் கோட்டையிலேயே விச்சியரின் வேளிர் ஆகிய விச்சிக் கோக்கள் வாழ்ந்து வந்தனர்.

சங்கப் பாடல்கள் ஒரு விச்சிக்கோ பற்றியும் அவன் தம்பி இளவிச்சிக்கோ பற்றியும் பாடுகின்றன. அந்நாட்டில் குறும்பூர் என்னும் ஊரில் வாழ்ந்த பாணர்கள் (இன்றைய தாழ்த்தப்பட்ட வகுப்பினரல்லர், அவர்கள் முன்னோர்களான இசைக் கலைஞர் கள்) விச்சிக்கோ காட்டில் தனியொருவனாக வெறுங்கையுடன் ஒரு கொடும் புலியுடன் மல்லாடி வென்றதைக் கண்டு வியந்து பாராட்டினர். இச் செய்தியைப் பரணர் (குறுந்தொகை 326) விரித் துரைத் துள்ளார்.

கொங்குப் பெருஞ்சேரனான இளஞ்சேரல் இரும்பொறை ஐந்தெயில் கோட்டையை முற்றுகையிட்டான். சோழரும் பாண்டி யரும் விச்சிக்கோவுக்குத் துணையாய் நின்று போராடிய நிலை

யிலும், கோட்டை வீழ்ச்சியுற்று நாடு கொங்குப் பேரரசால் விழுங்கப் பெற்றது.

கழுவுள் என்ற வேளிர் தலைவனுக்குரிய காமூர் என்ற முல்லை நிலவேள் புலம் பண்டைத் தென் கொங்காகிய இன்றைய கொங்கு நாட்டில் இருந்தது. அந்நாட்டின் பசுவள, பால்வளச் செல்வத்தால் அதன் மக்கள் ஓங்குபுகழ் பெற்றிருந்தனர். அவர் களின் கோட்டை அவர்கள் புகழ் போல ஓங்கிய மதில்களும், அவர்கள் செல்வ வளம்போல ஆழ்ந்தகன்று பரவிய அகழியும் உடையதாயிருந்தது!

கொங்குப் பெருஞ் சேரனான பெருஞ்சேரல் இரும் பொறை பதினான்கு வேளிர்களின் துணையுடன் கடும் போரிட்டுக் கழு வுளின் காமூர்க் கோட்டையையும் நாட்டையும் கைக் கொண்டான்.

குதிரைமலை (பண்டை வடகொங்குக் குதிரை மலையின் வேறானது) என்ற வேள் புலம் சங்க காலத் தென்கொங்கு நாடாகிய இன்றைய கொங்குத் தமிழகத்தின் உலகப் புகழ் நாட்டிய நன்னிலம் ஆகும். (இது கீழே விளக்கப்படவிருக்கிறது). இவ்வேள் புலம் தற்கால உடுமலைப்பேட்டை வட்டத்தின் அருகாமையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

சங்ககாலக் குதிரைமலை அல்லது முதிரமலை ஆண்ட பெரும் புகழ் வள்ளல் குமணவேளுக்கு இளங்குமணன் என்ற ஒரு தம்பி இருந்தான். வள்ளல்கள் எழுவரிலும் தலைசிறந்த வள்ளலான குமணவேளைப் புலவோர்

> பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
> திருந்து வேல் குமணன்! (புறம் 163)

> அரிது பெறு நறுங்கலன் எளிதினில் வீசி
> நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
> மட்டார் மறுகின் முதிரத்தோனே! (புறம் 160)

எனப் பாச மீதூரப் பாடியுள்ளனர்.

சங்கப் புலவருள்ளே தன்மானக் குன்றேறி நின்ற நல்லிசைப் புலவர் பெருஞ்சித்திரனார் ஆவர். தம்மை மதியாது காலந் தாழ்த்திச் சிறு பரிசிலே தர முன்வந்த இளவெளிமான் என்ற மற்றொரு வள்ளல் வேள்மீது சீறிப் பரிசிலை எறிந்து, புலவர் தகுதியறிந்த புரவலன் பரிசிலின் தன்மையை உன் கண்முன்

கொணர்ந்து காட்டுவேன் என்று வஞ்சினம் கூறிய நிலையில் அவர் குமணவேளிடம் வந்தார்! குமணவேள் பிற பரிசில்களுடன் வழங்கிய பாரிய யானையை இளவெளிமான் முன்றிலில் நின்ற ஒரு மரத்தில் கட்டிவிட்டு அவனை அங்கு இட்டு வந்து காட்டி னார். (மேலே சுட்டியபடி இளவெளிமான் என்ற இந்த வேள் பண்டை வட கொங்குப் பக்கமுள்ள குதிரைமலை வேள் மரபின னாக இருத்தல்கூடும் எனலாம்).

இளங்குமணன் தன் தமையனான வள்ளற் பெருவேள் குமணனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டு நாடாண்டான். அத்துடன் அவன் தன் தமையன் தலைகொணர்வோர்க்குக் கைநிறை பொன் வழங்குவதாக அறிவித்தான். காட்டில் வந்து குமண வேளைப் பாடிய பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவருக்கு, வேறு எதுவும் வழங்க இயலா நிலையில் குமணவேள் தன் வாளைக் கொடுத்துத் தலை கொண்டு சென்று பொன் பெறுக என வேண்டினான். புலவர் அது மறுத்து வாளுடன் இளங் குமணனிடம் சென்று இச்செய்தி கூறி உடன்பிறந்தார் இருவரை யும் இணக்குவிக்க விரைந்தார்.

பெரிதும் போர்ச் செய்திகளே நிரம்பிய வேளிர் வரலாற் றில், குமணவேளின் புகழ் நாடகம் ஒரு தண்ணிலவுக் காட்சியாய் மிளிர்கிறது. இம் மெய்ப் புகழ் வரலாற்றுக் கதை தமிழகம் கடந்து உலகில் நீள் நெடுந்தொலை பரவியுள்ளது எனலாம். ஏனெனில் ஆங்கில உலக மாக்கவிஞன் சேக்சுப்பியரின் மனம் போல் வாழ்வு (As you like it) எனும் நாடகக் கதையின் முல்லைப் பாட்டழ கையே நினைவூட்டும் இத் தொல் பழ வரலாறு. இத்தாலி முதலிய பல நாடுகளின் இலக்கியத் திரைகள் கடந்து சென்று அவ் ஆங்கில நாடகக் கதைக்கே (ஈரேழு நூற்றாண்டுக் கால முற்பட்ட) மரபு மூலமாய் அமைந்தது என்னல் தகும்.

புலவரைப் புரக்கும் வகையில் தமிழக முடி மன்னரின் வண்மை இந்தியாவோ உலகமோ காணாத ஒன்று. அதன் தமிழக வரலாற்றுப் புகழ் மரபும் வேறு எந்நாடும் வரலாறும் காணாததே யாகும். சேக்சுப்பியர் நாடகத்தினும் சிறந்த தமிழ்ச் சங்க கால நாடகப்பாடல்களில் ஒன்றான பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குக் கரிகால் வளவன் அப்பாடல் அரங் கேறிய பதினாறு கால் மண்டபத்தின் தூண் தோறும் ஆயிரம்

(கலிங்கத்துப் பரணி இதை நூறாயிரமாகக் கூறியுள்ளது) பொன் கிழி கட்டிப் பரிசளித்தான். ஆயிர ஆண்டு கழித்துக் கலிங்கத்துப் பரணி இது பாடியதுடனன்றி, பாண்டியன் சோழ நாடழித்த போது (இன்று காணக் கிடையாத) அந்த மண்டபத்தை மட்டும் அழியாது காத்ததாகக் கூறித் தன் கல்வெட்டுகளில் இதன் புகழ் நினைவூட்டினான். கொங்கு பேரரசரோ சேரரோ வழங்கிய பரிசுகள் இன்னும் பாரியவை - குறிப்பாகப் பெருஞ்சேரல் இரும்பொறை பதிற்றுப்பத்தில் தன்னைப் பாடிய புலவர் அரிசில் கிழாருக்குத் தன் ஆட்சியும் அரண்மனையும் தவிசுமே வழங்கியதன்றிச் சிறு செலவுக்கென ஒன்பது நூறாயிரம் காணம் (பொற்காசு) கையுறயாகக் கொடுத்தான். ஆனால் வேளிரையும் அவர்களை விழுங்கிய மன்னரையும் ஒரே நிலையில் வைத்துப் பாடிய தமிழ்ப் புலவரின் தமிழ்ப் பண்பு மரபு எழுவர் என வள்ளல்களைத் தொகைப்படுத்திய காலத்தில் இம் முடிமன்னர் ஒருவரையேனும் அந்த வள்ளல்களின் வண்மைக்கு நிகராகக் கொண்டு உளப்படுத்தவில்லை. வள்ளண்மையின் முழுநிறை உருவங்களாக அவர்கள் எழுவரையுள் வேளிரிடையே தான் கண்டனர். முடியரசர் பேரரசரின் ஆரவாரப் பரிசில்களை விட, மக்களுடன் மக்களாக ஊடாடி வாழ்ந்த குடியரசராகிய வேளிரின் பரிசில்களே பழந்தமிழர் உள்ளங்களில் ஆழப்பதிந்து தமிழ்ப் பண்பலைகளைத் தூண்டின என்று காணலாம்.

முடியரசுக் கால மூன்றாம் தள ஊழியின் கால வண்ணத்தின் மருட்சியுட்பட்ட பிற்கால, அணிமைக்காலத் தமிழர் (ஒரு வேளை பாரதக் கர்ணன் ஒருவன் நீங்கலாக) புராணக் கற்பனைக் குரிய முடியரசரையே முந்து புகழ் பெறும் முதலெழு, இடையெழு வள்ளல்களாகத் தொகுத்து, தமிழ் மரபுக்கும் தமிழர் வரலாற்றுக்கு மேயுரிய இத்தமிழ் வள்ளல்கள் எழுவரையும் ஒருங்கே கடையெழு வள்ளல்கள் ஆக்கி வரிசை திருத்தினர்!

பண்டைத் தமிழர் குடியரசு மரபுப் பண்பின் பெருமையையும் உயர்ச்சியையும் வேளிர் வரலாறுகளும் அவர்களிடையே புலவர்களால் பொறுக்கியெடுத்துத் தரப்பட்ட வள்ளல்களின் வரலாறுகளும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இவ்வள்ளல்களின் வரலாற்றில் செம்பாதிக்கு மேற்பட்ட பகுதி கொங்கு நாட்டுக்கு உரியது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

## ii. சேரரும் கொங்குச் சேரரும்:

## வீட்டரசர் கட்டியெழுப்பிய நாட்டரசுக் கோட்டை

'சிலப்பதிகாரச் செய்தி' என்ற தம் ஆய்வேட்டில் 'ஆசிரியர்' பொ.ரா. குருசாமி காட்டியுள்ளபடி, முத்தமிழ் நாடகக் காப்பிய மாக மட்டுமன்றி மூவேந்தர் நாட்டுத் தேசீய காப்பியமாகவும் திகழும் சிலம்பு சித்தரிக்கும் தமிழக ஊழ் நம்கண்முன் மூவரசு நாடுகளின் மூன்று போகூழ் களாகவும், மூவரசு கடந்த ஒரு தமிழக (குடியரசு மரபுக் குரிய கொங்குத் தமிழக) ஆகூழாகவும் காட்சியளிக்கின்றது. தமிழ் வளர்த்த பாண்டியர்கள் அத்தமிழ் கடந்து தமிழ் மக்கள் மரபின் நீதியைக் காண்பதிலும், கலை இன்பம் வளர்த்த சோழர்கள் அக்கலைகளைக் கடந்து கலைஞன் வாழ்க்கை நலத்தைக் காப்பதிலும், வீரம் வளர்த்த சேரர் அவ் வீர வெறியிடையே தம் மரபின் அறம், அதாவது வீரத்தின் இலக் காகிய மக்கள் தன்னாண்மை வாழ்வைப் பேணுவதிலும் வழு வினர். இவையே மூவரசுகளின் போகூழ்கள் அல்லது இழவூழ்கள். இம்மூன்றனுள்ளும் அடிப்படையானது குடும்ப வாழ்வு நலத் தையே அடித்தளமாகவும் மனித இனவாழ்வு நலத்தையே (Humanism) இலக்காகவும் கொண்ட குடியரசு அல்லது குடி யாட்சிப் பண்பு ஆகும். இதுவே கண்ணகியின் கற்புப் பண்பு என்னலாம். சிலம்பையும் சேரரையும் பொறுத்தமட்டில், தமிழினத் தேசீய மாக்கவிஞன் இளங்கோ தம் காப்பியத்தில் பேரரசி வேண்மாளின் கடைக்கண் வீச்சு மூலமும் அவ்வேள் புல மரபுக் குரிய அப்பேரரசியின் முத்து மணியுரைகள் மூலமும், மாடலன் அறிவுரை மூலமும், கற்புக் கடவுள் காட்சி மூலமும், அக் கற்புக் கடவுள் வாழ்த்துரை மூலமும், இதனை விளக்கிக் காட்டியுள்ளார். கண்ணகிக் காப்பிய வாயிலாகத் தமிழகத்தின் ஆகூழ் என அவர் சுட்டிக்காட்டும் காப்பியப் படிப்பினை அல்லது நோக்கு இதுவே! (தமிழ்க் கற்பு என்பதே பண்டைத் தமிழ்க் குடியரசுப் பண்பின் அடிப்படை ஆகும்.

கொங்குச் சேரப் பேரரசினைக் கட்டியெழுப்பியவர் கொங்கு சேரரே. ஆனால் அதற்கு அடிக்கல் நாட்டியவர் சேரர். குடியரசுப் பண்பை நாட்டரசுப் பண்பாக்கியவர் கொங்குச் சேரரென்றால், மூவரசரிடையே (மேலே சுட்டியுள்ளபடி) அதனை வீட்டரசுப் பண்பாகப் பேணியவர் சேரரேயாவர். கொங்குப் பேரரசை நாம் இதனாலேயே வீட்டரசர் கட்டியெழுப்பிய நாட்டரசுக் கோட்டை என்று கூற வேண்டியவர்கள் ஆகிறோம்.

தென்னக, இந்திய, உலக வரலாற்றில் தேசீய ஆட்சி முறை மரபிலும் (National System of Civil Service), கடலாட்சி மரபிலும் (Maritime and Naval Power) சேர மரபு கொங்குப் பேரரசு மூலம் சோழப் பேரரசு மரபுக்குக் காட்டிய வழியே விசயநகர, மராத்திய, மொகலாய மரபுகள் மூலம் இன்றைய இந்தியாவும் அகல் உலகும் வழிபட்டுப் பின்பற்றி வரும் நெறியாகும். இது உலக ஒப்பியல் வரலாற்றாய்வு மூலமே நுனித்துணர்ந்து காணத் தக்க செய்தி ஆகும்.

அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி காட்டியுள்ளபடி கொங்குநாட்டின் தொடக்க கால வரலாற்றை நமக்குத் தொடர்பு படுத்திக் காட்டுவதில் சங்ககாலப் பதிற்றுப் பத்து மைய ஏடாக வும், பிற சங்கப் பாடல்கள் துணை மையமாகவும், மிகச் சிறி தளவே நமக்குக் கிட்டியுள்ள தமிழி என்று குறிக்கப்படும் சங்க காலப் பாளி எழுத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டுகள் ஓரளவும் உதவுகின்றன.

இறந்துபட்ட முதற்பத்து உட்பட, பதிற்றுப்பத்தின் முந்திய ஆறுபத்துக்கள் மூலம் நாம் கொங்குச் சேர மரபில் முதல் தலை முறையாக உதியன் சேரல் (குத்தாயமாக 20 ஆண்டு ஆட்சி); இரண்டாவது தலைமுறையாகக் குடக்கோ நெடுஞ்சேரலாதன் (58 ஆண்டு ஆட்சி) அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட் டுவன் (25 ஆண்டு ஆட்சி), மூன்றாம் தலைமுறையாகக் களங் காய்க்கண்ணி நார்முடிச் சேரல் (25 ஆண்டு ஆட்சி) சேரன் செங்குட்டுவன் (55 ஆண்டு ஆட்சி), ஆடு கோட்பாட்டுச் சேர லாதன் (38 ஆண்டு ஆட்சி) ஆகிய மூவர் என மூன்று தலைமுறை களுக்குரிய ஆறு அரசர் வரலாறுகளை அறிகிறோம். ஒவ்வொரு தலைமுறையினரும் ஒருங்கு சேர்ந்தே ஆட்சி செய்ததனால், இவற்றின் மொத்த, கால நீட்சி (உதியன் சேரல் குத்தாயமாக 20; குடக்கோ நெடுஞ்சேரலாதன் 58; சேரன் செங்குட்டுவன் 55 என) 133 ஆண்டுகள் ஆகும் என்று கொள்ளலாம். சங்க இலக்கியத் துணையுடன் பதிற்றுப்பத்து தெரிவிக்கும் கொங்குச் சேர மரபின் மொத்த ஆட்சிக் காலம் இதனை உள்ளடக்கியது ஆகும்.

பதிற்றுப் பத்திலேயே இறந்துபட்ட கடைசிப் பத்து உள் ளடங்கலான பிந்திய நான்கு பத்துகளும் (பிற சங்கப் பாடல்களின் துணையுடன்) நமக்கு கிட்டத்தட்ட ஐந்து தலைமுறைகளுக்குரிய

ஆறு அரசர் வரலாறுகளைத் தெரிவிக்கின்றன. அவர்களில் அந்துவன் சேரல் இரும் பொறை (குத்தாயமாக 20 ஆண்டு ஆட்சி: கி.பி. 92-112), செல்வக் கடுங்கோ வாழி ஆதன் அல்லது கருவூரே றிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை (25 ஆண்டு ஆட்சி:112-137), பெருஞ்சேரல் இரும்பொறை (17 ஆண்டு ஆட்சி: 137-154) ஆகிய மூன்று தலைமுறையின் மூன்று அரசரும் முறையே சேர மரபினரின் முதல் மூன்று தலைமுறையினரின் தாயாதி உடன்பிறப்புகள் ஆவர். ஆயினும் மூத்த சேர மரபின் முதல் மூன்று தலைமுறையினரைப் பார்க்க, இவர்களின் ஆட்சிக் கால அளவு மிக மிகக் குறைவே. இதனாலேயே மூத்த சேரமரபின் மூன்றாம் தலைமுறைக் காலத்துக்குள்ளாக இந்த இளைய கொங்கு மரபின் நான்காம் தலைமுறைக்குரிய இரு அரசரில் பெருஞ்சேரல் இரும்பொறையின் தம்பி புதல்வனாகக் கருதப் படும் இளஞ்சேரல் இரும்பொறை (16 ஆண்டு ஆட்சி: 154-170) என்ற முதல் அரசன் ஆட்சி முடிந்துவிடுகிறது (இது சிலம்பின் குறிப்பால் பெறப்படுகிறது) அதே நான்காம் தலைமுறைக் குரியவனாக, பெருஞ்சேரல் இரும் பொறையின் மகனாகக் கருதப் படும் யானைகட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (குத்தாய மாக 20 ஆண்டு ஆட்சி: 170-1 90) என்ற அரசனும், தொடர் பறியப்படாத ஓர் ஐந்தாம் தலைமுறையரசனாகக் கணைக் கால் இரும்பொறையும் (குத்தாயமாக 20 ஆண்டு ஆட்சி: 190-210) மூத்த மரபின் மூன்றாம் தலைமுறையினுள்ளாகவும் அது கடந்து சிறிது காலமும் (சேரன் செங்குட்டுவனின் புதல்வன் குட்டுவன் சேரன் அல்லது கோச்சோதை மார்பன் ஆட்சிக் காலமும் ஆண்டவர் என்று கொள்ளத்தகும்.

இங்கே இரு மரபுகளிலும் முதல்வர்கள், கொங்கு மரபின் இறுதி இரண்டு அரசர்கள் ஆகிய நால்வரின் ஆட்சி ஆண்டுகள் ஊகங்களே. மற்றவை பதிற்றுப்பத்துப் பதிகங்களால் திட்டமாக அறியப்படுபவை. இது போலவே கொங்கு மரபின் இறுதி அரசன் பதிற்றுப்பத்தால் அறியப்படாமல் மற்றச் சங்கக் குறிப்புகளால் அறியப்படுபவனே (அவனுக்கு முற்பட்ட அரசன் கூட இறந்து பட்ட 10-ம் பத்துக்குரியவனாக உய்த்துணரப்படுபவன் மட்டுமே). அற்றவர்கள் நேரடியாகவே பதிற்றுப்பத்தினால் தெரிய வருபவர்கள் ஆவர். இவர்கள் கால அறுதியீடு பெரிதும் சேரன் செங்குட்டுவனின் கண்ணகி விழா நிகழ்ந்த காலமாகக் கணிக்கப்படும் கி.பி. 180 என்பதனை மையக் கல்லாகக் கொண்டு கணக்கிடப்பட்டவையேயாகும்.

சங்கப் புலவர்களுக்குள்ளேயே பாலைபாடிய பெருங் கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ ஆகிய இருவரும் கொங்குப் பேரரசர் மரபினரே என்று அறிகிறோம். அவர்கள் முறையே தந்தையும் மகனுமாகவே தோற்றமளிக்கின்றனர். தவிர, எட்டுத் தொகையில் ஒன்றாகிய ஐங்குறு நூற்றில் மருதத் திணை வேட்கைப் பத்தில் குறிக்கப்படும் ஆதன் அவினி இதே மரபினனாக, ஆனால் அம்மரபினுக்குரிய ஓர் இளமுறைச் சிற்றரச னாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

புகழியூர் ஆறு நாட்டு மலையில் காணப்பெறும் தமிழி எனப்படும் பாலி வடிவத் தமிழ்க் கல்லெழுத்துக்களின் மூலம் இதே மரபினுக்குரியவராக ஒரு கோ ஆதன் சேரல் இரும்பொறை, அவன் மகனாக ஒரு பெருங்கடுங்கோன், அவன் மகனாக ஓர் இளங்கடுங்கோள் ஆகிய மூவரைப் பற்றிக் கேள்வியுறுகிறோம். இவர்கள் சமணரை ஆதரித்தவர்களாதலால், சமண சமயச் சார்பின ராகவே இருந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

கல்வெட்டுகளால் அறியப்படும் கோ ஆதன் இரும்பொறை, பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோன் ஆகிய மூவரையும் சில வரலாற்றாய்வாளர் மேற்கண்ட பதிற்றுப் பத்து (2,3,4-ம் அரசான) செல்வங்கடுங்கோவாழி ஆதன், பெருஞ்சேரலிரும் பொறை, இளஞ்சேரலிரும் பொறை ஆகிய மூவர்களுடன் ஒன்றுபடுத்த எண்ணுகின்றனர். அறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி, பதிற்றுப் பத்து மரபில் பின் இருவரும் தந்தை மகன் உறவுடையவரல்லர், பெரியப்பனும் தம்பி மகனும் ஆவர் என்று காட்டி இந்த ஒருமைப் பாட்டை மறுத்துள்ளார். ஆனால் ஒருமைப்பாட்டின் தடங்கல் இது மட்டுமன்று. கல்வெட்டால் அறியப்படுபவரின் சமணப் பற்று பதிற்றுப்பத்து மரபினருடன் ஒரு சிறிதும் பொருந்தாத பண்பு ஆகும் என்பதை அவர்கள் வரலாறும் காட்டும்.

கல்வெட்டில் கூறப்படும் மூவரில் பின் இருவர் பெயர்கள், சங்கப் புலவரான இருவர் பெயர்களுடன் இணைபவையே என்று அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி கருதியுள்ளார். சங்கப் புலவரின் சமணச் சார்புத்தடம் அறியப்படும் வரை, இதுவும் பொருந்துவதன்று என்று எண்ணல் தகும்.

கொங்குச் சேரர் குடித் தொடர்புடைய ஆண் பெண் புலவர் பலரை நாம் சங்கப் புலவரிடையே காண்கிறோம். கொங்குச் சேர

மரபு மிக நீண்டகால மரபு என்பதை இது காட்டுகிறது. (ஐங்குறு நூறு தொகுப்பித்தது கூட ஒரு கொங்குப் பெருஞ்சேரனே யாவான்). ஆனால் மேலே சுட்டிய அறிஞர் சீனி வேங்கடசாமி யின் கணிப்பின்படி, அது கி.பி.92 முதல் 210 வரை 118 ஆண்டு கள் நிலவியதாகக் கருதப்படுகிறது. மூத்த சேரமரபின் முதல் தலைமுறையே செங்குட்டுவன் ஆட்சி இறுதி (185) ஆண்டி லிருந்து கணக்கிடப்பட்டால், கி.பி. 52ல் தொடங்குவது ஆகிறது. அதன் தாயாதி மரபாகத் தொடங்கும் கொங்கு மரபும் குறைந்தது. அதே அளவு பழமையுடையதாய் இருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை, செங்குட்டுவன் ஆட்சிக் கணிப்புக்கு ஆதாரமான இலங்கைக் கயவாகுவின் காலமும் ஒரு நூற்றாண்டளவு முற் பட்டது ஆகலாம் என்று கருதுபவர் உண்டு. இந்நிலையில் இரு மரபுகளின் தொடக்கத் தலைமுறைகளும் இன்னும் முற்பட்டவை (குறைந்தது 40 ஆண்டுகளாவது முற்பட்டவை) ஆதல் கூடும்.

ஐங்குறு நூற்று ஆதன் அவினி சிற்றரச மரபினனே எனக் கொண்டாலும், சங்கப் புலவர் இருவர், கல்வெட்டில் கண்ட மூவர் ஆக ஐவர் மேலே தொடர் மரபாகக் குறிக்கப்பட்ட ஆறு கொங்குச் சேரர் மரபுக்கா ் வழியில் சேர்க்கப்பட வேண்டிய வர்கள் என்பதில் ஐயமில்லை. பேரரசின் ஆட்சி அதில் முதல் அரசருடன் தொடங்கி, இறுதி அரசருடன் முடிகிறது என்பதை உறுதியாகக் கூறலாம். எனவே இந்த ஐந்து அரசரும், இரு மரபு ஒப்பீட்டால் ஏற்படும் நாற்பதாண்டு வேறுபாடு, செங்குட்டுவன் விழாக்கால மரபு இடையீடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நான்காம் ஐந்தாம் அரசருக்கு (இளஞ்சேரல் இரும்பொறை, மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆகியோருக்கு) முன்னோ, பின்னோ, இடைப்பட்டோ நிகழ்ந்திருக்கக் கூடிய இடைவெளி களுக்கு உரியவர்கள் ஆகலாம். இவர்களையும் கல்வெட்டுகளால் அறியப்படும் பாண்டியர் போன்ற பிற அரசர்களையும் சங்கப் பாடல் மரபு குறிக்காமல், அல்லது அத்தகைய பாடல்கள் தொகுப்புகளில் சேர்க்கப்படாமல் போனதற்கு அவர்கள் முனைந்த புத்த சமண மரபு அல்லது பிறசெய்திகள் காரணங்களாக இருந் திருக்கலாம் என்று கருதத்தகும்.

இவ்வெல்லா முறையிலும் கொங்குச் சேரப் பேரரசின் முழு மரபு வரிசை விவரமும் அதன் காலக் கணிப்பும் தெளிவாகக்

கண்டு உருவாக்கப்படும் வரை, அறிஞர் மயிலை சீனிவேங்கட சாமியின் மரபு வரிசைத் தொடர்பும் காலக் கணிப்புமே இங்கே தற்காலிகமாக பின்பற்றப்படுகின்றன.

தொண்டை நாட்டைப் போலக் கொங்கு நாடு மூவரசு நாடுகளுக்கு ஒதுங்கியிருக்கவில்லை. அதன் நடு நிலையிடம் காரணமாக அது அவற்றினிடையே நடைபெறும் போட்டிகளுக் குரிய மையப் போர்க்களமாகவே நிலவிற்று. ஆனால் எந்த ஓர் அரசரும் அதனை வெல்லவிடாமல், மற்ற இரு அரசரும் எப்போதும் கொங்கு வேளிருக்கு ஆதரவு காட்டி வந்த நிலையில், இப்போட்டியே கொங்கு நாட்டின் தன்னாண்மை நிலையை நெடுநாள் பேணியிருத்தல் வேண்டும் எனலாம். ஆனால் பதிற்றுப் பத்தின் சேர மரபினர், அவர்களின் தாயாதியரும் இளங்கிளை யினருமாகிய கொங்கு சேர மரபினர் ஆகியோர் நாட்களில் இந் நிலை மாறிற்று. ஏனெனில் ஒருபுறம் இக்காலத்தில் தமிழக அரசரிடையே சேரர், கொங்குச் சேரர் ஆற்றலே மேலோங்கி யிருந்தது. மறுபுறம் சேரரின் உள்ளார்ந்த குடியாட்சி மரபுப் பண்பு, தொடக்கத்திலிருந்தே நேரடியாட்சியால் முளையாமல், ஒரு கிளைக் கொங்குச் சேர மரபை உருவாக்கி அதன் மூலமே வென்றாள முற்பட்டது. அத்துடன் மூன்றாவதாக, அவர்கள் தம் அரசாண்மைத் திறம் (அரசியல் சூழ்ச்சிநயம்), மணஉறவு நட்புறவு கள் மூலம் வேளிரிடையே போட்டியும் பிளவும் ஊக்கி, அவற்றை பயன்படுத்தினர்.

அந்துவன் சேரல் இரும்பொறை அல்லது கருவூரேறிய ஒள் வாள் கோப்பெருங்சேரல் இரும்பொறை (குத்தாயமாக 20 ஆண்டு ஆட்சி; கி.பி. 92-112) கொங்குப் பேரரசினைத் தோற்று வித்த முதல்வனும் அதன் முதல் அரசனும் ஆவான் என்று கூறத் தகும். இவன் பதிற்றுப்பத்து மரபில் மூத்த சேரர் குடியின் முதலரச னான உதியன் சேரலின் தாயாதி உடன் பிறப்பாளன் ஆவன். அத்துடன் மேலே சுட்டியுள்ளபடி உதியன் சேரலின் தாயாதி உடன் பிறப்பாளன் ஆவன். அத்துடன் மேலே சுட்டியுள்ளபடி உதியன் சேரலின் இளைய புதல்வனான பல்யானைச் செல்கெழு குட்டுவன், அந்துவஞ் சேரல் இரும்பொறையின் மகனாகிய செல்வக் கடுங்கோ வாழி ஆதன் ஆகிய இருவருக்கும் அவ்விரு மரபின் அரசரும் கொங்கு நாட்டு வேளிருள் ஒருவனான வையாவிக் கோமான்-பதுமனின் இரு புதல்வியர்களை மணஞ் செய்வித்துத் தம் உறவையும் தம் கொங்கு நாட்டு ஆட்சித் தொடர்பையும் இன்னும் நெருக்கமாக்கிக் கொண்டனர்.

பதிற்றுப்பத்தினால் அந்துவஞ் சேரல் இரும்பொறை பாடப் பெறவில்லையாயினும், அவன் மகனைப் பாடிய ஏழாம்பத்தின் பதிகம் அவனை அப்பத்தினுக்குரிய தலைவனின் தந்தை என்ற முறையில்

'மாகெழு கொங்கர் நாடு அகப்படுத்த
வேல கெழுதானைவெருவரு தோன்றல்!'

எனக் குறிப்பிட்டு, அவன் கொங்கு நாடு வென்றாண்ட செய்தி தெரிவிக்கிறது. அவன் தன் தனி முயற்சியாலோ, அல்லது தனி தாயாதி உடன் பிறந்தானின் இளைய புதல்வனான பல்யானைக் குட்டுவனின் துணையுடனோ முதலில் ஆனைமலைப் பகுதி யாகிய உம்பற் காட்டையும் (உம்பல் யானை) அதன் பின் பண்டைத் தென் கொங்கு எல்லையில் கருவூரை உட்கொண்ட ஒரு பெரும் பகுதியையும் வென்று தன் கொங்குப் பேரரசாட் சிக்கு அடிகோலினான். ஆனைமலைப்பகுதி சேர மரபினரிடமே விடப்பட்டு, மற்றத் தென்கொங்குப் பகுதிகளையே அந்துவஞ் சேரல் புதியகொங்குச் சேரப் பேரரசின் அடித்தளமாகக் கொண் டான் என்று தோற்றுகிறது. ஏனெனில் அந்துவஞ்சேரல், சேரர் தலைநகரான வஞ்சி என்ற கருவூரின் பெயரையே கொங்கு நாட்டுக் கருவூர் என்ற வஞ்சிக்கும் இட்டு அதனைத் தலைநகராகக் கொண்டு ஆளமுற்பட்டான். (இங்கே வஞ்சி என்பதே சேரர் தலைநகரின் பழம்பெயராய்க் கருவூருக்கும், கருவூர் என்பதே பழங்கொங்குத் தலைநகரின் பெயராய் வஞ்சிக்கும் மறுபெயர் களாகச் சூட்டப்பட்டன என்று கொள்ளல் தகும்.) இதனை ஒட்டியே அவன் தனக்குக் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும் பொறை என்ற விருதுப்பெயர் சூட்டிக் கொண்டான் என்னலாம். ஆனைமலைப்பகுதி சேரரிடமே நீடித்தது என்பதனைப் பதிற்றுபத்தின் இரண்டாம் பத்துப் பதிகத்தால் அறிகிறோம். ஏனெனில் பல்யானைக் குட்டுவனின் தமயனான நெடுஞ்சேர லாதன் அப்பத்தில் தன்னைப் பாடிய குமட்டூர் கண்ணனார் என்னும் புலவருக்கு உம்பற்காடின் ஐந்நூறு ஊர்களைப் பிரம தேயமாக அளித்தான் என்றும், அக்குட்டுவனையே பாடிய மூன்றாம் பத்துப் பதிகம், குட்டுவன் அதனைத் தன் தாயாதியர் களுக்குப் பங்கிட்டு வழங்கினான் என்றும் கூறுகிறது. (பங்கிட்டு வழங்கியபோது அதன் மேலாட்சி கொங்குப் பேரரசனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்று கருதல் தகும்.)

கருவூரைத் தலைநகராகக் கொண்டதன்றி அந்துவஞ்சேரல் இரும்பொறை அங்கே வேண்மாடம் என்ற பெயரால் ஓர் அரண் மனை எழுப்பி அதிலிருந்து ஆண்டான். ஏழாம் பத்தின் பதிகம் மூலமே அவன் அரசியார் பொறையன் பெருந்தேவியார் என்றும், அத்தேவியார் தந்தை ஒரு தந்தை என்னும் இயற்பெயருடைய வராயிருந்தார் என்றும் அறிகிறோம். (இவர் ஒரு வேளிராயிருத்தல் கூடியதேயாகும்.)

இவ்வரசன் பெருவீரனாகவும் ஓயாது போராற்றியவனாக வும் இருந்தான். அவனது போர்வெறி, முன்கோபம், ஆத்திரம் ஆகியவற்றைச் சங்கப்பலகணிக் காட்சி ஒன்று நமக்குக் காட்டு கிறது. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர் இக் கொங்குச் சேர அரசனின் வேண்மாடத்தில் அவனுடன் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தார். அச்சமயம் சோழ அரசன் முடித் தலைக் கோப்பெரு நற்கிள்ளியின் யானை அவனுக்கு அடங் காமல் அவ் வேண்மாடத்துக்கு அருகாமையிலேயே அவனை இட்டுக் கொண்டு வந்துவிட்டது. சோழன் தன்னைத் தாக்க வருவ தாகவே எண்ணிய அந்துவஞ் சேரல் உடன்தானே அவன் மீது போர் தொடுக்கக் கிளம்பிவிட்டான். ஆனால் புலவர் அவனைக் கையமர்த்தி இருத்தி யானையின் அடங்காநிலை காரணமான மெய்ந்நிலைமை கூறி விளக்கமளித்து அமைதிப்படுத்தினார்.

செல்வக்கடுங்கோ வாழி ஆதன் (25 ஆண்டு ஆட்சி; 112-137) முந்திய பேரரசின் புதல்வன் ஆவான். இவன் மூத்த வழிச் சேரர் குடிக்குரிய பல்யானை செல்கெழுகுட்டுவனின் தாயாதி உடன்பிறப்பாய் இருந்ததன்றி, வையாவிக் கோமான் பதுமன் தேவியார் என்ற இரண்டு ஒரே குடிமரபுப் பெண்களை மணந்து அவனுடன் மேலும் நெருங்கிய உறவுடையவனாய்த் திகழ்ந் தான் என்பது மேலே சுட்டப்பட்டது. ஆதன் என்பதே இவன் இயற்பெயர். கடும் போர்கள் பல ஆற்றியதனாலேயே இவன் கடுங்கோ எனப் பெயர் பெற்றிருந்தான் என்று கருதலாம். ஏனெனில் தன் ஆட்சியை விரிவுபடுத்துவதிலேயே அவன் தன் வாழ்நாள் முழுவதும் கழித்தான் என்று தோன்றுகிறது.

இப்பேரரசனுக்கு மாந்தரன் என்றும் ஒரு பட்டப் பெயர் உண்டு. பின்னாட்களில் இவன் பெயரனும் இதே பெயர் பெற்று இருந்ததனால் வரலாற்றில் இவனை நாம் முதலாம் மாந்தரன் என்று குறிப்பிடலாம்.

பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்து செல்வக் கடுங்கோவின் புகழ் பாடுவதேயாகும். அதனைப் பாடியவர் நல்லீசைப் புலவர் என்னும் புலனழுக்கற்ற அந்தணாளர் என்றும் சங்கப் புலவர்களாலேயே சிறப்பிக்கப்படும் பெருமையுடைய கபிலர் பெருமான் ஆவார். தொடக்கத்தில் பாரி வள்ளலின் அவைப் புலவராயிருந்த அவர், அப்பெரு வள்ளல் வேள் இறந்தபின், இப் பேரரசன் ஆதரவையே நாடி வந்தார். போர்க் களத்திலேயே வாழ்நாள் கழித்த அவனை அவரும் போர்களப் படைவீட்டிலேயே வந்துகாண வேண்டிய தாயிற்று. அச்சமயம் அவன் தோளும் மார்பும் முற்றிலும் பழம்புண் தழும்புகளிடையே புதுப்புண் காயங்களும் நிரம்பிக் கோரக் காட்சி அளித்திருந்தன. எனவே புலவர் முன் அவன் வரும்போது அவற்றை முற்றிலும் சந்தனக் குழம்பால் பூசி மறைத்துக் கொண் டிருந்தான். பதிற்றுப்பத்திலேயே பலவர் பெருமான் இதனைக் குறிப்பிட்டு,

'எஃக ஆடு ஊனம் கடுப்ப மெய் சிதைந்து
சாந்தெழில் மறைத்த சான்றோர் பெருமகன்'

என்று அவனைப் பாடுகிறார்.

இப்பத்தினைப் பாடியதற்காகக் கபிலர் பெருமானுக்கு இப் பேரரசன் நூறாயிரம் காணம் (காணம் - அக்காலப் பொற்காசு) வழங்கியதுடனன்றி, அவருடன் நன்றா என்னும் குன்றின் மேல் ஏறி நின்று, புலவர் கண்ணில் பட்ட எல்லா ஊர்களின் வருவாய் களையும் பரிசாக வழங்கியதாக அப்பத்தின் பதிகம் கூறுகிறது. இப்பரிசு செல்வக் கடுங்கோவின் வள்ளன்மையை மட்டுமன்றி அவன் போர் வெற்றி வளங்களையும் பேரரசின் விரவையுமே சுட்டிக்காட்டுகின்றது. உண்மையில் ஒன்பதாம் பத்தில் இவன் பேரனைப்பாடிய புலவர் பெருங்குன்றூர்கிழார் இவ்விருதிறப் பெருமிதமும் உளங்கொண்டே, பேரனாகிய அப்பேரரசின் போர்க் களத்தில் பகைவர்கள் விட்டுச் சென்றோடிய வாட்கள், விற்களின் எண்ணிக்கைக்கு இப்பேரரசன் கபிலனுக்கு வழங்கிய ஊர்களின் எண்ணிக்கையையே உவமையாக ஒப்பிட்டு, அவ்வூர்களின் எண்ணிக்கையைவிட அவ்வேல்கள், வாள்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை மிப் பெரியதாயிருந்தது என்று நாநயம்படக் கூறு கிறார்.

புலவர் பெருமான் கபிலர் இப்பேரரசின் போர்களை விரித்துரைக்கவில்லையானலும், ஏதோ ஒரு போரில் அல்லது

போர்களில் அவன் சோழர், பாண்டியர் ஆகிய இரு பெரு வேந்தர் களையும் வென்றதாகக் கூறுகிறார். அத்துடன் அவன் வீரத்துக் கும் புகழ் ஒளிக்கும் கதிரவன் ஓரளவுக்குத்தான் ஒப்பாவான், முற்றிலும் ஒப்பாக மாட்டான் என்று நயத்திறம்பட வாதிடுகிறார். 'கதிரவன் பகலில் மட்டுமே வருகிறான், தோன்றி மறைகிறான், இரவெல்லாம் ஒய்வு கொள்கிறான்; ஆனால் செல்வக்கடுங்கோ ஓய்வதில்லை, மறைவதில்லை; அவன் புகழ் ஒளி வீசுவதன்றி ஒளிப்பதில்லை' என்று பாடுகிறார்.

செல்வக்கடுங்கோ வாழியாதனின் மூத்த கிளை வழித் தாயாதியான பல்யானைக் குட்டுவன் போர் வெற்றிகளிலெல்லாம், கடுங்கோ பெரும் பங்கு கொண்டிருந்தான் என்று கருத இடமுண்டு. ஏனெனில் மாந்தை, தொண்டி என்ற மேல் கடற்கரைத் துறைமுகங்களை உள்ளடக்கிய பூமி நாட்டை சேரர் சார்பில் பல்யானைக் குட்டுவன் கடம்ப வேள் நன்னனிடமிருந்து கைப்பற்றியபின், அதைக் கொங்குப் பேரரசனிடமே ஒப்படைத்தான். (சேரருக்கு முசிறி போன்ற வேறு சிறந்த துறைமுகங்கள் இருந்தாலேயே இவ்வாறு செய்தான் என்பர் அறிஞர் சீனி வேங்கடசாமி. பூமி நாடு துளுநாட்டுப் பகுதியன்று, சேரநாட்டுப் பகுதியன்றும் அவர் வாதிக்கிறார்). இதன்பின் செல்வக் கடுங்கோவும் அவன் பின்னோர்களும் 'பூழியர்கோ, பூழியர் மெய்ம்மறை என்று புலவர்களால் சிறப்பிக்கப்படுகின்றனர்.

மூன்றாம் பத்தில் பல்யானைக்குட்டுவனின் இரு கடல் விழா அரும்புகழ் விழாச் செயலாக விரித்துரைக்கப்படுகிறது. பின்னாட்களில் சோழப் பேரரசரும் விசயநகரப் பேரரசரும் தொடர்ந்து கொண்டாடிய இத்தேசீய விழா மரபின் மூலத்தையும் அது கொண்டாடப் பெற்ற முறையையும் நாம் இங்கேதான் காண முடிகிறது. சேரரின் அயிரை மலைத் தெய்வத்தின் முன் வீற்றிருந்த குட்டுவன் அங்கிருந்து இரு கடல் வரையிலும் இரண் டிரண்டு வரிசைகளாகப் பத்தடிக்கு ஒரு யானையை நிறுத்தி, இரு கடல் நீரையும் ஒரே சமயத்தில் அஞ்சல் செய்வித்துத் தன்னை நீராட்டிக் கெண்டான் என்று பதிற்றுப்பத்து விரித்துரைக் கிறது. பூமி நாட்டு வெற்றியை அடுத்து வடகொங்குப் பரப்பு, வட தொண்டைப் பரப்பு முழுவதிலும் குட்டுவன் வெற்றி மூலம் நாட்டிய மேலாட்சி விரிவையே இவ்விழா எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு குட்டுவன் இவ்வெற்றி விழாவைத் தனதாகக் கொண்டாடி

னாலும், இதில் தனக்குதவிய கொங்குச் சேரனிடமே அம் மேலாட்சி முழுவதையும் ஒப்படைத்தான் என்று அறிகிறோம்.

வீரத்துடன் வள்ளன்மையும், இரண்டினுடன் சமயப் பற்றார் வமும் இப்பேரரசன் வாழ்வில் சரிசமப் பங்கே கொண்டன.

இக் கொங்குப் பேரரசனிடம் பரிசில் நாடி வந்த புலவர் குண்டுகட்பாழி ஆதனாருக்கு அவன் பெருஞ் செல்வமும் யானை, குதிரை, ஆட்டுமந்தை, மாட்டு மந்தைகளும் வயலும் மனையும், வயலில் உழைப்பதற்கான களமரும் (உழவரும்) வாரி வழங் கினான். இவற்றைப் பெற்ற புலவர் தாம் காண்பது கனவா அல்லது நனவுதானா என மயங்குவதாக (புறம் 387) நயம்படப் பாடுகிறார்.

தான் இல்லாத போதும் தன்னை எதிர்பாராமலே புலவர் களுக்குத் தன்னிடமுள்ள செல்வாக்குகளையும் தேர்களையும் குதிரைகளையும் மட்டின்றி வாரி வழங்கும்படி அவன் தன் பணி யாளர்களுக்கு நிலைக் கட்டளையிட்டிருந்ததாகக் கபிலர் (7-ம் பக்கத்தில்) பாடுகிறார். இது மேலே கூறப்பட்ட கண்டிரக்கோப் பெருநள்ளியின் வேள்குடி வண்மையையே நினைவூட்டுவதாய் உள்ளது.

இப்பேரரசன் திருமாலை வழிபட்டவன். ஒகந்தூர் என்ற ஊரை அவன் திருமால் கோயில் ஒன்றுக்கு இறைக் கொடையாக வழங்கினான். வேள்விகள் பல செய்தவனென்றும், பிராமணர்க் குப் பொன்னும் பொருளும் ஏராளமாக அளித்தவன் என்றும் கபிலர் அவனைப் பாடுகிறார். அவன் தன் புரோகிதனை விடப் பன்மடங்கு அறநெறியில் மேம்பட்டவனாக விளங்கினான் என்றும் பாராட்டப்படுகிறான். பராசரன் என்னும் வேத விற்பன் னன் வேத மோதும் திறமையில் வெற்றிக் கொடிநாட்டி, அவ் வகையில் மூத்தவழிச் சேரர்களான நெடுஞ்சேரலாதன், பல் யானைக் குட்டுவன் ஆகியோரிடம் பரிசு பெற்றது போலவே, கொங்குப் பெருஞ்சேரனான செல்வக் கடுங்கோவிடமும் வந்து பரிசில் பெற்று மகிழ்ந்தான் என்று சிலம்பு கூறுகிறது.

இப் பேரரசனுக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள் என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

**பெருஞ்சேரல் இரும்பொறை அல்லது தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை (17ஆண்டு ஆட்சி : 137-154)**

செல்வக் கடுங்கோவின் புதல்வர்களில் மூத்தவன் கொங்குப் பேரரசு இவன் காலத்திலேயே அதன் புகழின் உச்சநிலையைச் சென்றெட்டிற்று என்னலாம். அவன் போர் வெற்றிகளையும் போர் வெற்றிப் புகழையும் முன்னிட்டுப் புலவர்களால் அவன் 'கொடித் தேர்ப் பொறையன்', 'சினப் போர்ப் பொறையன்', 'பொலந்தேர் யானை இயல்', 'தேர்ப் பொறையன்', 'புண்ணுடை எறுழ்தோள் எடையவன்' (எறுழ்-வல்லமை) என்று பலபடப் பாராட்டப் பெறு கிறான்.

வரலாற்றுப் பெரும்புகழ் சான்ற தகடூர் வெற்றியின் பின் இப்பேரரசன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சிறப்பு விருதுப் பட்டத்தால் குறிக்கப்படுகிறான்.

பெருஞ்சேரலிரும்பொறையின் ஆட்சிக்குரிய முப்பெருஞ் செயல்கள் மேற்கண்ட காமூர், கொல்லிமலை, தகடூர் ஆகியன கொங்குத் தமிழகத்தின் முப்பெரு வேள்புலங்களைத் தாக்கி அவன் மேற்கொண்ட வெற்றிகள் ஆகும். ஏற்கனவே விரித்துள்ள படி, பதினான்கு வேளிரின் பக்கத் துணையுடன் அவன் காமூர் வேள் கழுவுளின் உறுதிவாய்ந்த கோட்டை நகரையும் நாட்டையும் கைக் கொண்டான். அது போலவே மலையமான் திருமுடிக் காரியின் பக்கத்துணையுடன் அவன் கொல்லிமலை ஆதன் ஓரியைத் தாக்கி, அவன் உதவிக்கு வந்த அதியமானைத் துரத்திய பின், ஓரியைக் கொன்று அவன் நாட்டையும் கைக்கொண்டான். இதன்பின் சோழ பாண்டியராகிய மற்ற இரு தமிழக அரசரும் வந்து அதியமான் நெடுமான் அஞ்சிக்கு உதவிய நிலையிலும், அவன் காரியுடன் சென்று தகடூரைப் பல ஆண்டுகள் முற்றுகை செய்து தகர்த்து, அந்நாட்டை கைக்கொண்டான். தகடூர்ப் படைத் தலைவன் பெரும்பாக்கன், பெருவீரன் அதியமான் நெடுமான் அஞ்சி, அவன் வீர இளங்குருளையான பொகுட்டெழினி ஆகியவர் களின் வீரமாள்வுக்குரிய இப்பெரும் போரை அரிசில் கிழார், பொன்முடியார் போன்ற சங்கப்புலவர்களின் நேர்முக வருணனை யாக்கப்பாடும் (சில பாடல்கள் தவிர அழிந்துபட்ட) கொங்குப் பாரதமான தகடூர் யாத்திரை பற்றி மேலே எடுத்துரைக்கப்பட் டுள்ளது.

தகடூர் யாத்திரையின் நேர்முகக் காட்சி வருணனையில் இடம்பெற்ற புலவர்களில் ஒருவரான அரிசில் கிழாரே பெருஞ் சேரல் இரும்பொறையைப் பதிற்றுப் பத்தின் எட்டாம் பத்தில்

பாடியவர் ஆவர். கொங்குச்சேரன் புலவருக்கு வழங்கிய பரிசிலின் பெருமிதமே அவன் காலத்தில் பேரரசு அடைந்த வீறுயர்ச்சி யினைக் காட்டுவதாகும். அது எந்தப் புலவருக்கும் எந்த அரசனோ பேரரசனோ அளிக்கக் கனவு காணாத பீடு உடையது - பதிகத்தின் மொழியில் கூறுவதானால் இப்பேரரசன் புலவருக்குக் கைச் செலவுக்கென்று ஒன்பது நூறாயிரம் காணம் (காணம்-தங்க நாணயம்) வழங்கியபின் தானும் தன் அரசியும் தவிசிலிருந்து இறங்கிப் புறம் போந்து அரண்மனையும் நாடும் அரசும் கொள்க எனக் கொடுக்க முன்வந்தான். புலவர் அடக்கத்துடன் 'என் பெயரால் நீரே ஆள்க' என்று நயம்படக் கூறித் தாமே அமைச்ச ராக இருந்து ஆட்சி மேற்கொண்டார்.

இப்பேரரசனது வீரப்புகழின் ஒலி எதிரொலி சங்க காலத் தமிழகமெங்கும் அதிர்வுறச் செய்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. தகடூர் எறிந்த என்ற அவன் பட்டம் இதைக் காட்டுகிறது. ஆனால் நமக்கு அதனினும் இனியதொரு பண்பு சான்ற நிலவொளிக் காட்சியைச் சங்கப்பலகணி காட்டுகிறது. மோசிகீரனார் என்னும் புலவர் பெருமகனார் இவனைக் கண்டு பரிசில் பெறும் நோக்கத்துடன் நீள்வழி கடந்துவந்தார். அவர் வந்த வேளையில் அரண்மனையே வெறிச்சோடிக் கிடந்தது. அரசுரிமை முரசினை யானை மேலேற்றித் திருமுழுக்காட்டும் விழாவில் எல்லாரும் ஈடுபட்டு வெளியே சென்றிருந்தனர். பசி விடாயாலும் களைப்பாலும் சோர்ந்த நிலையிலிருந்த புலவர் தாம் செய்வது இன்னதென்றறியாமலே, முரசுக்குரிய அரசுரிமைக் கட்டிலில் அமர்ந்து தூங்கிவிட்டார். வேறெவரும் வருமுன் பேரரசனே அங்கு வந்து இதனைக் கண்டபோது, இயல்பாகக் கடுஞ்சினம் கொள்வதற்கு மாறாக, புலவர் பெருமையை மனத்துட் கொண்டு அவருக்குக் கவரி எடுத்து வீசலானான்.

விழித்தெழுந்து இந்த அரும் பெறற் காட்சியினைக் கண்ட புலவர் இதனையே காலத்தில் நிற்க வல்ல காட்சியாக விதந்து (புறம் 150 ) பாடுகிறார்.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை அறநெறி யாளன் என்றும், தன் புரோகிதனுக்கே அறநெறி கூறி அவனைத் தவம் செய்யும்படி காட்டுக்கு அனுப்பினான் என்றும் பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தில் அவனை அவன் அமைச்சரான புலவர் அரிசில் கிழார் பாடியுள்ளார். அவன் இறைப் பற்றிலும் சிறந்து

இருந்தான். தன் வெற்றிகளைக் கொண்டாடும் வகையில் சேரர் கொங்குச் சேரர் இரு சாராருக்குமுரிய ஒரே குல தெய்வமாகிய கொற்றவைக்கு அவன் விழா எடுத்தான். அதில் தன் போரில் பட்ட பகைவர்களின் யானைத் தந்தங்களையே தவிசாயமைத்து அதன் மீது கொற்றவையை ஏற்றி வழிபட்டான். போரில் குருதிக் கறைபட்ட தன் வீரவாளினையும் இங்கேயே கழுவிக் கொண் டான் என்று அவன் அமைச்சரும் புலவருமான அரிசில் கிழார் நயம்படக் கூறுகிறார்.

பேரரசன் பெருஞ்சேரல் இரும்பொறைக்கு நெடுநாள் பிள்ளையில்லாதிருந்து நோன்பு பல ஆற்றிய பின்னரே ஒரு புதல்வன் பிறந்தான். தந்தையின் ஆட்சி குறுகியதாய், அவன் பிறப்பும் பிந்தியதாய் இருந்த நிலையில் பேரரசன் ஆட்சி முடி விலும் அவன் சிறுவனாகவே இருந்தான். எனவே அவன் தம்பி யான குட்டுவன் சேரலின் புதல்வனான இளஞ்சேரல் இரும் பொறையே அவனுக்குப்பின் பேரரசனானான். சிறுவனாயிருந்த பெருஞ்சேரலின் பிள்ளையே இளஞ்சேரலிரும் பொறைக்குப் பின் வந்து ஆண்ட யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை என்று கருதப்படுகிறது. குட்டுவன் சேரல் தகடூர்ப் போரில் வீரமாள்வுற்றிருக்கலாம் அல்லது அதன்பின் உயிரிழந் திருக்கலாம் என்று உய்த்துணரப்படுகிறது.

இளஞ்சேரல் இரும்பொறை (16 ஆண்டு ஆட்சி:154-170) மேற்கண்டவாறு முந்திய பேரரசனின் தம்பிபுதல்வன் ஆவான். தகடூர் எறிந்த பெருஞ்சேரலின் காலத்திலே உச்சநிலைக்கு ஏறிய கொங்குப் பேரரசனின் வீறு இளங்சேரல் இரும்பொறையின் ஆட்சியிலேயே அதன் முழு முழக்கமும் கண்டது. அவனைப் பாடிய புலவர் பாடல்களும் இதனை மெய்ப்பிக்கின்றன. ஏன் எனில் அவர்கள் வழக்கமான பட்டங்கள் சூட்டி அவனைக் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை, சேரமான் 'குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை' என்றோ, கவிதையணியான சிறப்பு அடைமொழிகளுடன் 'பல்வேற் குட்டுவன்' 'வென்வேற் குட்டுவன்' என்றோ பாடி அமையவில்லை. அவன் வென்றாண்ட நாடுகள், புகழ் நகரங்கள் வெற்றிப் போர்கள் ஆகியவற்றைச் சுட்டியே இவர்கள் அவனைச் சிறப்பிக்கிறார்கள்.

நன்னன் ஆண்ட மேல் கொங்கு நாட்டின் வடகோடி எல்லை குறிக்கும் வானியாற்றையே சுட்டிச் சாந்துவருவானி நீரினும்,

தீந்தண் சாயலன், என்றும் (பதிற்றுப் பத்து); பூழி நாட்டையோ அதில் தொல் பழங்காலச் சேரர் இருந்தாண்ட நறா அல்லது நறவு (நற-தேன்)என்ற சேரர் தொல்பழந் தலைநகரையோ, அதன் பேர் போன மாந்தை, தொண்டி ஆகிய துறைமுக நகர்களையோ அவன் ஆண்டான் என்ற முறையில் 'எழுஉத்திணி தோள் பூமியர் மெய்ம்மறை, இலங்கு நீர்ப்பரப்பின் மாந்தையோர் பொருந!' 'நாரரி நறவிற் கொங்கர் கோவே!' 'வளைகடல் முழவின் தொண்டியோர் பொருந!' என்றும், கட்டிநாடும், புன்னாட்டுடன் அதன் தலைநகரான கட்டூரும் ஆண்டவன் என்ற குறிப்பில் 'கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே, விரவு மொழிக் கட்டூர் வயவர் வேந்தே!' என்றும் இப்பேரரசனைப் புலவர் தனிச் சிறப்புப் படுத்திப் பாடியுள்ளனர். (இங்கே கட்டூரில் கிரேக்கர் உரோமர் முதலிய அயல் மொழியாளர் வாணிக நாடிவந்து குடியிருப் பதனைக் குறித்தே 'விரவு மொழிக் கட்டூர்' என்ற புலவர் வழக்கு எழுந்துள்ளது என்னலாம்.)

இப்பேரரசனைப் பதிற்றுப்பத்தின் 9-ம் பத்தில் பாடியவர் பெருங்குன்றூர் கிழார் ஆவர். அப் பத்துக்குரிய பதிகத்தின் மொழிப் படியே, பேரரசன் அவருக்குப் பரிசில் கொடுக்காமல் கால நீட்டிப்பவர் போலிருந்து கொண்டே 'அவரறியாமல் ஊரும் மனையும் வளமிகப்படைத்து, ஏரும் இன்பமும் இயல் வரப் பரப்பி, பன்னூறாயிரம் காணம் (காணம்-அந்நாளைய தங்கக் காசு) கொடுத்தான்... பரிசு நீட்டித்தான் என்றெண்ணிப் புலவர் வருந்திப் பாடிய புறப்பாடல்களை (210,211) புன்முறுவலுடன் ஏற்றுப் பின்னரே மெய்நிலை தெரியச்செய்த பேரரசன் நகை நயப் பண்புத் திறம் குறித்தே பதிகம் 'மருளக் கொடுத்தான்' என்று இங்கே கூறியுள்ளது.

பேரரசனின் அமைச்சன் வேள் குடியினனான மையூர் கிழான் ஆவான். இப்பேரரசர் தந்தையும் முந்திய பேரரசனின் தம்பியுமாகிய குட்டுவன் சேரல் மையூர் கிழான் ஒருவனின் மகளான அந்துலன் செள்ளையையே மணந்திருந்தான். ஆதலால் இந்த அமைச்சன் மையூர் கிழான் பேரரசனின் தாய்மாமன் அல்லது மைத்துனனாக இருந்திருத்தல் வேண்டும் என்னலாம். இவ்வமைச் சனைப் பேரரசன் 'புரோசுமயமாக்கினான்' என்று ஒன்பதாம் பத்தின் பதிகம் குறிக்கிறது. 'அமைச்சனைப் புரோகிதனினும் அறிவாள னாகப் பண்ணினான்' என்று பழைய உரை இதற்கு விளக்கம்

தருகிறது. முந்திய பேரரசன் பெருஞ்சேரல் இரும்பொறையைப் போலவே இவனும் புலமையிலும் சமய அறநெறிக் கல்வித் துறைகளிலும் மேம்பட்டிருந்தான் என்பதனை இதனால் அறிகிறோம்.

பண்டை வடகொங்கு மேல் கொங்குப் பகுதிகளின் மேலாட்சி பல் யானைக் குட்டுவன் காலம் அதாவது அந்துவஞ்சேரல் காலத்திலிருந்தே கொங்குப் பேரரசருக்கு உரியதாக இருந்து வந்தது. ஆயினும் மற்றத் தமிழரசர் அதாவது சோழரும் பாண்டியரும் அஞ்சுகிற அல்லது பொறாமைப்படுகிற அளவுக்கு இப் பேரரசன் காலத்திலேயே அது பெருகியிருந்தது; ஏனெனில் அம் மேலாட்சி நேரடியாட்சி போன்ற ஆற்றலுடையதாய் இருந்தது. இதனைப் புலவர்களின் பாடல்கள் காட்டுகின்றன. ஆயினும் இப்பேரரசன் போர்களிடையே நாம், விச்சிப் போரையும் புன்னாட்டுப் போரை உள்ளடக்கிய சோழப் பெரும் போரையும் மட்டுமே விளக்கமாகக் கேள்விப்படுகிறோம்.

முந்திய பேரரசன் காலம் வரை வெல்லப்படாமல் இருந்த பண்டைத் தென் கொங்கு அல்லது இன்றைக் கொங்கு நாட்டுப் பகுதியாக இவன் ஆட்சித் தொடக்கத்தில் இன்று திருச்சிராப் பள்ளி மாவட்டப் பகுதியாயமைந்துள்ள பச்சை மலையடுத்த விச்சிநாடு அமைந்திருந்தது. சோழ பாண்டியர் ஆகிய இருவருமே உதவிய நிலையிலும் இவ்வேள் புலத்தையும் அதற்குரிய புகழ் சான்ற ஐந்தெயிற் கோட்டையையும் பேரரசன் இளஞ்சேரல் இரும்பொறை வென்று கைக்கொண்டான் என்பது மேலே கூறப் பட்டது.

சேர மரபின் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் காலத்தில் மேல்கொங்கு நன்னன் புன்னாட்டு நீலக்கல் வளமவாவி எதிர்த்ததும் கொங்குச் சேரப் பேரரசன் துணையுடன் சேரரால் நன்னன் கீழடக்கப்பட்டதும் கொங்குச் சேரர் மேலாட்சிக்குரியவராக்கப் பெற்றதும் மேலே குறிக்கப்பட்டுள்ளன. அதுபோலவே சோழன் பசும்பூட் சென்னியின் படைத்தலைவனாயிருந்த வேள் பழையன் அதே நோக்குடன் புன்னாட்டின் மீது படையெடுத்த போது நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்ற கொங்குப் பேரரசின் மேலாட்சிக்குரிய வேளிர் ஐவரும் பழையனைத் தாக்கிப் போரில் கொன்றழித்துப் புன்னாட்டைக் காத்ததும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

தன் வீரப்படைத்தலைவன் பழையனின் தோல்வியும் மாள்வும் சோழன் பசும்பூட் சென்னிக்குப் பெருந்தலையிறக்கத்தையும் கடுஞ்சீற்றத்தையும் விளைவித்தன. அவன் கொங்குப் பேரரசன் இளஞ்சேரல் இரும்பொறை மீது பழிவாங்கும் எண்ணத்துடன் (தற்காலக் குழுமமே என்று கருதப்படுகிற) கழுமலம் என்ற வேள்புலத்தைத் தாக்கி, அதன் வேள் ஆன கணையனையும் சிறைப்படுத்தினான். மேலே கண்ட புன்னாட்டு நிகழ்ச்சியுடன் சோழனது இவ்வெற்றியையும் ஒரே தொடர் நிகழ்வாகப் புறப்பாட்டு (44) ஒன்று பாடுகிறது.

'நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன்னருங் கடுந்திறல் கங்கன், கட்டி,
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇ அளப்பருங் கட்டூர்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனான் ஆகித் திண்தேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூண் சென்னி'

சீற்றங் கொள்ள வேண்டிய முறை இப்போது கொங்குப் பெருஞ் சேரனுக்கே வந்து நேர்ந்தது. அவனது வெஞ்சினக் கட்டளைகளைப் பெற்ற அவன் படைத்தலைவர்கள் கழுமலப் போரில் (வரலாற்றுப் புகழ் பெற்ற பின்னாள் கழுமலப் போரின் வேறானது) சோழர் படைகளைத் தெறித்தோடச் செய்து வெற்றி கண்டனர். இப்பெரு வெற்றியைப் பாராட்டும் வகையிலேயே, இப் பேரரசனை ஒன்பதாம் பத்தில் பாடிய புலவர் பெருங்குன்றூர் கிழார் பகைவர்கள் எறிந்து விட்டு ஓடிய வாள்களும், வேள்களும் முன்னம் செல்வக் கடுங்கோவை.

'நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்
பாடிப்பெற்ற ஊரினும் பலவே'

என்று நாத்திறம்பட வியந்து பாராட்டினர்.

சோழப் போராட்டத்தின் முதற் கட்டமே இதனுடன் முடிகிறது. இதனையடுத்துச் சோழன் பசும்பூட் சென்னி மாண்டிருக்க வேண்டும். ஏனெனில் அடுத்த கட்டத்தில் கொங்குச் சேரனால் தொடர்ந்து முறியடிக்கப் பெற்றவர்கள் வித்தையாண்ட இளம் பழையன் மாறனும், பொத்தியாண்ட பெருஞ்சோழனும் ஆவர்.

இவர்களுள் முன்னவன் புன்னாட்டுப் போரில் வீர மாள்வுற்ற பழையனின் இளவலாக இருத்தல் கூடும். இப்போர்களின் விளைவாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் சோழர் அருந்தனமாகப் பேணி வந்த சதக்கப்பூதர் படிமத்தை இளஞ்சேரல் இரும்பொறை வெற்றிச் சின்னமாகக் கைப்பற்றி அதனைக் கருவூரில் நிறுவி விழா எடுத்தான். கொங்குச் சேரப் பேரரசின் இந்நீள் பெரும்புகழை

'அருந்திறல் மரபின் பெருஞ் சதுக்கமர்ந்த
வெந்திறல் பூதரைத் தந்திவண் நிறீஇ
ஆய்ந்த மரபில் சாந்திவேட்டு' (பதிற்றுப்பத்து)

'சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி புரிந்தோன்!' (சிலப்பதிகாரம்)

என்று சங்கப் பாடலும் சங்க காலச் சிலம்பும் ஒருங்கே முழங்குகின்றன.

இங்கே சிலம்புக் காப்பியம் இளஞ்சேரல் இரும்பொறை வேள்வி புரிந்தான் என்று கூறும் தொனியும் அதன் இறந்த காலமுமே, சேரன் செங்குட்டுவன் (130-135) ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த கண்ணகி விழாவுக்கு (180-ம் ஆண்டுக்கு) நெடிது முன்னதாவே இப்பேரரசன் இறந்துவிட்டான். என்பதைக் காட்டுகின்றன. தவிர, இக்கூற்று அந்த விழாவுக்கு முற்பட, அதற்குத் தூண்டுதலாகவே, சேரன் செங்குட்டுவனின் போர் வெறியைத் தணியச் செய்து அற ஆர்வம் தூண்டும் முறையில் அவனுக்கு நிலையாமையை அறிவுறுத்தும் வகையிலே மாடலனால் கூறப்படுகிறது. அசோகன் புத்த நெறி தழுவுவதற்கும் அவனது கலிங்கப் போரின் குருதி களறி பின்னணியாய் அமைந்தது போல, கண்ணகி விழாவுக்கும் மாடலன் அறிவுரைக்கும் உரிய பின்னணி, சிலம்பே குறிக்கும் சேரன் செங்குட்டுவனின் கொங்கர் செங்களம் என்ற இடத்தில் நிகழ்ந்த செங்குருதிப் போரே என்னல் தகும். இது கீழே விரிக்கப்படுகிறது.

யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (குத்தாயமாக 20 ஆண்டு ஆட்சி: 170-190), பெருஞ்சேரல் இரும்பொறை ஆட்சி இறுதியிலே சிறுவனாயிருந்த அவன் புதல்வனே என்று அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி கருதியுள்ளார். இவன் ஆட்சிக் கால அளவும் அடுத்த பேரரசன் ஆட்சிக்கால அளவும் இருபது ஆண்டுகள் என்பதும், இளஞ்சேரல் ஆட்சியை யடுத்து

இரண்டும் தொடர்ந்தன என்பதும் இதுபோலவே வேறு போதிய ஆதாரங்கள் இல்லாத நிலையில் பெரிதும் உய்த்துணரப்பட்ட ஊகங்களாகும்.

சதுக்கப்பூதரைக் கருவூரில் கொண்டு வந்து நிறுவிய நிகழ்ச்சிக்காலம் கொங்குசேரர், பெருஞ்சேரர் ஆகிய இரு மரபினரின் ஆற்றலும், புகழும் அடைத்த உச்சநிலையைக் காட்டுவது மட்டுமன்று. அதுவே கொங்குச் சேரரின் ஆற்றல் சரியத் தொடங்கிய காலம், அதுவே சேரரின் ஆற்றலுக்கும் முதல் ஆட்டம் கொடுத்த காலம் ஆகும் என்னலாம். ஏனெனில் இதனை அடுத்து எழுந்ததே கொங்கர் செங்களப் போர். இரு சேர மரபுகளின் வளர்ச்சியால் ஏற்பட்ட தமிழக முழுதளாவிய எதிர்ப்பின் முதல் அலையையே இது காட்டுகிறது. ஒருபுறம் சோழ மார்பில் செங்குட்டுவனின் மைத்துனர் இடம்பெறாது துரத்தப்பட்டனர். மற்றொரு புறம் கொங்கு நாடெங்கும் வேளிர்கள் பேரரசுக்கு எதிராகத் தூண்டப்பட்டனர். கொங்கர் செங்களப்போரில் சேரன் செங்குட்டுவன் ஆற்றிய வீரச் செங்குருதிப் போராட்டம் தற்காலிகமாக வெற்றியே தந்து அவன் புகழ் நாட்டிற்று என்பது உண்மையே. ஆயினும் கண்ணகி விழா அதன் பேராரவார அதிர்வலைகளை அமைதிப்படுத்தப் பேருதவியாயிருந்தது என்பதில் ஐயமில்லை. பெருஞ்சேரரின் பேரரசு அதே சமயம் கண்டுவிட்ட ஆட்ட அலைவை மறைக்கும் அரசியல் திரையாகவும் அது பயன்பட்டது. இரு மரபுகளின் பின் வரலாறு இவற்றை உணர்த்துகிறது.

கொங்கர் செங்களப் போரில் கோர் சேரருக்குப் பேராதரவு செய்திருத்தல் கூடும். கொங்குச் சேரப் பேரரசு பேரளவில் வீழ்ச்சியுற்றிருக்கக்கூடும். அப்போரை ஒட்டி, அது முதல் கண்ணகி விழா வரையுள்ள காலம் யானைக் கட்சேய் ஆட்சிக் காலமாயிராமல், அவன் ஆட்சி இடைக்காலமாய் பெருங்கொங்குப் பரப்பில் கோசரே வல்லரசாட்சி பெற்றிருத்தல் ஆகும் என்று கருதலாம்.

கண்ணகி விழாவின் போது கொங்கு நாட்டின் சார்பில் கொங்குப் பேரரசர் இடம்பெறாதது, அதேசமயம் கொங்கிளக் கோசரே கொங்கு நாட்டுச் சார்பில் பெருமதிப்புடன் இடம்பெற்றது ஆகிய செய்திகள் யானைக்கட்சேயின் கொங்குப் பேரரசாட்சியிடையே நிலவிய ஓர் இடைக்கால, அல்லது தொடக்க காலச் சூழலே என்று கருத இடமுண்டு.

கி.பி. 15,16-ம் நூற்றாண்டுகளில் முன்னர் அரசியல் பேரரச ராக ஆண்ட நிலை தகர்ந்துவிட்ட நிலையிலும் பாண்டிய மரபினர் புதிய இலக்கியப் பேரரசராகத் தம் மரபுப் புகழ் புதுப்பித்து வாழ்ந் தனர். கடைசிக் கொங்குப் பேரரசர் வாழ்வுகள் இதனை ஒத்தவை. ஆனால் கொங்குப் பேரரசர் இலக்கியப் பேரரசர்களாக மட்டு மன்றி, கொங்கு மக்கள் உள்ளங்களில் அன்பாட்சி நிறுவிய குடியரசுப் பேரரசராகவும் நிலவினர். சங்ககாலக் கொங்கு வரலாற் றின் அந்தி நேரச் செவ்வானின் அழகொளிகளாக அவர்கள் ஆட்சிகள் அமைக்கின்றன. (பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம்பாடிய இளங்கடுங்கோ முதலிய அரசு மரபுப் புலவர் புகழாட்சி, இப்புகழொளிக்கு முன்பின் இடைவெளிகளில் சுடரிட் டவை ஆகலாம். )

செல்வக் கடுங்கோவுக்கும் மாந்தரன் என்ற மறுபெயர் இருந் ததனை ஒட்டியே புலவர்கள் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு அவன் முகத்தோற்றத்தைச் சுட்டி யானைக்கட்சேய் என்ற அடை மொழி சேர்த்து அழைத்தனர் என்னலாம்.

முந்திய கொங்குச்சேரர் ஆட்சிகளைப் போலவே இக் கொங்குச் சேரன் ஆட்சியிலும் போர்கள் பல நிகழ்ந்தன. ஆனால் வெற்றி மேல் வெற்றிகள் எனத் திகழ்ந்த அவ்வரலாற்றிலேயே அவன் ஆட்சி முதல் வெற்றி விரவிய தோல்விகள் வரலாறாகத் தொடர்ந்தன. பேரரசர் வீரம் குறைந்து விடவில்லை. ஆனால் பேரரசுச் சரிவின் வேகத்தைச் சில காலம் தடுத்து நிறுத்தவும், அதன் பண்பை வளர்க்கவுமே அது உதவிற்று.

இப் பேரரசனது கன்னிப் போராகவும் வெற்றிப் போராகவும் அதே சமயம் கவிதையஞ் செல்வியை அவனிடம் வரவழைத்த வெற்றிப் போராகவும் அமைந்தது விளங்கில் போரேயாகும். இது பற்றிய வேறு செய்திகள் எதுவும் நமக்கு வந்து எட்டவில்லை. கன்னித் தமிழ்க் கொங்கம் ஈன்ற இத்தமிழ்க் கொங்கிளஞ் சேர னுக்குப் போர் வெற்றி குறித்து மகிழ்ச்சியில்லை. தன் பாட்டன் வெற்றி பாடக் கிடைத்த நல்லிசைக் கபிலனைப் போலவே தன் வெற்றிப்பாடக் கவிஞன் கிட்டவில்லையே என்று மட்டுமே அவன் கவலையுற்றதாக அறிகிறோம். ஆனால் விளங்கிலைப் பாட அவன் நாடிய புலவர் பொருந்தில் இளங்கீரனார் உருவில் போர்க்களத்திலேயே அவனை வந்தடைந்தார். 'அரசே கவலை வேண்டா! கபிலரைப் போலவே நான் உன் புகழைப் பாடுவேன்'

என ஒரு புறப் பாடலையே (புறம் 11) பாடி அவன் வேண்டு கோளுக்கு அவர் விடை தந்தார்.

பதிற்றுப்பத்தின் பத்தாம் பத்து இறந்து பட்ட ஒரு பத்தே யாகும். ஆயினும் அதில் பாடல் பெற்றவன் கொங்குப் பேரரசன் யானைகட்சேயே என்றும், பாடியவர் பொருந்தில் இளங்கீரனாரே என்றும் மேற்கண்ட புறப் பாடலினடிப் படையில் உய்த்துரைக் கப்படுகிறது.

யானைக்கட்சேயின் ஆட்சியில் சிக்கற் பள்ளி துஞ்சிய கிள்ளிவளவன் எனும் குராப்பள்ளி துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் மீது படையெடுத்து முற்றுகையிட்டான், இச்சமயம் சேர நாட்டை ஆண்டவன் சேரன் செங்குட்டுவனின் புதல்வனான குட்டுவன் சேரல் என்ற சேரமான் கோக் கோதை மார்பன் என்று கருதப் படுகிறது.

யானைக்கட்சேய் அவன் உதவி கோரி அது வருவதை எதிர் நோக்கிக் கோட்டைக்குள்ளேயே தங்கியிருந்தான். ஆலந்தூர் கிழார் என்னும் புலவர் சோழனிடம் சென்று, கோட்டையில் தங்கியிருக்கும் அரசனை எதிர்த்து முற்றுகை நீடித்தல் அறமன்று எனப் புறநானூற்றில் ஒரு பாட்டால் (36) அறிவுறுத்தியும் சோழன் முற்றுகை தளர்த்தவில்லை எதிர்பார்த்த உதவி காலந்தாழ்த்தும், சிறிதாகவும் அமைந்தது. இந்நிலையில் சோழன் கொங்குச் சேரனை முறியடித் தோட்டியதனுடன் அமையாமல், கருவூரைச் சூறையாடித் தீக்கிரையாக்கினான். மாடமாளிகைகள், கூடகோபுரங் கள் கொழுந்து விட்டு நின்றெரிந்தன. சோழனின் வெற்றியைக் கோவூர்கிழார் (புறம் 373), பெண்பாற் புலவரான மாறோகத்து நப்பசலையார் (புறம் 39) ஆகியோர் பாடினார்.

இப்போரின் பின்னணியில் நாம் அன்றைய தமிழக வர லாற்றுச் சூழலைக் காணலாம். சேரமான் உதவி காலந்தாழ்த்தும், குறையாகவும் வந்ததற்குக் காரணம் உண்டு. சோழன் கொங்குப் பேரரசைத் தாக்கியூ அதே சமயத்திலேயே பாண்டியன் சேரப் பேரரசையும் தாக்கித் தோல்வி கௌவச் செய்ததுடன், முசிறி யிலிருந்தே ஏதோ ஒரு தெய்வப் படிமத்தை வெற்றிச் சின்னமாகப் பாண்டி நாட்டுக்கு எடுத்துச் சென்றான். சோழ பாண்டியரின் இந்தத் திட்டமிட்ட இருதிசைத் தாக்குதல் முந்திய கொங்குப் பேரரசனின் சதுக்கப்பூத வெற்றிக்கு எதிர்ச் செயலாக நடத்தப் பட்டதேயாகும். இரு சேர மரபுகளின் புகழ் கண்டு பொருமிய இரு

தமிழரசரும் காலம் பார்த்திருந்து ஒன்றுபட்டு மேற்கொண்ட செயல்களே அவை.

கொங்குப் பேரரசின் ஆற்றல் சரிவை மட்டுமின்றி, அதன் மூத்தவழிச் சேரப் பேரரசின் வலிமைக் கேட்டையும் இப்போர் நிலவரங்கள் காட்டுகின்றன. ஆயினும் இவ்வளவு பெரிய அழி பாட்டின் பின்கூடக் கொங்கு பேரரசு சிதறவில்லை. பேரரசின் ஆற்றல் குறையக் குறைய, அதன் அடித்தளமாகிய குடியரசுப் பண்பு அதனை வீட்டரசர் கட்டிய நாட்டரசுக் கோட்டையாக்கி விட்டது என்பதையே இது காட்டுகிறது. வறுமையிற் செம்மை போன்று தோல்வியில் வீறமைதியும் கனிவும் காட்டிய யானைகட் சேயின் மீதும் அவன் பின்னோன் மீதும் கொங்குக் குடிமக்கள் கொண்டிருந்த பாசத்தையே இப்போரின் பின்னிலை காட்டுகிறது- நீர் கிழிய எய்த வடுப்போல, இவ்வழிபடு கடந்தும் பேரரசு அமைதி நல்வாழ்வுடன் நீடித்தது என்று அறிகிறோம்.

யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை அறமுறை வழுவாது ஆண்டான் என்றும், அவன் நாட்டு மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ்ந்ததால், பிற நாட்டு மக்கள் பொறாமையுறு மளவில் அவன் நாடு வானுலகம் போல விளங்கிற்று என்றும் கோழியூர் கிழாரும் (புறம் 187), பதிற்றுப்பத்தில் அவனைப் பாடியவராகத் தெரியவரும் பொருந்தில் இளங்கீரனாரும் (புறம் 53) அவன் ஆட்சி நலம் போற்றியுள்ளனர்.

தமிழகத்திலேகூட வெற்றிப் பேரரசர் பலருக்கும் எளிதில் கிட்டாத இத்தகைய புலவரின் புகழ்ப் பாராட்டுப் பரிசு தோல்விப் பேரரசனாகிய யானைகட்சேய்க்கு இயல்பாகக் கிட்டிற்று! இது அவர்கள் குடியரசு பண்பு, தமிழ்ப்பண்பு ஆகியவற்றிற்கே சான்று ஆகும்.

யானைகட்சேயைத் தமிழகம் என்றும் மறக்க முடியாத படி செய்துள்ள அவனது அருஞ் செயல் ஒன்று உண்டு. சங்ககால எட்டுத் தொகையினுள்ளே ஒரு முத்துத்தொகையாகத் திகழும் ஐங்குறு நூற்றை அருமுயற்சியுடன் அந்நாளைய கொங்கு நாட்டின் அறிவுக் களஞ்சியமாயிருந்த புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரைக் கொண்டு தொகுப்பித்த செயலே அது. சங்க இலக்கியப் பரப்பிலேயே புறநானூற்றுக்குரிய பழந்தமிழ் பண்புக் கனிவும், குறுந்தொகைக்கும் சேக்சுப்பியருக்கும் உரிய நாடகத்

திறமும் ஒருங்கே கொண்ட சிங்காரக் கலையழுகுச் சிமிழ் என அதனைக் கருதலாம்! நற்றிணையின் வனப்புக்குக்கூட அது பெரிதும் பின்னிடைவதன்று.

புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் புலவராக மட்டுமன்றிச் சிறந்த கணியராகவும் (வானூலாராகவும் அதன் வாழ் பயன் கணிப்பு நூலாராகவும்) விளங்கினார். அவரே கொங்குச் சேரனின் அவைப் புலவராகவும் அரசவைக் கணியராகவும் விளங்கியிருத்தல் கூடும். தம் உளங்கொண்ட தலைவனாகவும், அரசனாகவும் விளங்கிய யானைக்கட் சேயினிடம் அவர் ஆரா அன்புடையவர். அந்நாட்களில் வானில் ஓர் எரிமீன் விழுவது கண்டு அவர் அது பேரரசனுக்குத் தீமை குறித்ததென்று கண்டு கவன்றதுடன், அதன்படியே அவன் மாண்டபோதும் மனமறுக்க முற்றுக்கையறவு (புறம் 229) பாடினார்.

**கணைக்கால் இரும்பொறை** (குத்தாயமாக 20 ஆண்டு ஆட்சி: 190-210) கொங்குப் பேரரசின் கடைசிப் பேரரசன் ஆவான். முந்திய பேரரசு மரபுடன் அவன் உறவு முறைத் தொடர்பு யாது என்பதோ, அவன் எப்போது தவிசேறினான் என்பதோ தெரியவராத செய்திகள் ஆகும். அவன் ஆட்சி ஆண்டுகள் கூட (முதல் பேரரசன், முந்திய பேரரசன் ஆண்டுகளைப் போலவே) ஊகங்கள் ஆகும். ஆனால் அவன் கொங்கு சேரருக்குரிய அதே மரபுப் பண்பில் வந்தவன் என்பதில் ஐயமில்லை; முந்திய பேரரசன் அப்பேரரசின் மாலைச் செவ்வானமென்றால், இப் பேரரசனை நாம் அதன் வீழ்வானச் செங்கதிரொளி என்னலாம். அவனைப் பாடிய பாடலாக, ஒரு சிறு காப்பியமே கூட உண்டு. அத்துடன் அவனே பாடிய ஒரு பாடல், கூற்றுவன் முகநோக்கிப் பாடிய ஒரு பாடல், சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. அவன் சங்க கால அரசன் மட்டுமல்லன், சங்க காலப் புலவனும் ஆவான். பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங் கடுங்கோ ஆகிய பேரரசப் பெரும்புலவர் புகழின் ஒரு சுடர்ப் பொறியாக அவன் விளங்கினான்.

முந்திய பேரரசனைப் போல வெற்றி விரவிய தோல்வியன்று, கலப்பற்ற தோல்வியே கண்ட பேரரசன், கணைக்கால் இரும்பொறை. ஆனால் இது அவன் வீரத்தின் குறையன்று. பேரரசுச் சூழலின் குறையேயாகும். பேரரசின் சரிவைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலுடையவனாகவே அவன் ஆட்சி தொடங்கினான்

என்பதை அவன் அவைப் புலவரான பொய்கையார் பாடிய நற்றிணைப் பாடல் (18) காட்டுகிறது. பேரரசினை எதிர்த்த மூவன் என்ற (வேளிராகவே கருதத்தக்க) தலைவனை அவன் கொன்றழித்து மற்றையோர்க்கு எச்சரிக்கையாய் உதவும்படி அந்த மூவனின் பற்களை மேல்கரைத் தொண்டித்துறை முக வாயிலில் பதித்து வைத்தான் என்று அப்பாடல் கூறுகிறது.

இது பேரரசன் வீர ஆற்றலை மட்டுமன்றி அவன் ஆட்சித் தொடக்கத்திலும் பேரரசுக்கிருந்த ஆற்றலையும் விரிவகற்சியை யும் எடுத்துக் காட்டுவது ஆகும். ஏனெனில் பேரரசின் தொலைக் கோடியாகிய மேல் கடற்கரைவரை அவன் நில ஆட்சி மட்டு மின்றிக் கடலாட்சியும் எட்டியிருந்தது என்பதை இது காட்டுகிறது.

சங்க கால இறுதி நாட்களில் வாழ்ந்து, இன்றளவும் தமிழரால் மறக்கமுடியாத பொன்றாப்புகழ் நிறுவிய பேரரசன் சோழன் செங்கணான். சங்க காலப் புகழ்வானின் மாலை வெள்ளி அவன் தொடக்கக் கால சைவ நாயன்மார், மணிவாசகப் பெருமான், தொடக்கக் கால வைணவ ஆழ்வார்கள் ஆகியோருக்கு கூட அவன் முந்தியவனாய், ஒரு வேளை அவர்களுக்கே மூல மரபின னாகக்கூட விளங்கியவன் ஆவான். காவிரி இருகரையும் (கொங்கு நாடெங்கும்) எழுபதுக்கு மேற்பட்ட சிவபெருமான் திருக்கோயில் களை எழுப்பிக் கொங்கு நாட்டைச் சிவத்திரு நாடாக்கியவன் அவன். கொங்குப் பேரரசின் புறவீழ்ச்சிக்கு (அக வீழ்ச்சியாகக் கூறக்கூடிய குடியரசுப் பண்பு வீழ்ச்சி என்றும் நிகழ்ந்துவிடாத ஒன்று) வழிவகுத்த வெற்றி அவன் வெற்றியே!

**சோழப் பேரரசன் செங்கணான் கொங்குச் சேரப் பேரரசன் கணைக்கால் இரும்பொறையைத் திருப்போர்ப்புறம் என்ற இடத்தில் நடந்த போரில் முறியடித்ததுடன் அமையாமல், அவனைக் குடவாயில் கோட்டத்தில் (குடந்தைக்கு அருகில்) சிறை வைத்தான். சிறைப்பட்டுவிட்ட தமிழ்ப் பேரரசன் காவல் வீரரிடம் விடாக்கு நீர் கேட்டு, தன்னை மதியாது அவர்கள் காலந்தாழ்த்துத் தந்த நீரை அருந்தாது நிலத்தில் ஊற்றினான். மானம் நீத்தபின் வாழ விரும்பாது உணவு நீர் மறுத்துச் சாகத் துணிந்து அவன் பாடிய பாடலே தமிழின் பேரரசுப் பாடல் களுள் ஒன்றாக (புறம் 64) சங்க இலக்கியப் பரப்பில் மிளிர் கின்றது. ஆனால் அவன் புகழும் சாகவில்லை, பூத உடல் கூட அவ்வேளை சாவு தாண்டியிருந்தது என்பதனைக் 'களவழி நாற்பது'**

என்ற சங்க காலச் சிறுகாப்பியத்தின் முகப்புரையால் அறிகிறோம். பதினென் கீழ்க்கணக்கில் ஒன்றாகக் கருதப்படும் இச்சங்கப் பாடற்காப்பியத்தைச் சேரன் கணைக்காலிரும் பொறையினிடம் ஆராப்பற்றுக் கொண்ட புலவர் பொய்கையாரே சோழன் செங் கணான் மீதுபாடி, அவனை விடுவித்து மீண்டும் தவிசேற்றினார் என்று தோன்றுகிறது.

சங்க கால முழு வீழ்ச்சி கி.பி. 250 அல்லது அதற்குச் சற்று முன் பின் தொடங்கிய களப்பிரர் படையெழுச்சியின் விளைவு ஆகும். ஆனால் திருப்போர்ப்புற பேரரசாட்சி, அவன் விடுவிக்கப் பட்ட பின்னும் சிறிது காலம் சோழர் மேலாட்சியின் நிழலில் தொடர்ந்திருந்தது என்று கருதலாம். ஆனால் கொங்குப் பேரரசை விழுங்கிய சோழப்பேரரசை மட்டுமன்றி, சேர பாண்டியராகிய மற்ற இரு அரசுகளையும் அவர்களிடையே அந்நாள் முகிழ்த்த (திரையர்-இளந்திரையர் ஆகிய தொண்டை நாட்டு மரபினர் மலர்ச்சியாகிய) பல்லவ அரசையும் கூட இக் களப்பிரர் எழுச்சி சில நூற்றாண்டுகள் வரை அழிவுக்கு ஆட்படுத்திவிட்டது.

மேலே சுட்டியபடி, மகிழம்பூ வாடினாலும், அதன் மணம் என்றும் வாடாதவாறு போல, களப்பிரர் ஆட்சியாலோ பிறர் எவர் ஆட்சியிலோ கொங்கு நாடு தன் அகப்பண்பாகக் கொங்குப் பேரரசு நிழலில் மலர்ந்த தன் குடியரசு மணம் மாறாமல் நின்று நிலைத்து வந்தாலும், புறத்தே அது மற்ற மண்டலங்கள் கூடக் காணாத புறவள அழிவைக் காண வேண்டி வந்தது என்பதில் ஐயமில்லை. ஐந்திணை மலராகப் பூத்த சங்க காலக் குடியரசுப் பண்பு சங்க காலத்துக்குபின் நெடுநாள் பாலையாகி விட்ட கொங்கு நாட்டு வரலாற்றில் சோழர் கால முதல் பாலை வெப் பிடையே நறுஞ்சோலை மலராகவே மீண்டும் புது மலர்ச்சியுறத் தொடங்கியுள்ளது. மலர்ச்சியுற்று வருகிறது. அதன் இடைக்கால வீழ்ச்சி களப்பிரர் எழுச்சி, அதன் முன்னணி மரபினரான கங்க மரபினரின் ஆட்சி ஆகியவற்றால் மட்டுமன்றி, முடியரசர் குருதிப் போராட்டங்களாலும் நேர்ந்தது ஆகும்.

## iii . கொங்கு வாழ்வும் சங்கம் கண்ட தேசீய வாழ்வும் தேசங் கடந்த பெருந் தேசீய அமைப்பும்

சங்க இலக்கியமும் சங்க கால இலக்கியமும் இன்று தமிழரின் பழம் பெருமை பேசுவதற்குரிய அருங்கலைக் கருவூலமாக

மட்டுமே கருதப்பட்டு வருகின்றன. உலகளாவிய, இந்தியா அளாவிய ஒப்பீட்டாய்வின் துணை கொண்டு சங்க இலக்கியப் பலகணி மூலம் நாம் அறியத் தகும் தமிழக, இந்தியத் தேசீய வாழ்வுவளம், உலக நாகரீக வளம் ஆகியவை பற்றியோ கொங்கு வரலாற்றுடன் அவற்றிற்குரிய தொடர்பு பற்றியோ அறிஞர் உலகும் புலவர் உலகும் இன்னும் கருத்துச் செலுத்தவில்லை. முடியரசின் மூன்றாம் ஊழிக்குரிய கால வண்ணத்தின் சாயல் தமிழகத்தின் உள்ளும் புறமும் இந்தியாவின் உள்ளும் புறமும் இன்னும் இவற்றை நிழலடிப்பவையாகவே உள்ளன. எல்லா உலக மொழிகளிலும் (ஆங்கிலம்; Ceorl அல்லது Churl, உழு பவன், அற்பப் பயல்; Eorl அல்லது Earl உழாதவன், கோமான், பெருமகன்) சமஸ்கிருதத்திலும் (விச், வேதகால மக்கள், கடை வருணத்தவரான மூன்றாம் வருணத்தவர்) தமிழிலும் (தேவராட்டி, வழிபாட்டாளர், விலைமகள், பொதுமகள்; குடிமகன்; நாட்டு மக்களில் ஒருவர், வேசி மகன் அல்லது அம்பட்டன்; வேளாளன் என்பதன் புதுவடிவம் வெள்ளாளன், கடைநிலத்தவன், பெண்பால் வடிவங்கள்; வெள்ளாட்டியர், கடைசியர்கீழ் மக்கள் வகுப்பு) இதே கால வண்ணத்தின் மரபு மலர்ச்சி இழிவுகளைக் காட்டும் சொற் களில் ஒரு சில ஆகும்.

சங்கம் என்ற தமிழ்ச் சொல்லிலேயே இக்கால வண்ணம் மிகுதி விளையாடியுள்ளது. அது தமிழ்ச் சொல்லன்று, சமஸ் கிருதச் சொல் என்று கூறும் சமஸ்கிருத மரபு அறியாக் குழப்பத் துக்கும் (சமஸ்கிருதம் sangam; sangama, பற்று, புணர்ச்சி; ஆறுகளின் சந்திப்பு; sanghm-association) ஆராய்ச்சிக் குழப்பத் திற்கும் ஆட்படுபவர்களும் அதனைக் கூடல், கழகம் என்று (மரபுத் தவறாகத்) தனித் தமிழ்ப் படுத்துபவர்களும் உண்டு. ஆனால் சங்கம், கழகம், கூடல், அல்லது கூட்டம் ஆகிய சொற்கள் முற்றிலும் ஒரு பொருட் சொற்கள் அல்ல; சங்கமும் கழகமும் அமைப்புகள்; கூடலும் கூட்டமும் அவற்றின் தனி நிகழ்ச்சிகள் குறிப்பவை. கழகம் (குலகுலக்குழு, சூதாடும் குழு, commitee, club; சமஸ்கிருதம், உபநிஸத் அதாவது உடனிருக்கை) ஆய்வுக்குழு குறிக்கும் சொல் ஆகும். சங்கம் என்பதோ பல அங்கங்களைக் கொண்ட நிலையான பேரமைப்பு (An organism working through organs; An Association of committees, clubs and various other Ruling as well as Executive Bodies) ஆகும். அரசன் (தெய்வ மரபில் அதாவது கோ மரபில் வந்தவன்), மன்னன் (மக்கள்

தலைவன்) வேந்தன் (தேர்ந்தெடுத்த தலைவன்) முதலிய பிற சொற்குழுக்களைப்போலச் சங்கம், கழகம் கூடல் போன்ற சொற்களையும் நாம் பொது முறையில் ஒரு பொருட் சொற்களாக வழங்கினாலும், அவற்றுக்கு அறிவு மரபில் சிறப்புப் பொருள்களும் பண்புகளும் நயநுணுக்க வேறுபாடுகளும் உண்டு.

வரலாற்று மரபாய்வொளி, ஒப்பீட்டாய்வொளி ஆகியவற்றின் துணைக்கொண்டு நாம் சங்கம், சங்க இலக்கியம், சங்க இலக்கியப் பின்னணி ஆகியவற்றில் காணப்படத்தக்க தமிழக மக்களின் தேசீய வாழ்வு, அதற்குரிய தேசங் கடந்த தேசீய அமைப்பு, இவற்றுடன் கொங்கு நாட்டுக்குரிய உயிர் பண்புத் தொடர்பு ஆகியவை குறித்த பல மெய்ம்மைகளைக் காணல் தகும்.

முதலாவதாக, சங்க இலக்கியப் பரப்பில் நாம் கவனிக்கத் தக்க பண்பு அதன் முழ நிறை தேசீய, தேசீயங் கடந்த பேராண்மைத் திறம் ஆகும்.

தமிழ்ச் சங்கம் என்பது பாண்டிநாட்டு மதுரை மாநகரில் (முற்பட அலைவாய் அல்லது கபாடபுரத்தில் அல்லது கடல் கொண்ட பஃறுளியாற்றுத் தென் மதுரையில்) அமைந்திருந்தாலும், அது அம்மதுரைக்கோ, பாண்டிநாட்டுக்கோ மட்டும் உரியதன்று, மூவரசுகளையும் எண்ணற்ற வேளரசுகளையும் உட்கொண்ட பண்டைப் பெருந்தமிழகத்துக்கும், அதற்கு அப்பால் உள்ள தமிழுலகம் முழுமைக்கும் உரியதாகும். இன்றைய கேரள மாநிலம், கன்னட துளு ஆந்திர மாநிலப் பகுதிகள், பண்டைத் தமிழ் ஈழமாகிய இன்றைய சீர் இலங்கை ஆகிய பரப்புகளிலும் அவற்றுக்கு அப்பாலுமிருந்து தமிழ்ப் புலவர்கள் அதில் வந்து கலந்து கொண்டிருந்தனர். பாடியவர்கள், பாடப்பெற்றவர்கள், இப்பரப்பு முழுமைக்கும் உரியவராயிருந்தனர் - எந்த ஒரு நாடோ, அரசோ, நாட்டுப் பகுதி அரசுப் பகுதிகளோ, எந்த ஒரு மாவட்டமோ, வட்டமோ, எந்த ஒரு நகரமோ, முக்கியமான ஊரோ, ஊர்ப்பகுதியோ, தெருவோ கூட சங்கப் பேராண்மை பெறாமல் விடப்பட்டிருந்ததென்று கூற முடியாது. தவிர, இந்திய நாகரீகப் பரப்பு முழுவதிலுமுள்ள சமகாலச் செய்திகள், நிகழ்ச்சிகள், மக்களறிந்த பழமொழிகள், பாரத இராமாயணக் கதைகள், சமயக் கருத்துக்கள் ஆகிய யாவும் இத் தேசீய இலக்கிய களஞ்சியத்தில் வாய்மையுறப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இறந்துபட்டவை, சிதைந்தவை, தொகையுட் சேராதவை ஆகியன போக நம்மிடம் அரைகுறையாக வந்து எட்டியுள்ள சங்க தொகுப்புகளுக்குள்ளேயே நமக்கு 600க்கு மேற்பட்ட புலவர் களின் ஆயிரக்கணக்கான பாட்டுகள் கிடைக்கின்றன. இவற்றுள் கொங்கு நாட்டில் மட்டும் 30-க்கும் மேற்பட்டவர்கள் ஆவர். இவர்கள் ஒப்புக்கு அல்லது பெயருக்குப் பெண்பாலராகக் கூறத் தக்கவர்கள் அல்லர். அவர்களிடையே ஆண்பாற் புலவர்களின் முன்னணித் தலைவர்களுடன் தலைவர்களாக இயங்கும் ஆற்ற லுடைய கொங்குநாட்டுக் கவிப் பேரரசி ஔவையார், காக்கை பாடினியர் (இருவர்) போன்ற பெருங்கவிஞர் இருந்தனர். ஆண் பெண் இருபாலரிடையேயும் எல்லா இடப்பரப்புக்கும் உரிய வர்கள் மட்டுமன்றி அரசர் முதல் ஆண்டி வரை சிற்றூராரும் பேரூராரும் ஆசிரியரும், சமய குருமாரும், உழவரும், வணிகரும், கணியரும், மருத்துவரும், இசை வல்லாரும், நடிகரும்; இன்று பிற்பட்ட சமுதாயத்தினர் அல்லது பிற்பட்ட இனத்தினர் என்று கருதப்படும் குறவர், எயினர், பேயர் (தற்கால அணிமைக்கால வழக்கில் சண்டாளர் அல்லது மலங்குடியினர்) ஆகியோரும் எத்தகைய சமுதாய, தொழில், இன, பால் வேறுபாடுகளும் இன்றி எல்லா வகுப்பினரும் எல்லாப்படி நிலையினரும் தமிழ்ச் சங்கத் தில் பங்கு கொண்டிருந்தனர். கோசர் போன்ற தனியினத்தவரும் ஓர் ஆரிய அரசனும் (பிரகத்தன்) வேத வேள்விகள் செய்தவரும் வேற்றுமையின்றியே அவ்வமைப்பில் ஈடுபட்டிருந்தனர்.

உலகில் எந்த நாடும், எந்த மொழியும் இந்நாள் வரை எந்தக் கால ஊழியும் காணாத இலக்கிய, அறிவுத் துறைப் பேராண்மை (Horizontal as well as vertical Representation) இது.

இரண்டாவதாகச் சங்க இலக்கியப் பலகணியில் நாம் நுனித் தறியக்கூடிய செய்தி அதன் அமைப்பு, அமைப்பாட்சி, அமைப் பாண்மை ஆகும்.

சங்க மரபு அதாவது கடைச்சங்க மரபு சங்க உறுப்பினர் களை 49 பேர் என்று கூறுகிறது. (முற்பட்ட இடை, தலைச் சங்கங் களில் இது 449, 4449 என விரிவுற்றிருந்ததாகவே மரபு தெரிவிக் கிறது). இவர்கள் வாழ்நாள் கடந்தும், உறுப்பாண்மைக் கால வரைவு உடையவர்களாயிருந்தால் அவ்வரைவு கடந்தும் புதுப் பிக்கப்படத்தக்கவர்களாக இருந்திருப்பர் என்னல் தகும். உறுப் பினர் தொகையையும் பேராண்மைத் திறத்தையும் இது வலியுறுத் துவது ஆகும். தவிர உறுப்பினர் வேறு, பாடியவர் வேறு என்பதில்

என்பதில் ஐயமில்லை. அரங்கேற்றியவர் தவிர (திருக்குறள் அரங்கேற்ற மரபுரை, தொல்காப்பிய அரங்கேற்ற மரபுரை ஆகியவை தவிர இது நமக்கு வந்தெட்டவில்லை) எவரும் சங்கத் தில் பாடியதாகத் தெரியவில்லை. பாடியவர் அரசவைகளில் மட்டுமன்றி, தமிழுலக நாடுமலை காடுகள் எங்குமிருந்து அவ்வப் பகுதியிலுள்ளவரைப் பாடினர். அவ் பாடல்களில் தேடித் தொகுத்த (அல்லது அவற்றுடன் பாடி அல்லது தேடிச் சேர்த்த) அல்லது பொறுக்கித் தேர்ந்தெடுத்த பாடல் தொகையின் சிலவே சங்க இலக்கியம் என்ற பெயர் மரபுடன் காலங்களின் கோலங்கள் கடந்து நமக்கு வந்தெட்டியுள்ளன.

சங்ககாலப் பேராண்மை காட்டுவதை விட மிகப் பேரள வாகவே அக்காலப் புலவர் தொகை, பாடல்களின் அளவு, பாடப் பட்டவர் தொகை, வள்ளல்களின் பரப்பு, வாசிப்பவர் தொகை ஆகியவை இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

சங்க உறுப்பினரும் பாடியிருத்தல் கூடியதே என்றாலும், உறுப்பினர்குரிய கடமை பாடுவதன்று: பாடிய வரையும் பாடிய பாடல்களையும் தரப்படுத்தி, வகைப்படுத்தி, ஒதுக்குவன ஒதுக்கி, தேர்வன தேர்ந்து, தொகுப்புக்குரியன தொகுத்து பேணுவதே யாகும். உலகின் எம்மொழியின் எந்தக் கால இலக்கியமும் காட்ட இயலாத தன்மையினையுடைய சங்க இலக்கியத்தின் கிட்டத் தட்டச் சரிசமமான உயர்வுத்தளம் இதனை மெய்ப்பிப்பதற்கும். இத்தகைய தர உறுதி, தர உயர்வு, தர நயம் காண்பதற்குரிய ஆய்வுக் குழுக்கள் (கழகங்கள்), அதற்குரிய விதிகள் வகுப்பதற் குரிய உட்குழுக்கள் முதலியன அந்நாட்களின் இருந்திருத்தல் வேண்டும். அரங்கேற்றம், பொது ஆய்வு, தொகுப்பு வெளியீடு, சிறப்பு விழாக்கள் ஆகியவற்றுக்குரிய பொதுக்கூட்டங்கள் (கூடல் கள், மாநாடுகள்) நிகழ்ந்திருத்தல் கூடியதே, இக் கூடல்கள், கழக உட்கழகங்கள், சங்கத்தின் நிலையமைப்பு ஆகியவற்றின் தலைவர்களாக; சிறப்பு உறுப்பினர்களாகத் தொல்காப்பியம் அரங்கேற்றிய அதங்கோட்டரசன் (இவன் மரபினர் இன்னும் நாஞ்சில் நாட்டில் தாழ்த்தப்பட்ட குடிமரபினராக வாழ்கின்றனர்). திருக்குறள் மரபுடன் தொடர்புடைய பாண்டியன் அறிவுடை நம்பி, நக்கீரர், சாத்தனார், இறையனார் போன்ற பேரறிஞர்கள் அல்லது பெருந்தலைவர்கள் செயற்பட்டிருத்தல் வேண்டும்.

தமிழ்ச்சங்கம் என்பது இக்காலப் புலவர் கூட்டம், புலவர் மாநாடு அல்லது புலவர் குழுப் போன்றதன்று; அது வழிவழி மரபாக

நின்று நிலவிய நிலவர அமைப்பாக, பொதுக் கூட்டம், நிறை குழுக் கூடல், குழு ஆய்வுக் குழு உட்குழுக்கள், பல்வேறுபட்ட சிறப்புப் பொதுத் தலைமைகள் ஆகிய பல்கிளைப்பட்ட அங்கங் களின் செயற்பாடுகளையுடைய ஒரு தேசியப் படராலமரம் போன்ற அமைப்பு, அதற்குரிய மரபுவழி அமைப்பாண்மை, அமைப்பாட்சி ஆகியவற்றை உடையதாக இருந்தது என்பது தெளிவு.

மூன்றாவதாகச் சங்கமரபில் நாம் குறிப்பிடத்தக்க செய்தி சங்கப் பலகணி மூலம் நாம் காணத்தகும் வேள்நாடுகள் கடந்த, அரசு நாடுகள், மண்டலங்கள் கடந்த, தமிழுலகின், தமிழுலக மக்களின் தேசியங் கடந்த பெருந் தேசீய வாழ்வின் கலைவளமும் அறிவு வளமும் அவற்றிற்குரிய சங்க அமைப்பாண்மையின் தனிச் சிறப்பியல்புகளும் ஆகும்.

**செக்கோசிலவாக்கிய நாட்டுத் தமிழறிஞரான கெமில் சுவெலெபெல் தம் சங்க இலக்கிய ஆய்வு மூலமே மேற்கண்ட சங்க இலக்கியத்தின் உயரிய கலைப் பண்புத் திறம் கண்டு** வியந்து பாராட்டியுள்ளார். அதே சமயம் அவர் அச் சங்க இலக் கியப் பலகணி மூலம் தாம் காணும் தமிழர் சமுதாய வாழ்வின் எளிமைத் தரத்துடன் அந்த உயர்ச்சிமுற்றிலும் முரண்பட்டு, சூழ் தமிழினத்திடையே ஓர் உயரிய அயல் தமிழின அமைப்புப் போலக் காட்சியளிக்கிறது என்றும் கூறியுள்ளார். இங்கே அவர் நோக்கின் முற்பகுதி மெய்மை கண்ட துணிவும் கூர்மையும் உடையதாயினும் அதன் பிற்பகுதி மெய்ம்மையினை முற்றிலும் விளக்க முற்படாமல், ஒரு விளங்காப் புதிராகவே விட்டுச் சென்றுள்ளது. உண்மையில் சங்கப் பலகணி காட்டும் தமிழக வாழ்வின் எளிமை புலவர் கவிதைக் காட்சியின் எளிமையேயன்றி, மக்கள் அரசியல், சமுதாய, பொருளியல், கலையறிவுத்துறை எளிமையன்று. இது கீழே விளக்கப்படுகிறது.

தமிழரின் முச்சங்க மரபு நாம் அறியும் தமிழரின் கடைச்சங்க மரபினும் பழமையானது, விரிவானது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் சிலம்பு மூலமும் அதன் உரைகள் மூலமும், கொங்குத் தமிழக வள்ளல் மகாலிங்கம் போன்றோரின் முயற்சியால் வெளிவந்து கொண்டிருக்கும் பண்டை இசை நாடக நூல்கள் மூலமும் நாம் அறிந்து கொண்டு வரும் முத்தமிழ் மரபு அதனினும் பழமையானது, பாரியது, சீரியது ஆகும். அணிமைக் காலங்களி லேயே அழிந்து வந்துள்ள இம்மரபுகள் கடைச்சங்க காலத்தில்

உயிர்மரபுகளாகவே இருந்தன. புலவர்களில் பலரும் அவர்கள் பாடல் துணைக் குழுவினரும் (பாணர் பாடினியர் அல்லது பண்ணிசைத்துப் பாடுபவர், விறலியர் அல்லது ஆடல் பாடல் களுக்குரியவர், கூத்தர், பொருநர் அதாவது போரும் வாழ்வும் நாடகமாக நடிப்பவர் முதலியோர்) ஒருங்கிருந்தே செயலாற் றினர். பரிபாடலும் பதிற்றுப்பத்தும் சிலம்பும் அதன் உரைகளும் காட்டும் பண்வகுப்பு, வண்ண வகுப்பு, இசை வகுப்பு, நாடகத் திறம் ஆகியவை இதற்குச் சான்றுகள் ஆகும்.

பல நாடுகளிலும் மொழிகளிலும் நாம் பொற்காலம் என்று போற்றும் ஊழிகள் உண்டு. தமிழ்ச் சங்க காலத்தை நோக்க அவற்றின் புலவர்களின் எண்ணிக்கை குறைவே; அவர்களின் தர உயர்வு தாழ்வு வேறுபாடுகளும் மிகப் பெரிதேயாகும். சேக்சுபியர், தாந்தே, காளிதாசன், கம்பன் போன்ற உலக மாக்கவிஞர்கள் பாறை பொற்றைகளிடையே இமயக் கொடுமுடி கள் போலத்தான் திகழ்கின்றனர். அவர்களைப் போன்ற ஒரே கவிஞரின் கவிதைப் படைப்புகளிலோ, ஒரே படைப்பிலோ கூட, நாம் மிகப் பாரிய தர உயர்வு தாழ்வுகளை, தனி நயப் பகுதி (Purple Patches) குறைநயப் பகுதிகளை ஏராளமாகவே காண லாம்: ஆனால் சங்க இலக்கியத்தின் நூற்றுக்கணக்கான புலவர் களின் ஆயிரக்கணக்கான பாடல்களிலே தரக்குறைவு என்பதை நாம் அறவே காண முடியாது. தர உயர்வு தாழ்வுகள் கூட மிகக் குறைவே: அத்தனை புலவரின் அத்தனை பல்வண்ண பலதிறப் பாடல்களும் அரும்பரு மணிகள் ஒரு சிலவே மிடைந்துள்ள ஒரே சீரான மணிமாலை போன்ற நயத்திற ஒருமைப்பாடுடை யவையாகவே திகழ்கின்றன. இத்தர ஒருமைப்பாடு முற்றிலும் அவற்றைத் தொகுத்த திறனாய் வாளர்க்கு மட்டுமேயுரியதாய் இருக்க முடியாது - அதன் பேரளவே இதனை வலியுறுத்திக் காட்டுவது ஆகும். அத்துடன் இந்தத் தர ஒருமைப்பாடு இலக்கியம் அதாவது இயலுக்கு மட்டுமேயுரியதன்று; அது இசை நாடகங் கள் போன்ற கலைகளுக்கும், மருத்துவம், கணிதம் போன்ற அறிவுத் துறைகளுக்கும் ஒருங்கே உரியதாகும்.

வரலாறு, அரசியல், நிலவியல், வானநூல், மருத்துவம், செடிநூல் (Botany), விலங்குநூல் (Zoology), இயற்பியல் (Physics), இயைபியல் (Chemistry), ஆகிய அறிவுத் துறைகளின் வாய்மை யையோ, அறிவுத் திட்ப நுட்பத்தையோ சேக்சுபியர், கம்பர்

போன்ற வானுயர் புகழ்க் கவிஞரிடம் கூட யாரும் எதிர் பார்க்க முடியாது. எதிர்பார்க்கவும் மாட்டார்கள். ஆனால் சங்க இலக்கியத்தில் நாம், மருத்துவன் தாமோத்ரனார், கணிதமேதாவி யார், புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் போன்ற தனி அறிவுத் துறை வல்லுநர்களாக புலவர்களிடையே மட்டுமன்றி, எல்லாப் புலவர்களின் எல்லாப் பாடல்களின் பின்னணியிலுமே இத்தகைய வாய்மையையும் அறிவுத் திட்ப நுட்பத்தையும் அப்பழுக்கற்ற நிலையிலேயே காண்கிறோம். தற்கால மேலை யுலக அறிவியல் புலமை வாய்ந்த அறிவாராய்ச்சியறிஞர்களே (அறிஞர் பி.எல். சாமி போன்றோர்) இவற்றை ஆராய்ந்து கண்டு வியந்து போற்றுகின்றனர்.

சங்க காலத் தமிழகத்தில் இத்தனித்துறை அறிஞர்களுக் குரிய அறிவு வளத்துக்கான கல்வி நிறுவனங்கள் (பல்கலைக் கழகங்கள்), இவற்றின் மரபும் விரிவும் வளமும் நீடிக்கும் படி வளர்த்த தேசீய கலையாட்சி நிறுவனங்கள் (Department of National and Popular Education) ஆகியவைகள் இருந்திருக்க வேண்டும், மக்களிடையே இவ்வளம் நிலவுவதற்கு ஆதாரமாக, அவர்கள் வாழ்க்கைத் தரம், செல்வவளம், உழவு, கல்வி வளம் ஆகியவை நீடித்து வளர்வதற்குரிய ஆட்சி அமைப்புகள் (Political, Social and Industrial Equipments) நிலவியிருக்க வேண்டும்.

இன்றைய நாகரிக உலகின் தற்கால நாகரிக ஊழிகளில் கூட, கல்வியின் குறிக்கோள் எல்லா மக்களுக்கும், எண்ணெழுத் தறிவு (Universal Literacy) என்பது மட்டுமே பொதுமக்களுக்கு இது தரும் தொடக்க கல்வி (Elementary Education), நடுத்தர மக்களுக்கும் வருவாயும் தொழிலீடுபாடும் வழங்கும் இடைத் தரக் கல்வி (Secondary Education), உயர் ஆட்சி வகுப்பினர் அல்லது இன அறிவு வகுப்பினருக்கான உயர்தர அல்லது பல்கலைக் கழகக் கல்வி (Higher or Universal Education) என்ற மூவகுப்பு முறைக் கல்வியே தேசீய இலக்கு, நாகரிக இலக்காகி யுள்ளது. தமிழரிலக்கு, வள்ளுவ இலக்கு இதுவன்று, மனித இன அறிவு வளர்ச்சியே என்பதை,

**'விலங்கொடு மக்கள் அனையர், இலங்கு நூல்**
**கற்றாரோடு ஏனையவர்'**

**'அறிதோற றியாமை கண்டாற்றல்'**

என்பன போன்ற வள்ளுவ வாய்மொழிகள் காட்டும் தவிர, நாகரிக உலகெங்கும் அணிமைக் காலம் வரை கல்வி என்பது தனி மனிதர் கல்வியாக, (Learning) மட்டுமே அமைந்திருந்தது. தேசீயக் கல்வியாக (National Education) இருந்ததில்லை. ஆனால் **திருவள்ளுவர் கல்வியைத் தேசீயக் கல்வி, தேசீய வாழ்வை இலக்காகக் கொண்ட இனக் கல்வியாகக் கருதியதனால்தான் கல்விக்குரிய நான்கு அதிகாரங்களையும் கல்வி முறை என்றும், கல்லாமை ஒழிப்பு என்றும் கேள்வியால் பொதுமக்க ளிடையே அறிவு பரப்பும் மக்கட் கல்வி என்றும், அறிவுடைமை அதாவது எல்லா உடைமைகளுக்கும் அடிப்படையான ஆட்சி தொழில்துறைகள் சார்ந்த அறிவுக் கல்வி என்றும் வகுத்து, அத்தேசீயக் கல்வியை அறத்துப்பாலிலோ, பொருட்பாலின் குடியியலிலோ கூறாமல், இறைமாட்சி அதிகாரத்திலை அடுத்து இறைக் கடமைகளில் முன்னணிக் கடமையாக வைத்தார் என்பது காணலாம்.**

சங்க இலக்கியம் கல்விப் பெருமை கூறிற்றேயன்றி இக் கல்வியமைப்புகள் பற்றி எதுவும் கூறவில்லை. இது இயல்பே ஏனெனில் சங்கத்துக்குப் புறம்பாக அத்தகைய அமைப்புகள் இல்லை, இருந்திருக்கவும் முடியாது. ஏனெனில் தமிழகத்திலும் சூழ்புலங்களிலும் கூட அந்நாட்களில் மூவரசு நாடுகள் மூன்றாக வும், வேள்புல நாடுகள் எண்ணற்றவையாகவும் இருந்தன. ஆனால் தமிழுலகின் ஒரே தேசீய மரபாகத் திகழ்ந்த தமிழ்ச் சங்கத்துக்குவெளியே, ஓயாது செங்குருதிப் போராட்டங்களி லேயே ஈடுபட்டிருந்த தமிழக அரசுகளுக்கோ, வேளிருக்கோ கூட, இத்தகைய உலகளாவிய, தேசமளாவிய ஆக்கச் செயல் களுக்கோ, அமைப்புகளுக்கோ, திட்டங்களுக்கோ உரிய நேரமும் வாய்ப்பும், திட்ட வாய்ப்பும் அதற்குரிய சிந்தனையும் கட்டாய மாக இருந்திருக்க முடியாது.

**செக்கோசிலவாக்கிய அறிஞர் கெமில் சுவெலெபில்** கண்ட இருதிறக் காட்சிப் புதிர் இதுவே. ஆனால் இந்தப் புதிரின் விளக்கம் மனித உலகம் கண்ட முதல் தேசீய அமைப்பாகிய தமிழ்ச் சங்கத்திலேயே காணத் தக்கது என்பதை அவர் எண்ணிப் பார்க்க இயலவில்லை.

**தமிழ்ச் சங்கம் ஒரு தனிச் சங்கமாக, தனிச் பள்ளி கல்லூரி பல்கலைக் கழகமாக, தனிக் கலைக்கூடமாக அமைக்கப்பெற**

வில்லை, இயங்கவில்லை. அது தமிழகம், தமிழுலகம் எங்குமுள்ள சங்கங்களை, பள்ளி கல்லூரி பல்கலைக் கழகங்களை, கலைக் கூடங்களை ஒருமுகப்படுத்தி ஆட்சி செய்யும் ஒரு மைய ஆட்சி அமைப்பாகவே நிலவிற்று. அது மட்டுமன்று, அது அரசர், வேளிர்களின் அரசியல் ஆட்சி கடந்த ஒரு மேலாட்சி அமைப்பாக (தற்கால ஐக்கிய நாடு அவை அல்லது உலகக் கல்வி கலை பண்பாட்டு அமைப்புப் போன்று) மொழி கலை அறிவு, தொழி லறிவு, இன அறிவு, ஆராய்ச்சி ஆகிய நீண்ட கால வாழ்வுக்குரிய உலக ஆட்சி மன்றமாக நிலவியிருந்ததென்று காணலாம்.

முடியரசினும் பார்க்கக் குடியரசு அமைப்பிலேயே பண்டைத் தமிழர் பேரீடுபாடு கொண்டிருந்தனர். மூவரசு நாடுகளுக்குப் புறம்பாக அவர்கள் கொங்கு நாட்டு மரபையும் தொண்டை நாட்டு மரபையும் வகுத்துக் கண்ட காட்சியே இதனைத் தெளிவு படுத்தும். தமிழர் அறிவுக் கருவூலத்தை ஆசியாவுக்கும் உலகுக் கும் கொண்டு செல்லும் வாயில் தொண்டை நாடு என்பதை யும்; தமிழரின் குடியரசு மரபடிப்படையான நாடு மொழி இன வேறுபாடு கடந்த மக்கள் தேசீயத்தை உலகளாவப் பரவவிடும் வாயில் கொங்குநாடே என்பதையும், இம்மண்டல வகுப்பின் போதே தமிழ் மரபு உணர்ந்திருக்க வேண்டும் என்னலாம். ஏனெனில் கீழே காட்டுகிறபடி, உலக வரலாற்றில் அறிவு சமய பண்புகளைப் பரப்பும் பணியில் தொண்டைநாடு நின்றது போல, தமிழகத்திலும் இந்தியாவிலும் தேசீய வாழ்க்கைப் பண்பாடு பரப்பும் பணியில் கொங்கு நாடே தோன்றாத் துணையாய் இயன்று வந்துள்ளது. (பாண்டி நாட்டுக்கு அதன் மொழித்துறை யும், சோழ நாட்டுக்கு அதன் கலைத்துறையும், சேர நாட்டுக்கு அதன் சமுதாயப் பண்பாட்டுத் துறை, வீரத் துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன என்று கருதலாம்).

கடைச்சங்கத்துக்கும் நெடிது முற்பட்ட சங்க காலத்தி லிருந்தே தமிழர் தமிழ்ச்சங்கத்தை மூவரசு நாடுகள், வேள்புலங் கள் என்ற அரசியல் வேறுபாடுகளும் தென்னகத் தமிழ்நாடு, ஈழத் தமிழ் நாடு போன்ற நில அல்லது தேச வேறுபாடுகளும் கடந்த ஒரு தேசங் கடந்த தேசீய அமைப்பாகவே குறிக்கொண்டு, வழி வழி மரபாகவே திட்டமிட் வளர்த்து வந்தனர். இத் தேசீய திட்ட மரபுவளர்ச்சியே தேசீய உள்ளங்களில் நின்று நிலவி மூவரசரும் வேளிரும் தம் தனி முறைப் போட்டிகள் கடந்து தமிழ்ச்

சங்கத்தை அன்புப் போடியிட்டு வளர்க்கும்படி செய்தது என்று காணலாம்.

உலகில் திட்டமிட்டு மொழி வளர்க்கும் சங்கமாக பிரான்சு நாட்டில் மட்டுமே கி.பி.10 அல்லது 14-ம் நூற்றாண்டிலிருந்து ஒரு சங்கம் நிலவி வந்துள்ளது. கலையியல் வளர்க்கும் சங்கங்களின் மூதாதையாகக் கிரேக்க நாட்டில் மட்டுமே அறிஞர் பிளேட்டோவின் கலைக் கூடம் (Academy; கி.மு. 5-ம் நூற்றாண்டு ) இயங்கிற்று. ஆனால் தமிழ்ச்சங்கம் மொழியும் இலக்கியமும் கலையும் அறிவுத் துறைகளும் திட்டமிட்டு வளர்க்குமிடமாக மட்டுமன்றி, அவற்றின் ஆட்சியமைப்பாகவும், பள்ளி கல்லூரி பல்கலைக்கழகங்களை நாடுகடந்து வேள்புலம் கடந்து வளர்த்து இணைத்து ஆளும் மைய அமைப்பாகவும் இயங்கியிருந்தது.

குடியரசு மரபிலேயே இந்திய, உலகப் பல்கலைக்கழகங்கள் வளர்ந்துள்ளன என்பது மேலே சுட்டப்பட்டுள்ளது. மதுரைத் தமிழ்ச் சங்கம் அப்பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் தாய் மூல மரபாய் அமைந்த மரபு ஆகும் என்பதும் அங்கே குறிக்கப்பட்டது. ஆனால் அது பல்கலைக்கழகமோ, கலைக்கூடமோ, அறிவியற் கூடமோ மட்டுமன்று. நாகரிக உலகு அல்லது தமிழுலகளாவ, தேசீயம் கடந்த பெருந் தேசீய வாழ்வின் மொழி, கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவற்றையும், தொழில் வாணிகம் ஆகியவற்றுக்கு அடிப்படையான அறிவாய்வுத் திறங்களையும் திட்டமிட்டு வளர்க்கும் அரசியல் கடந்த அமைப்பாகவே அது இயங்கி வந்திருந்தது ஆகல் வேண்டும். இதற்கான கிளையமைப்புகளை, கிளைச்சங்கங்களை அது மூவரசு நாடுகள் தோறும் வேள்புலங்கள் தோறும் அப்பாலும் அரசியல் சார்பற்ற, அரசியல் சார்புகளுக்கு மேம்பட்ட தளமாகக் கொண்டு இயங்கியிருத்தல் வேண்டும் என்னலாம்.

அரசுகள் வேள்புலங்களிடையேயுள்ள குருதிப் போராட்டங்களிடையே இத்தகைய அமைப்பை மக்கள் தேசீய ஆர்வ மட்டுமே தட்டுத் தடங்கலின்றி நடத்திவிடுதல் முடியாது என்பதை நாம் எளிதில் காணலாம். குடியரசு மரபில், அதுவும் அரசியல் குடியரசு மரபில் கூட, இது முடியாத ஒன்றேயாகும். சமுதாயக் குடியரசு மரபில் ஊறி வளர்ந்த ஒரு தேசீய மரபினால் மட்டுமே இதனைக் கொண்டு செலுத்துதல் முடியும்.

சங்க காலக் குடியரசு மரபு கொங்கு நாட்டுக்கு வெளியே தமிழகத்தில் வீழ்ச்சியடைந்த காலமே சங்க கால இறுதி குறித்த காலம் ஆகும். இதற்கு முன் இருந்த சங்க காலத் தமிழகம் இத்தகைய குடியரசு மரபில் வந்த தேசீயம், உயிர் மலர்ச்சி கெடாமல் வாழ்ந்த இனமாகத் திகழ்ந்தது. ஏனெனில் மூவரசு நாடுகளின் முடியரசர்கள் வேள்புலக் குடியரசு மரபில் வந்தவையேயாகும். அம்முடியரசுகளும், குடியரசுகளும் சங்கத்தின் தமிழ் வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சிகளில் மட்டுமன்றி, அவற்றின் அரசு கடந்த, வேள்புலங் கடந்த தேசீய அமைப்பாட்சியிலும் தலையிடாமல், அதனைப் பேணிக்காத்து வந்தன.

வேளிரும் வேளிரும், அரசரும் அரசரும் போரிட்ட காலத் திலும் சங்கப் புலவர் நாடு கடந்த குடிகளாக நடந்து கொண் டனர். நடத்தப் பெற்றனர் என்பதனைச் சங்க இலக்கியம் காட்டு கிறது. எந்தக் குடியரசுக்கும், முடியரசுக்கும் மேற்பட்டதாகச் சங்க அமைப்பை எல்லா அரசரும் குடியரசரும் மதித்து நடந்தனர்.

வேள்நாடு மலர்ச்சியைப் போலவே, தமிழ்ச்சங்கமும் குடியரசு களின் கூட்டணி மரபில் வந்த ஒரு கூட்டரசு அமைப்பே என்பதை இவ்விளக்கம் காட்டும். முடியரசர்களும் சரி, குடியரசர்களும் சரி, மேலாட்சியாளர்களாக மட்டுமே இயங்கி வந்தனர். மேலாட்சி களின் நிழலிலேயே கொங்கு மக்கள் தங்கள் குடியரசு மரபை (நாட்டுக் கோட்டை வணிகள், நாஞ்சில் நாட்டு வேளாளர், கட்டி முதலியார் மரபினர் ஆகியவரை ஒத்து) சமுதாயத் தன்னாட்சி மரபு அதாவது ஒத்திசைவு விரிவு மலர்ச்சி வாய்ந்த கொங்கு மரபாக வளர்த்தது போல, கொங்கு நாட்டின் அகல் விரிவாகிய பண்டைத் தமிழகமும் அரசு குடியரசுகளின் மேலாட்சியலை களால் பாதிக்கப்படாத முறையில் வாழ்வு வளம், கலை அறிவியல் மொழி இலக்கிய வளம், தொழில் வாணிக வளம் ஆகியவற்றுக் குரிய ஒரு முழுக் குடியாட்சி அமைப்பாகவே தமிழ்ச் சங்கத்தை வளர்த்து வந்ததுஎன்னல் தகும். இந்த அமைப்பில் தற்காலக் கொங்கு மக்களின் முன்னோராகிய பண்டைத் கொங்குத் தமிழரின் பங்கு மிக மிகப் பெரியதாகவே இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் தமிழ் வளர்ப்பில் மைய இடம் மதுரையாய் இருந்ததென்றால், குடியரசுப் பண்பு வளர்ப்பின் மையநிலம் கொங்கு மாநிலமாகவே என்றும் அமைந்து வந்துள்ளது.

இந்தியாவெங்கும் இருந்த வேள்நாடுகள் அல்லது குடியரசுக் குழு அமைப்புகளில் மைய அமைப்பாகவும் முழுநிறை

மலர்ச்சியுற்ற அமைப்பாகவும் இன்று வரை உயிர் மலர்ச்சி பெற்ற அமைப்பாகவும் நிலவுவது சங்க கால வேள்நாடு அல்லது வேளாள நாடு ஆகிய தற்கால கொங்கு அக நாடேயாகும். சொல்லேருழவர், அறிவேருழவர், பண்பேருழவரின் ஒரு வேள் நாடாகவே அரசு குடியரசு எல்லை கடந்த தமிழுலகும், தமிழ்ப் பண்புலகும் ஆளமுற்பட்ட ஒரு குடியாட்சி முடியாட்சி எல்லை கடந்த குடியாட்சிக்குழு அமைப்பாகவே தமிழ்ச் சங்கம் நிலவிற்று.

பிரிட்டனின் மாமன்றத்தை மாமன்றங்களின் தாய் (Mother of Parliment) என்று கூறுவதுண்டு. தென் மதுரை அலைவாய் மரபுகளில் வந்து மதுரையில் வளர்ந்த சங்கத்தையும் இது போல நாம் நாகரீக உலகப் பல்கலைக்கழகங்களின், அறிவியற்கூடங்களின், வாணிகத் தொழில்துறை ஆராய்ச்சிக் கூடங்களின் உலகத் தாய் நிறுவனம் என்று கூறலாம்.

மூவரசு நாடுகளும் வேளரசுகளும் பாண்டியன் மதுரையையே தமிழுலகின் தேசீய மையமாக ஏற்றமைந்தற்குரிய காரணங்களுள் தலையான ஒன்று, குடியரசு மரபுத் தேசீயமாக வளர்ந்த அது குடியரசு மலர்ச்சியின் மையமாக அமைந்த கொங்கு நாட்டினருகே தமிழக மையமாய், கொங்கு நாட்டு குடியரசுக் குழுவின் பண்போட்டத்துக்கு இலக்கமாய் அமைந்தது என்பதேயாகும்.

தமிழாலும் பாண்டிய நாடு, கையாளும் சோழநாடு, வீரமும் பண்பும் ஆளும் சேர நாடு, அறிவாளும் தொண்டை நாடு ஆகிய இந்த நான்குக்கும் மையமாகத் தமிழ்க் கொங்குநாடு இந்த நான்கு ஆட்சிகளின் ஆட்சி பண்பு பேணும் நாடாகப் பண்டு அமைந்திருந்தது.

சங்கத் தமிழும் சங்க காலப் பண்புகளும் பண்டைக் குடியரசு மரபுடன் மரபாக மற்ற மண்டலங்களை விடக் கொங்கு மண்டலத்திலேயே நீடித்துச் செறிவுடன் நிலவிவருவதன் மறைதிற **வினை மதுரைச்சங்கத் தமிழ் மரபு, அதனை ஆண்ட கொங்குக் குடியரசு மரபு ஆகியவற்றின் வரலாற்றுக் காலத் தொடர்பிலேயே காணல் வேண்டும்!**

12525







ஸ்ரீ செண்பகா பதிப்பகம்
சிறந்த நூல்கள் வெளியிடுவோர்



தபால் பெட்டி எண்: 8336
தியாகராய நகர், சென்னை - 600 017
தொலைபேசி: 044-2433 1510
Email: shreeshenbaga@yahoo.com
www.srisenbagapathippakam.com